உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விவேக விளக்கவுரை.

இவ்வுரை
கடலூர்க் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்,
ந. பலராம ஐயர்
இயற்றியது.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பித்தது.
1901.

விவேக விளக்கம்.

இந்நூல் பல வித்துவான்களியற்றிய பற்பல நூல்களினின்றும் எடுத்துத்தொகுக்கப்பட்ட பாக்களாலாயது. இதனைத் தொகுத்தவர் ம-கா-ா-ா-ஸ்ரீ, எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை அவர்கள் பி. ஏ. விவேகவிளக்கம்: விவேகமாகிய தீபம் எனவே பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். விளக்கம்: விளங்கு - பகுதி, அம் - வினைமுதற் பொருண்மை விகுதி, ஙகரம் ககரமானது வலித்தல் விகாரம்.

விவேக சிந்தாமணி.

இஃது ஒரே புலவரால் யாக்கப்படாது பற்பல புலவர்களாற் பல்வேறு சமயங்களிற் கூறப்பட்ட நீதியைப் புலப்படுத்தும் செய்யுட்களாலாயது. இது விவேகமாகிய விருப்பத்தைத் தரும் மணியென்று பொருள்படும். சிந்தாமணி; சிந்தையில் நினைத்தவற்றையெல்லாந் தரும் ஒரு தேவமணி; திருப்பாற் கடலில் அமுதத்துடன் உற்பவித்த மணியென்ப.

1. உரை:—வேதம்-நான்கு வேதங்களையும், ஓதிய - நன்றாக ஆராய்ந்தறிந்த, வேதியர்க்கு-அந்தணர்க்காக, ஓர் மழை-ஒரு மழையாகவும், நீதி மன்னர்-மனுநீதி தவறாத மன்னர்களுடைய, நெறியினுக்கு - செங்கோல் முறைபிறழாத மார்க்கத்திற்காக, ஓர் மழை - ஒரு மழையாகவும், காதல் மங்கையர்-அன்பு வாய்ந்த இளம் பெண்களது, கற்பினுக்கு - பதிவிரதா தர்மத்திற்காக, ஓர் மழை - ஒரு மழையாகவும், மாதம் - ஒவ்வொரு மாதத்திலும், மூன்று மழைஎன - மூன்று மழையென்று யாவரும் சொல்லும்படி, பெய்யும் - (வானம்) மழை பொழியும், ஏ - அசை.

குறிப்பு :—வேதங்களினுட் பொருளை நன்காய்ந்த பிராமணர்கள், செங்கோனெறிதவறாத மன்னர்கள், கற்பினையே யணிகலா மாக்கொண்ட மங்கையர்கள், ஆகியஇம்மூவர் பொருட்டே வானம் மும்மாரி மாதந்தோறும் பெய்வது என்பது இதன்கருத்து. வேதம்: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்காம். இனித்தல வகாரம் முதலிய நான் கென்பாருமுளர். மங்கை : பன்னிரண்டு வயதிற்குமேற் பதினன்கிற் குட்பட்ட பெண். கற்பு : மணமாவதற்குமுன் மாதா பிதாக்களினலேயும், மணநடந்த பிறகு தனது பர்த்தாவினலேயும் கற்பிக்கப்படுவதென்பது பொருள். 'கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை' என்பதை யீண்டறிக. 'நல்லாரொருவருளரேல் அவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யுமழை' என்பதை யிவ்விடத்தில் உற்று நோக்குக.

2. உரை:—வண்டுகள் இருந்திடின்-(ஒரு சோலையில்) வண்டுகள் இருக்குமாயின், மதுவை உண்டிடும் - அந்தச்சோலை மலர்களிலுள்ள தேனினை உண்டுகளித்திருக்கும்; (அதுபோல) தண் தமிழ் இருந்திடில் - குளிர்ச்சியுடைய தமிழ்ப் பாஷையானது ஓங்குதலை டைந்து இருக்குமாயின், சங்கம் சேர்ந்திடும் - கற்ருேர் கல்விச் சங்கங்கள் சேர்த்து அதன்கண் பல விடயங்களையும் ஆய்ந்து களிப்பார்; (ஆனல்) குண்டுணி இருந்திடில் - கோட் சொல்லுகிறவன் ஓரிடத்திலிருப்பானயின், கோள்கள் மிஞ்சிடும்-கோள்கள் அதிகப் படும், பெண்டுகள் இருந்திடில்—, பெரிய சண்டையாம்-பெருஞ் சண்டை உண்டாகும்.

குறிப்பு :—வண்டுகள் தேனை யவாவுதலை 'வண்டுமலர்ச் சேக்கை விரும்பும்' என்பதனனறிக. வண்டுகள் தேனை விரும்பி யுண்பதுபோல் தமிழ் வல்லார் கூட்டமாகக்கூடித் தேனினுமினிய தமிழினையாராய்ந்து இன்புறுவார்கள். தண் தமிழ்: ஈண்டுத்தண்மை, இனிமை யென்னும் பொருளில் வந்ததுமாம். சங்கம்: ஸத்ஸங்கமாம்;

நல்லவர்கள் சங்கமாகக் கூடுதலையே மிகவும் விரும்புவார்கள். இதனை "மாதுறக்க மென்றுரைத்தன் மாந்தரீர் கேண்மினோ, சாதுக்கள் கூட்டுறவு தான்" என்பனூலறிக. பெண்டுகள் பேதையர்களாதலின் இன்னணங்கூறினர், 'பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்' என்பதுங்காண்க. இவ்வுண்மையைப்பாரத இராமயணங்களிற் காண்பதோடு தற்காலத்தும் கண் கூடாகப் பற்பல விடங்களிலும் பார்க்கலாம். வண்டுகள் தேனைவிரும்பும் எனவே ஈக்கள் அசுத்தமான மற்றொன்றை விரும்பும் என்பதும் பெற்றும்.

3. உரை.—வாழ்வது-வாழ்வினுக் காதாரமாகிய செல்வம், வந்தபோது - வந்தகாலத்தில், மனந்தனில் மகிழ வேண்டாம் - மனத்தில் சந்தோஷப்படவேண்டாம்; தாழ்வது - தாழ்வினுக்குக் காரணமாகிய தரித்திரம், வந்தது ஆனால் - வரும்பக்ஷத்தில், தக்கோர் - மேலோர், தளர்வரோ-தளர்ச்சியடைவார்களோ, (இல்லை);: மிக்க - மிகுதியாகிய, ஊழ்வினை - முற்பிறப்பிற் செய்த வினைப்பயன், வந்தது ஆனால்—, ஒருவரால் விலக்கப்போமோ - யாரேனுமொருவர் (குறுக்கிட்டு) விலக்கினாலும் அது விட்டு நீங்கும (இல்லை; திருஷ்டாந்தமாக), ஏழையாயிருந்தோர்-ஏழைகளாயிருந்தோர், பல்லக்கேறுதல் - (ஊழ்வினைப் பயனாற்) பல்லக்கேறுதலை, கண்டிலீரோ - (ஏ! மானுடர்காள்) நீங்கள் கண்டதில்லையோ?

குறிப்பு:—வாழ்வது, தாழ்வது: வினைப்பெயர்கள். தக்கோர்: தகுதியான குணத்தை யுடையவர்கள், எனவே சான்றோர்கள். ஊழ்வினை: ஈண்டு நல்வினை, நல்வினையாதலினன்றோவேழை பல்லக்கேறுவதாகக்கூறினர். "அறத்தொடு பிச்சை கூவியிரப்போர், அரசோடிருந் தரசாளினு மாளுவர்". "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர், நடைமெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்" என்பவைகளின் கருத்தை யீண்டுப் பொருத்தியறிக். "கேடும்பெருவல்ல" என்ற நாயனார் மொழியினைக்கொண்டே ஈண்டு வினை

லன்றி நன்மைதீமை வாராவென்று கூறினர்போலும். இஃது எடுத்துக்காட்டுவமை யணி.

4. உரை :—பெருத்திடு - மிகுந்த, செல்வம் என்பிணி-செல்வமென்று சொல்லப்படும் வியாதியானது, வந்துற்றிடின்-(வினைப் பயனால்) வந்து சம்பவிக்குமானால், உருத்தெரியாமலே - எதிரில் வருபவர்களுடைய உருவங்கண்ணுக்குப் புலப்படாமலே, ஒளிமழுங்கிடும் - கண்ணினது பிரகாசம் குறைந்து போய்விடும்; மருத்து உளதோ எனில் - இதற்கு மருந்து உண்டோ உன்று வினவினல், வாகடத்து இலை - வைத்திய சாஸ்திரங்களில் (அதற்கு மருந்து) கூறப்படவில்லை; (ஆயினும்) தரித்திரம் என்னும் ஓர் மருந்தில் தாளும் - வறுமை என்று சொல்லப்படும் ஒருமருந்தினல் அது நீங்கிவிடும். ஏ - அசை.

குறிப்பு :—இக்காலத்திலும் செல்வவான்கள் அவ்விதமாகவே கண் குருடராயிருப்பதைப் பலருமறிவார்கள். மருத்து : மருந்து என்பது எதுகை நோக்கி வலித்தல் விகாரம் பெற்றது. ஒளி: ஈண்டுக்கண்ணொளி. வாகடம் : வைத்திய நூல். தாளும் : செல்லும்.

5. உரை:—யானையை—; சலம் தனில் இழுத்த அகரா-சலத்தினில் இழுக்கும் வல்லமையுடையதான அந்த முதலையானது, கரைதனிற் - கரையினிற் சேர்ந்தக்கால், பூனையைப் பிடிக்கப்போகுமே - பூனையையும் பிடிக்கும் வல்லமையுடையதாகுமோ, தானையும் - சேனையும், தலைவரும் - அரசரும், தலம்விட்டு ஏகினல் - தத்தமது சொந்த இடங்களை விட்டுப் போவாராயின், சேனையுஞ்செல்வரும் - அந்தச்சேனையும் அரசரும் தியங்குவார்களே - மனக்கலக்கத்தை யடைவார்கள். ஏ - அசை.

குறிப்பு :—மிக்க வல்லமையுடையவர்களாய்த் தமது சொந்த ஊரில் விளங்கும் சேனையும் மன்னரும் அயலிடம்புக்கால் தமது

வல்லமையிழப்பார் என்பது கருத்து. முதலை நீரிலிருக்கும்பொழுது யானையையும் இழுக்கும் வல்லமையுடையதாதலைக் கஜேந்திரன் கதையாலறிக. இப்பாடலின் கருத்தையே பஞ்சதந்திரத்தில் வீரமார்த்தாண்ட தேவரும் "தன்னிடத்திருக்கு நாய்க்குஞ் சௌரிய முண்டு சிங்க, மென்னினுந் தானம் விட்டாலேவரு மதைபெண்ணோர்கள்" என்று கூறியிருப்பதை யீண்டறிக. மன்னரும் வேற்றிடம் சென்றாற் றஞ்சிறப்பையிழப்பர் என்பதை "மன்னர்க்குத் தன்றேய மல்லாற் சிறப்பில்லை" என்பதனானு முய்த்துணர்க. இஃது **எடுத்துக்காட்டுவமையணி.**

6 **உரை** :—தேளது - தேள் என்னும் விஷப்பூச்சியானது, தீயில் வீழ - நெருப்பில் விழுந்த சமயத்தில், செத்திடாது எடுத்த பேரை - (அதனை) இறவாமலெடுத்த பேர்களை, (அது) மீளவே - பிரதியுபகாரமாக, மெய்யுற - (எடுத்தவர்களுடைய) சரீரத்தில் விஷம் பொருந்த, கொடுக்கினால் கொட்டலே போல் - தனது கொடுக்கினாற் கொட்டும் விதம்போல, கோளினர் - கோட்சொல்லும் சுபாவமுடையவர்கள், ஏளனம் பேசி மிக்க இழிவாக மற்றவர்களைப் பற்றிப்பேசி, தீங்குற்று இருப்பதை - அது காரணமாகத் துன்பமுற்றிருப்பதை, எதிர் கண்டாலும் - நாம் பிரத்தியக்ஷமாக எதிரிலே கண்டாலும், தமக்கு - அக்குண்டுணிகளுக்கு, நன்மை செய்வது குற்றம் ஆமே - நன்மையைச் செய்வது குற்றத்தைத் தருவதாம்.

குறிப்பு :—தேளது - அது பகுதிப்பொருள் விகுதி - தேள் எனது பின்புறத்திலேயே விடத்தைக் கொண்டிருப்பதுபோல, கோட்சொல்லிகளும் ஒருவனது பின்புறத்திலேயே விடமொத்த தீச் சொற்களைப் பேசுகிற தன்மையை யீண்டுக் குறிப்பித்தவாறறிக. தீயார்க்கு உபகாரம் செய்தல் அடாது என்று வற்புறுத்திக் கூறியதாம் இச்செய்யுள் "வேங்கைவரிப்புலிக்குத் தீர்த்தவிடகாரி

யாங்கதனுக்காகாரமாஞற் போல் - பாங்கறியாப், புல்லறிவாளர்க்குச் செய்த வுபகாரங், கல்லின்மே லிட்டகலம்" என்னுஞ் செய்யுளின் கருத்தையு மீண்டுய்த்துணர்க.

7. உரை:—தண்டு உலாவிய தாமரைப் பொய்கையில்-தண்டுகளையுடைய தாமரைகள் பொருந்திய தடாகத்தில், மொண்டுநீரை–ஜலத்தை முகந்து, முகத்து அருகு ஏந்திஞள்-தனது முகத்திற்குச் சமீபத்தில் ஏந்தினவளவில், கெண்டை கெண்டை எனக் கரை ஏறிஞள் - 'கெண்டை கெண்டை' என்று சொல்லிப் பயந்து கரையேறிஞள்; (அதன்பின்னர்), கெண்டை காண்கிலள் நின்று தயங்கிஞள் - தான் கண்டுபயந்த கெண்டையினைக் காணுதவளாய் அது எங்கே போயிற்று என்று நின்று மயங்கிஞள்.

குறிப்பு :—தடாகத்தில் நீர் முகந்துவரச் சென்ற கயற்கணுள் ஒருத்தி, கையிலெடுத்த நீரிற்காணப்படும் தனது கண்ணின் பிரதிபிம்பத்தைக் கெண்டைமீன் என்று மயங்கி வெருவிக்கரையேறிப் பார்த்தலும், நீருடன் பிரதிபிம்பம் ஒழிந்தமையின், மீனைக்காணுதவளாய் அஃதுயாண்டுச் சென்றதென்று திகைத்து நின்றனள். கண்ணினது பிரதி பிம்பத்தைக் கெண்டையென மயங்கினமையின் இது மயக்கவணியாம். இதனைப் பிராந்தி மதாலங்காரம் என்பர் வடநூலார். உலாவுதல்: பொருந்துதல். கெண்டைமீனை மாதர் கண்களுக்குப் பிறழ்ச்சி பற்றி யுவமிப்பது தமிழ்நூலார் வழக்கம். காண்கிலள் : முற்றெச்சம்.

8. உரை :—வானரம் மழைதனில் நனைய-குரங்குகள் மழையில் நனைவதைப் பார்த்து, தூக்கணம்-தூக்கணங் குருவிகள், தான்–ஒரு நெறிசொல - அக்குரங்குகள் அநுட்டிக்கும் மார்க்கத்திற்கு விரோதமான ஒரு வழியைச் சொல்ல, தாண்டிப்பிய்த்திடும்-(குரங்குகள் அதற்காகச் சினந்து தாவி) தூக்கணங் குருவிகளைக் கூண்டினெடும் பிய்த்தெறியும், அதுபோல ஒருவர் தாம் அறிந்த, ஞான

முங் கல்வியுங் நவின்றநூல்களும் - ஞானத்தையும் கல்வியினையும் உண்மைப்பொருளைத் தெரிக்கும் நூல்களையும், ஈனருக்கு உரைத்திடின் - அறிவினர்களுக்குச் சொல்லின், இடரதாகும் - (கூறிய அவர்க்குத்) தீங்கு சம்பவிக்கும்.

குறிப்பு :—ஒரு பெருமழையில் வானரங்கள் நனைந்துகொண்டிருக்க, அவ்விடத்திற் சில மரங்களிற் கூடுகட்டிக்கொண்டு மின்மினிப்பூச்சிகளைத் தமக்கு விளக்காக வைத்துக்கொண்டு குளிரின்றிச் சந்தோஷமா யிருக்கும் சில தூக்கணாங் குருவிகள் குரங்குகளைக் கண்ணுற்று அவைகளை நோக்கி 'ஏ! குரங்குகளே! நீங்கள் வலியகையுங்காலும் பெற்று யாது பயன்? நாங்கள் மிருதுவான மூக்கினால் அழகான கூடுகட்டினமையின் இப்பொழுது சௌக்கியமா யிருக்கிறோம். நீங்களும் முதலிற் கஷ்டப்பட்டுக்கூண்டு அமைத்துக் கொண்டிருப்பீராயின் இப்பொழுது கஷ்டப்படாம லிருக்கலாமே' என்று சொல்லின. இதனைக் கேட்ட குரங்குகள் சினந்து 'அற்பக்குருவிகளோ எமக்குப் புத்தி சொல்வது' என வெகுண்டுரைத்து மரங்களின்மீது தாவித்தூக்கணம் புட்களைக் கூண்டினுடன் பிய்த்தெறிந்தன. ஆதலின் அற்பர்கட்குப் புத்தி சொல்லலாகாது. "கற்றனகல்லார் செவிமாட்டிக் கையுறூஉங், குற்றந்தமதே பிறிதன்று" என்னும் நீதிநெறிவிளக்கச் செய்யுளடிகளையு மீண்டறிக. தான்: அசை. தூக்கணம்: ஒருவகைச்சிட்டுக்குருவி. நவிலுதல்: சொல்லுதல். இடரது : அது, பகுதிப்பொருள் விகுதி. இஃது எடுத்துக்காட்டுவமையணி.

9. உரை :—அரும்பு கோணிடில் அது மணம் குன்றுமோ - மலர் கோணலாயிருந்தால் அது மணங் குறைந்து போகுமா, (போகாது), கரும்பு கோணிடில் கட்டி அம்பாகும் ஆம் - கரும்புகோணலாய் முளைத்திருந்தாலும் கற்கண்டுக்கட்டியாகவும் பாகாகவும் ஆகுந்தன்மையிற் குறையாது; இரும்பு கோணிடில் - இரும்பு கோ

ணலாயிருந்தால், யானையை வெல்லலாம் - யானையையும் சயித்து நம் வசப்படுத்தலாம், ஆனல், நரம்பு கோணிடில் - ஒரு மனிதனது நரம்பின் காரணமாக உண்டாகும் குணமானது, கோணிடில்-கோணலாயிருந்தால், நாம் அதற்கு என் செய்வோம் - அதனைத்திருத்த நாம் யாது செய்யலாம்? (ஒன்றுஞ் செய்ய முடியாது).

குறிப்பு :—இரும்பு : அங்குசம். நரம்பு: காரியத்தைக் காரணமாக வுபசரித்துக் கூறினமையின் குணம் என்று பொருள் செய்தாம். நரம்பு : Nerves. என்: எவன் என்பதன் திரிபு. மூர்க்கர் தங் குணத்தைத் திருப்பமுடியாது. இதனை "ஆலைப் பலாவாக்கவாமோ வருஞ்சுணங்கள், வாலை நிமிர்க்க வசமாமோ,—நீலநிறக், காக்கை தனைப் பேசுவிக்கலாமோ சருணையிலிம், மூர்க்கனைச் சீராக்கலாமோ" என்னுஞ் செய்யுளின் கருத்தட னொப்பிடுக. இஃது எடுத்துக்காட்டுவமையணியை யங்கமாகப் பெற்றுவந்த வேற்றுமையணி.

10. உரை :—ஆபத்துக்கு உதவாப்பிள்ளை - ஆபத்துக்காலத்தில் பிரயோசனப்படாத புத்திரனும், அரும்பசிக்கு உதவா அன்னம் - மிகுந்த பசிவேளையிற் பயன்படாத உணவும், தாபத்தைத் தீராத்தண்ணீர் - தாகந்தீர்க்காத தண்ணீரும், தரித்திரம் அறியாப் பெண்டிர் - வறுமையினை அறியாத மனைவியர்களும், கோபத்தை யடக்கா வேந்தன் - கோபத்தையடக்காத அரசனும், குருமொழி கொள்ளாச் சீடன் - ஆசிரியன் மொழிப்படி நடவாத மாணுக்கனும், பாபத்தைத் தீராத்தீர்த்தம் - ஒருவன் செய்தபாபங்களை நீக்காத புண்ணிய தீர்த்தமும், ஏழும்-ஆகிய ஏழும், பயனில்லைதாமே- உலகில் இருந்தும் பயன்படாதனவாம்.

குறிப்பு :—அருமை + பசி=அரும்பசி. "ஈறுபோதல்" என்னுஞ் சூத்திரத்தானமைக்க. தாபம் : வெப்பம்-ஈண்டுத்தாகத்தை புணர்த்திற்று. பெண்டிர் : மகளிர், புத்தேளிர், கேளிர் என்பவற்

றைப்போன்ற 'இர்' ஈற்றுப் பல்லோர் படர்க்கைச் சொல். குரு : அஞ்ஞானவிருளைப் போக்குபவன்:

11. உரை :—(இந்தக் கலிகாலத்திற்) பிள்ளைதான் வயதில் மூத்தால் - புத்திரனானவன் வயது முதிர்ந்து பெரியவனானல், பிதாவின் சொல்புத்தி கேளான்-பிதாவினுடைய சொல்லின்கணுள்ள புத்திமதிகளைக் கவனியான், கள் இதழ் குழலாள் மூத்தால்-தேன் பொருந்திய மலர்களைச் சூடிய கூந்தலையுடைய மனைவியானவள் வயது சென்றால், கணவனைக் கருதிப்பாராள் - தனது புருஷனை யொரு பொருளாக நினைக்கமாட்டாள், தெள்ளுற -தெளிவுபொருந்த, வித்தை கற்றால் - வித்தையைக் கற்றுவிட்டால், சீடனும் குருவைத் தேடான் - மாணாக்கனும் ஆசிரியனைத் தேடமாட்டான், உலகில் - உலகத்தில், உள்ளநோய் பிணிகள் தீர்ந்தால் - பொருந்திய நோயும் பிணியும் ஒழிந்தால், பண்டிதரைத் தேடார் - (மானுடர்) வைத்தியர்களைத் தேடமாட்டார்:

குறிப்பு :—ஆசிரியர் கலிகாலத்தின் கொடுமையைக் குறிப்பித்தனரேயொழிய இவ்விதமாக நடக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறவந்தவரல்லர். கள்ளிதழ் : தேன்பொருந்திய இதழ். சினையாகு பெயராய் மலரை யுணர்த்திற்று. பண்டிதர்: வைத்தியர்.

12. உரை :—தண் தாமரையினுடன் உடன் பிறந்தும்-குளிர்ச்சிபொருந்திய தாமரையோடுகூடத் தடாகத்தில் உற்பவித்தும், மண்டூகம்-தவளைகளானவை, தண் தேன் நுகரா-குளிர்ந்த மதுவை யுண்ணாவாம்; வண்டு-வண்டுகள், கானகத்தினிடை இருந்தும்-காட்டினிடத்திருந்தாலும், வந்தே கமலம் மது உண்ணும் - அங்கிருந்து வந்து கமலத்தினுள் மதுவையே உண்ணும்; அதுபோல, புல்லோர்-அற்பர், பண்டே பழகி இருந்தாலும்-வெகு காலமாகப் பழகியிருந்தபோதிலும், நல்லோரை - நல்லவர்களை, அறியார் - அறிந்து களிக்க மாட்டார்கள்; கற்றோரே - படித்தவர்கள் தாம், கண்டே களித்

து அங்கு உறவாடித் தம்மிற் கலப்பார் - ஒருவரையொருவர் கண்டு களித்து உறவுகொண்டு சந்தோஷிப்பார்கள்.

குறிப்பு :—நுகரா - அநுபவிக்கமாட்டா, மண்டூகம் - தவளை- புல்லோர் : புன்மை என்னும் பண்படியாகப் பிறந்த பலர்பாற் படர்க்கைச் சொல். 'புல்லர்' என்பது 'புல்லோர்' என்றாயது 'பெயர்வினை யிடத்தனளரய வீற்றயல் ஆவோவாதலுஞ் செய்யுளுளுரித்தே' என்னுஞ் சூத்திரத்தில் உள்ள உம்மையானமைக்க. ஏ, அங்கு: அசைகள் இஃது எடுத்துக்காட்டுவமை யணி.

13. உரை :—சங்கு வெண்டாமரைக்கு - சங்குபோல்வெண்ணிற முடைய தாமரைக்கு, தந்தைதாய் - பிதாவும் அன்னையும், இரவி தண்ணீர் - முறையே சூரியனும் குளிர்ந்த ஜலமுமாம் ; அங்குஅதைக்கொய்து விட்டால் - தடாகத்திலிருக்கும்பொழுது அந்தத்தாமரையைக் கிள்ளிவிட்டால், அந்நீர் - (தாய்போன்ற) அந்த நீரே, அழுகச்செய்துகொல்லும் - அதனை அழுகச்செய்து அழிக்கும், தங்கவண் கரையிற் போட்டால் - பரிசுத்தமாகிய வளப்பமிக்ககரையிற்போட்டால், சூரியன் காய்ந்து கொல்வான் - பிதாபோன்றிருந்த சூரியன் தன் கிரணங்களால் எரித்து அழிப்பான் ; ஆதலால், தங்களின் நிலைமை கெட்டால் - (யாவரும்) தங்கள் தங்களுடைய நிலையினின்றும் தவறினால், இப்படித்தயங்குவாரே-இவ்விதமாக வருந்து வார்கள்.

குறிப்பு —இனி, 'சங்கு வெண்டாமரை' யென்பதற்கு 'சங்கிற்கும் வெண்டாமரைக்கும்' என்று உம்மைத் தொகையாக்கிப் பொருளுரைப்பாரு முளர். அஃதத்துணை சிறவாது. தாமரைக்குப்பிறப்பிடம் நீராதலின் அதனைத்தாயென்றனர். அதற்கு ஒளி மிகுவது சூரியனாலாதலின் அவனைப்பிதாவென்றனர். நிலைமை தவறினால் மாதாபிதாக்களுங் கெடுதிசெய்வார்கள் என்பது இதனானே பெறப்பட்டது. வேற்றுப்பொருள் வைப்பணி.

14. உரை :—பொன்னொடு மணி யுண்டானால் - பொன்னுடன் நவரத்தினங்களும் கிடைக்குமானால், புலையனும் - இழிந்த அப்பஞ்சமனும், கிளைஞன் என்று - தமக்குப்பந்து வென்று கூறிக்கொண்டு, தன்னையும் புகழ்ந்து கொண்டு - அவன் தன்னையும் உயர்வாகப்பேசி, சாதியில் மணமும் செய்வார் - (உலகத்தார்) தமது உயர்குலத்தில் அப்பஞ்சமனுக்கும் கல்யாணமும் செய்து வைப்பார்கள்; (ஆனால்), மன்னராய் இருந்தபேர்கள் - அரசர்களாயிருந்தவர்களும், வகைகெட்டுப் போவாராகில் - தமது நிலைமையினின்றும் தவறி இழிந்த நிலையில் வந்துவிடுவாரானால், பின்னையும் - (அவன் முன் அரசனாக இருந்தவன் என்று தெரிந்த, பிறகும், ஆரோ என்று பேசுவார் ஏசுவாரே - அவன் யாரோ? (நமக்குத்தெரியாது) என்று பேசுவதுடன் அவனையும் வைவார்கள்.

குறிப்பு :—இதனானே, 'பொருளிலார்க் கிவ்வுலகமில்லை' என்பதன் கருத்து விளக்கப்பட்டது. பொருளிருந்தால் இழிந்தவனும் உயர்வான், இல்லாவிடில் உயர்ந்தவனும் இழிந்தவனாவான். "கல்லானே யானாலுங் கைப்பொரு ளொன்றுண்டாயி, னெல்லாருஞ் சென்றங்கெதிர் கொள்வர் - இல்லானை, இல்லாளும் வேண்டாள் மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லாதவன் வாயிற் சொல்" என்னுந் தமிழ் மூதாட்டியார் மொழியுடனிதனை யொப்பிடுக. கிளைஞன் : ஞ், பெயரிடைநிலை.

15. உரை :—ஆஈன -பசு கன்றுபோட, மழைபொழிய—, இல்லம் வீழ-வீடு மழையினாற் கீழே இடிந்து விழ, அகத்து அடிமை சாவ - வீட்டிலுள்ள வேலைக்காரி இறக்க, மனையாள் மெய் நோவ- மனைவிகருவுயிர்க்குங் காலமாதலாற் பிரசவவேதனைப் பட, மா ஈரம் போகுமென்று - வயலில் உள்ள மிக்க ஈரம் உலர்ந்துபோய் விடுமே யென்று, விதைகொண்டோட - விதைகளை எடுத்துக்கொ

ண்டு அதிவேகமாக விதைப்பதற்கு ஓட, வழியிலே - நடுவழியில், கடன்காரர் மறித்துக்கொள்ள - கடன்காரர்கள் (கடனைக்கொடுக்கச்சொல்லி) மறிக்க, சாவோலை கொண்டொருவன் எதிரே எய்த-தனக்கு 'இழவோலையைக் கைக்கொண்டு எதிரில் ஒருவன்வர, தள்ள ஒண்ணு விருந்துவர - நீக்க முடியாத விருந்தினர்கள் வந்து சேர, சர்ப்பந்தீண்ட - அந்தசமயத்திற் பாம்புகடிக்க, கோவேந்தன் தூதர் நின்று கடமை கேட்க - அரசனது ஏவலாளர்கள் எதிரில் நின்று வரிப்பணத்தைக்கேட்க, குருக்களுந் தட்சணைக்கு வந்து குறுக்கிட்டாரே ! - அந்தச் சமயத்தில் ஆசாரியரும் எதிரில் வந்து எமக்குத் தட்சணை கொடுவென்று குறுக்கிட்டு நின்றனரோ! (ஆகா இந்த மனிதனுடைய கஷ்டத்தை யென்னென் றுரைப்பேன்).

குறிப்பு :—இவ்வுலகத்தில் உண்டாகக் கூடிய பலவிதத்துன்பங்களும் ஒருவனுக்கு ஒரே சமயத்தில் உண்டானதாகக் கவிவருணித்துக் கூறியதிச் செய்யுள். குருக்கள் குழந்தை பிறப்பதற்கு முன்னரே தட்சணைவாங்க வந்து விட்டனர் போலும். ஈற்றடிக்குப் 'பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப், பாவி மகன் படிந்துபாம் பகரொணுதே' என்று பாடங் கூறுவாருமுளர்.

16. உரை :—வில்லது வளைந்த தென்றும்-வில்லானது வணங்கிவிட்டதென்றும், வேழமா உறங்கிற்று என்றும் - யானையானது தூங்கிவிட்டதென்றும், வல்லியம் பதுங்கிற்றென்றும் - புலியானது பதுங்கி விட்டதென்றும், வளர்கடாப்பிந்திற் றென்றும் - வளர்ந்த ஆட்டுக்கடா பின்னுக்குப் போயிற்றென்றும், புல்லர்தஞ் சொல்லுக்கு அஞ்சி - அற்பர்களுடைய வார்த்தைகட்குப்பயந்து, பெரியோர் பொறுத்தனர் என்றும்—, நல்ல என்று இருக்க வேண்டாம் - இவைகளால் ஆபத்தில்லை நன்மையே என்று இருக்கக்கூடாது ; நஞ்செனக்கருதலாமே-விடம் என்று நினைக்கலாமே.

குறிப்பு :—வில்வளைந்தவுடன் அம்பு அதினின்று புறப்படுவதும் யானை உறங்குவது போலிருந்து திடீரென்று கொல்வதும், புலி பதுங்கிப்பாய்வதும், ஆடு பின்னுக்குப்போய் முன்னுக்கு வருவதும் எவ்விதமாகப் பிரத்தியக்ஷமோ அதேமாதிரியாக அற்பர்தம் சொல்லுக்குப் பயந்து பெரியோரால் அவ்வற்பர் துன்புறுவர் என்பது நிச்சயம். வேழமா : இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வல்லியம் : புலி.

17. உரை :—உரமுடன் - உரத்த குரலுடன், மொழிவான் - பேசுபவனுடைய வார்த்தையானவை, உறுதியும் இல்லை கண்டாய் - பொருளாற்றலின்றி உறுதியற்றுப் போகின்றன, அங்ஙனம் பெரியார் போனடித்துப்பேசும் அப்பேதை, மரத்தின் கீழேயாடும் வானவாரணத்தைமானும் - (மரத்தின் மேலாடும் மயிலை நோக்கித் தானும்) மரத்தின் கீழேயாடும் வான்கோழியினை யொத்திருப்பன்; புரம்மலி - காவலைச்செய்வதில் மிகுந்த, ஞமலிகாலில் பூட்டிய மணிபோல் ஆடும்தரம் உளான் - நாயினது காலிற்கட்டிய மணி போல் ஆடும் முயற்சியினை யுடையான், மொழியும் வார்த்தை - சொல்லுஞ்சொற்கள், தங்கத்தின் கட்டி போலாம் - தங்கக்கட்டியையொக்கும்.

குறிப்பு:—உரத்த குரலுடன் விடயமின்றிப் பேசுகிறன் வான் கோழியை யொப்பான். முயற்சி யுடையவன்மொழி மிக்க பயன் படுவான். புரமலி ஞமலி : காவலைச்செய்யும் நாய்; எப்பொழுதும் தன் எஜமானன் வீட்டைச் சுற்றிக்கொண்டு திரியும் நாயினை நிகர்த்த முயற்சியுடையவன் என்று கொள்க. இனிப் ‘புரம்மலி’ என்பதற்குத்தடித்த உடலையுடைய என்று பொருள் கூறுவாருமுளர். வான்கோழி யென்னுது, வானிற் பறக்குந்தன்மையையுடைய கோழியென்றுங் கூறுவார். இஃதுவமையணி.

நீதிநெறி விளக்கம்.

இது நீதிமார்க்கத்தை விளக்குவது என்று பொருள்படும்; அஃதாவது நீதியாகிய வழியைக்காட்டுந் தீபம் என்பது பொருள். இரவிற் பிரயாணஞ்செய்யும் ஒருவனுக்குத்தான் போகக்கருதிய வூர்க்கு நேரிய வழி இன்னதென்று விளக்கிக்காட்டுதல் கருதி யுலகபாலர் அத்தகையோன் வழிபல்வழிச்சென்று மயங்கி யுழலாதவண்ணம் நேரிய வழியின்கண் ஆங்காங்குத்தீபமிட்டு வைத்து அவனைக்குறித்தவூர்க்கண் உய்த்தல்போல, மாயா வியாப்தமான விப்பிரபஞ்சவாழ்க்கையில் ஆன்மாதீவழிச்சேறல் தவிர்ந்து நல்வழி சேறல் கருதி நந்தம் புலவர் பெருமானிட்டுவைத்த விளக்கமாம் இந்நூலும். நீதியாவது அறமாம்; அஃதாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாம். நீதிநெறிவிளக்கம்: இத்தொடர்மொழி மூன்று சொல் இரண்டு சந்தியாய் முன்னது பண்புத்தொகை நிலைத் தொடராய்ப் பின்னது இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயராய் நூலுக்காயிற்று. விளக்கம்: விளங்கு-பகுதி, அம்-வினைமுதற்பொருண்மை விகுதி, ஙகரம் ககரமானது வலித்தல் விகாரம். நீதிநெறிவிளக்கத்தின் நூலாசிரியர் குமரதரு பரசுவாமிகள். இவர் பிறந்தவூர் கைலாசபுரம்; இவர் பிதா சண்முகசிகாமணிக்கவிராயர். இவர் ஐந்து வயதுவரையிலும் மூங்கையாயிருந்து திருச்செந்தூர் முருகபிரானருளினால் மூங்கைத்தன்மை நீங்கப்பெற்றனர். இவர்தம் ஆசிரியர் மாசிலாமணி தேசிகர். இவர் சமயம் சித்தாந்த சைவமதமே. இந்நூலினைத் திருமலைநாயகர் தம் வேண்டுகோளால் திருக்குறளில் உள்ள கருத்தினை யமைத்துப்பாடியருளினர்.

1. உரை:—முற்று இழாய் - தொழினலம் முற்றிய அணிகலனுடையவளே! நெடுங்காமம் - மிக்க காமம், முன் பயக்கும் சில்நீர இன்பத்தின் – ஆரம்பத்தில் விளக்கும் அற்பத்தன்மையுள்ள சுகத்தினும், பின் பீழை பெரிது பயக்கும் - இறுதியில் துன்பத்தை மிகவும் விளக்கும்; (அது போலாது) மடம் கொன்று அறிவு அகற்றுங்கல்வி - அறியாமையை நீக்கி யறிவினை விசாலப்படுத்தும் கல்வியோ, தொடங்கும் கால் துன்பம் ஆய் - ஆரம்பிக்குங்காலத்தில் துன்பம் விளைப்ப (துபோல்வ) தாகி இன்பம் பயக்கும் - (இறுதியில்) இன்பத்தை விளக்கும்.

குறிப்பு :—போலியின்பம் பயக்குங்காமம் போலாது கல்வி மெய் யின்பம் பயத்தலின் அதனைப் பயில வேண்டு மென்பதாம். இச்செய்யுள் ஒரு பெண்ணை முன்னிலையாக வைத்துக் கூறப்பட்டுள்ளது; இத்தகைய முன்னிலை 'மகடூஉ முன்னிலை யெனப்படும். ஆண்பான் முன்னிலை 'ஆடூஉ முன்னிலை' யெனப்படும். கொன்று - இலக்கணை. ஆய் - 'ஆ' என்பதன் இறந்தகால வினையெச்சம் ய் - விகுதி காலங் காட்டிற்று; போய், தாய், தூய், கூய் என்பனபோல: நீர்-நீர்மை யென்னும் பண்படியாகப்பிறந்த குறிப்புப் பெயரெச்சம். முற்றிழாய்-முற்றிழை யென்னும் அன்மொழித்தொகைக் கரரணப் பெயர்விளி. இனி யுறுப்பனைத்தினும் ஆபரணங்களையுடையாளே யெனப்பொருள் கூறுதலு மியலும். பீழை-பிழை யென்பது பீழை யென நீண்டதெனவும், 'பீடா' என்னும் வடசொற் சிதைவெனவும் கூறுவாரு முளர். பெரிது : குறிப்பு முற்றுவினை யெச்சப் பொருட்டாய் நின்றது; இது முற்றெச்சம் எனப்படும். இது நேரிசைவெண்பா. ஈற்றடி முற்று மோனைக்குதாரணமாதல் காண்க.

2. உரை :—அவை அஞ்சி - (கற்றுவல்ல சான்றோர்கூடிய) சபைக்குப் பயந்து, மெய்விதிப்பார் கல்வியும் - உடம்பு நடுங்கு

வோராது கல்வியும், கல்லார் படியாத பேதைகளாயினர், அவை அஞ்சா - (அத்தகைய) சபைக்குப்பயப்படாது சொல்லும், ஆகுலம் சொல்லும்-தன்பக்தரவல்ல ஆரவார மொழிகளும், நவை அஞ்சி - (உலோபமாகிய பெருங்) குற்றத்திற்குப் பயந்து, ஈத்து உண்ணர் செல்வமும் (இரவலர்க்குக்) கொடுத்து (த்தாமும்) அநுபவியாரது செல்வமும், நல் கூர்ந்தார் இல்லமும்—வறியராயினர் தம் மனைவியா ரது அழகும், பூத்தலின்-(வெளிப்பட்டுத்) தோன்றுதலினும், பூவாமை-(வெளிப்பட்டுத்) தோன்றுமை, நன்று - நல்லதாம்.

குறிப்பு.—அவை-சபையென்னும் வடசொற் சிதை வென்பர். அவையஞ்சி யென்பதை 'அவைக்கஞ்சி' யென விரித்தல் தற்கால வழக்கு; 'அவையினஞ்சி,' அவையை யஞ்சி யெனத் தொல்காப்பி யனர் விரிப்பர். மெய்விதிப்பார் : ஈண்டுமெய் யென்றது எழுவாயாய் விதிர்ப்பார் என்றதன் கண்ணுள்ள விதிர்த்தல் வினைகொடு முடிந்தது (நன். பொது. 26). ஆகுலம் - வடசொல். ஈத்தல் தன் வினை "ஈத்தவகையி னுவவாதார்க் கிப்பின்ற" என இன்றுநாற்பதிற் கூறி னராதலின். ஈந்து என்பது எதுகை நோக்கி வலித்தது என்றலுமொன்று. உண்ணர் உண்-பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, ண் - தோற்றஞ்சந்தி, அனைத்துமோர் பகுதி, ஆர்-விகுதி, விகுதி முதல் ஆகாரங்குறைந்தது முதற்குறை; கல்லார் என்பதும் அற்று; நல்கூர்ந்தார் : நல்கூர் - பகுதி. பிறர் நல்கும் பொருள் களைக்கொண்டு உலகில் ஊர (சீவிக்க) வேண்டியிருத்தலின் நல்கூர் தல் (நல்குரவு) வறுமைக்காயிற்று. மலர் பூத்துழியே மணம் வெளிப்பட்டுத் தோன்றியாவர் கண்ணையுங் கவர்கிற்கு மன்றிப் பூவாது அரும்பாயிருந்த காலத்திற் பிறர் தன்னைக் கவனியாதவாறு கூம்பியும் மணம் வெளிப்பட்டுத் தோன்றாது மிருத்தல்போல அவையஞ்சி மெய் விதிர்ப்பாரும் கல்லாரும் நவையஞ்சி யீத்துண் ணரும் நல்கூர்ந்தாரது அழகிய மனைவியாரும் வெளிப்பட்டுத்

தோன்றாது உள்ளடங்கியிருத்தல் நலமென்பதுணர்க. ஒப்புமைக் கூட்டவணி. இது நேரிசைவெண்பா.

3. உரை.—கலைமகள் - சரசுவதியினது, வாழ்க்கை - வாழ்விடம், முகத்தது எனினும் - (புலவர் வாயின் கண்ணதே யன்றித் தன்) வாயின் கண்ணது என்றவொற்றுமை யிருப்பினும், மலரவன் - (தாமரை) மலரிலிருக்கும் பிரமன், வள்தமிழோர்க்கு ஒவ்வான் - பல்வளனுஞ் சான்ற தமிழ்ப்புலவர்கட்கு (ஒருநாளும்) இணையாக மாட்டான்; (எங்ஙனமோவெனில்), மலரவன் செய் - (அப்) பிரமனாற் செய்யப்படும், வெறுஉடம்பு - நிலையற்ற பொய்யுடல்கள், மாய்வனபோல் - அழிதல்போல, இவர்புகழ் கொண்டு செய்யும் மற்றுஉடம்பு - இப்புலவர்கள் புகழாகிய முதற்கருவி கொண்டு செய்யும் (நூல்களாகிய) உடம்புகள், மாயா - (ஒரு நாளும்) அழிய மாட்டாவாம்.

குறிப்பு.—கற்றுவல்லபுலவர் பிறர்க்குப் பயன் கருதிச் செய்த நூல்கள் அழிவின்றிப் பாடினோர்க்கும் பாடப்பட்டோர்க்கும் புகழ் பயக்குமென்பதாம். கலை : கலாவென்ற ஆரியத்திரிபு. மகள்- இளமைப்பொருள்பயக்கும் மகவென்னும் உரிச்சொல் லடியாகப் பிறந்த பெயர். வாழ்க்கையென்னுந் தொழிற்பெயர் ஈண்டு இடப்பொருள் தருதல்காண்க. திருமாலின் உந்தியந்தாமரையி லுதித்தோனுதலிற் பிரமன் மலரவன் எனப்பட்டான். வள் + தமிழ்-—வண்டமிழ் "இடையுரி வடசொலின்" என்ற விதியானமைக்க. தமிழர் என்றது தமிழோர் என்றாயது (நன்னூல் பொது. 2) ஒவ்வான் : ஒ-பகுதி, ஆ எதிர்மறை விகுதி, வ் - உடம்படுமெய், வ் - சந்தி அனைத்து மொருபகுதி. ஆன் - விகுதி. விகுதி முதலாகாரங் குறைந்தது முதற்குறை. வெற்றுடம்பு: வெறுமை யென்பத னீறுபோய்த் தன்னொற்றிரட்டியது. உடம்பு இரண்டும் அஃறிணையியற் பெயர்கள். மாயாபுகழ்-

இயல்பு (நன். உயி. 21.) மற்று=பிறிது. வேற்றுமையணி இது நேரிசை வெண்பா.

4. உரை :—கற்றோர்க்கு - கற்றுணர்ந்தோர்கட்கு, கல்வி நலனே கலன் அல்லால் - (அக்) கல்வியறிவே யாபரணமாக வேண்டப்படுவதன்றி, மற்று ஓர் அணிகலம் (உம்) வேண்டா ஆம் - பிறிதோராபரணமும் வேண்டப்படுவ தில்லையாம் ; முற்ற - முழுவதும், முழுமணி - பருத்த மணிகளாகிய, பூணுக்கு பூண்வேண்டா - ஆபரணத்திற்குக் காபரணம் வேண்டப்படா ; யார் ஏ - யார்தாம், அழகுக்கு அழகுசெய்வர் - அழகினுக்கு அழகு செய்யப் புகுவார்கள் ? (ஒருவருமிலர்.)

குறிப்பு :—கற்றுணர்ந்தோர்க்கு அவர் தங் கல்வியறிவே யாபரண மென்பது கருத்து. நலம் - நலன் ; கலம் - கலன் : மொழியிறுதிப்போலிகள். கல்வியின் நலன் அதனறிவே யாம். மற்று - பிறிதென்னும் பொருளது. அணிகலமும் என்னும் உம்மைவிகாரத் தாற்றொக்கது. ஏகாரமிரண்டில் முன்னது பிரிநிலை,பின்னது அசையாம். பூண்-முதனிலைத் தொழிலாகு பெயரெனவுந் தொழிலடியாகப்பிறந்த பெயரெனவுங்கூறுவர். முதன் மூன்றடியினும் எடுத்துக் காட் டுவமையணியும், நான்காமடியின்கண் வேற்றுப்பொருள் வைப்பணியு முண்மை காண்க. "கல்வியழகே யழகு" என்றார் நாலடியாரினும். இப்பாடலில் வடசொல் விரவாமல் வந்திருத்தல் காண்க. இது நேரிசை வெண்பா.

5. உரை :—விலக்கிய ஓம்பி-(மநுமுதலிய நூல்களில்) விலக்கிய காரியங்களைச் செய்யாது தவிர்ந்து, விதித்தனவே செய்யும் - விதித்த கருமங்களையே செய்கின்ற, நலம் தகையார் - நன்மை வாய்ந்த மேதகவுடையோர், புலம்பகையை - ஐந்து விடயமாகிய பகையையும், வென்றனம் - யாம் சயித்தோம், நல்ஒழுக்கின் நின்றேம்- நல் வழியிலே தவறாது நிற்கின்றேம், என்று தம்பாடு தம்மில்கொ

ளின் - என்று தமது பெருமையைத் தமக்குட்டாமே மதித்துக் களிப்பரேல், (அவர்தம்) நல்வினையும் தீதே - அன்னார் மேற்கொண்ட நற் கருமமும் பயனின்றாய்விடும்.

குறிப்பு :—அறநூல் வழுவாது செய்யும் நல்வினையாளரும் தம் பெருமை பாராட்டுவரேல் அவர்தம் நல்வினையும் தீதென்பது இப்பாடலின் கருத்து. விலக்கிய, விதித்தன: இவ்விரண்டும் செயப்பாட்டு வினைப்பொருளவாகிய பலவின்படர்க்கை யிறந்தகாலக் குறிப்பு வினையாலணையும் பெயர்கள். ஏகாரம் இரண்டனுள் முன்னது பிரிநிலையும், பின்னது தேற்றமுமாம். நலத்தகை: இருபெயரொட்டுப் பண்புத்தொகை; நலத்தகையார் நல்வினை: ஆறுவது தொழிற் பண்புத்தற்கிழமைப் பொருள். புலமென்றது சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னுமைந்தையும்; இவைகளைப் பகையாக வுருவகஞ் செய்தார் வீட்டையடையத் தடை செய்வனவாதலின். ஒழுக்கு: முதனிலை திரிந்த தொழிலாகு பெயர். பிற என்பது கட்டுரைச் சுவைபட வந்ததோர் அசை. இஃது இனவெதுகை பற்றி வந்த நேரிசை வெண்பா.

6 உரை :—குலம் மகட்கு - நற்குடிப்பிறந்த கற்புடை நங்கைக்கு, தெய்வம் கொழுநனே - தன் கணவனே தெய்வமாம்; மன்ற - ஒருதலையாக, புதல்வர்க்கு - மக்களுக்கு, தந்தையும் தாயும் (தெய்வம்)-தந்தைதாயரே தெய்வமாவார்; அறவோர்க்கு-பிரமசரியம் முதலிய தரும நிலைகளில் நிற்கின்றோர்க்கு, தெய்வம் அடிகளே-குருவே தெய்வமாவார்; அனைவோர்க்கும் தெய்வம் - இனி யாவருக்கும் தெய்வம்; இலைமுகம் பை பூண் இறை - வெற்றிலை அல்லது அரசிலை போலும் வடிவுடைத்தாக முகத்தொழில் செய்யப்பட்ட பசிய பொன்னாலாகிய ஆபரணங்களைத் தரித்த அரசனே யாம்.

குறிப்பு :—தெய்வம் : தைவமென்னும் வடசொற் சிதைவு. 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" என்பவாக லிற் 'குலமகட்குத் தெய்வங் கொழுநனே' யென்றும், "அன்னை யும் பிதாவு முன்னறி தெய்வம்" என்பவாகலின் 'மன்ற புதல்வர்க் குத் தந்தையுந்தாயு' மென்றும் "குருவே சிவமெனக்கூறினனந்தி" என்பவாகலின் 'அறவோர்க்கடிகளே தெய்வ' மென்றும் "திருவு டைமன்னரைக் காணிற்றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்ப வாகலின் 'அனைவோர்க்குந் தெய்வ மிலைமுகப் பைம்பூ ணிறை' என்றுங் கூறினார். கொழுநன் : கொழு—பற்றுக்கோடு ; அஃது இலக்கணையான் ஆதரவை யுணர்த்தியது. இதிற்போல உழுநர், பாடுநர் என்பவற்றிலும் பெயரிடைநிலைகாண்க ; இதன்கண் ஏகா ரம் பிரிநிலைப் பொருளது. மன்ற : தேற்றப்பொருள் பயப்பதோ ரிடைச்சொல். தந்தை : பொருளடியாகப் பிறந்த பெயர். தாம்- பகுதி, த் - பெயரிடைநிலை, ஐ - ஆண்பால் முறைப் பொருண்மை விகுதி, பகுதி முதற்குறுகியதும் மகரம் நகரமானதும் சந்திகள். அறவோர் பலர்பாற் பெயர். (நன். பொது. 2) பைம்பூண் : மர புவழுவமைதி. (நன். பொது. 57.) இஃது எடுத்துக்காட்டுவமை யணி. இன்னிசை வெண்பா

7. **உரை** :—நட்பு பிரித்தல் - (தனது) சிநேகரைப் பகை டாக்கிக் கொள்ளுதலும், பகை நட்டல் - பகைவரோடு சிநேகம் செய்தலும், ஒற்று இகழ்தல்-வேவுகாரரை அவமதித்தலும், பக்கத் தார் யாரையும் ஐயுறுதல் - தன்னருகே இருக்குநர் யாவர் மாட்டி னும் சந்தேகப்படுதலும், தக்கோர் நெடுமொழி கோறல் - மேதக வுடைய பெரியோரது உறுதிமொழிகளைக் கடந்து நடத்தலும், கு ணம் பிறிது ஆதல்-(முன்னிருந்த) தனது தன்மை வேறுபடுதலும், (ஆகிய இவையனைத்தும்) கெடுவது காட்டும் குறி - (ஓரரசன்)

இனிக் கெட்டழியப்போகுமாற்றினை முன்னரே காட்டுகின்ற உற்பாதங்களாம்.

குறிப்பு :—நட்புப் பிரித்தலாதிய ஆறு செய்கைகளையுமுடைய அரசன் விரைவினில் நலங்குலைந் தொழிவானென்பது இப்பாடல் கருதுவது. நட்பு, பகை: இவ்விரண்டும் பண்பாகு பெயர்கள்; (Abstract for the concrete). ஒற்று : முதனிலைத்தொழிலாகுபெயர்: ஐயுறுதல்: ஐயமென்னுஞ்சொல் உறு என்னும் வினைப்படுத்தும் விகுதி வந்துபுணர அம் - கடை குறைந்து, ஐயுறு என அனைத்துமொரு பகுதியாய் நின்று தல் என்னுந்தொழிற்பெயர்விகுதியோடு புணர்ந்தது. 'காமுறுதல்' என்புழிப்போல. குறி: அஃறிணையியற்பெயர். இவ்வாறு ஒருமைப்பெயரை வாக்கிய பேதமாகத்தனித்தனி கூட்டிமுடிப்பதனைத் தேர்வடமிழுப்பார்போலப் **பிரத்தியேக பந்தாந்நுவயம்** என்பர் வடநூலார். இஃது இனவெதுகைபற்றி வந்த நேரிசைவெண்பா.

8. **உரை** :—கண் நோக்கு (எ)- கண்ணினது குளிர்ந்த பார்வையே, அரும்பு ஆ(க)-அரும்பாகவும், நகைமுகமே - நகைபோடு கூடிய இனியமுகமே, நாள்மலர் ஆ (க) - அன்றலர்ந்த புதுமலர் ஆகவும், வாய்மையின் இன்மொழியே - உண்மையாகிய இன்சொல்லே நிம்காய் ஆ (க)-மதுரமானகாயாகவும், வண்மை (எ)-ஈகையே, பலம் ஆ(க)-கனியாகவும், நலம் கனிந்த-(இத்தன்மைய) நன்மைகள் மிக்க, பண்புடையார் அன்றே - தன்மையுடையார்களே, சலியாத கற்பதரு - (வேட்டனகொடுத்தலிற்) சலித்தலில்லாத (தளர்ச்சியடையாத) கற்பக விருக்ஷங்களாவார்.

குறிப்பு :—குளிர்ந்த பார்வையும் மலர்ந்த முகமும் இனியவசனமும் உடையராய்க் கொடுக்கும் கொடையே கொடையென்ப திச்செய்யுளின் கருத்து. நோக்கு : முதனிலைத்தொழிற்பெயர், ஆக என்னும் வினையெச்சம் நான்கும் ஈறு தொக்கனவாகிய வினைச்செவ்

வென். இச்செய்யுள் **முற்றுருவகவணிக்** குதாரணமாம். மேலும் அரும்பு, மலர், காய், பலம் எனச்சொல்லத் தொடங்கிய பொருள் களை முறை வழுவாது சொல்லுதலின் இஃது **அரதனமாலையணி** யாம். இதனை **ரத்நாவளி** அலங்காரமென்பர் வடநூலார். ஈகைக் குணமுடையாரைக் கற்பக தரு எனக்கூறியது உயர்வு பற்றிக்கூறிய திணைவழுவமைதி (நன் - பொது 28). கற்பதரு: இயல்பு (நன். மெய்-36) இஃது இனவெதுகை பற்றிய நேரிசை வெண்பா.

9. **உரை.**—இறைமகன் - அரசன், (ஒன்று) இகழின் - ஒரு பொருளை யிகழ்வானாயின், (ஒக்க) இகழ்ந்து - (தாமுமவனோ டொக்க) இகழ்ந்து, ஆங்கு - அவ்வாறிகழ்ந்த பொழுதையே, ஒன்று - அவ்வொரு பொருளை, புகழினும் - (அரசன்) புகழ்ந்தாலும், ஒக்க புகழ்ப - அவனோடு கூட (உலகினர்) புகழ்வார்கள்; நீர் வழிப் பட்டபுணை - நீரோடுகின்ற யாற்றின்கண் உளதாகிய தெப்பம், மற்று என்செய்யும் - (அந்நீரோடும் வழிச்செல்லுதல் தவிர்ந்து) வேறு எது செய்யவல்லதாகும்? (ஒன்றுஞ் செய்யவல்லதாகாது); (அதுபோல்), மன்பதை - மக்கள் குழாம், இகல்மன்னன் - வலி மை பொருந்திய அரசனது, சீர்வழிபட்டதே - குறிப்பின் வழிச் செல்லுவதேயாம்.

குறிப்பு.—இச்செய்யுள் நுவலுவ தென்னையெனின் அரசன்ற ன்குறிப்பின்வழியே உலகமனைத்தும் நடவாநிற்கு மென்பது இறை மகன்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை. புகழினும் - இதன் கணும்மை இறந்தது தழீஇய வெச்சப் பொருளது. மன்பதை - சொல்லளவின் அஃறிணை யாதலாற் பட்டது என அஃறிணை வினை யேகொடுத்து முடித்தார். இஃது **எடுத்துக் காட்டுவமையணி**. இது நேரிசைவெண்பா.

10. **உரை.**—அமைச்சு - மந்திரிமார், செவிசுட இடித்து - அறுகிக் காதிற் சுடும்படி உறுதிமொழிகளை யெடுத்துரைத்து, அறி

வுமூட்டி - அறிவுறுத்தலான், வெகுளினும் ஆங்கு வாய்வெரீஇபேரா - அரசன் கோபிப்பானாயினும் அப்போது சொல்லுதற்கஞ்சி அறிவுறுத்தலை விடார்கள்; பாகு கவிழ்மதத்தகைமா வயத்தவே - செலுத்தும் பாகர்கள் பெருகுகின்ற மதத்தையுடைய யானையினது வசப்பட்டவராவரோ? (ஆகார்), எத்திறத்தும் - எவ்வாற்றானும், அமாண்பினவே - அத்தன்மையரே யாவர்.

குறிப்பு.—அரசன் நீதிவழுவுவானாயின் அவனது கோபத்துக்குச்சிறிதும் அஞ்சாமல் நீதியை யெடுத்துரைத்து அவனை நல்வழிக்கண் உய்ப்போனே அமைச்சனாவான் என்பது இப்பாடலின் கருத்து. சுட: காரியப்பொருட்டாகிய செயவெனெச்சம். வெகுளினும்- இதன்கண் உம்மை உயர்வுசிறப்புப் பொருளது. எதிர்மறைப்பொருட்டென்மருமுளர். வெரீஇ: இதுசொல்லிசை நிறைப்பவந்த உயிரளபெடை. பேரர்கவிழ்: இயல்பு (நன். உயி. 21). பாகு, அமைச்சு: இவைசொல்லா லஃறிணை; இவை பால் பகாதனவாய்ப் பன்மை வினைகொண்டு முடிந்தன. அமைச்சு: இஃது 'அமாத்தியா' என்னுவடசொற் சிதைவென்பர். இஃது உவமையணி. இது முன்னிரடியினும் எதுகை வேறுபட்ட நேரிசை வெண்பா.

11. உரை :—பழமை கடைப்பிடியார் - பழைய நட்பினை உறுதியாகப் பற்றிக் கொள்ளார், கேண்மையும் பாரார் - உறவினராந்தன்மையையும் மதியார், கிழமை பிறிது ஒன்றுங் கொள்ளார்- வேறோருரிமையையும் நினைக்க மாட்டார், வெகுளின்மன் - (நீதிவழுஉக் கண்டுழி) மிகுதியுங் கோபித்தால், இறை மாண்டார்க்கு- அரசிலக்கணத்தில் மாட்சிமைப்பட்ட மன்னராயினார்க்கு, காதன்மை உண்டே - ஒருவர் மேல் அன்புடையாராதல் உளதோ? அவர்க்கு ஏதிலரும் ஆர்வலரும் இல்லை - அவ்வரசர்க்கு அயலாரும் சிநேகரும் இல்லை.

குறிப்பு :—அரசிலக்கணஞ் செறிந்த மன்னராயினர் பழமை கேண்மை கிழமை முதலியனபற்றி உளங்கோடாது பகைஞர், நொதுமலர், நட்பினர் யாவர் மாட்டும் ஒருதன்மையராதல் வேண்டுமென்பது இச்செய்யுளின் கருத்து. பழமை கடைப்பிடித்தலாவது நட்டாரது பழமையாந் தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தலாம். கடைப்பிடியார்: பல்லோர் படர்க்கை யெதிர்மறை வினைமுற்று. இறுதிகாறும் விடாது பிடித்தல் என்னும் பொருளதாகிய கடைப்பிடி; பகுதி இஃது ஒரு சொன்னீர்மைத்தாய் நின்றது. 'மன்' என்னு மிடைச்சொல் ஈண்டு மிகுதிப்பொருள் பயந்து நிற்றல் உணர்க. காதன்மை : விகுதிமேல் விகுதிபெற்ற பெயர். ஆர்வலர் - தொழிலடியாகப் பிறந்தபெயர். ஆர்வம் - பகுதி. ஆம் - கடைக்குறை, அல் - சாரியை, ஆர் - பலர்பால் விகுதி. "இறைமாண்டார்க்கு" என்பதற்குப் பதிலாக 'இறை மாண்டார்' எனவும் பாடமோதுவார். இதுவே சிறப்புடைத்தென்ப. இஃது ஆரியங் கலவாத் தமிழ் மொழிப்பாவாம். இது நேரிசை வெண்பா.

12. உரை :—தாம் - (அரசர்கள்) தாம், கால மறிந்து-(பகைவர்மேற் செல்லும்) காலமறிந்து, இடமறிந்து - (வெல்லும்) இடமறிந்து, செய்வினையின்-செய்தற்குரிய கருமத்தினது, மூலமறிந்து காரணத்தை யறிந்து, விளைவறிந்து - உண்டாம் பயனை யறிந்து, மேலும் - பின்னும், சூழ்வன - ஆராய்வன வற்றை, சூழ்ந்து - (பெரியாரோடு) ஆராய்ந்தறிந்து, துணைமை - (தமக்கும் பகைவர்க்கும்) துணையாயினரது, வலி தெரிந்து-பலத்தையறிந்து, ஆள்வினை (பின்பு) முயற்சியால், ஆளப்படும் - (கருதிய வினை) செய்யப்படும்.

குறிப்பு :—அரசன் காலத்தையும், இடத்தையும், கருமத்தினது காரணத்தையும், பயனையும், துணையினது வலியையும் தான் ஆராய்தலே யல்லாமற் பெரியவரோடும் ஆராய்ந்து பின்பு அக்கருமத்தைச்செய்ய வேண்டும்-என்பது இச்செய்யுளின் கருத்து.

ஆங்கு-அசை. சூழ்ச்சி—ஆலோசனை. மூலம், காரணம் விளைவு - காரியம்.

13. உரை :—நட்பிடை-சிநேகனிடத்தில், குய்யம் வைத்து - வஞ்சித்தலை வைத்து, எய்யாவினை - பொருந்தாத தீச்செயலை, சூழ்ந்து - ஆராய்ந்து கொண்டு, வட்கார் திறத்தராய் - பகைவரது திறத்தையுடையவர்களாய், நின்றார்க்கு - இருந்தவர்க்கு, திட்ப மாம் - வலியுடையதாகிய, நாள் - ஆயுள்நாள், உலந்ததன்று - இடையில் முடிந்ததில்லை ; நடுவன் - யமன், நடுவின்மை - (ஆயுள் முடிதற்குக் காரணமான) அந்த நடுநிலைமை யில்லாமையை, மறந்து - மறந்து விட்டு, வாளா - சும்மா, கிடப்பன் - இருப்பன் போலும்.

குறிப்பு :—ஒருவரோடு புறத்திற் சிநேகித்து அகத்தில் தீங்கு செய்யக்கருதுவோர், விரைவில் நாசமடைவார் என்பது இப்பாடலின் கருத்து. எய்யா - ஈறுகெட்ட வெதிர் மறைப் பெயரெச்சம். வட்கார் - பகைவர். உலத்தல் - கழிதல். திட்பம்-பண்புப்பெயர். நடுவன் - யமன், நடுவு நிலைமையையுடையவனுய்ச் சமன் செய்து சீர்தூக்கும் கோல் போலமைந்து ஒருபாற்கோடாத மனமுடையனுதலின் யமனை இங்ஙனங் கூறினர்.

14. உரை :—பொய் - பொய்யும், குறளை - புறங்கூறலும், வன் சொல் - கடுஞ் சொல்லும், பயனில்லாத சொற்களும் இந் நான்கும் - ஆகிய இந்நான்கு வாக்குக் குற்றங்களும், சொல்லின் - தன்சொல்லில், எய்தாமை பொருந்தாமலும், மெய்யில் - உடம்பில், புலனைந்தும் - புலன்களைந்தும், வழுக்காது - (செல்லு ம் கூடாத நெறியில்) தப்பிச் செல்லாமலும், காத்து - பாது காத்து, மனமாசு - (வெகுளிமுதலிய) மனக்குற்றங்களையும், அகற் றுக - நீக்கும், நலமன்றோ-நன்மையன்றோ, நல்லாறெனல்-(உயிர்க் குறுதி பயக்கும்) நல்ல நெறியெனச் சொல்லப்படுவது.

குறிப்பு :—நல்லொழுக்கமாவது பொய் முதலிய வாக்குக் குற்றங்களில் நீங்கிப் புலன்களைந்தும் தீநெறியிற் செல்லாமல் காத்து, மனக்குற்றமில்லாமல் ஒழுகுவது என்பது இச்செய்யுள் கருதுவது. புலமைந்தும் : சப்தம், ஸ்பரிஸம், ரூபம், ரசம், கந்தம்.

15. உரை :—தம் - தமது, கருமம் - உரிய தொழிலும், சிதையாமே - கெடாமல், கல்வி கெடாமே - கல்வியுங் கெடாமல், தருமமுந் தாழ்வு படாமே - தருமமுந் தாழ்ச்சி யடையாமல், பெரிதும் - மிகுதியும், இன்னலமும் - இளமை முதலிய நலமும், குன்றுமே - கெடாமல், இளங் கொம்பன்னார் - இளமையாகிய பூங்கொம்பை ஒத்த மனைவியரது, நன்னலம் - நல்லின்பத்தை, துய்த்தல் - அனுபவித்தல், நலம்-நன்று.

குறிப்பு :—ஒருவன் தான்மேற் கொண்ட கருமமும், கல்வியும் தருமமும், தேக நிலைமையும், கெடாமல் மனைவியின்பத்தை அனுபவித்தல் வேண்டும் என்பது கருத்து. படுதல் - உண்டாதல். இன்னலம் - காம நலம் என்றுங் கொள்ளலாம். இளங்கொம்பன்னார்- இளமையாகிய பூங்கொம்பை யொத்தமாதர் : அவரது பற்பல அவயவங்களைப் புஷ்பமாகவும் அவரைக் கொம்பாகவும் உவமித்தார். இனி அவர் தரித்திருக்கும் ஆபரணங்களைப் புஷ்பமாகவுங் கொள்ளலாம்.

16. உரை :—கற்புடுத்து - கற்பாகிய உடையை யுடுத்து, அன்பு முடித்து - அன்பாகிய மலரை முடித்து, நாண் - நாணமாகிய கலவைச்சாந்தை, மெய்ப்பூசி - மெய்யிற் பூசிக்கொண்டு, நற்குண நற்செய்கை - நற்குணமு நல்ல நடக்கையுமாகிய அணிகலன் பூண்டாட்கு - பூண்டமனைவிக்கு, மக்கட்பேறு - பிள்ளைப்பேறு என்பதோர் செல்வமும் - என்பதாகிய ஒப்பற்ற செல்வமும், உண்டாயின் - உண்டானால், கொண்டாற்கு - அவளைக் கொண்ட கண

னுக்கு, செய்தவம் - செய்யுந்தவம், வேறு - வேறொன்றும், இல் - வேண்டுவதில்லை.

குறிப்பு :—நற்குண நற்செய்கையும் பிள்ளைப்பேறு முடைய கற்புடையாள் தான் உய்வதே யன்றி அவளது நாயகனும் உய்வன் என்பது இச்செய்யுளின் கருத்து. கற்பை உடையாகவும், அன்பை மலராகவும், நாணத்தைக் கலவைச்சாந்தாகவும், நற்குண நற்செய்கையை யாபரணமாகவும், பிள்ளைப் பேற்றினை ஒப்பற்ற செல்வமாகவும் உருவகப்படுத்தினமையை ஈண்டு இனிது உணர்க.

17. உரை :—முறையும் - முறைமையையும், குடிமையும்-(தாம் பிறந்த) குடிப்பெருமையையும். யான்மையும்-தகுதியையும், நோக்கார் - பாரார், நிறையும் - (பிறர் பால்மனஞ் செல்லாது) நிறுத்தலையும், நெடுநாணும் - பெரு நாணத்தையும், பேணார் - பாதுகாவார், பிறிது மொரு பெற்றிமை - வேறொரு நலமாயினும், பேதைமைக்குண்டே - அப்பேதைகட்குண்டோ, (ஆதலால்) கற்பில் - கற்பில்லாத, மகளிர் பிறப்பு - மாதர் பிறப்பு, பெரும்பாவம் - மிகுந்த பாவத்தாலாயதேயாம்.

குறிப்பு :—தம்மால் விரும்பப்பட்டவர் இன்ன முறையினரென்றும், இன்ன குலத்தின ரென்றும் இன்ன தகுதிய ரென்றும், ஆலோசியாமலும், கற்பையும் பழிக்கு நாணுதலையும், காவலும் நடக்கின்ற தீயொழுக்க மகளிரைப் பெரும்பாவப் பிறப்பின ரென்றெண்ணவேண்டும் என்பது இச்செய்யுள் நுவலுவது. பெற்றிமை - தன்மை. மகளிர் - இர் ஈற்றுப் பலரறிசொல்.

18. உரை :—தம்முடையான் - தம்மையாளாகவுடைய கட[illegible], எப்பாலும் - உள்ளும் புறம்பும், நிற்பதென-(நீங்காது தோ[illegible]மல்) இருப்பது போல, எம்முடையார்-எம்மையாளாக வுடைய [illegible]ரிகள், எவரெவர்-யார் யார் ; எத்திறத்தர்-எவ்வெப் பக்குவத்[illegible] யுடையவர்கள், அத்திறத்தராய் நின்று - அவ்வப்பக்குவத்துக்

கமைந்தவர்களாய் நின்று, அவரவர்க்கு - அவரவர்களுக்கு, ஆவன-உறுதி மொழிகளை, கூறி - உபதேசித்து, எவரெவர்க்கும் - எவ்வகைப்பட்டார்க்கும், உப்பாலாய் - புறம்பாய், நிற்ப - இருப்பார்.

குறிப்பு :—கடவுள் எங்கும் தோய்ந்தும் தோயாமலிருப்பது போல அவனருள் வழிப்பட்ட பெரியோரும், எல்லாரோடு மருவியும் மருவாதவர்களாகவே நிற்பார் என்பது இப்பாடலின் கருத்து. உப்பால் - உகரம் சுட்டெழுத்து. திறம் - தன்மை.

19. உரை :—அளந்து - (வேதாகமங்களாகிய அளவினால் ஆன்ம சொரூபத்தை) அறிந்து, ஐயம் - (பின்னர் அதன்கண்) சந்தேகமும், திரிபு இன்று - விபரீதமும் இல்லாமல், உத்தியிற் றெளிந்து - கருதலளவையால் நிச்சயித்து, மெய்யுணர்ச்சி - மெய்யறிவாகிய, கண்விழிப்ப - கண்விழியா நின்று, தூங்குவார் - ஞான நித்திரை செய்பவர்கள், தம்முளே - தம்முள்ளத்தில், காண்பதேகாட்சி-காணுவதே காட்சியாம் ; கனவு - (அத்தூக்கத்தில் வெளிப்படும்) கனவே, நனவாக பூண்பதே - சாக்கிரமாகப் பொருந்துவதே, தீர்ந்த பொருள் - முடிந்தபயனும்.

குறிப்பு :—வேதாகமங்களால் ஆன்ம சொரூபத்தை ஐயந்திரிபில்லாமலுணர்ந்து மெய்யுணர்ச்சியாகிய கண்விழித்து ஞான நித்திரை செய்பவர் தம்முள் தோன்றுவதே காட்சியாகவும் அந்நித்திரையில் தோன்றும் கனவு நனவாகவும் இருத்தலே முடிந்த பொருளாம் என்பது இச்செய்யுளின் கருத்து. உத்தி-யுக்தி என்னும் வடசொல்லின் திரிபு. ஐயம் திரிபு-சந்தேகவிபரீதம். கண்விழிப்பத்தூங்குதலை அறிதுயிலமர்தலாகக் கூறுதல் வழக்கம்.

திரிகடுகம்.

இதனை யியற்றியவராகிய நல்லாதனூர் வைணவரென்பது அவ ரியற்றிய காப்புச்செய்யுளாகிய "கண்ணகன் ஞால மளந்ததூஉங் காமருசீர்த், தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉ - நண்ணிய, மாயச் சகட முதைத்ததூஉ மிம்மூன்றும், பூவைப்பூ வண்ண னடி." என்னுஞ் செய்யுளான் இனிது புலப்படும். இது பதினெண் கீழ்க் கணக்கிலொன்று. திரிகடுகம் - வடமொழித் தொடர்; "இடை யுரி வடசொலி னியம்பிய கொளாதவும்........" என்னுஞ் சூத்தி ரத்தான் வலிமிகாதாயிற்று. த்ரி - மூன்று, கடுகம் - கார முள்ள வஸ்து; சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று காரமுள்ள வஸ்துக்கள் சேர்ந்தது எனப்பொருள்படும். இந்நூலிற்கு ஆகுபெ யராய் வந்தது.

1. உரை :—அருந்ததி - அருந்ததி போலும், கற்பினார் - கற்பினையுடைய மகளிரது, தோளும் - புயமும், திருந்திய - குற்றமற்ற, தொல்குடியின் - பழையகுடியிற் பிறந்த, மாண்டார் - பெருமை பெற்றவருடைய, தொடர்ச்சியும் - சிநேகமும், சொல் லின் - நூலிடத்தே, அரில் - குற்றங்களை, அகற்றும் - நீக்கவல்ல, கேள்வியர் - கேள்வியை யுடையவருடைய, நட்பும் - சிநேகமும், இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், திரிகடுகம் போலும் - (ஒருவ னுக்குத்) திரிகடுகம் போலும், மருந்து - மருந்தாம்.

குறிப்பு :—நற்குண நற்செய்கைகளுள்ள பெண்ணை விவா கஞ் செய்திருப்பது இம்மை மறுமைகளில் நேரிடும் துன்பங்களைத் தீர்த்துச் சுகம் பயக்க வல்லதாகையால் வியாதியை நீக்கிச் சுக முண்டாக்குஞ் சுக்கு திப்பிலி மிளகுகளாகிய மருந்து போலென் பது கருத்து. நற்குலத்திற் பிறந்த யோக்கியருடைய சம்பந்தமும் நல்ல விஷயங்களைக் கேட்டறிந்தவருடைய சிநேகமும் இப்படியே யாம். திரிகடுகம்-சுக்கு திப்பிலி மிளகு என்னும் இம்மூன்றுங் கூடி

யது. "திரிகடுகஞ்சுக்கோடு திப்பிலி மிளகுமாம்" என்பது சூடாமணிநிகண்டு. இம்முதற்பாட்டிற் சொல்லப்பட்ட திரிகடுகமென்னுஞ் சொல்லே சிறப்புப்பற்றி இந்நூலுக்கும் பெயராகக் கொள்ளப்பட்டது. இஃது உவமையாகுபெயர். அருந்ததிக் கற்பினர்-இங்கு ககரம் நெகிழிசையில்லாதிருத்தற் பொருட்டு வலித்தல் விகாரம்; வடசொல்லோடு தமிழ்ச் சொல் சேர்ந்தால் "உயிர முன்வன்மைமிகா" என்கிற விதிக்கு விரோதமாய் வலிமிகுமென்று ஒரு கோட்பாடு முண்டு. அருந்ததியென்பவள் வசிஷ்ட முனிவருடைய மனைவி; கற்புடையார் பலரினும் இவளுக்கு மேன்மையென்னை யெனின் நக்ஷத்திர நிலையிலும் கணவனைப்பிரியா திருக்கை. இந்நக்ஷத்திரத்தை விவாகத்திற் பிரவேச ஹோமம் என்கிற சடங்கில் மணமகளுக்குக் காட்டுவதுண்டு. இது கற்பு நிலைநோக்கி யென அறிக. தொல்குடி - இதில் லகரம் திரியாமை உரிச்சொல்லானதுபற்றி (நன். மெய். 36.) சொல்': நூல்களுக்குக் காரணவாகுபெயர். அரில் - குற்றம், அவை சந்தேகமும் விபரீதமும். விபரீதம் - வேறொன்றாகத் தோன்றல்.

2. உரை :—கல்லார்க்கு - கற்றறியாதவர்க்கு, இனன் ஆய் - உறவினனாய், ஒழுகலும்-நடத்தலும், காழ்கொண்ட-(மன) உறுதி கொண்ட, இல்லாளை - மனைவியை, கோலால் புடைத்தலும் - கோலால் அடித்தலும், இல்லம் - (தம்) வீட்டிடத்து, சிறியாரை - சிற்றறிவாளரை, கொண்டு - (உடன்) கொண்டு, புகலும் - புகுதலும், இம்மூன்றும் - (ஆகிய) இம்மூன்றும், அறியாமையான்-(தம்) அறியாமையினாலே, வரும் (தமக்கு)வரும் கேடு-கேட்டை (விளைப்பனவாம்)

குறிப்பு :—மூடரோடு சேர்ந்திருப்பதும், பதிவிரதையான மனைவியை அடித்து வருத்துவதும், அற்பபுத்தி யுடையோரை வீட்டினுள்ளே வரச்செய்வதும் தகாத காரியமாம். அற்பபுத்தி யுள்ள

வர் வீட்டினுள் வரும் வழக்கம் வைத்தால் அவர்கள் இருப்பு முதலியவற்றை அறிந்து அபகரித்தல் முதலாகிய தீங்கு செய்வார்கள் என்பது கருத்து. இனன்-இனம் என்பதின் ஈறு னகரமாய்ப்போலியாயிற்று (நன். எழுத். 67.) இல்லாள்-இல் பகுதி ஆள் - பெண்பால் விகுதி. இல்லறத்திற் குரியவள் என்பது பொருள். கேடு-முதனிலைத் தொழிற்பெயர், முதல் நீண்டது, கேட்டைத் தருவதற்கு ஆகுபெயர்.

3. உரை :—பிறர் - பிறர், தன்னை - தன்னை, பேணுங்கால் - உபசரித்துச் சொல்லு மிடத்து, நாணலும் - (தான்) நாணுதலும், பேணார் - உபசரியாதவராய், திறன் - (தனது) தகுதி, வேறுகூறின் - வேறுபடச் சொல்லுமிடத்து, பொறையும் - (அதனைப்) பொறுத்தலும், அறவினையை - உபகாரச்செய்கையை, கார்-மேகம், ஆண்மை போல - ஆளுதல் போல; ஒழுகலும்-(ஆளுதல் செய்து) நடத்தலும், இம்மூன்றும் - (ஆகிய) இம்மூன்றும், ஊர் - (பிறரின் மேற்பட்டுச்) செல்லுகின்ற, ஆண்மை என்னும் - ஆண்மை யென்கின்ற, செருக்கு - செல்வங்களாம்.

குறிப்பு :—ஒருவர் தன்னைப் புகழுமிடத்துக் களியாமல் நமக்கு இது தகாதென்று நாணவேண்டும்; தன்னைத் தூஷிக்குமிடத்து அகங்காரப்படாமற் பொறுக்கவேண்டும்; மேகம் யாதொரு பயனையும் எதிர் பாராமல் மழைபொழிந்து உபகாரஞ் செய்வது போல் உபகாரஞ்செய்யவேண்டும் என்பது கருத்து. பொறை - தொகை என்பதுபோற் கொள்க. அறவினை - அறமாகிய வினையெனப் பண்புத்தொகை. ஊர் ஆண்மை - ஊர்வினைத்தொகை. ஊர்தல் - மேலேறிச் செலுத்தல். செருக்கு - இறுமாப்பு, அதனைத்தருஞ் செல்வத்திற்கு ஆகுபெயர்.

4. உரை :—தொல் - பழையோர் - அவையுள் - (கூடியிருக்கின்ற) சபையினிடத்தே, தோன்றும் - (தானாக விளங்கித்) தோன்

றும், குடிமையும் - (தமது) குடிப்பிறப்பும், தொக்கு இருந்த-(பலவகை நூலோரும்) கூடியிருந்த, நல்ல அவையுள் - நல்ல சபையிடத்தே, மேம்பட்ட - (யாவரும் புகழும்படி) மேன்மைப்பட்ட, கல்வியும், வெல் சமத்து - வெல்லும் போரிடத்தே, வேந்து - (தம்மையாண்ட) வேந்தன், உவப்ப - மகிழ, அட்டு - (பகைவரைக்) கொன்று, ஆர்த்த - நிறைத்த, வென்றியும் - வெற்றியும், இம்மூன்றும் - (ஆகிய) இம்மூன்றும், தாம் - தாமே, தம்மை-தம்மைக் (குறித்து), கூறு - (வியந்து) சொல்ல வேண்டாத, பொருள் - பொருள்களாம்.

குறிப்பு :—பிரசித்தமான குடிப்பிறப்பும், விசேஷமான கல்வியும், வெற்றிபெறத்தக்க வீரமும் தாமே விளங்கும் ஆதலால் அப்படியாக முயலவேண்டுமென்பது கருத்து. குடிமை - குடி - குலம் பகுதி, ஆகுபெயராய் அதிற் பிறப்பைக் காட்டும். மை-தன்மையைக் காட்டும் விகுதி. தொக்கு-தொகு என்னும் பகுதியே ககரமிரட்டி இறந்த காலம் காட்டி வினை யெச்சமாயிற்று. உகர விகுதி புணர்ந்து பகுதி உகரம் கெட்ட தெனினும் அமையும். வெல் - வினைத்தொகை, இடப்பெயரோடு முடிந்தது. சமம்-ஸமரம் என்கிற வடசொல் ரகரம் தொக்குவந்ததுபோலும். வேந்து-வேந்தன் தன்மை, வேந்தனுக்கு ஆகுபெயர் ; கூற்று, அரசு முதலியவு மிப்படியே.

உரை :—இழுக்கல்-வழுவும், இயல்பிற்று - இயல்பினையுடையது, இளமை - இளமைப்பருவம் ; பழித்தவை - (அறிவுடையோரால்) விலக்கப்பட்டவைகளை, சொல்லுதல்-சொல்லுதலில், வற்று ஆகும்-வல்லது, பேதைமை-அறியாமை ; யாண்டும்-எக்காலத்தும், செறுவோடு - கோபத்தோடு, நிற்கும் - நிற்பதாகும், சிறுமை - ஈனத்துவம் ; (ஆதலால்) இம்மூன்றும் - இம்மூன்றனையும், அறிவுடையார் - விவேகம் உடையவர், குறுகார் - கிட்டார்.

குறிப்பு :—இயல்பாக வழுவிப்போவதுதான் பாலியம்; பெரியோர் வெறுத்தவைகளை ஒருவன் சொல்லுதல் மூடத்தனம்; எப்போதும் கோபத்தோடிருப்பதுதான் சிறுமை; இவை ஒருவர்க்கிருந்தால் அவரைப் பெரியோர் சேரார் என்பது கருத்து. இயல்பிற்று-குறிப்பு முற்று; இயல்பு-பகுதி. இன்-சாரியை, று - ஒன்றன் விகுதி, ன் ற் ஆனது வலித்தல் விகாரம். இளமை பேதைமை, சிறுமைகள் அவற்றை உடையார்க்கு ஆகுபெயரென்றாயினும், இழிவுபற்றி உயர்திணையை அஃறிணையாகக் கூறியதென்றாயினும் அமைத்துக்கொள்ளலாம். நன் பொது. க. 28). வற்று-வல் + று எனப்பிரித்து அமைத்துக்கொள்க.

6. உரை :—பிறன்கண் - பிறனொருவனிடத்துள்ள, ஆசைபடுதலும் - (பொருளுக்கு) ஆசைப்படுதலும், பாசம்-(தன்) சுற்றமும், பசிப்ப - பசித்திருக்க, மடியை – சோம்பலை, கொளலும் – கொள்ளுதலும், கதித்து-வெறுத்து, ஒருவன்-ஒருவனால், கல்லான் என்று-கற்றிலனென்று, எள்ளப்படுதலும் - இகழப்படுதலும், இம்மூன்றும் - (ஆகிய) இம்மூன்றும், எல்லார்க்கும் - யாவர்க்கும், இன்னாதன - இன்பந் தராதவையாம்.

குறிப்பு :—பிறன் பொருளுக்கு ஆசைப்படுவதும், மக்கள் முதலானோர் சோறில்லாமல் வருந்த யாதொரு முயற்சியு மின்றிச்சும்மா விருப்பதும், "இவன் படியாதவன்" என்று இகழும்படி யிருப்பதும் யாவர்க்கும் நல்லகாரிய மல்ல என்பதாம். பிறன் என்பது அவன் பொருளுக்கு ஆகுபெயர். பிற - இடைச்சொல், பகுதி; ன்- ஆண்பால் விகுதி. பாசம் - ஆசையின் பெயர், வடசொல்; அக்கும் கயிற்றின் பெயராகிய இது ஒருவனை நீங்க வொட்டாமற் கட்டுப்படுத்துகிற தென்னும் ஒப்புமையால் ஆசைக்கு ஆயிற்று. தமிழில் ஆசைக்கு இடமாகிய சுற்றத்திற்கு ஆகு பெயர். கதித்து - கதம் என்னும் பெயரடியாய்ப் பிறந்த வினையெச்சம், கதி - பகுதி

ஒருவன் - கர்த்தாப்பொருளில் வந்த மூன்றும் வேற்றுமைத் தொகை. இன்றுதன - எதிர்மறைப் பலவின் வினைமுற்று; இன் - பண்படி, பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, தகரம் எழுத்துப்பேறு அன் - சாரியை, அ - விகுதி.

7. உரை :—குறளையுள் - (ஒருவனுக்கு வந்த செல்வச்) சுருக்கத்தினால், நட்பு அளவு - (சிநேகித ருடைய) சிநேகத்தின் அளவானது, தோன்றும்-காணப்படும்; உறல் இனிய-சேர்தற்கு இனிதாகிய, சால்பினில் - (நற்குணங்களினது) நிறைவினாலே, குடிமை-குடிப்பிறப்பானது, தோன்றும் - காணப்படும்; பால்போலும் - பால் போலும், தூய்மையுள் - பரிசுத்த குணமுடைமையினாலே, பிரமாணம் - (ஒருவனது) நிலையானது, தோன்றும் - காணப்படும்; இம்மூன்றும் - இந் (நட்பளவு முதலாகிய) மூன்றும், வாய்மை - மெய்ம்மையை, உடையார் - உடையாரது, வழக்கு-ஒழுக்கங்களாம். உம் - அசை.

குறிப்பு :—செல்வங் குறைந்த போது முன்போல் சிநேகம் பாராட்டுவதனாற் சிநேகன் மேன்மை விளங்கும்; ஒருவனுடைய நற்குணங்களினாலே அவனது குடிப்பிறப்பு விளங்கும்; பரிசுத்தத்தினால் அவன் இருக்கும் விதம் விளங்கும்; இவை சத்தியமுடையார்க்கே யல்லது பிறருக்கு இரா என்பது கருத்து: குறளையுள் - குறு பகுதி, அள் - தொழிற் பெயர் விகுதி, ஐ - சாரியை, உள் - ஏழனுருபு, ஏதுப் பொருளில் மயங்கிற்று. மற்றவையு மிப்படியே.

8. உரை :—வாயின் அடங்குதல் - வாக்கினால் அடங்குதல், துப்புரவு ஆம் - (இகத்திலே) செல்வத்தைத் தருவதாகும்; செய்கை அடங்குதல் - (சரீரச்) தொழிலால் அடங்குதல், அற்ற - (மறுமையிலே) குற்றமற்ற, திப்பியம் ஆம் - தெய்வப்பிறப்பைத் தருவதாகும்; பொய் இன்றி பொய்யறிவு இல்லாமல், நெஞ்சம் அடங்

குதல், குற்ற மற்ற மனத்தால் அடங்குதல் வீடு ஆகும்-முடிவிலே முத்தியைத்தருவதாகும்; இம்மூன்றும் - வஞ்சத்தின் - பொய்யி னின்றும், தீர்ந்த பொருள் - நீங்கிய நற்பொருள்களாம்.

குறிப்பு :—பொய் கோள் முதலானவையில்லாமல் வாய் அடங்கி யிருந்தாற் பலரும் நேசராவர், ஆதலாற் செல்வம் பெறலாம்; திருடு விபசார முதலிய கெட்ட செய்கைகளின்றி உடம்பு அடங்கி யிருந்தாற் சொர்க்கங்கிடைக்கும்; நிலையற்ற வுலக வின்பத்திற் பற்றற்று மனம் அடங்கியிருந்தால் மோக்ஷம் பெறலாம் என்பது இப்பாடலின் கருத்து. துப்புரவு - துப்பு - அனுபவம், உரவு - வலிமை, உறுதியான அனுபவம் என்றதாயிற்று. இது செல்வமென்று கொள்ளப்பட்டது. திப்பியம் - திவ்பம் என்னும் வடசொற்றிரிபு. வீடு-மாயையினின்றும் விடப்பட்ட நிலை வீடு. மோக்ஷம் என்பதன் பொருளும் இதுவே. விடு என்னு முதனிலைமேற் செயப்படுப்பொருள் விகுதி புணர்ந்து கெட்டு முதனீண்டு பிறந்த பெயர். துப்புரவு, திப்பியம், வீடு இவை மூன்றும் காரிய ஆகுபெயராய்க் காரணத்தை யுணர்த்தின. வஞ்சத்தின் - ஐந்தனுருபு, நீக்கப்பொருளில் வந்தது.

9. உரை :—குருடன் மனையாள் - குருடனுடைய மனையாளினது, அழகும்—, இருள்தீர - மயக்கந்தீர, கற்று-(உண்மை நூலைக் கற்று, அறிவு இல்லாதான் -(அதன் பொருளை) அறிதலில்லாதவன், கதழ்ந்து உரையும் - விரைந்து(சொல்லுகிற) சொல்லும், பற்றிய- விரும்பப்பட்ட, பண்ணில் - இசை நூலில், தெரியாதான் - பயிற்சியில்லாதவன், யாழ் கேட்பும் - வீணையினோசையைக் கேட்டலும், இம்மூன்றும் -(ஆகிய) இம்மூன்றும், எண்ணில் - ஆராயுமிடத்து, தெரியா -(அம்மூவர்க்கும் முறையே) தெரியாத, பொருள் - பொருள்களாம்.

குறிப்பு :—குருடன் பெண்சாதிக்கு இருக்கிற அழகு அவனாற் பார்க்கக் கூடாமையால் வீணானதுபோலப் படியாதவன் சபையிற்

பேசும் பேச்சு யாராலும் அங்கீகரிக்கப் படாததனால் வீணாகும்; அப்படியே இராக ஞானமில்லாதவன் கேட்கும் பாட்டும் அவனுக்கு ரசம் தோன்றாதாகையால் வீண் என்பது கருத்து. ததழ்ந்து-ததழ் பகுதி. கேட்பு - கேள் பகுதி, பு - பகுதி.

10. உரை :—முந்தை-(ஒருவனுக்கு) இளமைப்பருவத்திலே எழுத்தின் வரவு - கல்வியறிவுண்டாதலும், பிற்பாடு-அதன் பின்பு, உணர்ந்து -(அக்கல்விப் பொருளை) உணர்ந்து, தந்தையும் தாயும் - தந்தையையுந் தாயையும், வழிப்பட்டு - பூசித்து வந்த, ஒழுக்கம் - ஒழுக்கமுடைமையும், பெருநெறி-(பின்பு) பெரியோரது வழியைச், சேர்தல் - சேர்தலும், இம்மூன்றும்-(ஆகிய) இம்மூன்றும், விழுப்பம் - உயர்வைத்தரும், நெறி - வழியை, தூரா ஆறு-அடையாத விதங்களாம்.

குறிப்பு :—இச்செய்யுள் கருதுவது என்னை யெனின் இளமையிற் கல்வி கற்றுத் தாய்தந்தைகளைப் பூசித்து ஆசரித்துப் பெரியோர் போகும் வழியிற் செல்லுதல் ஒருவனுக்கு மேன்மையாம். முந்தை -முந்தியகாலம், இளமைமேற் கொள்ளப்பட்டது; முந்து- பகுதி, ஐ - கர்த்தாப்பொருள் விகுதி. விழுப்பத்தைத் தரும் நெறி, உருபும் பயனும் உடன்தொக்க தொகை, விழுப்பம்=மேன்மை.

11. உரை :—பழமையை - (நெடுங்காலமாகப்) பழகி வருந் தொடர்ச்சியை, நோக்கி அளித்தல்-(அத்தொடர்ச்சியுடையாரைக்) காப்பாற்றுதலும், கிழமையால் -(செய்யும்) உரிமையால், கேளிர்- சுற்றத்தார், உவப்ப-மகிழும்படி, தழுவுதல்-(அவரைத்) தழுவுதலும் கேளிராய் -(தனக்கு) நட்பாளராய்ச் (சூழும்படி), துன்னிய சொல்லால் - இனிய சொல்லினால், இனம் – நல்லினத்தை, திரட்டல் - சேர்த்தலும், இம்மூன்றும் -(ஆகிய) இம்மூன்றும், மன்னற்கு இளையான் - இளவரசனது, தொழில் - தொழில்களாம்.

குறிப்பு :—இளவரசனாயிருப்பவன் தன் முன்னோரோடு பழகி வந்த மந்திரி முதலானவரை ஆதரிக்கவும், இனத்தாரை உரிமை காட்டிப் பாதுகாக்கவும், நல்லவரைத் தனக்கு நட்பாக்கிக்கொள்ளவும் வேண்டும் என்பது இச்செய்யுளின் கருத்து. துன்னிய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். துன்னுதற்கு என்பது பொருள். துன் - பகுதி, இய - விகுதி. திரட்டல் - பிறவினைத்தொழிற் பெயர்; திரள் - தன்வினைப் பகுதி. மன்னவன் - மன்-பகுதி, அன் - விகுதி; நிலை பெறுதலைச் செய்பவன் என்பது பொருள்.

12. உரை :—நல்விருந்து-நல்ல விருந்துகளை, ஓம்பலின்-பாதுகாத்தலால், நட்டாள் ஆம்-(தனக்குச்) சிநேகிதையாம்; வைகலும்-எப்போதும், இல் - (தன்) மனையறத்தை, புறஞ் செய்தலின்-காப்பாற்றலினாலே, ஈன்றதாய்-பெற்றதாயாம்; தொல் குடியின்-(தன்) பழைய குடிக்குத் தகுந்த, மக்கள் பெறலின் - புதல்வரைப் பெறுதலால், மனைக்கிழத்தி - மனைவியாம்; இம்மூன்றும் - (ஆகிய) இம்மூன்றும், கற்பு உடையாள் - பதிவிருதாதருமத்தை உடையவள், பூண்ட - மேற்கொண்ட, கடன் - கடமைகளாம்.

குறிப்பு :—கற்புடைய மனைவியானவள் வரும் விருந்தினரை ஆதரிப்பதிற் புருஷனுக்குச் சிநேகிதையாகவும், இல்லறத்தைப்பாதுகாத்தலில் தாயாகவும், மக்களைப் பெறுதலில் இல்லாளாகவும் இருக்க வேண்டும் என்பது கருத்து. நட்டாள் - நள் - பகுதி, ட்-இடைநிலை, ஆள்-விகுதி, பகுதி ளகரம் டகரமானது சந்தி, மனைக்கிழத்தி - மனைக்கு உரிமையுடையவள்; கிழமை-உரிமை. கிழத்தி-கிழ - பகுதி, இ - பெண்பால் விகுதி, தகரங்கள் எழுத்துப்பேறும் சந்தியும், தி - விகுதி யென்பது நேர். இம்மூன்றும் என்றது நட்டாள் முதலியவருடைய தன்மைகளை; இங்ஙனங் கொள்வது காவியங்களுக்கு ஏலாததாயினும் சாஸ்திரங்களுக்குத் தக்கதேயாம்.

13. உரை :—அருளினை - தயையை, நெஞ்சத்து - மனதினிடத்து, அடைகொடாதானும்-நிறையவையாதவனும், பொருளினை-திரவியத்தை, துவ்வான் - (பிறர்க்குங்) கொடாது (தானும்) அநுபவியாது, புதைத்து வைப்பானும் - புதைத்து வைக்கின்றவனும், இறந்து - (தன்னிலே) கடந்து, இன்னா - (பிறர்க்குத்) துன்பந்தருகின்ற, சொல்லகிற்பானும் - (சொற்களைச் சொல்ல வல்லவனும், இம்மூவர் - ஆகிய இம்மூவரும், பிறந்தும்-(மனிதப் பிறவியிற்) பிறந்திருந்தும், பிறந்திலாதார் - பிறவாதாராவர்.

குறிப்பு :—தயையில்லாதவனும், பணத்தை வீணாய்ப் புதைத்து வைக்கிறவனும், பிறர்க்கு மிகவும் மனம் வருந்தும் படியான பேச்சைப் பேசுகின்றவனும், மானுடப் பிறவியானாலும் அப்படியல்லாமற் கொடிய மிருகப் பிறவியிற் சேர்ந்தவர் என்பது கருத்து. அடைகொடாதான் - அடையாகக் கொடாதவன், அடை - அடைக்கப்படுவது, கொடுத்தல்=வைத்தல், அடைத்து வையாதவன் என்பது திரண்ட பொருள். துவ்வான் - து - பகுதி, வ் - இடைநிலை, மற்றொரு வகரம் தனிக்குறின் முன் ஒற்றுதலால் இரட்டியது, சந்தி, ஆன் - விகுதி. சொல்லகிற்பான் - சொல் - பகுதி, அ - சாரியை, கில்-ஆற்றல் விகுதி, பகரம் - எழுத்துப்பேறு, ஆன்-விகுதி; ப் - இடைநிலை யெனினும் ஒக்கும்; காலங்கருதப்படாமையின் தன்மையைக் காட்டி நிற்கும். பிறந்திலாதார் - பிற-பகுதி, இல்-எதிர்மறைப்பண்படி இங்கு விகுதி போற் கொள்ளப்படும். ந்-த் விரித்தல் விகாரம்; இடைநிலையும் சந்தி விகாரமும் என்னலாம். ஆ - சாரியை, த்-எழுத்துப்பேறு, ஆர் - விகுதி, இஃது உடன்பாட்டெதிர்மறை வினையாலணையும் பெயர்.

14. உரை :—அறிவு அழுங்க - தன்னறிவு கெடும்படி, தின்னும் - (அதனைத்) தின்னுகின்ற, பசி நோயும் - பசியாகிய வியாதியும், மாந்தர்கள் - மனிதர்கள், செறிவழுங்க - (தன்னைச்) சேராதி

ருக்கும்படி, தோன்றும் - உண்டாகின்ற, விழைவும் - பேராசை யும், செறுநரின் - பகைவர்களுடைய, வெவ்வுரை - கொடிய சொற் களை, நோனு - பொறுத, வெகுள்வும் - கோபமும், இவை மூன்றும்- (ஆகிய) இவை மூன்றும், நல்வினை - (ஒருவன் கொண்ட) தருமத் தை, நீக்கும் - கெடுக்கின்ற, படை - ஆயுதங்களாம்.

குறிப்பு :—அறிவு மழுங்கிப் போம்படியான பசியினாலும், பேராசையினாலும், பகைவர் சொல்லுகின்ற கொடுமைகளைச் சமயா சமயமின்றிப் பொறுமைப்போவதனாலும் தருமம் கெடும்படிநேரிடும் என்பது இச்செய்யுளின் கருத்து. செறிவு, தொழிற்பெயர், செறி - பகுதி, உ - விகுதி-செறுநர் - தொழிலால் வந்த பெயர், செறு - பகுதி, கோபித்தல், சொல்லுமாம், நர்-பலர்பால் விகுதி, வெவ்வுரை - வெம்மையாகிய உரை, வெம்மையில் ஈறுபோய் முன் னின்ற மெய்திரிந்தது. நோனு - நோன்பகுதி, (பொறுமை), ஆ - எதிர்மறைவிகுதி; பெயரெச்சம். ஈறு த கெட்டது.

15. உரை :—மொழி நோக்கி -(நூல்களிலே) பதங்களை ஆ ராய்ந்து, நண்பொருள் – நட்பமாகிய பொருள்களை, கொளலும்- கொள்ளுதலும், நூற்கு ஏலா – நூல்களுக்குத் தகாத, வெண்மொ ழி - பயனற்ற சொல்லை, வேண்டினும் - (பிறர்) வேண்டினாலும், சொல்லாமை - சொல்லா தொழிதலும், நல் மொழியை -(உயிருக் கு உறுதியைத் தரும்) நல்ல சொற்களை, சிற்றினம் - கீழ்க்குலம், அல்லார் கண் - ஆகாதவிடத்து, சொல்லலும்-சொல்லுதலும், இம் மூன்றும் - (ஆகிய) இம்மூன்றும், கற்று அறிந்தார் -(பல நூல்களை யும்) கற்றறிந்தார், பூண்ட கடன் - மேற்கொண்ட கடமையாகும்.

குறிப்பு :—வாசிப்பவைகளிற் சொற் போக்கு அறிந்து நட்ப மான அர்த்தந்தெரிந்து கொள்வதும், பயனற்ற சொற்களைச்சொல் லாமையும், நல்ல சாஸ்திரப்பொருளை அதை இகழத்தக்க ஈனரல் லாதவர்க்குப் போதிப்பதும் கல்வியின் பயனும் என்பது கருத்து.

நுண் - நுண்மை என்னும் பண்படி, உரிச்சொல். வெள்மொழி - வெளுத்த சொல் என்றாற் பயனில்லாத சொல்; வெண்மை இயற்கை யாதலால் அதில் எதுவும் பற்றாமலிருக்கிற தென்னுங் கருத்தினால் அது பயனின்மைக்கு இலக்கணையாற் கொள்ளப்பட்டது. வெளிப்படை என்கிற பொருளும், வெள் அறிவினன் என்பதற்கு மூடன் என்கிற பொருளும் இங்ஙனமே கொள்ளப்படும்.

16. உரை :—சான்றாருள் -(நற்குணங்களாலே) நிறைந்தோருள், சான்றான்-(நற்குணங்களாலே) நிறைந்தோன், எனப்படுதல்-என்று சொல்லப்படுதலும், எஞ்ஞான்றும் - எந்நாளும், தோய்ந்தாருள் -(அன்பு கொண்டு) கலந்தவருள், தோய்ந்தான் - (அன்புகொண்டு கலந்தவன், எனப்படுதல்-என்று சொல்லப்படுதலும், கொள்ளாருள் (தஞ்சொல்லை) அங்கீகாரஞ் செய்யாதவரிடத்து, கொள்ளாத-(அவர்) அங்கீகரியாதவைகளை, பாய்ந்து - எழுந்து, கூறாமை-சொல்லாமையும், இம்மூன்றும், நல்-நன்மையை, ஆள்-ஆள்வோன், வழங்கும் - செல்லும், நெறி - வழிகளாம்.

குறிப்பு :—யோக்கியருக்குள் யோக்கியன் என்று வழங்கும் படி யிருப்பதும், சிநேகித்தவரோடு கலந்து சிநேகிக்க வல்லவன் என்று சொல்லும்படி நடப்பதும், தன் பேச்சைக் கேளாதவர்க்கு அப்படிப்பட்ட சொற்களைச் சொல்லாமலிருப்பதும் நல்லவர் குணம் என்பது கருத்து. எஞ்ஞான்று - எ + ஞான்று (நன் - உயிர்-13)

நான்மணிக்கடிகை.

இதனை யியற்றியார் விளம்பிநாகனூர்; இவரைக் காகனூரென் றுங்கூறுப. இவர் வைணவரே யென்பது அவர் காப்புச் செய்யுள்க ளால் விளங்கும். நான்மணிக்கடிகை - நான்கு அழகு பொருந்திய பவளத்துண்டுகள் என்று பொருள் படும். அன்றேல் நான்கு முத்து மணிகளாலாகிய ஒருசிறு கோவையென்றுகூறலும் பொருந்தும். இது நூலுக்கு உவமையாகு பெயராய் வந்தது. திரிகடுகத்தில் ஒவ்வொரு செய்யுளினும் மும்மூன்று விஷயங் குறிப்பித்திருத்தல் போல் இதனுள் ஒவ்வொரு பாவினும் நன்னான்கு விஷயங் குறிப் பித்திருத்தல் காண்க.

1. உரை :—என் பெறினும் - (தாம்) எந்த மேன்மையைப் பெற்றிருந்தாலும், எளியரென்று - (ஒருவரை) தரித்திரரென்று நினைத்து, என்றும் - எப்போதும், எள்ளற்க - அவமதிக்க வேண் டாம்; என்பெறினும்-என்ன லாபத்தைப் பெறுவதானாலும், கொள் ளார் கை-கொள்ளுதற்குத் தகாவருடைய கையானது, மேல்வர- மேலேவரும்படி, கொள்ளற்க-கொள்ள வேண்டாம்; உள்சுடினும்- (ஒருவர் செய்த பிழை) மனதை வருத்துவதா யிருந்தாலும், சிற் றில் பிறந்தாரை - தாழ்ந்த குலத்திற் பிறந்தவரை, சீறற்க-கோபிக் கவேண்டாம்; கூறல்லவற்றை - சொல்லக் கூடாதவைகளை, விரைந்து - துரிதப்பட்டு, கூறற்க - சொல்லவேண்டாம்.

குறிப்பு :—கொள்ளார் - பகைவர் எனினும் பொருந்தும். தான் எவ்வளவு விசேஷச் செல்வம் படைத்தவனாயினும் அஃது இல்லாத தரித்திரரை எக்காலத்திலும் இகழாமலிருக்க வேண்டும். எப்படிப் பட்ட பொருள் கிடைப்பதா யிருந்தாலும் தகாதவர் கையில் வாங் கவேண்டாம். அற்ப மனிதர் மனதைச் சுடத்தக்க துன்பஞ்செய்

தாலும் பேதைகளாகிய அவர்களுக்கு இயல்பென்று கருதாமல் அவர்மேற் சீற்றங் கொள்ளல் தகுதியன்று. சொல்லக் கூடாத பேச்சுக்களைக் காலமும் இடமும் அறியாமற் பதறிப் பேசக்கூடாது என்பது இப்பாடல் கருதுவது. 'எள்ளற்க' முதலியன எதிர் மறை வியங்கோள் வினைமுற்று; எள் - பகுதி, அல் - பண்படி, இங்கு எதிர்மறை விகுதி; இவ்விரண்டுஞ் சேர்ந்து ஒருபகுதி, க - வியங் கோள் விகுதி ல் ற் ஆனதும் எகர மிகுந்ததும் சந்தி (நன். மெய். 6, 2, வினை. 19). கூறப்படுவது கூறு, செயப்படு பொருளைக்காட் டும் ஐ - விகுதி புணர்ந்து கெட்டது. 'என்' குறிப்பு வினையாலணை யும் பெயர்.

2. உரை :—அசுணமா - அசுணமென்கிற பறவைகள், பறை பட - தம்பட்ட முதலிய பெரிய வாத்திய வோசை காதிற் பட் டால், வாழா - உயிர் பிழைக்க மாட்டா; உரவோர் - அறிவு டையவர், உள்ளம் குறைபட - மனம் ஒரு குறையைப் பொருந் தினால், வாழார் - வாழமாட்டார்; நிறைவனத்து - நிறைந்த காட் டிலே, வெதிர் - மூங்கிலானது, நெல்பட்டகண்ணே - நெல் உண் டான பொழுதே, சாம் - நாசப்படும்; தனக்கு - ஒருவனுக்கு, ஒவ்வாச் சொல் - அடுக்காத சொல், பட்டால்-நேர்ந்தால், சால்பு- (அவனது) பெருமை, சாவதாம் - கெட்டுப்போம்.

குறிப்பு :—வீணை முதலிய மெத்தென்ற வாத்தியங்களின் ஓசையே யன்றிக் கொடுமையான தம்பட்ட முதலிய வற்றின் ஓசை கேட்டால் அதைப் பொறுக்கமாட்டாமல் அசுணமென்னும் பறவை சாவதுபோல் மனம் நல்வழியிற் செலுத்த இடையூறு நேரிட்டால் விவேகிகள் உயிரிழப்பார்கள். மூங்கலில் மணி பிடித்து முதிர்ந்த வுடனே அம்மூங்கில் வெடித்து அழிவதுபோற் பெருமை யுள்ள ஒருவனுக்கு அவமானகரமான பழிச்சொல் நேர்ந்தால் அவன் பெருமை கெடும். இப்படிச் சொன்னதனால் மனக்குறைப்

பட்டவன் பிழைத்திருப்பது வினையென்றும், பெருமை யுள்ளவன் பழிச்சொல்வராமல் தன்னைக்காத்துக் கொள்ள வேண்டு மென்றும் சொல்லியதாயிற்று. 'அருணமா' என்கிற பால்பகா அஃறிணைப் பெயர் ' வாழா' என்னும் குறிப்பினுற் பன்மையாக் கொள்ளப்பட்டது. (நன். பெயர் 12, 24) 'பட' என்பது செயினென் வாய்பாட்டின் திரிபாம் (நன். வினை. 27.) ஒவ்வா ஈறு கெட்டபெயரெச்சம் ; ஒ - பகுதி, ஆ - எதிர் மறை விகுதி, வகரஞ் சந்தி, தகர எழுத்துப்பேறோடு சேர்ந்த அகர விகுதி கெட்டது விகாரம். சாகும், ஆகும் ஈற்றுயிர் மெய் கெட்டுச் சாம், ஆம் என்றாயின (நன். வினை. 22).

3. உரை :—மணி நலம் - இரத்தினத்தின் குணத்தை, மண்ணி-சுத்தி செய்து, அறிப - அறிவார்கள் (இரத்தின பரீக்ஷகர்) ; பண் அமைத்து - சேணம் போட்டு, ஏறிய பின் - ஏறிக்கொண்ட பின்பு, மாநலம் - குதிரையின் குணத்தை அறிப—; பொன்னின் நலம்-தங்கத்துடையகுணத்தை,காண்பார்-காணவேண்டியவர், மாசு அற-குற்றம் நீங்கும்படி, சுட்டு - காய்ச்சி, அறிப—; கேளிரான் - உறவினரால், ஆயபயன் - ஆகிய பிரயோசனத்தை, கெட்டு - தாம் வறுமை முதலிய வற்றால் தாழ்ந்தபோது, அறிப—.

குறிப்பு :—இரத்தினங்களைச் சுத்தி செய்து அவற்றின் குணங்களைக் காண்பது போலவும், குதிரைமேலேறி நடத்திய பின் அதன் யோக்கியத்தைக் காண்பது போலவும், பொன்னைக் காய்ச்சிய பின் அதன்சுத்தத்தையறிவதுபோலவும்தாம் சங்கடமடைந்த காலத்தில் உதவி செய்வதனால் "இவர்கள் தாம் நமக்குச் சரியான சுற்றத்தார்" என்று அறியலாம். அறிப: ப பலர்பால்விகுதி (நன். வினை 8) ஆப, ஆ-பகுதி, ய்-இடைநிலை, அ - விகுதி, ஆகிய என்பது இடை குறைந்து வந்ததெனக் கொள்வாருமுண்டு.

4. உரை :—கல்லில் - மலையில், கதிர்மணி - காந்தியுள்ள ரத்தினம், பிறக்கும், காதலி - மனையாளுடைய, சொல்லில்-பேச்சிலே உயர் மதம் - அதிக சந்தோஷம் பிறக்கும்—; மெல்லென்ற-மென்மையான அருளில் - இரக்கத்தில், அறநெறி - தருமவழிகள், பிறக்கும்; பொருளில் - திரவியத்தில், எல்லாம் -(முன் சொல்லியவும் சொல்லப்படாதனவுமான) சகலமும், பிறந்து விடும்—.

குறிப்பு :—சாதாரணமான கல்மலையில் இரத்தினம் பிறப்பது போல் தனக்குப் பிரியமான பெண்ணின் பேச்சில் ஓர் ஆனந்தம் விளைகின்றது. அருளொன்றிருந்தாற் கொலை வஞ்சனை முதலிய பாவச்செய்கை யொன்று மிராததனால் எல்லாத்தரும வழிகளும் அருளிலே யுண்டாகும். முன்சொன்ன பொருளும் போகமும் பின்சொன்ன தருமவழிகளும் யாவும் பொருளிலுண்டாகு மாதலாற் பொருளைத் தேடவேண்டு மென்பதாம். பிறந்துவிடும்: விடு அசை நிலை; துணைவினையெனவும், நிச்சயத்தைக் காட்டவந்த தென்றும் சிலர் கூறுவர்.

5. உரை :—நெல்லுங் கரும்பும் - நிலத்திற் கணியென்ப - நிலத்திற்கு ஆபரணமென்று சொல்வார்கள்; தாமரை - தாமரைமலர், குளத்திற்கு அணி யென்ப—; பெண்மை நலத்திற்கு - பெண் தன்மைக்குரிய யோக்கியதைக்கு, நாணம்- வெட்கமானது, அணி என்ப—; தான் செல் - தான் செல்லத்தக்க, உலகத்து - மேலுலகத்திற்குத் துணையான, அறம் - தருமம், தனக்கு - ஒருவனுக்கு அணி (யென்ப)-.

குறிப்பு :—விளை நிலத்தை நெல்லுங் கரும்பும், குளத்தைத் தாமரையும் விளங்கச் செய்வது போல் நல்ல பெண்ணுக்கு நாணமும், ஒருவனுக்குந் தான் நற்கதியடையும்படி யான தருமமும் இருந்தால் அவர்களை விளங்கச்செய்யு மென்பதாம். 'தாமரைப் பன்மை' யென்றும் பாடம்.

6. உரை :—வண்மை - ஈகையானது, வளப்பாத்தியுள்-செல்வமாகிய பாத்தியில் வளரும்-விருத்தியாகும்; கிளைக்குழாம்-பந்தக் கூட்டமானது, இன் சொல் குழியில் - மதுரமான சொல்லாகிய பாத்தியில், இனிது - நன்ருக, எழூஉம் - வளரும்; வன்சொல்கரவு-கடினச் சொற்களோடு கூடின உலோப குணமானது, கண் இல் குழியில்-தாக்ஷிணிய மில்லாமையாகிய பாத்தியில் எழூஉம் ; இரவு-யாசித்தலானது, இன்மைக் குழியில் - வறுமையாகிய குழியில், எழூஉம்—.

குறிப்பு :—செல்வமிகுந்திருந்தால் இஷ்டமான மட்டுங்கொடுக்கக் கூடும். அப்படி யில்லாதவன் கொடுக்கத் தலைப்படுதல் கூடாது. இனிய சொற்களைப் பேசி யுபசரித்தாற் சுற்றத்தார் சேருவார்களாதலால் அப்படிச் செய்யவேண்டும். தாக்ஷிணிய மில்லாதவன் கடினமான சொற்களைப்பேசி நீக்குவதேயன்றி யாருக்குமொன்றுங் கொடான். தரித்திரம் மிகுந்திருப்பவன் இரப்பது குற்றமன்று. வளப்பாத்தி: மகரம் கெட்டு பகர மிகுந்தது (நன். மெய். 16). எழூஉம் : இன்னிசையள பெடை (நன். எழு. 36) 'இல் குழி' (நன். மெய். 30) ஆல் இயல்பு.

7. உரை :—வாள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியுள்ள, பெண்ணை (மனைவியை), இன்மை -உடைத்தாகாமை, மனைக்கு-வீட்டுக்கு, பாழ் - வாழ் வில்லாமையாம்; நட்டோரை - சிநேகிதரை, இன்மை—, தான் செல்லும் திசைக்கு-தான் போகுந்தேசத்திற்கு, பாழ்—, மூத்தோரை-விவேக முதிர்ந்தவர்களை, இன்மை-, இருந்த-கூடியிருந்த அல்லது தான் இருந்த, அவைகட்கு-சபைக்கு, பாழ்-, கற்று அறிவில்லா-நூல்களைக் கற்று அறிவில்லாத, உடம்பு-தேகம் தனக்கு - அப்படிப்பட்ட ஒருவனுக்கு, பாழ்—.

குறிப்பு :—'வாணுதல்' என்பது இங்கு விவேகத்துக்குக் குறிப்பாதலால் நல்ல அறிவுடைய பெண் இல்லையாயின் இல்லறம்

பயன்படாது. தான் போகிற விடத்தில் தனக்கு ஒருவர் துணை செய்பவரில்லை யாயின் அவ்விடத்துச்சென்ற காரியம் கைகூடாது. வயதும் விவேகமும் முதிர்ந்தவரில்லாத சபையில் யாதொரு காரியமும் நிறைவேறாது. வாள் + நுதல்=வாணுதல் (நன். மெய். 34. 26.) சற்றதனாலாகிய அறிவு கற்றறிவு.

8. உரை :—நசைநலன் - சிநேகத்தின் நன்மையானது, நட்டார்கண் - நட்பினரிடத்தில் நந்தும் - வளரும் ; சிறந்த அவை நலன் - மேலான சபையின் நன்மையானது, அன்பின் - (வருபவரிடத்து) அன்பினால், விளங்கும்-, விசை மாண்ட - வேகம் சிறந்த, தேர் நலன் —தேரினுடைய நன்மையானது, பாகனால் - சாரதியினால், பாடு எய்தும் - பெருமைபடையும் ; ஊர் நலன் - ஓர் ஊரின் நன்மையானது, உள்ளானன் - அவ்வூரிலிருக்கிறவனால், உள்ளப்படும் - அறியப்படும்.

குறிப்பு :—உள்ளான் சாதியொருமை. சிநேகத்தினாலாகிய நன்மை சிநேகித்தவர் பரிபாலிப்பதனால் விருத்தியாகும் ; ஒரு சபையாருடைய சற்குணம் அச்சபைக்கு வருகிறவரை ஆசரிப்பதனால் விளங்கும் ; தேர் நன்றாயோடுந்திறம் அதனைச் செலுத்தும் பாகனுடைய வல்லமையால் மேம்படும் ; ஓர் ஊர் நல்லதென்பது அவ்வூரி லிருப்பவராலறிந்து கொள்ளலாம் என்பது இச்செய்யுளின் கருத்து. நசை : முதனிலைத் தொழிற்பெயர். நட்டார்கண் : இயல்பு (நன். உயிர். 9).

9. உரை :—இரும்பின் - இரும்பினாற் செய்த கருவியினாலே, இரும்பு - இரும்பை, இடை - நடுவில், போழ்ப - பிளப்பார்கள் ; பெருஞ்சிறப்பின் நீர் உண்டார் - மிகுந்த யோக்கியதை யுள்ள தண்ணீரை உண்டவர், நீரான் - தண்ணீரினால், வாய் பூசுவ - வாயைச் சுத்தி செய்வார் ; தேரின்—தெளிந்து பார்த்தால், அரிய-

அருமையானவைகளை, அரியவற்றால் - அருமையான பொருள்களைக் கொண்டே, கொள்ப - கொள்வார்கள்; பெரிய - பெருமையான காரியங்கள், பெரியரான் -பெரியோர்களாலே, எய்தப்படும்- அடையப்படும்.

குறிப்பு :—இரும்பை இரும்பினாலே துணிப்பது போலவும், முக்குடி நீர் குடித்தவாயைத் தண்ணீராலேயே சுத்தி செய்வது போலவும், தெய்வபக்தி மோக்ஷ முதலியவைகளை தவம் நிஷ்டை முதலிய அருமையான சாதனங்கள் கல்வி கேள்விகளாற் சிறந்தவராலேயே அடையப்படும் என்பது கருத்து. வாய்பூசுவ தென்பது மரபு. அரிய பெரிய -பலவின்பாற் பெயர்கள். அரு, பெரு- பண்படி, பகுதி; உகரம் இகரமாயிற்று. "ஈறு போதலிடை யுகர மிய்யாதல்" ய் - உடம்படு மெய், அ - விகுதி.

10. உரை :—மறக்களி - வீரத்தினாலுண்டான சந்தோஷம், மன்னர் முன் - (தம்மையாளும்) அரசர்க்கு எதிரில், தோன்றும் - வெளிப்படும்; சிறந்த அறக்களி - மேம்பட்ட தருமத்தினாலுண்டான சந்தோஷம், இல்லாதார்க்கு-தரித்திரருக்கு, ஈயு முன்-கொடுக்குமிடத்தில், தோன்றும்—; வியக்களி - ஒருவர் தம்மை ஏவுதலினாலாகும் சந்தோஷம், நல்கூர்ந்தார் மேற்று ஆம் - தரித்திரரிடத்து உண்டாகத் தக்கதாம்; கயக்களி - மூடத்தனத்தால் வரும் சந்தோஷம், ஊரில்-அவனிருக்கும் ஊரிலே, பிளிற்றுவிடும் - ஆரவாரப்படும்.

குறிப்பு :—சேவகர்க்கு தாம் வீரங்காட்டியதனால் உண்டான சந்தோஷம் தம்மை அரசர் கொண்டாடும்போது சிறந்து காணும், அப்படியே தருமஞ் செய்வதனாலாகுஞ் சந்தோஷம் தரித்திருக்குக் கொடுக்கும் போது சிறந்து தோன்றும்; செல்வர், தமக்கு ஒரு வேலையிட்டால் அதனால் தமக்குச் சிறிதுலாப முண்டா மென்கிற சந்தோஷத்தை வறியரே யன்றி மற்றவர்கொள்ளாமல் இழி

வாகவே கொள்வர். மூடன் சந்தோஷப்படத்தகாத விஷயத்திற் சந்தோஷத்தை யடைந்து ஊரெல்லாம் நிறையும்படி ஆர்ப்பரிப்பான்: விபம்: ஆகு பெயர். மேற்று: மேல் - பகுதி. று - விகுதி.

11. உரை—எருது உடையான் - உழும்படியான எருதையுடையவனே, வேளாளன் - வேளாண்மை செய்ய வல்லவனுவான்; ஒரு தொடையான் - ஒரு சம்பந்தத்தினுலே, வெல்வது கோழி - (எதிர்த்த கோழியை) வெல்லத் தலைப்பட்ட கோழிபோல், ஏலாதான் - பகை ஏலாதவனே, பார்ப்பான் - பிராமணனுவான்; உருவோடு அறிவுடையாள் - அழகும் அறிவுமுடையவளே, இல் வாழ்க்கைப் பெண் - சம்சாரம் செய்து வாழ்வதற்கு ஏற்ற பெண்பிள்ளை, என்ப - என்று சொல்வார்கள் (பெரியோர்), சேனைச்செறிவு உடையான் - சேனையிலிருப்போர் தன்னோடு ஒட்டியிருக்கும்படியான குணமுள்ளவனே, சேநாபதி-சேனைக்கு நாயகனுவான்.

குறிப்பு:—உழுது வேளாண்மை செய்யுமியல்பை யுடையவனே, வேளாளனுவான்; அதுபோல், வீண் பகைகொண்டு வெல்லத் தலைப்படாமல் யாரிடத்தும் சாந்தமாயிருப்பவனே பார்ப்பானுவான்; அழகும் விவேகமுமுள்ள பெண்ணே இல்லறத்துக்கு இசைந்தவள்; சேனைகளெல்லாம் தன்மேற் பிரியமாயிருக்கும்படி நடந்து கொள்பவனே சேனுபதியாவன் என்பது கருத்து. தொடு - பகுதி, ஐ - தொழிற்பெயர் விகுதி, தொடுதல்=பரிசித்தல். என்ப, பலர்பால் முற்று. என் - இடைச்சொல்; பகுதி; ப - விகுதி; இதுவே காலங்காட்டும்(நன். பத. 18).

12. உரை:—திரியழல் காணின் - திரியில் எரிகிற நெருப்பைக் கண்டால், தொழுப - தொழுவார்கள் (உலகத்தார்); விறகின் எரி அழல் - விறகிற் பற்றி எரிகிற நெருப்பை, காணில்—, இகழ்ப- அலக்ஷியஞ் செய்வார்கள்; (அப்படி) ஒரு குடியுள்-ஒரு வமிசத்தில்

கல்லாத மூத்தோனை - படியாத வயது முதிர்ந்தவனை, கைவிடுப - நேசியாமல் விட்டு விடுவார்கள்; உலகு - உலகமானது, கற்றான் இளமை-அக்குடியிற் பிறந்த கற்றவனுடைய இளம் பிராயத்தை; பாராட்டும் - கொண்டாடும்.

குறிப்பு :—திரியிலேற்றிய சுடரும் விளக்கிலேற்றிய சுடரும் இரண்டும் அக்கினியின் சொரூபமேயானாலும் நன்மை பயக்குங் குணம் பற்றி ஜனங்கள்சிறிதான தீபத்தைத்தொழுவதும் பெரிதானாலும் மற்றதை அப்படிச் செய்யாது இகழ்வதும் போல் ஒரே குடும்பத்திற் பிறந்தவர்களிற் சிறியவனானாலும் கற்றவனை மேற்கொள்ளுதலும், பெரியவனானாலும் கல்லாதவனைத் தள்ளி விடுதலும் உலகத்தியல்பாயிருக்கின்றது என்பது கருத்து. தீபத்தில் லக்ஷ்மி யுண்டென்று அதனை வணங்குவது நம்மவர் வழக்கு.

13. உரை :—நாக்கின் - நாக்கினால், இனிய சுவை -உருசியாயுள்ளவற்றை, அறிப - அறிவார்கள் (உலகத்தார்) ; எல்லா மலர்களும் - சகல புஷ்பங்களும், மூக்கினால் மோந்து அறிப-மூக்கினால் மோந்து பார்த்து அறிவார்கள்; நோக்கு உள்ளும் - பார்க்க வல்ல [illegible] நினைக்கத் தக்கதான, கண்ணினால்—, அணியவற்றை-அலங்கரிப்பவைகளை, காண்ப - பார்ப்பார்கள்; தொக்கிருந்து - சேர்ந்திருந்து, எண்ணினான்-புத்தியினால், எண்ணப்படும்-(காணக்கூடாத பொருள்களை) எண்ண வேண்டும்.

குறிப்பு :—நாக்கினால் உருசியையும், மூக்கினால் மலர் வாசனையும் கண்ணினால் அலங்காரங்களையும் அறிவதுபோல், செய்யத்தக்க காரியங்களைப் பலரோடு சேர்ந்து ஆலோசித்துப் புத்தியால் அறியவேண்டும் என்பது கருத்து. நோக்கக் கருவியாயிருப்பது நோக்கு. அம் விகுதி சேர்ந்து கெட்டது.

14. உரை :—நல்லார்க்கும் - நல்லவர்களுக்கும், தம் ஊர் என்று ஊர் -தம்முடைய ஊர் என்று சொல்லத்தக்க வூர் என்றும்,

இல்லை—; நல்நெறி செல்வார்க்கும் - நல்ல வழியில் நடப்பவர்களுக்கும், தம்மூரென்று ஊர் இல்லை ; அல்லா கடைகட்கும் - நல்ல வழிச் செல்பவரல்லாத அற்பருக்கும், தம்மூரென்றூரில்லை—; தம் கைத்து உடையார்க்கும் - தமது பணமுள்ளவர்களுக்கும், எவ்வூரும் - எந்த ஊரும், ஊர் - தம்மூராம்.

குறிப்பு :—நல்ல குண முள்ளவர்களுக்கும் நல்ல நடக்கையுள்ளவர்களுக்கும் தமது என்று ஓர் ஊரில்லை ; என்றால் எவ்வூரிலும் அவர்களுக்குத் தம்மூரில் நடப்பதுபோல மேன்மையே நடக்குமென்றபடி; அயோக்கியருக்கும் அப்படியே தமக்கென்று ஓர் ஊரில்லை; அவர்களுக்குத் தம்மூரிலும் பிறவூரிலும் அவமதிப்பே நடத்தலாலென அறிக. செல்வமுள்ளவர்களுக்கு எங்கும் வேண்டியபடி நடக்குமாதலால் அவர்களுக்கும் எல்லாம் தம்மூரேயா மென்பதாம்.

15. உரை :—ஆசாரம் என்பது -(ஒருவனுக்கு) ஆசாரம் என்று சொல்லப்படுவது, கல்வி - படிப்பேயாம்; பொருள் ஆட்சி - பொருளை ஆளுந்தன்மையாவது, அறம் சேர்ந்த - தருமத்தோடு பொருந்தின, போகம் உடைமை - சுகங்களை யனுபவித்தல்; முறைமை - நடுநிலைமை யென்பது, யார் கண்ணும் - உற்றார் பெற்றார் முலானோரிடத்தும், கண்ணோட்டம் அன்மை - தாக்ஷிணியப்படாமலிருத்தல், தெரிந்து ஆள்வான்-காரியா காரியங்களை ஆராய்ந்து தேசத்தை ஆளுகிறவனுடைய, உள் நாட்டம் - மனங் காணுதல், இன்மையும் - இல்லாத காரியமும், இல் - இல்லை.

குறிப்பு :—கற்றறிந்து நடப்பதே நல்ல ஆசாரமாம்; தருமத்துக்கு ஒப்பப்போக மனுபவிப்பதே நல்ல பொருளுடைமையாம்; அரசன், தன்னவர் பிறர் என்று பாராமல் யாவரிடத்தும் சரியாய் நீதி செலுத்துவதுதான் நடு நிலைமையாம். காரியா காரியங்களை நன்றாய் அறிந்து ஆளுகின்ற அரசன் மனமறியாமல் தவறிப்போ

குங் காரியம் இல்லையென்றால், அப்படிப்பட்ட நீதிமானுடைய அரசாட்சியில் எல்லாம் சரியாகவே நடக்கும் என்றும், தவறு உண்டானால் அவன் அறிந்தே நடந்திருக்க வேண்டுமென்றும் சொல்லியதாயிற்று.

16. உரை :—மனைக்கு விளக்கு மடவாள் - ஒருவன் வீட்டுக்கு மனைவியே விளக்குப்போலிருப்பவள்; மடவாள் தனக்கு - அந்த மனைவிக்கு, புதல்வர் - மக்கள், சால்பு ஆகும் - பெருமை ஆகும்; மனைக்கு இனிய - இல்வாழ்க்கைக்குப் பிரியமான, காதல் புதல்வர்க்கும்-ஆசையான புத்திரருக்கும், கல்வியே சால்பாகும்—; கல்விக்கும்—, ஓதில் - சொன்னால், புகழ்சால் உணர்வு - கீர்த்தி மிகுந்த விவேகமானது (சால்பாகும்—.)

குறிப்பு :—நல்ல மனைவியிருந்தால்தான் அந்த வீடு விளங்கும்; நல்ல பிள்ளைகளைப் பெற்றால்தான் அந்தப் பெண்ணுக்குப் பெருமை; அந்தப் பிள்ளைகளும் கல்வி கற்றால்தான் மேன்மை பெறுவார்கள்; அப்படிப் படித்திருப்பதும் சாரத்தைக் கிரகித்திருந்தால் தான் புகழ் பெறுமென்றபடி. 'மடவாள்' மடமை அல்லது மடம் பகுதி, ஆள் - விகுதி.

ஏலாதி.

இதன் நூலாசிரியராகிய கணிமேதையார் சமணரென்று பல்லோருங் கூறுவரெனினுஞ் சிலர் சைவரென்றும் சிலர் வைணவரென்றுங் கூறுவர்.

1. உரை :—(ஒருவன்) தனக்கென்றும் - தனக்காகவும், ஓர் பாங்கற் (கு என்றும்)-தன் சிநேகிதனுக்காகவும், பொய்யான்-பொய்சொல்லாதவனாகியும், மெய் ஆக்கும் - மெய்ம்மை ஆகச்செய்வானாகியும், யாதொன்றும் - எந்தப் பொருளையும், எனக்கு என்று -

எனக்கு வேண்டுவதென்று, இயையான்-(அதன்மேற்) பற்றுவை யாதவனாகவும், புனக்கொன்றை போலும்-காட்டிலிருக்கும் கொன்றைமலர் போன்ற, இழையார் சொல் - ஆபரணமணிந்த பெண்களுடைய சொல்லை, தேறான் - நம்பாதவனாகியும், களியானேல்-(செல்வமுதலிய வற்றால்) கர்வப்படாதவனாயும் இருப்பானானால், பிறர் நூலின் சார்பு-பிறர் செய்த சாஸ்திரங்களின் மேன்மைகள், சாலும் - நிறைவாயிருக்கும்.

குறிப்பு :—ஒருவன் தனக்காகவும் தன்னைச் சேர்ந்தவர்க்காகவும் பொய் சொல்லாமலும் மெய்யே சொல்லிக்கொண்டும் தனக்கு ஒருபொருள் வேண்டுமென்று அதிற் பற்றுவையாமலும் பெண்கள் பேச்சை நம்பாமலும் கர்வப்படாமலு மிருப்பானாயின் நூலிற் சொன்ன எல்லா மேன்மைகளும் நிறைந்தவனாவான் என்பது கருத்து. ஒன்றும்-முற்றும்மை. கொன்றைப்பூ பொன்னிறமாயிருப்பதாதலால் மாநிறையக் கொன்றை பூத்ததுபோல் உடம்பு நிறைய ஆபரணமணிந்தவர் என்றபடி.

2. உரை :—வேய் அன்ன தோளி - மூங்கிலை யொத்ததோளையுடையவளே ! நிறையுடைமை - கிரமத்தில் நிற்குந் தன்மையும், நீர்மையுடைமை-உலகத்துக்கு இதமாய் நடக்குந் தன்மையும், கொடையே - கொடுக்குந் தன்மையும், பொறையுடைமை - பிறர் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுந் தன்மையும், பொய்ம்மை புலால் கள் - பொய் சொல்வதிலும் புலால் தின்பதிலும், மறையுடைமை - நீக்குந் தன்மையும், இவையுடையான் - இக்குணங்களையுடையவன், பல் உயிர்க்கும் - பல ஆத்துமாக்களுக்கும், தாய் அன்னன் - தாய்க்குச் சமானமானவன், என்னத்தகும் - என்று சொல்லத் தக்கவன், நிறை முதலிய சற்குணமுள்ளவன் அல்லாருக்கும் தாய்க்குச் சமானமானவன், ஏனென்றால், தாயைப்போல் ஆதரிப்பதற்கு ஏதுவான குணங்களை யுடைமையாலே என்பது.

கருத்து. நிறை - தராசினால் நிறுக்கப்படுவது, இருக்க வேண்டிய நிலை; நிறு - பகுதி, ஐ - விகுதி. கொடையே - இந்த ஏகாரம் எண்ணிடைச் சொல். தோளி - இ-உடைமைப் பொருளைக் காட்டும் பெண்பால் விகுதி.

3. உரை :—கற்றாரை - படித்தவரை, கற்றது - கற்ற விஷயத்தை, உணரார் என - அறியாதவ ரென்று, மதியார் - நினைதவர்களாய், உற்றாரை - உறவினரை, அன்னணமேல்-அப்படியே, (உறவினராக), ஓராமல் - நினையாமல், அற்றார்கட்கு - (ஆதரிப்பவர்) இல்லாதவருக்கு, உண்டி - உணவும், உறையுள் - வாசஸ்தானமும் உடுக்கை-வஸ்திரமும், இவை-ஆகிய இவைகளை, ஈந்தார்-கொடுத்தவர்கள், பண்டிதராய் - நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்களாக, பயின்று - வழங்கப்பட்டு, வாழ்வார்—.

குறிப்பு :—பொறுமை முதலிய வற்றைக் கற்றுணர்ந்தவரைத் தெரியாதவ ரென்றிகழாமற் புகழ்வதும் தேக சம்பந்த மாத்திரத்திலேயே உறவினரை அநுகூலரென்று நினையாமலிருப்பதும் ஆதரவு தப்பினவர்களுக்குச் சோறு முதலியவை கொடுத்துக்காப்பாற்றுவதும் ஆகிய இந்த நல்லியற்கைகளை உடையவரே பண்டிதரென்றுபுகழப்படுவாரன்றிச் சும்மா புத்தகங்களைப் படித்தவர் புகழப்படமாட்டா ரென்பது கருத்து. கற்று அது உணரார் எனவும் பிரிக்கலாம். கற்றார் - கல் பகுதி, ற் - இடைநிலை, ஆர் - விகுதி, ல் ற் ஆனது சந்தி. அன்னணம் - அன்ன வண்ணம் என்பதன் மரூஉ. உண்டி - உண் - பகுதி, இ - செயப்படு பொருள் விகுதி, ட் எழுத்துப்பேறு. உடுக்கை - உடு பகுதி ஐ - செயப்படுபொருள் விகுதி, கு - சாரியை. உறையுள் : உள் - தொழிற்பெயர் விகுதி இடப்பொருள் தந்தது.

4. உரை :—நூல் பட்டார் பூங்கோதாய் - நல்ல சாஸ்திர நெறியிற் சேர்ந்தவர்களுடைய பெண்ணே ! விளையாமை - பயிர்

விளையாமையையும், உண்ணுமை - (இந்திரியங்கள் கொழுக்கும்படி) போஜனஞ் செய்யாமையும், ஆடாமை - வீண் விளையாட்டுக்களைச் செய்யாமையும், ஆற்ற - மிகவும், உளையாமை - (நிந்தைச் சொற்களுக்கு) மனநோகாமையும், உட்கு உடை - பயத்தையுடைய, தா - வருத்தங்களை, வென்று - ஜயித்து, களையாமை - தம்முடைய சீலங்களை நீக்காமையும், இவை ஆறும்—, நோக்கின்-ஆராய்ந்து பார்த்தால், பால்பட்டார்-மேலான ஒழுக்கத்தை யுடையவர்கள், கொண்டு ஒழுகும் - கைக்கொண்டு ஆசரிக்கிற, பண்பு - குணங்கள்.

குறிப்பு :—மேலான வொழுக்கமாவது துறவறம் ; ஆகவே துறவிகள் பயிரிடுந் தொழிலி லிறங்காமலும் இந்திரிய புஷ்டிக்கு ஏதுவான உணவுகளை யுண்ணாமலும், பலவிளையாடல்களாற் காலங் கழியாமலும், பிறர் வைதால் அதற்கு மனவருத்த மடையாமலும், அஞ்சத்தக்க வருத்தங்களை வெல்லுதலும், அவை காரணமாகத் தஞ்சீலங்களைக் கைவிடாமலும் இருக்கவேண்டும் என்பது கருத்து· அநேக ஜந்துக்களுக்கு இம்சை நேரிடுமாதலால் துறவிகள் பயிரிடலாகாது. இந்திரியங்கள் கொழுத்தால் உலக இன்பங்களின் மேற் செல்லும் விளையாட்டு வேதாந்த காலக்ஷேபத்திற்கும் தி[illegible]னத்திற்கும் இடையூறாம். தூஷணைக்கு மனநோவது குரோ[illegible]தலியவற்றை விளைக்கும். வருத்தங்களை வெல்லாவிடின் சீலங்கள் நடவா. சீலங்குலைந்தால் துறவற வியல்பே கெடுமெனை அறிக.

5. உரை :—துறந்தார் கண் துன்னி - துறவறத்தாரிடம் சேர்ந்து, துறவார்க்கு இடுதல் - இல்லறத்தார்க்குக் கொடுத்தலும், இறந்தார்க்கு - (கல்வி) மிகுந்தவர்க்கு, இனிய - பிரியமான காரியங்களை, இசைத்தல் - செய்தலும், இறந்தார் - தன்வமிசத்தில் இறந்துபோனவரையும், மறுதலை - விரோதிகளையும், சுற்றம்-சுற்றத்தாரையும், மதித்து-கனப்படுத்தி, ஓம்புவானேல்-பாதுகாப்பானாயின்,

இறுதல் - அற்றுப்போதலை யுடைத்தான, இல்வாழ்வே - இல்லறமே, இனிது - (துறவறத்திலும்) இனியதாம்.

குறிப்பு:—துறந்தாரைத் தன்னுதலும், துறவறத்தார்க்கு ஈதலும், கல்விமிக்கார்க்கு இனிய இசைத்தலும், இறந்தாரைவிரோதிகளையும் பந்துக்களையும் ஓம்புதலும், ஒருவனிடத்திருந்தால் இல்வாழ்க்கையே மேலான தென்பது கருத்து. மறுதலை - மறுதலிப்பவன் - விரோதிப்பவன், ஐ, கர்த்தாப்பொருள் விகுதி.

6. உரை:—கொல்லான் கொலைபுரியான், பொய்யான்-கொல்லாதவனும் கொலையைச் சம்மதியாதவனும் பொய்சொல்லாதவனும், பிறர் பொருள் மேல் செல்லான் - பிறர் சொத்துக்களில் ஆசைப்பட்டுச் செல்லாதவனும், சிறியார் இனஞ்சேரான் - அற்பருடைய கூட்டத்தைச் சேராதவனும், பல்லார் மறையில் - பலருடைய ரகசியத்தில், செவியிலன் - காதில்லாதவனும், தீச்சொற்கண்மூங்கை - கெட்ட பேச்சுப் பேசுவதில் ஊமையாயு மிருப்பவன், இறையில் பெரியோர்க்கு - முதன்மையான பெரியோர்களுக்கு; இறை - தலைவனுவான்.

குறிப்பு:—கொல்லாமை முதலிய சற்குண முள்ளவன் பெரியோர்க்கும் பெரியோன் என்பது கருத்து. மறையிற் செவியிலன் என்பதற்கு ரகசியம் பேசுமிடஞ் சென்று கேட்பவனல்லன் என்பதும் தீச்சொற்கண் மூங்கை என்பதற்கு தீயசொற்களைச் சொல்லாதவன் என்பதும் கருத்து.

7. உரை:—வண்டு - வண்டுகள், பூவாதி - பூமுதலானவைகளை, தேர்ந்து - தெரிந்து, உண்குழலாய் - உண்ணும்படியான கூந்தலையுடையவளே! பிறரை - அன்னியர் விஷயத்தில், குலன்குடிமை - குலத்தி னியல்பையும் குடியினியல்பையும், உரையான் - சொல்லாதவனுகி, ஊனம் உரையான் - மற்றைக் குறையுஞ் சொல்லாதவனுகி, பொருளோடு - பொருளையும், வாழ்வுயாவும் -

வாழுநிலை முதலான எல்லாவற்றையும், உரையானாய் - சொல்லாதவனாகி, ஈந்து உண்பான் - பிறருக்குக் கொடுத்து உண்ணுகிறவன், தேவாதிதேவன் ஆ - கடவுளாக, தேறு - நிச்சயிக்கக் கடவாய்.

குறிப்பு.—முற்பாடலிரண்டிலு முரைத்தபடி பன்னிருவகையான குலங்கள் இருப்பதனால் எவனையும் குலத்தைப் பற்றியும் குடிமைபற்றியும், ஜீவனத்தைப் பற்றியும் தூஷணை செய்யாமல் தனக்குள்ளதைப் பிறர்க்குக்கொடுத்து அனுப்பவிப்பவன் கடவுளுக்குச் சமானமாவான் என்பது கருத்து. சகல பிராணிகளையும் குற்றநாற்றம் பாராமல் அருளுந்தன்மை கடவுளிடத்தே உண்டாதலால் அப்படிச் சொல்லப்பட்டது. குடிமையாவது, அந்த வமிசத்திலுள்ள முன்னோர்களின் செய்கையும் இயல்பையும் பற்றி உலகத்தில் வழங்கிவரும் தன்மை. குலன் - னகரம் மகரத்துக்குப் போலி (நன்-எழுத். 67)

8. உரை :—பெரியார் சொல் பேணி பெரியவர்களுடைய சொல்லை விரும்பிக்கேட்டு, பிறழாது நின்று-அதில் மாறாமல் நின்று, அடியார்-தாழ்மடிக்கீழ் வாழ்வோரிடம், பரியான் - அன்பில்லானாகி, பரியான் - நீக்காமல், கரியார் சொல் - அயோக்கியருடைய பேச்சை, தேறான் - நம்பாமல், தெளிந்து இயையான் - ஆராய்ந்தறிந்து தகாதவரோடு சேராமல், அஃதில் ஈந்து உண்பான்-சோற்றை (ஏழைகளுக்கு) கொடுத்து உண்ணுகிறவன், மாற்றாமை - ஒழியாமல், மண் ஆளும் - பூமியை ஆளுவான், மற்று - அசை.

குறிப்பு :—பிறழாது: எதிர்மறை வினையெச்சம், பிறழ்-பகுதி. பரிவு இல்லாமை நீக்குதற்குக் காரணமாதலின் பரியான் என்பது மற்றொரு பரியான் என்பதின் பகுதியாகிய பரி என்பதோடு சேரும். மாற்றாமை - எதிர்மறை வினையெச்சம்.

9. உரை :—உள்நீர் - உள்ளத்தில் (அன்பாகிய) சற்குணம் (பொருந்தி), வளம் குளம் - நீர் வளப்பமுள்ள குளத்தையும், கூ

வல் - இணற்றையும், வழிபுரை - வழியில் (பலர் தங்கும்படியான) விடுகளையும், தண்ணீர்-தண்ணீர்ப் பந்தல்களையும், அம்பலம்- (பலர் கூடிக் கல்வி கற்றல் முதலியவற்றிற்கு உரிய) சபாமண்டபங்களை யும், பால் படுத்தான் - (யாவருக்கும்) சாதாரணமகச் செய்தவன், உயர் செல்வனாய் - மேம்பட்ட செல்வமுடையவனாகி, பண்ணீர - இராகங்களின் சற்குணமுள்ள, பாடலோடு ஆடல் பயின்று- பா டலையும் ஆடலையும் அநுபவித்துக்கொண்டு, கூர்ந்து - அன்பு மிகுந் து, கூடலோடு ஊடல் உளான் - பெண்களோடு கூடுவதும் ஊடுவ துமாகிய விளையாட்டு உடையவனாவான்.

குறிப்பு :—ஊடல் - அன்பினால், பிணங்கி நிற்றல் - குளமுத லியவை யேற்படுத்தல் கீர்த்திப் பிரதிஷ்டைகளுக்காக வன்றி உள் ளன்பினாற் செய்வதே நலமென்பதற்கு 'உண்ணீர்' என்றார். கூவல்- கூப என்னும் வடமொழியின் திரிபு. ஏகாரம் எண்ணிடைச் சொல்.

10. உரை :—வணங்கி - பெரியோர்க்கு வணக்கஞ் செய்து, வழிஒழுகி - நல்ல வழிகளை ஆசரித்து, மாண்டார் சொல் கொண்டு- மேன்மையானவர்களுடைய பேச்சை ஏற்றுக்கொண்டு, நுணங்கிய நூல் நோக்கி - நுட்பமான சாஸ்திரங்களைப் பார்த்து, நுழையா - அந்நூல்களின் பொருளிலே நுழைந்து, இணங்கிய பால் நோக்கி - தமக்கு ஒத்த குணங்களைக் கண்டறிந்து, வாழ்வான் - வாழ்கிறவன் (மறுபிறப்பிற்) பழியில்லா மன்னனாய் - குற்றமற்ற அரசனாகி, நூல் நுனித்து நோக்கி - நல்ல சாஸ்திர முறைகளை, நுட்பமாகக் கண்டறிந்து, வாழ்வான்—.

குறிப்பு :-- குருமுதலானவர்களுக்கு வணங்கி அவர் சொற்படி நூற்பொருள்களை யறிந்து சரியான வழியில் நடப்பவன் மறுபிறப் பில் அரசனாகிச் சாஸ்திர முறைப்படி குடிகளை ஆண்டு வாழ்வா னென்பது கருத்து. பழிக்கப்படுவது பழி, செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. நுனித்து - நுனி - பகுதி.

11. உரை :—சாதல் - தன் நண்பன் இறந்தால் இறத்தலும், பொருள் கொடுத்தல் - பொருளில்லாத விடத்துப் பொருள் கொடுத்தலும், இன்சொல் - இனிமையான சொற்களைச் சொல்லுதலும், புணர்வு உவத்தல் - சேருதலைச் சந்தோஷித்தலும், நோதல் - வருத்தத்தில் வருந்துதலும், பிரிவில் - அவர் பிரியுமிடத்து, கவறலே - கவலைப்படுதலுமாகிய, ஆறுகுணம் - ஆறு நற்குணங்கள், அன்புடையார்க்கு-நேசமுடையவர்களுக்கு அல்லது அன்புடைய பெண்டிர்க்கு, உள்ளன ஆக - இருக்கின்றன வென்று, மென்புடையார் - சாந்தமான திறத்தை யுடைய பெரியோர், ஓதலின் - சாஸ்திரங்கள் சொல்லுவதனாலே, விரித்துவைத்தார் - விவரித்து ஏற்படுத்தினார்கள்.

குறிப்பு :—இவ்வாறு குணங்களும் நண்பர்களுக்கு அல்லது அன்புடைய பெண்டிர்க்கு உரியன வென்று பெரியோர் சொன்னார்களென்பது கருத்து. கவறல் - தொழிற்பெயர் ; கவல் - பகுதி. தல் - விகுதி, விகுதியின் தகரம் றகர மானதும் பகுதியின் லகரம் கெட்டதும் சந்தி (நன். மெய். 34. 26)

12. உரை :—தாயிழந்த பிள்ளை - தாயில்லாத பிள்ளையும், தலை இழந்த பெண்டாட்டி - தலைவனை இழந்த பெண்பிள்ளைகளும், வாயிழந்த வாழ்வினர்-வாயில்லாத வாழ்க்கையுடைய ஊமைகளும், வாணிகம் போய் - வர்த்தகம் செய்யப்போய், இழந்தார் - பொருளிழந்தவரும். கைத்து ஊண் பொருள் இழந்தார் - கையிலுள்ள உணவுக்கு ஆதாரமான பொருள்களை யிழந்தவர்களும், கண்ணிலவர்க்கு - கண்ணில்லாதவர்களு மாகிய இவர்களுக்கு, ஈந்தார் - பொருள் தந்தவர்கள், வைத்து வழங்கி - மறுபிறப்புக்கு வேண்டிய வைகளைக் கொடுத்து, வைத்து வாழ்வார் - வாழ்வார்கள்.

குறிப்பு :—பெண்டு ஆட்டி - பெண்தன்மையை ஆள்பவள்.

பஞ்சதந்திரக் கதை.

பஞ்ச தந்திரம்: மித்திரபேதம், சுகிர்ல்லாபம், சந்திவிக்கிரகம், லப்தஹானி, அசம்பிரேக்ஷியகாரித்துவம். இதனைப் பாடலாக வியற்றியவர், வீரமார்த்தாண்ட தேவர். ஈண்டுக் கூறியிருக்கும் பகுதி சந்தி விக்கிரகத்திலிருப்பது.

1. உரை :—என - என்று இவ்விதமாக, சிரஞ்சீவி கூற - சிரஞ்சீவி யென்னுங் காகஞ் சொல்ல, யாது அந்தக்கதை சொல்லென்ன - அஃதென்னகதை அதனை எங்களுக்குச்சொல் என்ன; அது சொல்லத்தொடங்கிற்று; மனக்கபடான வண்ணான் - கபடமனத்தை யுடைய வண்ணனொருவன், வளர்த்ததோர் கழுதை மேலே - தான் வளர்த்த வொரு கழுதையின் மேல், கனப்பொதி ஏற்றி - மிக்ககனமாகிய துணி மூட்டையினை யேற்றி, வாவிக்கரையிலே தள்ளி - குளக்கரையினில் மூட்டையைச் சேர்த்துத் தள்ளி, பாசம் தனைக்கொடு கட்டிப் போட்டு - கயிற்றினைக் கொண்டு கழுதையினைக் கட்டிவிட்டு, பகலின் எல்லாம் - பகற்காலம் முழுதும், தப்புவன் - துவைப்பான்.

குறிப்பு :—கொண்டு என்பது கொடு என்று விகாரப்பட்டது சிரஞ்சீவி : எப்பொழுதும் உயிரோடிருப்பவன். ஈண்டு அப்பெயரினையுடைய ஒருகாகம். தப்புதல் : துவைத்தல்; இஃது உலக வாழ்க்கையில் வழங்கும் ஒரு சொல்; ஆன்றோராட்சி பெற்றிலது.

2. உரை :—கங்குலில் - இரவில், புலித்தோலாலே - புலித்தோலினால், கழுதையை—, மறையப் போர்த்தே—, அங்கொரு பயிர்ப்புலத்தில் - அவ்விடத்திலுள்ள விளை நிலத்தில், அறுதினம் விடுவன்மேய - மேயுமாறு தினந்தோறும் விடுவான்; தங்கிய

புலத்தில் இருந்த, செந்நெற் காப்பார் - செம்மை வாய்ந்த நெற்பயிரினைக் காப்போர், தனிப்புலி யெனப்பயந்தே - ஒப்பற்ற புலியென்றெண்ணிப் பயந்து, அங்கு ஒளித்து ஓடிப்போவார் - அவ்விடத்தினின்றும் ஒளித்து ஓடிப்போய் விடுவார்கள், அதுவும் மேய்ந்து ஓடிப்போமே - அக்கழுதையும் மேய்ந்து விட்டு அவ்விடத்தினின்று ஓடிப் போகும்.

குறிப்பு :—தனிப்புலி : ஆண்புலியுமாம் ; இனி ஒன்றியாகிய புலியென்றுங் கூறுவார்.

3. உரை :—புலி மிகப் பசித்ததேனும் புற்களைத் தின்னாது என்பார் - புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது என்று உலகத்தார் கூறுவார் ; (ஒருவேளை) கலியியல் புதுமை தானோ - கலிகாலத்தின் புதுமை தானோ ? (அல்லது) கபடமோ என்ன - கபடமோ என்று, எண்ணி - நினைத்துச் சந்தேகித்து, வலியவன் ஒருவன் கையில் - , வல் அயம்தன்கைக் கொண்டு - வலிய இரும்பு ஈட்டியைத் தன்கையில் கொண்டு, பொலி - விளங்குகின்ற, கருங்கம்பளத்தால் - கருமைநிறம் உள்ள ஒரு கம்பளத்தால், பொதிந்துகொண்டு - தன்னைப் போர்த்துக் கொண்டு, ஒளித்து இருந்தே.

குறிப்பு :—இப்பாட்டுக் குளகம். புலிபசித்தாலும் புல்லைத்தின்னாது என்னும் பழமொழியை யறிக. அயம் : இரும்பு.

4. உரை :—விரைவொடு - வேகத்தோடு, கழுதைவந்த வேளையில் (அவன்) எழுந்திருக்க, கரம் அதுகண்டு - கழுதையானது பார்த்து, பெட்டைக் கழுதையென் றெண்ணிக்கொண்டு - , குரல் முழங்கிடவே சத்தம் குறித்து - தனதுகுரலால் முழக்கம் செய்ய, (அவன்) இவர் கழுதையாரோ - புலியென்று நினைத்த இது கழுதையா, வாவா என்றுசொல்லி - வாவா என்று சொல்லி, ஈட்டியால் வாட்டினன் - தனது கையீட்டியால் உயிரை வாட்டினான்.

குறிப்பு :—கரம் அது : அது பகுதிப்பொருள் விகுதி. குறித்தல்: சத்தஞ்செய்தல். கழுதையார் : இழிவுபற்றிய மரியாதைப் பன்மை.

5. உரை:—இதோ-இவ்விதமாய், கழுதை-, தன்வாக்கினலே-குரலினலே, கடுங்கொலையுற்றது - கடுமையான கொலையுண்டது, முன்னம் - முற்காலத்தில், பறவை கூடி - பறவைகளெல்லாம் கூட்டமாகக்கட்டி, ஓர் கூகை தன்னை - ஒரு கோட்டானை, பழுதறும அரசனாக - தங்களுக்குக் குற்றமற்ற அரசனாக, பட்டமே கட்டி வைத்து -, இனித்தொழுது வாழ்வோம் என்று -, சூழ்ந்து வந்திருக்கும்போது - அந்தக் கோட்டானைச் சூழ்ந்து தங்கியிருக்கும் பொழுது.

குறிப்பு :—இப்பாட்டுக் குளகம். சூழ்ந்து உவந்து இருக்கும் போது - சந்தோஷித்துச் சூழ்ந்து இருக்கும்பொழுது என்று பொருள்கூறலே சால்புடைத்தாம். பறவை : ஐ வினைமுதற் பொருள் விகுதி.

6. உரை :—பலபல சாதியான பறவைகள் -, அனைத்தும் - எல்லாம், கூடி -, நலம் அதுதானே என்ன - அங்ஙனம் அரசனைக் கொண்டது நன்மைபயப்பதே யென்று சொல்ல, நனிமுதுகாக மொன்று - மிகவும் வயது முதிர்ந்த காக மொன்று, இது குலம் நல்லது அல்ல - இந்தக் கோட்டானின் குலம் நல்ல குலமில்லை, குணங்களும் தீக்குணங்கள் - இதனுடைய குணங்களும் தீயகுணங்களாம்; இதற்கு அறிகுறியாக, நிலமிசை - பூமியின்மேல், கோட்டான் - கோட்டானுவது, என்றும் - எக்காலத்திலும், நிசிசரம்- இரவிற் சஞ்சாரம் செய்வது, எனுஞ் சொற்சொல்லும் - என்று உலகத்தார் கூறும் வார்த்தைகளே சாக்ஷியாகச் சொல்லும்.

குறிப்பு :—நனி : உரிச்சொல். குலம்இது : குலத்தில் இது, என்று விரித் துரைத்துக் கொள்க. நிசி : இரவு. நிசிசரம்=கோட்டான்.

7. உரை :—பகற்கு எலாம் குருட்டுக் கண்கள் - அக்கோட்டான் பகற் பொழுதெல்லாம் குருட்டுக் கண்களையுடையன வாகும், பார்வைக்கும் - பார்ப்பதற்கும், பிடிபடாவாம் - மனதைக்கவரும் அழகு பொருந்தாதனவாகும், மொழியினும் மதுரம் இல்லை-பேச்சிலும் இனிமையில்லை, அகத்தில் நல் அறிவும் இல்லை - மனத்தில் நல்லபுத்தியும் நற்சிந்தையும் இல்லை, யாரும் இங்கு இதை எண்ணார்கள் - யாவரும் இந்தவுலகத்தில் இதனை யொருபொருட்டாகக் கருதார்கள் ; சகத்திலே - பூமியிலே, இதன்பேர் சொன்னால் - இந்தக் கோட்டானின் பெயரினைச் சொன்னால், சத்துரு மிகுதியாமே - விரோதிகள் அதிகப்படுவர்.

குறிப்பு :—அகத்தினழகு முகத்திற்றெரியு மாதலில் முகத்தில் ஒன்று மில்லாமல் விகாரப்பேய் மலிந்து நிற்குமாயின் அகமும் அத்தன்மையதே யென்று கொள்ளற்பாலதாம். சகம் : தோன்றிமாய்வது, எனவே உலகம். இக்காலத்திலும் கோட்டான் ' குத்திச்சுடு' ' வெட்டிப்புதை' ' சுட்டுக்குவி' என்று கூவுவதாக நினைத்து மருளும் மாந்தர்பலருளர்.

8. உரை.— பெரியவன் பெயரைச் சொன்னால் - உயர்ந்த நிலைமையிலிருப்பவனுடைய பெயரைச் சொல்வதனாலேயே, பெரும் பகைதன்னை வென்றே - பெரிய பகைவரையுஞ் சயித்து, உரிய தன் இனமும் தானும் உய்யலாம் - தனக்கென்று பொருந்திய தனது இனத்தாரும் தானும் பிழைக்கலாகும்; இதற்குச் சாட்சி, அரிய சந்திரன் பேர் சொல்லி - அண்ணுவதற்கு அருமையாகிய சந்திரனுடைய பெயரைச்சொல்லி ஒரு முயல்-, யானையின் படையை வென்றே -

யானைக்கூட்டங்களைச் செயித்து, இனங்களோடே - தன்னினத்தாருடன், உகந்து வாழ்ந்திருந்து - மனங்களித்து வாழ்ந்திருந்தது.

குறிப்பு :—சந்திரன் வானத்திலிருப்பதனால் அரிய சந்திரன் என்றார். அன்றியும் சிவபெருமான் சடையிலுள்ளமையாலு மென்க.

9. உரை :—இதன் பொருள் வெளிப்படை.

குறிப்பு :—சுத்தம்: சுத்தத்தைத் தரும் பொருள்; சித்தி: அட்டமாசித்தி; சத்தி: பலம்; முத்தி: மோக்ஷம்; திரவியம் தானே யாகும்; அது செய்வது அல்லாதும் உண்டோ என்று பிரித்து எடுத்துக்கொள்க.

10. உரை :—சத்துவம் - பலம், புத்தி - அறிவு, வித்தை - கல்வி, சதுர்வித அர்த்தங்கள் - தர்ம அர்த்த காமமோக்ஷம் என்னும் நால்வகைப் புருடார்த்தங்கள், ஆன - ஆகிய, இத்தனை விதமும் - இவ்வளவு வகைகளும், செல்வம் இல்லையேல் - செல்வம் ஒன்று இல்லையாயின், இல்லையாகும் - (ஒருங்கே) இல்லாமற் போகும்; ஆனால் மேற்குறித்த இவையாவும், செல்வம் எய்திடில் - செல்வம் ஒன்று உண்டாகுமானால், எய்து மன்றே - நிச்சயமாக உண்டாகும்.

குறிப்பு :—சதுர்விதார்த்தம்: அறம் பொருள் இன்பம் வீடு. சத்துவம்: சாத்விக குணம் என்று உரைப்பாருமுளர்.

11. உரை :—கதிரவன் - சூரியன், இலையேல் - இல்லாமற் போனால், கண்ணில் காண்பன மறையும் ஆ போல் - கண்ணாற் பார்க்கப்படும் பொருள்கள் கட்புலனுக்குப்புலப்படாமல் மறைந்துபோகும்விதம் போல், நிதியும் ஒன்று இலையேல் - செல்வம் என்னு மொரு பொருளும் இல்லாவிடின், யார்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும், நீதி—, மாஞானம் - பெருமை வாய்ந்தஞானம், போதம் - பேரறிவு, துதிபெறுகீர்த்தி - யாவராலுந் துதிக்கப்படுங்கீர்த்தி, ஆண்மை-, சூழ்ச்சி - ஆலோசனை, மந்திரவிசாரம் - மந்திரங்களினுட் பொரு

ளை விசாரித்தல், சதுர் அபிமானம் - அழகிய அன்பு, எல்லாம் - இவையெல்லாம், தன்னிலே - தானே, மறைந்துபோம் - ,

குறிப்பு :—கதிரவன் : மிக்ககதிர் (கிரணம்) களையுடையவன். நியம் : அம்சாரியை. பாடபுத்தகத்தில் பெரு என்பதைப்பெறு என்று மாற்றிக்கொள்க. இனி மந்திரவிசாரம் : மந்திராலோசனை என்பாருமுளர். 'மந்திரம் விசாரம்' என்று பாடமோதி மந்திரபலமும் வேதாந்த விசாரமும் என்று பொருளுரைப்பினும் பொருந்தும்.

12. உரை :—சுதியிலார் - சுருதி இல்லாதவர்களுடைய, பாட்டும் - இசைப்பாட்டும், தங்கள் சுற்றம் இல்லாத நாடும் - தங்களது பந்துக்களில்லாத தேசமும், மதிஇலார்கவியும் - புத்தியில்லாதவர்களுடைய செய்யுளும், நல்ல மனைவியில்லாத வீடும்-, பதியிலார் அழகும் - புருஷனில்லாத கைம்பெண்களினது அழகும், பாழே - ; பார்க்கில் - நன்றாக ஆராய்ந்து பார்க்கின், நிதியிலார்க்கு - செல்வமில்லாதவர்களுக்கு, இவைபோலல்ல - மேற்குறித்தவைகளைப் போலன்றி, எவையும் பாழே - எல்லாம் பாழாகும், மூவுலகினுள்ளும்-மூன்றுலகத்திலும் நினைக்கின் - தேடிப்பார்த்தாலும்.

குறிப்பு :—சுருதி என்பது மருவிச் சுதியென நின்றது. சுற்றம் : அம்வினைமுதற் பொருள் விகுதி; தன்னைச்சுற்றி நிற்பவர் எனவே பந்துக்கள். நல்லமனைவி: நற்குண நற்செய்கை வாய்ந்த மனைவி. இனிப்பதியிலார் என்பதற்குக் கணிகையர் என்று பொருளுரைத்தல் சாலாதென்றறிக. மூவுலகு : சொர்க்கம், மத்தியம், பாதாளம். எவையும்: உம்மை முற்றும்மை.

13. உரை :—வறுமையாலே - தரித்திரத்தின் கொடுமையாலே, யாசிக்க வரும்-பிச்சையெடுக்க வரும், அவர் தமக்கும் - அப்பிச்சைக்காரர்களுக்கும், ஆவி இறும் அவர் தமக்கும்-உயிரை விடுந்தறுவாயிலிருப்பவர்களுக்கும், செய்யும் - உண்டாகும், இயற்கை -

இயல்பாகிய தன்மை, ஒன்றும் - ஒன்றுகவே இருக்கும்; ஏது என்னில் - எங்ஙனமெனில், (இருவருக்கும்), உறுதிபோம் - மனவுறுதியற்றுப்போம், கைகால் சோரும்—, உள்ளமும் கலங்கும்-மனமுங் கலங்கும், மெய்யும் - சரீரமும், குறுகியே நடுங்கும் - குறுகுதலையடைந்து நடுங்கும், வாயும் குழறும்—, நல் அறிவும்போம்—.

குறிப்பு :—இறுதல் : அற்றுப்போதல். இது சிலேடையினை யங்கமாகப் பெற்றுவந்த தன்மையணியாம். நல்லறிவு போதல் : பிரஞ்ஞைதப்பிப் போதல்.

நளவெண்பா.

இதனை யியற்றினர் **புகழேந்திப்புலவர்.** இவருடைய ஜன்ம தேசம் பொன்விளைந்த களத்தூர் என்று கூறுப. இவர்வெண்பாப் பாடுவதில் ஒப்புயர் வற்றவர் என்பது "வெண்பாவிற் புகழேந்தி" என்னுஞ் செய்யுளாற்பெறப்படும். இவர்தம்மை யாதரித்த முரணை நகர்க் குறுநில மன்னனுகிய சந்திரன்சுவர்க்கி யென்பானுடைய வேண்டுகோளால் இந்நள வெண்பாவை யியற்றினர். இவர்காலத் திருந்தவேறு புலவர்கள் கம்பன், ஔவை, ஒட்டக்கூத்தராதியோர். இவரது சரித்திர விரிவை 'கலைமயில் கலாபம்: கண், - உ - இல் இனிது காணலாம். இவரியற்றிய வேறு நூல் இரத்தினச் சுருக்கம். நளவெண்பா : இரண்டனுருபும் பயனும் உடன் றொக்க தொகை ; ஈண்டுக் கருவியாகு பெயராய் நூலையுணர்த்திற்று.

1. உரை :—மாமறையால் - பெருமையான வேதத்தால், உள்ளம் திருந்தி - மனம் சுத்தமாகி, அவாம் - இச்சிக்கத்தக்க, மெய்த்தவத்தோன் - மெய்யான தவஞ் செய்பவனுகிய வியாசமுனிவன், தேர்ந்து - (காரியத்தை) அறிந்து, (அரசனை நோக்கி) மெய்

திரு - மெய்யாகிய செல்வம், வந்து உற்றாலும் - வந்து பொருந்தினாலும், வெம்துயர் - கொடிதான துன்பம், வந்து உற்றாலும் - சேர்ந்தாலும், ஒத்திருக்கும் - (மாறு படாமல்) ஒரு தன்மையதாய் இருக்கின்ற, உள்ளத்து - மனத்தையுடைய, உரவோனே - பலமுள்ள அரசனே, சித்தம் - (உனது) மனம், வருந்திய ஆறு - வருத்தப்பட்ட விதம், என் என்றான் - என்ன வென்றுவினவினான்.

குறிப்பு :—மெய்த்திருவாவது நன்மைக்குக் காரணமாயும் நிலை பெற்றிருக்கத் தக்கது மான செல்வம். அவாம் -- அவாவும் என்னும் செய்யு மென் வாய்பாட்டுப் பெயரெச்சம் (நன். வினை. 22); உள்ளம் திருந்தியதனால் மெய்த்தவத்தை அவாவினவன் என்பது கருத்து. உரவோன் - உரம் - பகுதி ஆன் - ஆண்பால் விகுதி, மகரக்கேடும் வகரம் தோன்றியதும் சந்தி; ஆ ஓ ஆயிற்று; உரவு பகுதி யெனினும் பொருந்தும். என் - எவன் என்கிற அஃறிணை வினைக்குறிப்பு இடைகுறைந்தது. இஃது அகர ஐகாரச்சாரியைகளைப்பெற்று என்ன என்னை என்றும் வரும்.

2. உரை :—கேடு இல் - கெடுதியில்லாத, விழுசெல்வம் - பெருமையான செல்வம், கேடு எய்து - நாசம் அடையத்தக்க, சூது ஆடல் - சூதம் ஆடுவது, ஏடு அவிழ் - பூவிதழ்கள் விரியப்பெற்ற, தார் - மாலையணிந்த, மன்னர்க்கு - அரசருக்கு, இயல்பே- சுபாவமேயாம்; (ஆனதனால்) நீவாடி கலங்கலை - நீ உடம்பு மெலிந்து மனங்கலங்கவேண்டாம், என்று—, காமருவு - சோலை நெருங்கின, நாடற்கு - நாட்டையுடைய அரசனுக்கு, (உதிட்டிரனுக்கு), இலங்கு - விளங்காநின்ற, அலை - அசையா நின்ற, நூல் மார்பன்-பூணூலை மார்பில் அணிந்த முனிவன், எடுத்துரைத்தான்-எடுத்துச் சொன்னான்.

குறிப்பு :—தான் - அசை ; இலங்கு அலை என்னும் இரண்டு வினைத்தொகையு மடுக்கி நூல் என்னும் பெயரைக் கொண்டன

விழுச்செல்வம் - விழுப்பமாகிய செல்வம் எனப்பண்புத் தொகை. எடுத்து உரைத்தலாவது காரணங்களோடுவிவரித்துச்சொல்லல்.

3. உரை :—விண் இழந்த - வானத்தை விட்டுவந்த, மின் போலும் - மின்னலையொத்த, நூல்மார்ப - பூணூலோடு கூடியமார்பையுடையவனே, மேதினியில் - பூமியில், என்போல் - என்னைப் போல, கண் இழந்து - விவேகங்கெட்டு, மாயகவறு - மோசத்துக் கிடமாகிய சூதை, ஆடி - , மண் இழந்து - பூமியைத் துறந்து, போந்து - போய், வனம் - காட்டை, நண்ணி - சேர்ந்து, இடர் - ஆபத்தினால், உழந்தார் - வருந்தினவரான, காவலர் - அரசர், வேறுஉண்டோ, (என்று தருமபுத்திரர் வினவினார்.)

குறிப்பு :—போந்து - போ - பகுதி, உ - விகுதி, த் - இறந்தகால இடைநிலை, சந்தியால் இரட்டித்த தகரம் நகரமாய் விகாரப்பட்டது. காவலர் - காவல் அர் எனப்பிரித்து காக்கும் அதிகாரமுடையவர் எனவும், கா வலர் எனப்பிரித்து காத்தலில் வல்லவர் எனவும் கொள்ளலாம். வேறு - குறிப்பு வினையாலணையும் பெயர் (நன். வினை. 20).

4. உரை :—நால்குணமும் - (அச்சம் நாணம் மடமை பயிர்ப்பு என்கிற) நான்கு குணங்குகளும், நால்படை ஆ - (தேர், யானை, குதிரை, காலாள் என்கிற, நால்வகைச் சேனையாகவும், ஐம்புலனும்- (மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற) பஞ்சேந்திரியங்களும், நல் அமைச்சு ஆ - நல்ல மந்திரிகளாகவும், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, சிலம்பே - பாதசரமே, அணிமுரசு ஆ - மேன்மையான பேரிகையாகவும், கண் - கண்கள், வேல் படையும்-வேலாயுதமும், வாளும்- கத்தியும், ஆ - ஆகவும், வதனமதி - முகசந்திரனாகிய, குடைக்கீழ் - குடையின் கீழே, பெண்மை யரசு - பெண் தன்மையான இராச்சியத்தை, ஆளும் - ஆளுவாள்.

குறிப்பு :—தமயந்தி எல்லாப் பெண்களுக்கு மேலான அழகும் நற்குணங்களும் அமைந்தவளென்பது கருத்து. கண் - பால் பகாவஃறிணைப் பெயர்.

5. உரை :—பூவாளி வேந்தன் - மலராகிய அம்புகளையுடைய அரசன் (மன்மதன்), என்றும் வந்து—, பொருவெம்சிலை-சண்டை செய்யத்தக்க உக்கிரமான விற்களை, சார்த்தி - வைத்து, ஏ ஆளி - அம்புகளின் வரிசையை, தீட்டும் இடம் - தீட்டுகிற இடமானது, செய்தேன் மொழியாள் - செம்மையான தேன்போன்ற சொற்களுள்ள தமயந்தியினுடைய, செறி அளகபந்தியின் கீழ் - நெருங்கினமுன்னெற்றி மயிர் வரிசையின் கீழே (இருக்கிற), இந்துமுறி - இளஞ்சந்திரன், என்று—, இயம்புவார் - சொல்லுவார்.

குறிப்பு :—இங்கு இந்துமுறி என்றது நெற்றியை. புருவங்களை மன்மதன் வில்லாகவும், நெற்றியைச் சாணைக்கல்லாகவும், அலங்கலை அம்புகளாகவும் குறித்தார். அளகபந்தி: இரண்டும் வடசொல்லாதலின் இயல்பு. பூவாளி : அன்மொழித்தொகை.

6. உரை :—செம்மனத்தான் - செம்மையான மனமுள்ளவன், தண் அளியான் - குளிர்ச்சியான கிருபையுள்ளவன், செங்கோலான் - செவ்வையான ஆளுகையுள்ளவன்; மங்கையர்கள் தம்-பெண்களுடைய, மனத்தை-மனங்களை, வாங்கும் தடம் தோளான்-இழுக்கும்படியான பெரிய புசங்களையுடையவன், மேல் நிலத்தும்-மேலுலகத்திலும், நால் நிலத்தும் - நால்வகைப்பட்ட பூமியிலும், மிக்கான் - மேம்பட்டவனாகி, உளனென்பான்-இருக்கிறவனென்று சொல்லப்பட்ட, நளனென்பான் - நளனென்பவன், உனக்கு—, வேந்தன் - அரசன் (கணவன் என்கிறபடி), மெய்ம்மை - இது சத்தியம்.

குறிப்பு :—'உளனென்பால்' எனும் பாடத்திற்கு என்பால் - என்னிடத்தில் (வசத்தில்) என்று பொருள். 'உனக்கு வேந்தன்'

எனக்கொண்டு 'உனக்குத்தலைவனுளன் எனக்கொள்ளலாம். நான்கு நிலங்கள் : குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பவைக ளில், பாலை நீங்க நன்மக்கள் குடியிருப்பதற் குரிய மற்றை நான்கு மாம். நானிலம் - நாற்கடல் சூழ்ந்த நிலமென வுரைப்பாரு முளர்.

7. உரை :—அம்கண்மா ஞாலத்து - அழகிய இடம் பெரி தான பூமியில், அவற்கு - அந்த நளனுக்கு, அறங்கிடந்த - தருமம் தங்கிய, நெஞ்சும் - மனமும், அருள் ஒழுகும் - தயாரசம் பொழி கின்ற, கண்ணும்—, மறங்கிடந்த - வீரம் நிலைத்த, திண்தோள்வலி யும் - உறுதியான புஜபலமும், (ஆகிய இவைகளினால்) திறங்கிடந் த-சகல சாமர்த்தியமும் பொருந்திய, செம்கண்மால் - சிவந்த கண் களையுடைய விஷ்ணுவே, அல்லனேல் - ஒப்பல்லாமற் போனால், தேர்வேந்தர் - (மற்ற) ரதாதிபதிகளாகிய அரசர், ஒப்பரோ - ஒப் பார்களோ ?

குறிப்பு :—திருமாலே யன்றி அவனுக்கு யாரையும் ஒப்பிடக் கூடாதென்பது கருத்து.

8. உரை :—ஆங்கு - அவ்விடத்தில், மதுநோக்கும் - தேன் (வெளிப்படப்) பார்க்கின்ற, தாரானும்-மாலையை யணிந்த நளனும், வாள்நுதலும் - பிரகாசமான நெற்றியையுடைய தமயந்தியும், தம் மில் - தங்களில், பொதுநோக்கு - பொதுமையான நோக்கத்தினால் எதிர் நோக்கும்போது - எதிர் நின்று பார்த்த காலத்தில், தேம்கு வளை தன்னில் - வாசனையுள்ள கருநெய்தற் பூவிலே, செந்தாமரை- சிவந்த தாமரைப் பூவானது, மலர - மலர்ந்திருக்க - தாமரைக்கு - தாமரையில், பூகுவளை - அழகிய கருநெய்தற்பூ, பூத்தது-பூத்தது போலாயிற்று.

குறிப்பு :—பொது நோக்கு - ஆசை கொள்ளாதது போன்ற பார்வையுமாம். தாமரைக்கு என்பதில் குவ்வுருபு இடப்பொரு ளில் வந்தது.

9. உரை :—பூண்டது - கொண்ட, ஓர் அற்பின் - ஒரு அன்பி னால், தாழ் கூந்தலாள் - தொங்கும் கூந்தலையுடைய தமயந்தியி னது, வேட்கை - காதலை, அகத்து அடக்கி - உள்ளே தள்ளி, கற் பின் தாழ் - கற்பாகிய தாழ்ப்பாளை, வீழ்த்த - போடப்பெற்ற, கதவு - (நிறையாகிய) கதவானது, நீண்ட கமலத்தை-நீண்ட தாம ரைப் பூவை, நீலக்கடை - நீலோற்பலத்தின் நுனி, சென்று - போய்த் தீண்டும் அளவில் - பரிசிக்கும் போது, திறந்தது-திறந்து கொண்டது.

குறிப்பு :—அற்பின் என்பதில் இன் ஏதுப்பொருளில் வந்தது நிறைக்கதவு திறந்ததற்கு அன்பு காரணம். அன்பு - சாதாரண மான ஆசை ; காதல் காம ரூபமாகிய ஆசை. 'அற்பிற்றாழ்' என் பதற்கு, அல் - இருளை, பின் - பின்னியிருக்கின்ற, தாழ்—; என்றும் பொருளுரைக்கலாம். கற்பின் - இன்சாரியை. அற்பின் - இன் எதுகை நோக்கி யியல்பாக நின்றது.

10. உரை :—ஊசல் குழைமீது - ஊசலாடும் காதணிகளின் மீது, வெள்ளவாள் நீர் சோரவிட்டு - கடல் போன்ற கண்களினு டைய பிரகாசமான நீரை ஒழுகவிட்டு, காவல் கடந்து - காவலைத் தாண்டி, எங்கள் கன்னிமாடம் - எங்களுடைய கன்னிகா அந்தப் புரத்தில், புகுந்தாய் - புகுந்தவனே !, (நீ) யாவனோ - எவனோ, விஞ்சைக்கு இறைவனோ - மாயவித்தைக்கு அதிபதியாகிய வித்தி யாதரனோ, தேவனோ - தேவலோகத்தானோ, - உள்ள ஆ - உள்ள படி, சொல்—, என்றாள் - என்று கேட்டாள் (தமயந்தி).

குறிப்பு :—கண்ணீர்க்குக் காரணம் தனக்கிப்படிப்பட்ட புரு ஷன் நேராமை. புகுந்தாய் - விளிப்பெயர் ; முன்னிலை வினைமுற் றாயுங் கொள்ளலாம். குறிலிணைந்த யகர மின்றி ஏனையகரம் யகர முதன்மொழிவரின் கெடுமென அறிக. ஆறு என்பது ஈறு குறை ந்து நின்றது.

11. உரை :—போது - தாமரை மலர் போன்ற, அரிகண் - இரேகை பொருந்தின கண்ணுள்ள, மாதராள் - தமயந்தி, சோதி செழுதாளம் - காந்தியுள்ள செழுமையான முத்துக்கள் பதித்த, வெண்குடையாய் - வெள்ளைக் குடையுடையவனே, பொன்மாலை சூட்ட - அழகான மாலையைச் சூட்டுதற்கு, ஆதரித்தார் தம்மோடு- ஆசைப் பட்டவர்களாகிய அரசர்களோடு. அவையகத்தே - சபையில், தேவர்களும் நீயும்—, எழுந்தருள்க - எழுந்தருளவேண்டும், என்றாள் எடுத்து - என்று எடுத்துச் சொன்னாள்.

குறிப்பு :—மாதர் - அழகு ; மாதராள் - அழகுடையவள்.

12. உரை :—பிள்ளைமீன் - மீன் குட்டிகளை, புள் - பறவைகள், அரிக்கும் - கொண்டுபோகின்ற (அல்லது மீன் குட்டிகள் பறவைகளை யரிக்கின்ற) நாடன் திருமடந்தை - விதர்ப்ப நாட்டையுடையவன் மகள், பூவாளி - மன்மதன், உள் அரிக்க - அந்தக் கரணத்தைக் கவர, உள்ளம் போய்-மனம் போய், நாண் போய்-வெட்கம் போய், உரை போய் - பேச்சுப்போய், வரிநெடுகண்வெள்ளம்- இரேகைகள் பொருந்திய நெடுமையான கண்ணாகிய கடல் (கடல் போன்ற கண்), போய்—, வேகின்ற மெல்தளிர்போல் - வெந்து கொண்டிருக்கிற மெல்லிய தளிரைப்போல, உயிர் சோர்ந்தாள்- பிராணன் தளரப்பெற்றாள்.

குறிப்பு :—போய் என்பது காரணப்பொருட்டாய் வந்த செயவெனெச்சத் திரிபு. உயிர் சோர்ந்தாள் என்பது "உயர்திணைதொடர்ந்த" என்கிற விதியால் அமைந்தது.

13. உரை :—அணியாழின் ஓசைபோல் - அழகான வீணாநாதம் போன்ற, சொல்லாள் - சொற்களையுடைய தமயந்தி, பூவின் வாய்வாளி - பூவை முனையிற் கொண்ட மன்மதபாணங்கள், புகுந்த வழியே - பிரவேசித்த வழியாலே, என் ஆவியார் போனாலும்-என்

உயிர் போனாலும், அவ்வழியே - அந்த வழியினாலே, பாவியேன் ஆசை - பாவியாகிய என்னுடைய ஆசையானது, போகாது - செல்லாது (அழியாது), என்று - என்று சொல்லி, உயிர்த்து - பெருமூச்செறிந்து, அழிந்தாள் - விசனப்பட்டாள்.

குறிப்பு :—மன்மதனுடைய அம்பு தைத்த துவாரத்தினால் என்னுயிர் வெளிப் புறப்பட்டுப் போனாலும், என்னாசை நிலை நிற்குமேயன்றிப் போய்விட மாட்டாது; மறுபிறப்பிலும் தொடரும் என்கிறபடி. ஆவியார் என்றது உயர்வில் வந்த திணைவழுவமைதி (நன். பொது. 28). பூவின் வாய்வாளி -பூக்களாற் பொருந்திய அம்புகள் எனவும் பொருள் படும்.

14. உரை :—வையம் - பூமி, பகல் இழப்ப - பகலை இழக்கவும், வானம்—, ஒளி இழப்ப - பிரகாசத்தை இழக்கவும், பொய்கையும் - தடாகங்களும், நீள்-நீண்ட, கழியும்-கழிகளும் புள் இழப்ப-நீர்ப் பறவைகளை இழக்கவும், செவ்வாய - சிவந்த வாயுள்ள, அன்றில் - அன்றிற் பறவைகள், துணையிழப்ப - கூடி மருவும்படியாகிய சகாயங்களை இழக்கவும், வெவ்வாய் - உஷ்ணமான வாயையுடைய, விரிகதிரோன் - விரிந்த கிரணங்களையுடைய சூரியன், பைய - மெல்ல, வெற்பு - அஸ்தமய மலையை, சென்று அடைந்தான் - போய்ச்சேர்ந்தான்.

குறிப்பு :—துணை யென்பதை ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமெனக் கொள்க. பைய - குறிப்பு வினையெச்சம்; பை-பகுதி=(மந்தம்) பண்பு, அ - விகுதி, ய் - உடம்படு மெய்.

15. உரை :—மல்லிகையே - மல்லிகை யரும்பையே, வெண்சங்கா - வெண்மையான சங்கமாகக்கொண்டு, வண்டு—, ஊத—, வான் கருப்பு வில்லி - பெரிய கரும்பு வில்லையுடைய காமன், கணை தெரிந்து - அம்புகளை ஆராய்ந்தெடுத்து, மெய் காப்ப - உடம்பைக்

காத்துக்கொண்டிருக்க, முல்லைஎனும் மெல்மாலை - முல்லைப்பூ என்கிற மெல்லிய மாலையானது, தோள் அசைய-தோளில் ஆடாநிற்க, புன்மாலை அந்திபொழுது - இழிவான தன்மையுள்ள அந்திப்பொழுதானது, மெல்ல நடந்தது—. ஏ-அசை.

குறிப்பு :—மெல்ல: குறிப்பு வினையெச்சம்; மெல் - பகுதி அ-விகுதி. அந்திப்பொழுதை ஓர் அரசன் நடப்பதுபோல் உருவகஞ் செய்தார்.

காரெட்டு.

காரெட்டு : காரைப்பற்றி வியந்து கூறிய எட்டுச்செய்யுள். இதன் நூலாசிரியர் கடைச் சங்கத்தினர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவராகிய நக்கீரதேவர். இவர் தஞ் சரித்திரத்தைத் திருவிளையாடற் புராணத்திலும் சீகாளத்திப் புராணத்திலும் பரக்கக் காணலாம். இவரிபற்றிய வேறு நூல்களை நும்பாட புத்தகத்தைத் தொகுத்தவர் நூலுடன் சேர்த்த குறிப்புரையிற் காண்க. கார்: மேகத்தை யுணர்த்துங்காற் பண்பாகு பெயர் - மும்மடியாகு பெயராய்க் கார்நெல்லை யுணர்த்தும்.

1. உரை :—அரவம் - சர்ப்பங்களை, அரைக்கு அசைத்த - இடையிற் கச்சென்று கூறும்படி யணிந்த, அண்ணல் - மேலோனாகிய பரமசிவனது, சடைபோல - சடைக் கற்றையைப்போல, விரவி - (சமுத்திரத்தில் நீருண்பான்) பொருந்தி, எழுந்து - ஆகாயத்தில் எழும்பி, எங்கும் - ஆகாயமெங்கும், மின்னி - மின்னுதலைச் செய்து, கார் - கார்காலத்து மேகமானது, அரவினங்கள் அச்சம் கொண்டு ஓடி அணைய - பாம்பின் கூட்டங்கள் பயமடைந்து ஓட்டமெடுத்துப் புற்றிற் போய்ச்சேர, ஆடைவுற்றே - ஆகாயத்தினில் நான்கு பக்கத்திலும் கவிந்து பொருந்தி, கைச் சங்கப்போல் முழ

ங்கும் - திருமாலின் கையிலுள்ள பாஞ்சசன்னியம் என்னும் சங்கினைப்போற்சத்திக்கும்.

குறிப்பு :—அசைத்தல் : கட்டுதல். தாருகவனத்து இருடிகள் அபிசார ஓமம் இயற்றி அதினின்றும் போந்த சர்ப்பங்களை யீசன் மேல்விடுப்ப, அவர் அவைகளை ஆபரணமாகத் தரித்தருளினார். சடை : ஈசன் சடை பொன்னிறம் வாய்ந்தது. அரவு : அரா என்பது "குறிய தன் கீழாக் குறுகலு மதனோ டுகரமேற்றலு மியல்பு மாந் தூக்கின்" என்னும் விதியால் அரவு என்றாயது. கார்காலத்து மேகம் திருமாலை யொத்து நின்று அவர் கைச்சங்கின் ஒலிபோ லொலித்தது. கருநிறம் பற்றித் திருமாற் குவமைகூறினார்.

2. மை ஆர் மணி மிடறுபோல் கருகி - கருநிறம் வாய்ந்த நீல ரத்தினத்தி னொளியைப் பெற்ற (சிவனது) கழுத்தைப்போற் கருநிறம்பெற்று, ஐவாய் அழல் அரவம் பூண்டான் அவிர்சடைபோல் மின்னி - விஷாக்கினியைத் தன்னிடங்கொண்ட ஐந்து வாயினைக் கொண்ட சர்ப்பத்தினைச் சூடிய சிவபெருமானது விளங்குகின்ற சடையைப்போல் மின்னி, கழல் அரவம் காண்புற்றகார் - அவரது காலிற்கட்டிய வீரகண்டைபோல் ஒலியினைக் காட்டி நின்ற மேகமானது, அவன் கையார் சிலைவிலக்கிக் காட்டிற்றே - அவரது கையிற்கொண்ட மேருவில்லைப்போல் தன்னிடத்து இந்திரவில் ஒருபுறம் விலகிப் பொருந்த காட்டியது.

குறிப்பு :—மையார் : விடம்தங்கிய என்றும் பொருளுரைக்கலாம். மணி : நீலரத்தினம் - ஈசனுக்கு மேருமலை வில்லானது திரிபுர சங்கார காலத்து. 'அழலைவாய் அரவம்' என்பது அந்வயம். அரவம் : பாம்பு, ஒலி.

3. உரை :—ஆல் அமர் கண்டத்து அரன் தன் மணிமிடறும் - ஆலாலவிடம் தங்கிய கண்டத்தினையுடைய ஈசனது நீலமணி

போன்ற கழுத்தையும், கோலக் குழற்சடையும் - அழகிய கூந்தற் சடையையும், கொல் ஏறும் - கொல்லும் தன்மையுடைய இடபத்தையும், போல - போன்று, கார் - மேகமானது, இருண்டு - கறுத்து, ஒன்றும் ஆகாயத்தினிடத்திற் பொருந்தும்; எனெனில், (அது முறையே) அம்பொன் அவ்வானம் - அழகிய விளங்குதலையுடைய ஆகாயத்தில், கருண்டு - கறுத்து, மின்தோன்றி - மின்னி, ஒன்று கூறுதலில் - ஒரு பெருஞ்சத்தத்தை உண்டாக்குதலின் என்க.

குறிப்பு :—ஆல் : ஆலம் என்பதன் கடைக்குறை. கோலம் : அழகு. திருமாலேயிடபமாதலின் கொல்லேறு என்றனர். நீலகண்டம் போற்கறுத்து, குழற்சடை போன்மின்னி, கொல்லேறுபோல் ஆரவாரத்தினைச் செய்யும் என்று தனித்தனி யுவமையைப் பிரித்துக்கொள்க. குழற்சடை:இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

4. கை காம்பு இனங்கொள் தோளி - மூங்கிலினைத் தனக்கு இனமாகக்கொண்ட தோளினையுடைய மங்காய் ! அக்கார் - அந்தக் கார்மேகமானது, இருள்கொண்ட கண்டத்திறைவன்றன் - நீலகண்டத்தினையுடைய சிவபிரானது, சென்னிக்கு - தலையிலிருந்து, உருள்கொண்ட - உருண்டு விழுந்து கிடக்கும், செஞ்சடைபோல் மின்னி - சிவந்த சடையினைப்போல் மின்னி, சுருள்கொண்டு பாம்பு இனங்கள் அஞ்சிப்படம் ஒடுங்க - பாம்புக் கூட்டங்கள் தமதுடலவினைத் தூச் சுருட்டிக் கொண்டு பயந்து படத்தை யடக்கிக்கொள்ளும்படி, ஆர்த்தது - இடித்தது.

குறிப்பு :—'சருள்'என்பதைச் 'சுருள்' என்று திருத்துக. சென்னிக்கு-ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்த நான்கனுருபு வேற்றுமை மயக்கம்-காம்பு=மூங்கில். தோளி இ,' என்ற பாடத்தைத் 'தோளி' யென்று அளபெடாமலே யிருக்குமாறு திருத்துக 'காம்பினங்கடோளி' என்பதற்கு ஙங்கள் காம்பின் தோளி யென்று பொருளுரைக்க.

5. உரை :—கற்பு அகலம் காண்புற்ற கார்-மதிலின் விசாலமான வெளியிடத்திற் காணப்பெற்ற இம்மேகம், கோடரவம்-சோலைகளில், கோடல் அரும்ப-வெண்காந்தள் மலர, ஆடு அரவம் எல்லாம் குருமணி கான்று-ஆடுகின்ற சர்ப்பங்கள் எல்லாம் சிவந்த நாகரத்தினங்களைக் கக்கிவிட்டு, அளையடைய-புற்றிற் சென்றடைய, நீடு அரவம் பொற்பு அகலம் பூண்டான் புரிசடைபோல் மின்னிற்றே-நீண்ட சர்ப்பங்களை அழகிய மார்பின்கண் ஆபரணமாகப்பூண்ட சிவபெருமானது கட்டப்பெற்ற சடையைப்போல் மின்னிற்றே.

குறிப்பு:—கற்பு அகலம் காண்புற்ற கார்' என்பதற்கு நாயகனைப்பிரிந்த மங்கையர்களினது கற்பின் விசாலத்தை இவ்வளவிற்று என்று கண்டறிந்த மேகம் என்றும் பொருளுரைக்கலாம்-குருமணி செம்மணி. கோடல் கார்காலத்தில் மலர்வது வழக்கம்.

6. உரை:—பாரும்-பூமியும், பனிவிசும்பும்-குளிர்ச்சிபொருந்திய ஆகாயமும், பாசுபதன் பல் சடையும் - சிவபெருமானதுபல சடைகளும், ஆரும் - நிறைந்த, இருள்மீண்டு - இருட்டைக் கிழித்து, கார்—, மின் விலகி-விட்டுவிட்டுமின்னி, ஊரும்-ஆகாயத்திற் செல்லும்; அரவம் செலவு அஞ்சும்-பாம்புகள் வெளிப்பட்டு நகரப்பயப்படும், காண்பார் அஞ்சொலார்-மேகத்தினைக் கண்ணுறும் அழகிய சொல்லையுடைய மகளிர்கள், அக்கார்-அம்மேகம், கரவிந்தம் என்பர்-களாப்பழம் ஒத்தது என்பார்.

குறிப்பு:—இனி ஊரும் அரவம் விலகிச் செலவஞ்சும் என அந்வயித்துப் பொருள் கூறுவாருமுளர். இனி, கரவிந்தம் என்பாரக் கார்-களங்கனிபோன்ற உருவத்தையுடைய மேகம், என்று பொருளுரைத்தலு முண்டு.

7. உரை:—அக்கார், செழுந்தழல் வண்ணன் - ஒளிமிகுந்த அக்கினிபோன்ற மேனியையுடைய சிவபெருமானுடைய, செழுஞ்

சடைபோன் மின்னி-மிக்க சடைக்கற்றைப்போல் ஒளி விடுத்து, அழுந்தி-ஆகாயத்திற் பொருந்தி, அலர்போல்-காயாம்பூவைப்போல் உயரவெழுந்து-வானத்தில் எழுந்து, எங்கும்-உலகெங்கும், ஆவி சோர் நெஞ்சினரை-நாயகரைப்பிரிந்து ஆவியும் நெஞ்சுங் கலங்குபவரின், அன்பு அளக்க-அன்பினை இவ்வளவென்று வரையறுக்க, உற்றதே-ஈண்டுத் தோன்றியதோ, காவிசேர் கண்ணாய்-நீலோற்பல மலர்போன்ற கண்ணையுடையவளே.

குறிப்பு:—ஈசனைச் செழுந்தழல் வண்ணன், என்று கூறியது திருவருளையை யுட்கொண்டுபோலும் 'சுடர்மூர்த்தி' என்றும், 'ஒளி மூர்த்தி' என்றும் 'சுடரோன்' என்றும் கூறும் வழக்கத்தை யீண்டுணர்க.

8. உரை:— ஆதியான்-முதல்வனாகிய சிவபெருமானுடைய, ஆய்மணி சேர்கண்டம்போல்-ஆராயப்பட்ட மணி மாலைகள் தங்கிய கழுத்தைப்போல், மீது-ஆகாயத்தில், இருண்டகார்-கறுத்த மேகங்கள், காந்தள் மலர-வெண்காந்தள் மலரவும், கமழ்கொன்றை பொன் சொரிய-வாசனை வீசுகின்ற கொன்றை பொன் போன்ற மலர்களைச்சொரிய, பூந்தளவம்-அழகிய முல்லை, ஆர-சந்தோஷித்து மிகுந்து முளைப்ப, இன்றே-இப்பொழுது, ஏந்தொளி சேர் அண்டம் போல்மீதிருண்ட-மிக்க பளபளப்புள்ள அண்டங் காக்கைபோல் இருண்டு நின்றன.

குறிப்பு:—காந்தள் கார்கலத்து மலரும் மலர்-ஆய்மணி: வினைத்தொகை. இருளையாயும் மணி யென்றும் பொருள்படும்.

இராமாயணம்.

இராமனைப்பற்றிக் கூறுமொருநூல். கம்பனு லியற்றப்பட்டது. உத்தர ராமாயணம் ஒட்டக்கூத்தனுலியற்றப்பட்டது. கம்பனது சரித்திரத்தை நுந்தம் ஆசிரியர் வாய்க்கேட்டுணர்க. இப்பொழுது பாடத்திற் கூறப்பட்டபாகம் கிட்கிந்தாகாண்டம் வாலிவதைப் படலத்திலிருந்து எடுக்கப்பட்டது. அம்புபட்டுக் கீழேவீழ்ந்தவாலி இராமனை நோக்கிக் கூறிய செய்யுட்களிவை.

1. உரை:—வாய்மையும்-சத்தியமும், மரபும்-அரச நீதியும், காத்து-வழுவாமற் காத்து, மன்னுயிர்-நிலைபெற்ற உயிரினை, துறந்த-விடுத்த, வள்ளல் தூயவன்-பரிசுத்தாத்மாவாகிய வண்மைக்குணம் வாய்ந்த தசரதனுடைய, மைந்தனே - புதல்வனே, நீ பரதன்முன் தோன்றினுயே-நீ பரதனுக்குமுன் பிறந்தவனுயினேயே, தீமைதான் பிறரைக்காத்து-மற்றவர்களைத் தீமை செய்யாமற் காப்பாற்றி, தான் செய்தால் தீங்கு அன்று ஆமோ- தானே செய்தாற் பிசகின்றிப் போமோ? தாய்மையும்—உலகிற்கெல்லாம் தாயாகும் தன்மையும், அன்றி - அறவுமன்றி, நட்பும்-சினேகமும், தருமமும் - தருமமார்க்கத்தையும், தழுவி நின்றாய் - கைக்கொண்டு நின்றவனே!

குறிப்பு:—மரபு: பழையவழி; பெரியோரேற்படுத்திய மநுநீதி. உயிர் அழிவில்லாததாதலின் மன்னுயிர் என்றார். மைந்தன்: மைந்து - பலம், மாதாபிதாக்கள் தளர்கின்ற காலத்து ஊன்றுகோல் போன்றிருந்து தளர்வின்றித் தாங்குபவன்; புத்திரன். இப்பாடற்கும் இதன் கீழ்வரும் ஏழுபாடற்கும் சாம்பிரதாயவுரைகள் விரிந்து கிடக்கின்றமையின் அவைகளை மீண்டுத்தரல் அவசியமில்லையென்றும், வேண்டியார்தம் ஆசிரியர்பாற் கேட்டுணர்ந்துகோடற்பொருட்டும், விரிப்பிற் பெருகுமாதலினாறும் விடுத்தாம்.

2. உரை :—ஒலிகடல் உலகந்தன்னில் - சத்திக்கின்ற கடல் சூழ்ந்த பூமியில், ஊர்தரு குரங்கின் மாடே-ஊர்ந்து செல்லுந்தன்மையவான குரங்குகளிடத்தேதான், கலியது காலம் வந்து பரந்ததோ - கலிகாலம் சம்பவித்ததோ, கருணைவள்ளால் - கருணையையுடைய வள்ளலே, ஒழுக்கமும் - நல்லொழுக்கமும், விழுப்பந்தாளும் - மேன்மையும், மெலியவர் பாலதேயோ - எளியவரிடத்தில் மாத்திரமிருக்க வேண்டியவைகள் போலும், வலியவர் மெலிவுசெய்தால் - வல்லமையுடையவர்கள் தகாதவைகளைச் செய்தால், புகழன்றி வசையுமுண்டோ - புகழல்லாமற் குற்றமுண்டோ?

குறிப்பு :—வலியவர்கள் தகாதன செய்தால் ஒறுப்பாரொருவருமிலராதலின் குற்றமாகாதென்றும், எளியவர் செய்தால் தண்டிக்கப்படுவார்கள் என்றும் வாலி நிந்தித்துக் கூறினன். மாடு : ஏழனுருபு. வள்ளல் : வரையாமற் கொடுப்பவன். மெலிவு : நீசம்.

3. உரை :—மூன்று புவனநாயகம் - திரிலோகாதிபத்தியம், உன்னதன்றே - உன்னுடையதல்லவா?, இது - என்னை நீ கொன்ற இச்செய்கை, குலம்-, கல்வி-, கொற்றம்-வெற்றி, மீது உற்று நின்ற-மேலேயாவரும் பெறுமாறு பொருந்திய, நலம் - நன்மை, வலம் - பலம் வண்மை - வள்ளற்றன்மை, இவை யாவைக்கும் பொருத்தமுடையனவே யெனினும், திண்மை அலமரச் செய்யலாமோ - உனது பராக்கிரமத்திற்குக் கெடுதி செய்யலாமோ, அறிந்திருந்தயர்த்துளார் போல் - தெரிந்தும் மறந்தவர்களைப்போல.

குறிப்பு :—புவன மூன்று : சொர்க்க மத்திய பாதாளம். நாயகம் என்பதை அண்மை விளியாக்கிப் புவனமூன்றும் உன்னதன்றே என்றும் பொருளுரைக்கலாம். பராக்கிரமத்திற்குக் குற்றம்: மறைந்து நின்று பாணம் தொடுத்தல், நிரபராதியைக் கொல்லலாதியவைகளாம்.

4\. உரை :—ஓவியத்து எழுதவொண்ணு உருவத்தாய் - சித்திரத்தில் எழுத முடியாத பேரழகு வாய்ந்தவனே!' கோவியல் தருமம்-அரசர்க்குரிய மநுநீதியிலுள்ள அறநெறி, உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம் - உங்களுடைய சூரிய குலத்துதித்த மன்னர் யாவர்க்கும், உடைமையன்றே - ஆபரணமல்லவா?, ஆவியை - உயிரை, சனகன்பெற்ற அன்னத்தை - சனகராஜன் புதல்வியாகப் பெற்ற அன்னம் போன்ற ஜானகியை, அமிழ்தின் வந்த தேவியை - அமிர்தம்போற் கிடைத்த தேவியை, பிரிந்த பின்னை-பிரிந்த பிறகு, செய்கை திகைத்தனைபோலும் - செய்தொழிலிற்றவறினாய்போலும்.

குறிப்பு :—ஆவி : உயிர் ; உவமையாகுபெயராய்ச் சீதையைக் குறித்தது. அன்னம் : அன்னம்போன்ற நடையுடையவளாதலின் அன்னம் என்றார் ; உவமையாகுபெயர். அமிழ்தின் வந்த தேவி திருப்பாற்கடலில் உற்பவித்த [இலக்குமியாகிய தேவி இராமர் வாலியை மறைந்துநின்று கொன்றமையால் அவருரு ஓவியத்தெழுதொணுமை யுணர்க.

5\. உரை :—அரக்கர் - இராக்கதர்கள், ஓர் அழிவு செய்து கழிவரேல்-ஒரு துன்பத்தைச் செய்து தண்டனை பெறாது நீங்குவாராஞல், அதற்கு, வேறோர் குரக்கினத்தரசைக் கொல்ல—அவர் தம்மினின்றும் வேறாகிய குரங்குக் கூட்டங்களின் அரசனைக் கொல்ல, மநுநெறி கூறிற்றுண்டோ - மநுதர்ம சாத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறதோ?; இரக்கம் எங்கு உகுத்தாய் - உன்னுடைய கருணையை எவ்விடத்து நீக்கினாய்; அப்பா - அப்பனே, என்பால் எப்பிழை கண்டாய் - என்னிடத்தில் என்ன பிசகைக்கண்டாய்; பரக்கழி இது நீ பூண்டால் - உன்னில் வேறாகிய பழியாகிய இதனை நீ கொண்டால், புகழையார் பரிக்கற்பாலார் - புகழினை யாவரே யடைவார் ?

குறிப்பு :—அழிவு : கெடுதி. குரக்கினம் : மென்றொடர் என்னுந் தொடக்கத்த சூத்திரத்தானமைக்க. இரக்கமெனுங்குருத்தாய் : இரக்கத்தை வெள்ளமாகவும் அதனை யுகுத்ததாகவும் கூறினர் ; ஏகதேச வுருவகவணி. பரித்தல் : சுமத்தல்.

6. உரை :—கூட்டு ஒருவரையும் வேண்டா-ஒருவனைச் சயிப்பதற்கு உதவியாக ஒருவனையும் வேண்டாத, கொற்றவ-மன்னனே, பெற்ற தாதை பூட்டிய செல்வம் - உன்னை யீன்றதகப்பனர் சம்பாதித்த செல்வத்தை, ஆங்கே-அயோத்தியில் (நாட்டில்), தம்பிக்குக் கொடுத்து - பரதனுக்கு அளித்து, நாட்டு ஒரு கருமம் செய்தாய் நாட்டில் ஒரு காரியத்தைச் செய்து, போந்து - காட்டிற்கு வந்து எம்பிக்கு - எனது தம்பியாகிய சுக்கிரீவனுக்கு, இவ்வரசை நல்கி- இந்தக் கிட்கிந்தையின் அரசாட்சியினைக் கொடுத்து, காட்டு ஒரு கருமஞ் செய்தாய் - நாட்டிற் செய்தது போல் காட்டிலும் ஒரு காரியஞ் செய்தாய், இதன்மேல் கருமந்தானுண்டோ - இதனிலும் மேலான காரியமும் உலகத்திலுளதோ ?

குறிப்பு :—'கூட்டொருவரையும் வேண்டா' என்றமையால் இராமரது சுத்த வீரத்தன்மையும் தனியாண்மையுங் குறித்தார்.

7. உரை :—முனிவு இலாதாய் - கோபமற்றவனே, அறை - சப்திக்கின்ற, கழல் - வீரகண்டையையும், அலங்கல் - மலையையும் உடைய வீரராயவர் - சுத்தவீரர்களானவர், புரிவது - செய்வது ஆண்மைத் துறையெனல் ஆயிற்று அன்றே - ஆண்மைவாய்ந்த செய்கை யென்று கூறப்படவேண்டியதல்லவா? (அவ்விதமாயின்), தொன்மையின் - பழமையாகிய, நன்னூற் கெல்லாம் - நல்ல நூல்களாகிய வேதங்களுக் கெல்லாம், இறைவன் நீ - கருத்தன் நீ யாதலின், என்னைச் செய்தது - எனக்குச் செய்தது, ஈது எனில் - இப்படிப்பட்டது என்றால், இலங்கை வேந்தன் - இலங்கை மன்னனு

கிய இராவணன், முறையல செய்தான் என்று - முறைபற்ற காரி யத்தைச் செய்தனன் என்று, முனிதியோ - கோபிப்பாயோ?

குறிப்பு :—கழல் : காலிற்கட்டப்படும் ஒருமணி. அலங்கல் தொங்கியசைவது; எனவேமாலை. நூல் : உவமையாகுபெயர். என்னை : வேற்றுமை மயக்கம். முனிவிலாதன் முனியமாட்டான் என்ற நயத்தை யீண்டறிக. துறை: நெறி.

8. உரை :—இருவர் போர் எதிருங்காலை - இரண்டு பேர் எதிர்த்து யுத்தஞ் செய்யும் பொழுது, இருவரும் நல்லுற்றுரே - இரண்டு பேரும் சிநேகிதர்களே யாய் வேண்டியவர்களானால், ஒரு வர்மேல் கருணை தூண்டி-ஒருவன் பேரிற் கருணை தூண்டப்பெற்று, ஒளித்து நின்று - மறைந்து நின்று, ஒருவர் மேல் - மற்றொருவன் மேல், வரிசிலை குழையவாங்கி - கட்டார்ந்த வில்லை நன்றாக வளை த்து, வாய் அம்பு - விஷம் வாய்ந்த அம்பினை, மருமத்து எய்தல் - மார்பின் மேற் பிரயோகித்தல், தருமமோ—, பிறிது ஒன்றோமோ - அதருமமோ; பக்கம் - பக்ஷபாதம், தருகிலது என்னும்-தகாதது என்று உலகத்தார் கூறுவார்.

குறிப்பு :—நல்லுற்றார் : நன்மையாகப் பொருந்தினோர், பக் கம் : பாரபக்ஷம்.

பாரதம்.

இது பரதவம்சத்தினரது சரித்திரத்தைக் கூறும் நூல் என்று பொருள் படும். இதன் நூலாசிரியர் சரித்திரத்தை நமது பாட புத்தகத்தி னிறுதியிற் றந்துரைக்கப்பட்ட குறிப்புரையிற் காண லாம். ஈண்டுக் கூறப்பட்ட பாகம் சபாபருவத்தில் இராஜசூய யாகம் நடந்தேறிய பின்னர்க் கண்ணன் சகுனி துரியோதனன் முத லியர் பாண்டவர்களைச் சூதாடக் கூப்பிடுமாறு ஆலோசித்தல்.

1. உரை :—இறைஞ்சிய - வணங்கிய, வேந்தர்க் கெல்லாம்- எல்லா மன்னருக்கும், இருப்பு அளித்து - ஆதனங் கொடுத்து, எதிர்ந்த வேந்தர் நிறஞ்செறி குருதி வேலான் - தன்னை எதிர்த்த அரசர்களின் மார்பிலிறைந்த அரத்தம் தோய்ந்த வேலாயுதத்தை யுடையவனாகிய துரியோதனன், நினைவினோடு இருந்தபோதில் - ஆலோசனை செய்து கொண்டு இருக்கு மளவில், அறம்செறிதானம் வண்மை அளவிலாது அளித்து - அறநூல் களிற் கூறப்பட்ட தருமங்களையும் வள்ளற்றன்மைகளையுஞ்செய்து, நாளும்-தினமும், புறம் சுவர் கோலம் செய்வான் - இடிந்த சுவரின் வெளிப் புறத்திற்கு அழகு செய்பவனைப் போல்வானாகிய கர்ணன், பூபதிக்கு உரைக்க லுற்றான் - துரியோதனனுக்குச் சொல்லத் தொடங்கினான்.

குறிப்பு :—நிறம் : மார்பு. இருப்பு : ஆதனம் உடலைச்சுவ ராகவும் அகச்சுவரைப் பலப்படுத்தலாகிய அகங்காரமமகாரங்களை யறவொழித்தலைச் செய்யாமற் புறஞ்சுவர் பூசுவது போன்ற தரு மங்களைச் செய்தலாகிய தொழில்களைச் செய்பவன் என்று கர்ண னைக் கூறினார். பூபதி : அரசன்.

2. உரை :—தாது அவிழ் குவளை மாலைத்தருமன் மாமதலை- மகரந்தப் பொடிகளை யுதிர்க்கும் குவளைப் பூவினாலாகிய மாலையை யுடைய யமதருமராஜனுடைய புதல் வனாகிய தருமராஜன், பெற்ற- அடைந்த, மேதகுவேள்விச் செல்வம் - மேலாகிய இராஜ சூய யாகமாகிய செல்வத்தைப் போன்ற செல்வம், வேந்திரில் யாவர் பெற்றார் - அரசர்களுள் யாவரே பெற்றார்? அவன்றன் வாழ்க்கை - தருமனது வாழ்க்கைக்கு, ஏது அளவு - அளவுமுண்டோ? இனி யார் எதிர் உண்டு என்று - இனிமேல் நிகரும் அவனுக்கு உண்டோ என்று, பரிவு கூர - துரியோதனனிடத்தில் அன்புடன், பாதக நினைவை - தன்னுடைய கெட்ட எண்ணத்தை, தானும்—, பகர்ந்த னன் - கூறினான்.

குறிப்பு :—பரிவு : துன்பம் என்று பொருள் கூறிமனவருத்த முற்றுக் கூறினன் என்று கோடலும் பொருந்தும். வாழ்க்கை :: கை தொழிற் பெயர் விகுதி, இங்ஙனம் கர்ணன் கூறினமையாற் றன் அவனைப் புறஞ் சுவர் கோலஞ் செய்பவன் என்றார்.

3. உரை :—விதரண விநோதன் - ஈகையே தனக்கு விநோதமாகக் கொண்ட கர்ணன், சொன்ன வார்த்தையும்—, வேந்தர் வேந்தன் - துரியோதனனுடைய, இதயமும் - மனமும், ஒன்றாய் நின்ற இயற்கையை - ஒற்றுமைப்பட்டு நின்ற நிலையை, சகுனி கண்டு—, வசை இசையாகக் கொள்வான் - அக்கர்ணன் கூறிய பழிமொழிகளைப் புகழ்மொழியாக யாவருங் கொள்ளுமாறு, புதைநகம் மடங்கல்நாளும் புறஞ்செலா தொடுங்குமானல்-உடலிற் புதைதரும் வன்மையுடைய நகங்களையுடைய சிங்கம் தினமும் வெளிப்படாது உள்ளடங்குமானல் மதகரி விடுமோ என்றான்-மதயானை சும்மாவிருக்குமா வென்றான்.

குறிப்பு :—விதரணம்: ஈகை. வேந்தர் வேந்தன்: இராஜாதிராஜன். சகுனி: துரியோதனன் மாமன். கரி: கரத்தையுடையது அதாவது துதிக்கையையுடையது, எனவே யானையாயிற்று. இதனைப் பதினேழாம் பாடலாகக் குறித்திருப்பினும் வில்லிபாரதத்திற் கூறியபடி கொண்டு பொருளுரைத்தாம். ஈண்டுச் சிங்கம் துரியோதனன், யானை, பாண்டவர்கள்.

4. உரை :—சொல்லிடை நஞ்சுகக்கும் - தனது வார்த்தைகளிடத்தில் விஷத்தைக் கக்குகின்ற, துன்மதியுடைய தம்பி-கெடுமதியையுடைய தம்பியாகிய துச்சாதனன், வில்லிடை நின்று - தனது தனுசுடன் எதிர்நின்று, தம்முன்-தனது தமயனாகிய துரியோதனன், வெம்மனம் - வெவ்விய சிந்தை, களிக்க - சந்தோஷமடையுமாறு சொன்னான், (என்னவென்றால்), அல்லிடை நிறைந்ததேனும் - இரவினிடத்தில் மிகுந்த வொளியையுடைய தேனும், அமுதவெண் கிர

ணத்திங்கள் - வெண்மை நிறம்பெற்ற அமுத கிரணங்களையுடைய சந்திரன், எல்லிடை - பகலில், இரவி முன்னர் - சூரியன் முன்னிலையில், எவ்வுழி - எந்த இடத்தில், நிகர்க்கும் - ஒக்கும்?

குறிப்பு :—வில்லிடை நின்று: பிரகாசத்துடன் எழுந்து நின்று என்றும் பொருளுரைக்கலாம். ஈண்டுத்திங்கள் பாண்டவர், இரவி துரியோதனன். எவ்வுழி: உழி ஏழனுருபு.

5. உரை :—தம்பி சொன்ன - துச்சாதனன் கூறிய, தன்மையை—, தமையனும் உணர்ந்து - துரியோதனனும் அறிந்து, நீதி அமைதரு தந்தை கேட்ப - நீதி பொருந்திய திருதராட்டிரன் கேட்குமாறும், அவன் பெருந்தாதை கேட்ப - அவனது பெரிய பிதாவாகிய வீட்டுமர் கேட்குமாறும், கார்முகக் கன்னன் கேட்ப - வில்லையுடைய கர்ணன் கேட்குமாறும், கமைபெறு விதுரன் கேட்ப-பொறுமையுடைய விதுரர் கேட்கும்படிக்கும், இமையவன் துரோணன் கேட்ப - தெய்வத்தன்மை வாய்ந்த துரோணன் கேட்குமாறும், யாவருங் கேட்ப - எல்லாரும் கேட்குமாறும், சொல்வான் - சொல்லத்தொடங்கினன்.

குறிப்பு :—கமை: 'க்ஷமா' என்னும் வடசொற்றிரிபு. கார்முகம்: தொழிலைச் செய்வது. துரோணர் அயோநிஜராதலால் 'இமையவர்' எனப்பட்டார்.

6. உரை :—இந்திரன் முதலாயுள்ள இமையவர் - இந்திரன் முதலாகிய தேவர்கள், சிறப்புச்செய்ய—, சுந்தரப்பொற்றோள் வேந்தர் - அழகிய வீரலக்ஷ்மி பொருந்திய புயங்களையுடைய மன்னர்கள், தொழில் புரிந்து ஏவல் செய்ய - குற்றேவல்களை விரும்பிச் செய்ய, மந்திர முனிவர் - மந்திர சக்தியையுடைய முனிவர்கள், வேள்வி - யாகத்தினை, மறைநெறி முறையில் செய்த - வேதவிதிப்படி செய்து முடித்த, தந்திரவெள்ளச் சேனைத்தருமனே - யுத்த

தந்திரங்கள் பலவுமறிந்த-மிகுந்த சேனையையுடைய தரும புத்திர னே, தலைவனானன் - யாவர்க்கும் முதல்வனானன்.

குறிப்பு :—இமையவர்: இமையிலே விசேடணமுடைய தேவ ரைக் குறித்து நின்றது. பொன்: இலக்குமி; இங்குப் புயத்திற் றங் குவதனால் வீரலக்ஷ்மியெனக் கூறினும். வேள்வி: வேண்டியவர் வி ரும்பியவற்றை யடையுமாறு தரும சடங்காதலின் இப்பெயர்த்தா யிற்று. முனிவர்: கடவுளை யெக்காலத்திலும் மனனஞ் செய்பவர்.

7. உரை :—இனி அவன் சின்னாட் செல்லின் - இனிமேல் அவன் சில நாள் கழிந்தால், எம்மனோர் - எங்களுடைய, வாழ்வும் கொள்ளும் - செல்வத்தையும் கைப்பற்றுவான், துணைவரும் - வே கம் பொருந்திய, புரவிதிண் தேர் துணைவரும் - குதிரைகள் கட்டிய வலிய தேரினையுடைய தம்பிமார்களும், சூரரானர் - வீரரானர்கள், முளைவரு கூர்முள் வேலை - நுனியில் கூர்மை பொருந்திய முட்க ளையுடைய வேலமரத்தை, முளையிலே களையினல்லால் - சிறு செடி யாயிருக்கும் போதே களையாவிடில், ஙனிவர - மிகுதியாக, வயிர்த் தபோது - வைரம் பற்றியபோது, நவியமும் - கோடரியும், மடியு மன்றே - கூர்மை மழுங்கும்.

குறிப்பு :—இஃது எடுத்துக்காட்டுவமையணி. இதனால் துரி யோதனன் இப்பொழுதே பாண்டவர்களை யெதிர்த்து அழிக்க வேண்டுமென்று கூறியதை யுணர்க.

8. உரை :—போது உற - சமயம் வாய்க்க, விரைந்து-வேக மாய்ச்சென்று, அப்புரவலன் செல்வம்யாவும்-தருமபுத்திரனுடைய செல்வத்தை யெல்லாம், பேதுறக் கவர்ந்திலேனேல் - பிரிவுபடக் கவராவிட்டால், பின்னையார் முடிக்கவல்லார்-வேறியாவரே செய் துமுடிப்பார்? மோதுறப் பொருதே யாதல் - யுத்தகளத்தில் மோ திச் சண்டை செய்தேயாவது, (அல்லது) மொழிபொணு வஞ்ச மொன்று - சொல்லுதற்கரிய வஞ்சனையாகிய செயலை, திறப்பு

ிந்தேயாதல்-இமை பொருந்தச்செய்தேயாவது, கொள்வது சிந்தை என்றான் - பாண்டவர்களது செல்வத்தைக் கவர்ந்து கொள்வதே தக்க ஆலோசனை என்றான். (மற்று - அசை.)

குறிப்பு :—ஒனு - ஒண்ணுத; ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். சிந்தை - ஆலோசனை.

9. உரை :—என்னலும் - என்று சொல்லலும், உரிய தம்பி - சொல்வதற்கு உரிமையுள்ள தம்பியானவன், எழுவதே கருமம் இன்றே - நாம் இப்பொழுதே போர்க்குக் கிளம்புவது நம்முடைய காரியம், செந்நெலின் வாளை பாயும் செல்வ நாடுடைய கோமான் - முதிர்ந்த நெற்கழனிகளில் வாளைமீன்கள் துள்ளிக் குதிக்கின்ற வளப்பத்தை யுடைய நாடுடைய துரியோதன மகாராஜன், நென்னல் அங்கு எய்த - நேற்று இந்திரப் பிரஸ்தத்திற்குப் போக வீமன் நகைத்ததும் - வீமசேனன் சிரித்ததும், நேயமான கன்னலின் மொழியாள் - விரும்பத்தக்க கரும்பினும் இனிய மொழியாளாகிய திரௌபதி, மூரல் விளைத்ததும் - சிரித்ததும், கண்டிலீரோ - நீங்கள் பார்க்க வில்லையா?

குறிப்பு :—'வாழை பாயும்' என்பதை 'வாளைபாயும்' என்றும், 'மொழியான்' என்பதை 'மொழியாள்' என்றும் படிக்க. நென்னல்: நெருநல் என்பதின் திரிபு. கன்னலின் : ஐந்தாம் வேற்றுமை யொப்புப் பொருள். தம்பி - துச்சாதனன்.

10. உரை :—எத்தனை தரணிவேந்தர் - பூமியை யாளும் மன்னர்கள் எவ்வள பேர்கள், யாகநல் விழாவில் வந்தார் - இராஜசூயமாகிய யாகோற்சவத்தில் வந்தார்களோ, அத்தனை பேரில் - அவ்வளவு அரசர்களில், யாமும் ஒருவராக யடங்கி நின்றேம்-நாமும் அவர்களில் ஒருத்தராய் அடங்கி நின்றோம், கொத்தனையுகளும் நன்னீர்க் குருகுலக்கோமான் - மீன்கள் புரளும் வளப்பம் பொருந்திய வயல்

களை யுடைய நல்லகுருநாட்டிற்குத் தலைவனானவன், முத்தனை யன்றி - முத்தனாகிய ஸ்ரீகிருஷ்ணனை யல்லாமல், பின்னை யாரையே முதன்மை செய்தான் - பின்வேறு யாரை, முதன்மை செய்தான்- அக்கிர பூஜை செய்தான்.

குறிப்பு :—விழா : இது விழ, விழவு என்னவும் வரும். "குறியதன் கீழா" என்றுஞ் சூத்திரத்தாற் கொள்க.

11. உரை :—நந்தகோமகனுக்கு - நந்தகோபன் புதல்வனாகிய கண்ணனுக்கு, எல்லாம் நல்கிய முதன்மை கண்டு-செய்த எல்லா முதன்மையான உபசாரங்களையுங் கண்ணுற்று, வந்த கோவெள்ளம் - அவ்விடம் வந்திருந்த அரசக் கூட்டங்கள், சேரவாய் திறவாமல் நிற்ப - ஒருமிக்க வாயைமூடிக் கொண்டு நிற்க, எந்தகோ - என்னத்திற்கோ, இவனுக்கு இந்த முதன்மை என்று எதிர்ந்து - நம்மையொத்த இவ்வரசனுக்கு மாத்திரம் இப்பேர்ப்பட்ட முதன்மை செய்வது என்று எதிர்த்து, மாற்றம் தந்தகோமடியு மாறு - பேசின அரசன் இறக்கும்படி, சமரமும் - போரும், விளைப்பித்திட்டான் - செய்யத் தொடங்கினான்.

12. உரை :—தன் புயவலியும் - தன்தோளின் வல்லமையும் நான்கு தம்பியர் வலியும் - தன் தம்பிகளாகிய வீமனாதியோர் பராக்கிரமத்தையும், மாயன் வன்புயவலியும் கொண்டே - மாயசக்திகளையுடைய கண்ணனது புஜபலத்தையும் சகாயங் கொண்டு, மண்ணெலாங்கவர எண்ணி - இப்பூமி முழுவதையும் அபகரிக்க நினைத்து, இன்புயச்சிகரி மன்னர் யாரையும் தன் கீழாக்கி - பர்வதங்கள் போற் புஜங்களையுடைய அரசர் யாவரையும் தன் கீழ்ப்பணியச் செய்து, மின்புயலனையான் மேன்மை விளக்கவே வேள்வி செய்தான் - மின்னலை விளக்கின்ற கிருண்ட மேகம் போன்றவர்ணத்தையுடைய கண்ணனுக்கு மேன்மை செய்யவே யாகத்தைப் புரிந்தான்.

குறிப்பு :—சிகரி : சக்கிரமுமாம்.

13. உரை :—எல்லியல் பரிதியன்ன - பகலையுண்டாக்குகிற சூரியனைப்போல், யதுகுலமன்னன் - யாதவ குலமன்னனாகிய கண்ணனும், தானும் - , சல்லியமிகுபோர் செய்ய - கலக்கத்தை விளைக்கத்தக்க யுத்தத்தைச் செய்ய, சல்லியன் தன்மேற் சென்றான் - சல்லியன்மேற் போர்க் கெழுந்தான், சொல்லிய கருமம் வாய்ப்ப-மேலேகூறிய செய்கையை முடிக்க, சூழ்வலைப் படுத்திக் கொண்ட வல்லியம் என்ன - புலியை தன்னுள் அகப்படுத்திக் கொண்டவலையைப்போல், சூழ்ந்து மலைவதே - பாண்டவர்களைச் சூழ்ந்து போர் செய்வதே, கருமம் என்றான் - காரியம் என்றான்.

குறிப்பு :—எல்லியல் : பகலிற் சஞ்சரிக்கும் என்றும் பொருள் கூறலாம். பரிதி : வட்டவடிவானது ; ஆகவே சூரியனை யுணர்த்திற்று. சொற்பின்வரு நிலையணி. உவமையணி.

14. உரை :—வேந்தனும் - துரிபோதனனும், ஒருப்பட்டு - அவன் தம்பி கூறியதற்கு உடன்பட்டு, அந்த வெண்ணெய் வாய்க் கள்வன்மீள - ஆயர்பாடியில் வெண்ணெயைத் திருடியுண்டவனாகிய கண்ணன் திரும்பவும், போந்து இவர் தமக்கு இன்று பொருதுணையாக மாட்டான் - இவர்பால் வந்து இப்போது போர் செய்வதற்குத் துணையாக மாட்டான், சாந்தணி குவவுத் தோளான் - சந்தன முதலாகிய ஆபரணமணிந்த திரண்ட தோளையுடையவனாகிய, சல்லியன் வலியன் - சல்லியன் வல்லமை யுள்ளவன் (ஆதலால்) இப்போது ஆம் தக எண்ணில் - இப்போது-தகுதியாய் நடக்க வேண்டி அதற்குக் காரணமான காரியங்களை ஆலோசிப்பேமானால், வல்லே - விரைவில், ஐவரை - பஞ்சபாண்டவர்களை அடர்க்கலாமே - உயுத்தத்தில் எதிர்க்கலாம்.

குறிப்பு.—'குவவு' என்பதைக் 'குலவு' என்று படிக்க. சாந்து-சந்தனம். பொருதுணை - பொருதற்குத் துணை.

15. உரை:—வஞ்சனை கொண்டேயாதல் - வஞ்சகமான உபாயத்தால் அடைந்தாலும் அடையலாம், (அல்லது) வாரணம் அணித்தேர் வாசி நஞ்சனையவர் - சதுரங்க படைகளாகிய யானை (அழகிய) தேர்குதிரை (விஷத்தைப்போன்று கொடிய) காலாட்கள் முதலானவை கொண்டு நாட்டைப் பெறலாம், (ஆதலால்) நானியே அழித்தல் வேண்டும் - நானித்தினமே அப்பாண்டவர்களை அழிக்க வேண்டும், கஞ்சனை மலைய எண்ணிக் கரியபேய் முலைப்பாலுண்ட நெஞ்சினன்-தன் மாமனாகிய கம்ஸனை கொல்ல நினைத்துக்கொடிய பூதனையென்னும் பேய்ச்சிதனத்தையுண்டவாயனாகிய கிருஷ்ணன், எய்தாமுன்னம் - வந்து அடைவதற்கு முன்பு நீர் விரைந்தெழுமின் என்றான் - நீங்கள் சீக்கிரத்திற் போர்க்கு எழுமின் என்று கூறினான்.

துறிப்பு :—வாரணம் : பலபொருள் கொண்ட ஒரு பெயர்த்திரிசொல். இவ்விடத்தில் தேர் முதலிய போர்க்கருவிகளைக்கூறியதனால், கோழிமுதலானவைகளை யொழித்து யானையையுணர்த்திற்று. நஞ்சு அனையார்: விஷயத்தைப்போற் கொடுமை செய்யத்தக்கார். கஞ்சன்-கம்ஸன். கிருஷ்ணன் மாமன். கம்ஸன் தன் சகோதரிவயிற்றிற் பிறந்த எட்டாவதுபிள்ளையால் தனக்கு மரணம் நேரிடுமென்று தெரிந்து அப்பிள்ளையான இக்கண்ணனிடத்தில் ஜன்ம வைரம் கொண்டு அவனைக்கொல்லப் பலபிரயத்தனங்களைச்செய்தவர்தான். அவைகளில் ஒன்று பூதனை என்னும் அரக்கியை நல்ல சௌந்தரிய ரூபவதியான ஸ்திரியாய்க் கண்ணனிடஞ் சென்று அவள் நச்சுப்பாலாற் கொல்ல முயன்றான். ஆனாற் கிருஷ்ணனோ பாலை யுண்ணும்போதே அவள் உயிரையும் வாங்கிக்கொன்றார் என்பது கதை.

16. உரை :—வெஞ்சிலை குனித்து - கொடிய வில்லை வளைத்து, ஓர் அம்புயான் விடின் - ஒரு பாணத்தை நான் தொடுத்தால், வெகுண்ட வேந்தர் -கோபங் கொண்ட அரசர்கள், எஞ்சி-இறந்து,

விண்புகுவரல்லால் - வீரசுவர்க்க மடைவரே யன்றி, யாவரே எதிர்க்க வல்லார் - யாவர் நம் எதிர் நின்று போர் செய்யத் திறமையுடையவர்? வஞ்சனை கொண்டு வெல்ல மதிப்பது - வஞ்சகத்தால் ஜயிக்க நினைப்பது, வாளால் வெல்ல அஞ்சினமாயினன்றே-வாளாயுதத்தால் போர்செய்து ஜயிக்க அஞ்சினேலன்றே, என்றனன் - என்று சொன்னான், அங்கர் கோமான் -அங்க தேசாதிபதியாகிய கர்ணன்.

குறிப்பு :—அம்பு + யான் = அம்பியான் (நன். மெ . 3) வெருண்ட' என்ற பாடத்திலும் 'வெருண்ட' என்பது சிறப்புடைத்து: விண்புகுவர் : யுத்தத்தில் இறந்தோர் வீர சுவர்க்கமடைவர் என்பது ஐதிகம். 'அஞ்சினவாயின்' என்பதை அஞ்சினமாயின் எனத் திருத்துக. துரியோதனன் கர்ணனிடத்தி லுண்டான அன்பினால் கர்ணனை அங்க தேசத்திற்கு ராஜனாக்கினான். இச்செய்யுளால் கர்ணனுடைய சுத்த வீரத்தன்மை தெளிவாகப் புலப்படுத்தப் பட்டது.

17. உரை:—யாவரும் மொழிந்தவார்த்தை இன்புறக்கேட்டு-எல்லாருங் கூறிய மொழிகளை விருப்பத்துடன் செவிகொடுத்துக் கேட்டு, பின்னும் - மறுபடியும், தாவரு புரவி - தாவிச் செல்லா நின்ற குதிரைகளையும், திண்தேர் - வலிமையுடைய தேர்களையுமுடைய, தானையான் - சேனையை யுடையானான, சகுனி - மாமனாகிய சகுனி, மேவரு கன்னன் அன்றி - சகல உயுத்த சாமத்தியங்களையுமுடைய கர்ணன் அல்லாமல், விண்ணுளோர்-தேவர்கள், எதிர்த்த போதும் - போர் செய்த போதிலும், கோவருமுன்றிலானை-அரசகுழாம் நிறைந்த சபாமண்டபத்தை யுடைய தருமபுத்திரனை, கொடுஞ்சமர் வெல்லலாமோ-கொடியபோரில்ஜயிக்கலாமோ, (என்று,) சொல்வான்.

குறிப்பு :—கன்னன் : கர்ணன் என்பதன் மரூஉ. இச்செய்யுளில் தருமபுத்திரனது போர்த் திறத்தையும், சபாமண்டபத்தையும் வியந்து கூறினார். தருமனது சபாமண்டபம் மயன் என்னும் தேவதச்சனால் இயற்றப்பட்டது.

18. உரை :—இடும்பனை - இடும்பாசுரனையும், பகனை - பகாஅசுரனையும், வைவேல் இகல் சராசந்தன் தன்னை-கூர்மை பொருந்திய வேலாயுதத்தையுடைய வலிமை வாய்ந்த சராசந்தன் என்னும் அசுரனையும், நெடும் பனை புயத்தால் - நீண்ட பனைமரம் போன்ற கைகளால், வென்ற - ஜயித்த, நிகரிலா வீமனிற்க - ஒப்பற்ற வீமன் நீங்க, கடும்படைப் பெருமையால் - வலிமை பொருந்திய சேனைகளின் பராக்கிரமத்தால், வெங் காணலாம் என்பராயில் - பகைவரது முதுகை அவர் ஓடும்போது காணலாம் என்றால், தொடும்படை-வில்லேந்திய, தடக்கை - விசாலமான நீண்டகைகளையுடைய, வீரர்க்கு - வீரர்களுக்கு, உத்தரம் சொல்லலாகுமோ - பதில்சொல்லமுடியுமா ?

குறிப்பு :—சராசந்தன் : இவன் ஜரை என்னும் தெய்வத்தினருளால் உயிர்ப்பிக்கப் பட்டவன். கண்ணனுடைய கிருபையால் வீமன் அவனைக் கொன்றான். 'வெங்காணலாம்' என்றதனால் இவர்கள் போரில் வெல்வாரென்பது குறிக்கப்பட்டது. தொடும்படை - தொடுக்கும் ஆயுதமாதலின் வில் என்று கொள்ளப்பட்டது. உத்தரம் - வடசொல்.

19. உரை :—துப்புறழ் அமுதச்செவ்வாய்த் திரௌபதி-பவளத்தையொத்த அமிர்தத்தையுடைய சிவந்த வாயையுடைய பாஞ்சாலியினது, முனைத்தோள் வேட்டு - ஒன்றிற்கொன்று இணையான தோள்களை விரும்பி, கைப்படு சிலையிலேறும் காவலர் கலங்கிவிழ - கையிற்பிடித்த வில்லோடும் அரசர்கள் மயங்கிக் கீழேவிழ, மெய்ப்படு முனியாய் வந்து - உண்மையான முனிபோல் வந்து, விசயன்

வில்லிறுத்தபோது - அருச்சுனன் வில்லை முறித்த காலத்தில், இப்பொழுது இருந்த வீரர் யாவரும் இருந்திலேமோ - இக்காலத்திற் சௌரியம் பேசும் சூரர்களெல்லாரும் அப்பொழுதும் இருக்கவில்லையா?

குறிப்பு :—'மெய்ப்படுமுனியாய்' என்ற கருத்தை இவ்வாசிரியரே வேத்திரகியச் சருக்கத்தில் "சாத்திர மறை தெரி முனிவர் தன்மையிற், காத்திர மாறியக் காவல் வேந்தரும், கோத்திரஞ் சூத்திரங் குடி யுரைத்தனார், வேத்திரக் கியமா நகரின் மேயினார்" என்றும் கூறியிருக்கிறார். பாஞ்சாலியின் சுயம்வர காலத்திற் கர்ணன் முதலான மன்னர் யாரும் வில்லையெடுத்து மானபங்கமடைய, வேதியர் கோஷ்டியில் மாறுவேடம் பூண்டிருந்த பார்த்தன் வெகு லாகவமாய் வில்லை ஒடித்தான். அப்பொழுது அழுக்காற்றினாற் போர்புரிய வந்த துரியோதனன் முதலானவர்களை அருச்சுனன் ஒருமிக்கத் தோற்கடித்தான். இப்பாட்டாற் போரினால் வெல்வது அரிது என்பது துரியோதனன் முதலானோர்க்குத் தெரிந்த விஷயம் என்றது குறிக்கப்பட்டது.

20. உரை :—இப்பிறப்பு ஒழிய-இப்பிறப்பில் மாத்திரமன்று, இன்னும் எழெழுபிறப்பினும் - இனிமேலுண்டாம் எழுவகையாம் எழுபிறப்பிலும், மெய்ப்பு இறப்பற்ற - உண்மை ஒழியாத, நீதி - நியாயத்தைச் செலுத்தும், தருமனை—, வெல்லமாட்டோம் - ஜயிக்க நம்மால் முடியாது, ஒப்பற - ஒப்புமையில்லாத, பணைத்த - விசாலமான, தோளாய் - தோள்களையுடையவனே !, உபாயம் எங்கேனும் ஒன்றுல் - உபாயம் எங்கு பார்த்தாலும் ஒன்றுதானிருக்கிறபடியால், சப்பறச் சூதுகொண்டு சதிப்பதே கருமம் என்றான் - தப்பாமற் சூதினால் ஆலோசிப்பதே காரியம் என்று சொன்னான்.

குறிப்பு :—'மேலெழு' என்பதை மேழெழு, என்று திருத்திப் படிக்க. 'மெய்ப்பிறப்பு அற்ற' என்னுந்தொடர் சகுனிவாயினின்று

வர்ததனால் அஃது ஒரு அசத்தியாபாசம். முதல்நோக்கில் அத்தொடரின் பொருள் 'உண்மை பிறத்தலில்லாத' என்று தோன்றினும், சற்று ஊன்றிப்பார்க்கில் 'மெய்ப்பு + இறப்பு' என்றும், 'மெய்ப்பில் + தப்பு' என்று பிரிபடுகிறது. இதனால் சகுனியின் குணம் ஒருவாறு தெரிக்கப்பட்டது.

21. உரை :—தன்பெரு மாமன் சொல்ல - தன்றுடைய பெருமை வாய்ந்த மாமன் சொல்லவும், தரணிபன் தம்பி தானும்-துரியோதனன் தம்பியான துச்சாதனனும், வன்பெருஞ் சேனைகொண்டு - வலிமை பொருந்திய சேனையைக்கொண்டு, மலைவதற்கு அவர்கள் அஞ்சார் - போரிடுவதற்கு அப்பாண்டவர்கள் பயப்படார்கள், இன்பெரு நேயமிக்க - இனிமை மிகுந்த அன்பு செறிந்த, இவன் மொழிப்படியே - இச்சகுனியின் வார்த்தைப் பிரகாரமே, மாயப் புன் பெருஞ்சூது கொண்டு - மாயவித்தையாகிய அற்பத்தன்மை பொருந்திய மிக்க சூதினைத்துணையாகக் கொண்டு, பொருவதே புந்தியென்றான் - யுத்தஞ் செய்வதுதான் அறிவுடையார் செய்கை யென்று சொன்னான்.

குறிப்பு :—தரணிபன்: அரசன்; தரணி: பூமி. மலைதல்: எதிர்த்தல். இச்சகுனி நம்மிடத்து நேயம் பூண்டவனுதலான் அவன் மொழிக்கிணங்கலே நமது கடமை யென்று துச்சாதனன் கூறினான். புன்பெருஞ்சூது என்று மற்றவர்கள் கூறுவதைத்தான் இழிவு தோன்ற எடுத்தாண்டனனே யொழியத் தான் அங்ஙனங் கருதினானல்லன். நம்பாடபுத்தகத்திற் குறித்துள பாடல்களை ஈண்டுக் கொண்டிருக்கும் ஒழுங்கினையே கொண்டு படிக்க.

திருவிளையாடற் புராணம்.

மதுரையிற் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளின் அறுபத்து நான்கு திருவிளையாடலைக் கூறும் நூல். இதனை யியற்றியவர் **பரஞ்சோதி தேசிகர்**. இவரியற்றிய வேறு நூல் திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா. ஈண்டுநும் பாட புத்தகத்துள் எடுத்தாளப்பட்ட செய்யுட்கள் இந்திரன் பழிதீர்த்த படலத்தினின்றும் எடுக்கப்பட்டவை. சந்தர்ப்பத்தை நும் பாடபுத்தகத்தின் குறிப்புரையிற் காண்க.

1. உரை :—அகம் மலர்ந்து அருந்தவன் – அரிய தவத்தினையுடைய ததீசி மனம் மலர்ந்து, அமரர்க்கு - தேவருக்காக, அன்பு கூர் - அன்பு மிகுந்த, முகம் மலர்ந்து - முகமலர்ச்சியையடைந்து, இன்னுரை முகமன் - இனிய உபசார வார்த்தைகளை, கூறினீர்-சொன்னீர், மிக மெலிந்து எய்தினீர் - மிகவும் வருந்தி இங்கு வந்து சேர்ந்தீர், விளைந்தது யாது - என்ன சம்பவித்தது, அது தகமொழிந்திடல் என - அதனைத் தகுதியுடன் கூறுவீர் என்று சொல்ல, வலாரி சாற்றுவான் - இந்திரன் கூறத்தொடங்கினான்.

குறிப்பு :—முகமன்: உபசாரவார்த்தை. வலன் என்னும் அசுரனைக் கொன்றமையால் இந்திரனை வலாரி யென்று கூறினார்.

2. உரை :—அடிகள்-சுவாமியே, நீர்மறுத்தற் ஒன்று-தாங்கள் மறுக்காமற்றர வேண்டிய தொன்று உண்டு, அதனை வேண்டி - அப்பொருளை யிச்சித்து, இம்முடி கொள்வானவரொடும் - இந்தக் கிரீடங்களைத் தரித்த தேவர்களொடும், முந்தினேன் - இங்குவந்து சேர்ந்தேன் ; அது - அந்தப்பொருள், செடிகொள் - குற்றம் பொருந்திய, காரிருள் உடல் அவுணர்த் தேய்த்து - கரிய இருள் போன்ற உடலினையுடைய அரக்கர்களைக் கொன்று, எமர் குடியெலாம் -

எங்களுடைய குலத்தை யெல்லாம், புரப்பது ஓர் கொள்கைத்து ஆயது - காப்பாற்று மொப்பற்ற தன்மையினை யுடையது.

குறிப்பு :—'அமர்' என்பதனை எமர் என்று திருத்துக. செடி : குற்றம். அடிகள் : அண்மைவிளி.

3. உரை :—இனையது - இத்தன்மையது, யாதெனின் - எப்பொருள் என்றால், உன்யாக்கை யுள்ளது - தங்களுடைய சரீரத்திலேயே பொருந்தியது, என்று - , ஓதலும் - (இந்திரன்) கூறலும், யாவையும் உணர்ந்த மாதவன் - எல்லாவற்றையும் நன்கறிந்த தவசியாகிய ததிசிமுனிவர், ஆதவன்கண்ட-சூரியனைக் கண்ட, தாமரைப்போதின் - தாமரைப் புஷ்பத்தைப்போல், ஆனனம் மலர்ந்து - முகம்மலர்ந்து, இன்னன புகல்வது ஆயினன் - பின்வரும் இவைகளைச் சொல்லத் தொடங்கினன்.

குறிப்பு :—யாக்கை - தொழிற்பெயர் ; கை - தொழிற்பெயர் விகுதி. ஆதவன் : நன்றாகத் தபிப்பவன். இனி 'ஆனனப்போது' என்று கொண்டு முகமாகிய மலர் என்று பொருள் கூறலும் பொருந்தும். உவமையணி.

4. உரை :—வெளிப்படை.

குறிப்பு :—நமன் : யமன், மதிக்கும் : நினைக்கும், பெற்றிபோலாய் : தன்மை போன்றதாய், நமது எனப்படும் - நாமும் நமதென்று எண்ணும். பிணி : நோய்.

5. உரை :—விடம்பயில் - விஷம் பொருந்திய, எயிற்று - தந்தங்களையுடைய, அரவு உரியும்-பாம்பின்சட்டையும், விறுமை குடம்பையுந் தானெனும் - பக்ஷிகள் நுழைந்து வசிக்கும் கூண்டினையும் போன்றது என்று கூறத்தகுந்த, கொள்கைத்தே கொலாம் - தன்மையினையுடைய தாம், நடம்பயில் கூத்தரின் - நடனத்தையியற்றுகின்ற கூத்தர்களைப் போல், நடிக்கும் - நடித்திடுகின்ற, ஐவர்

வாழ் - ஐம்பொறிகளும் பொருந்திய, உடம்பையும் - இச்சரீரத்தையும், யான் என உரைக்கற்பாலதோ-நான் என்று கூறுதல் நேரிய தன்மைத்தோ ?

குறிப்பு :—பாம்பின் பற்கள் நான்கு என்பர்; காளி, காளாத்திரி, யமன், யமதூதி. "சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல, யாக்கை தமர்க் கொழிய நீத்து" என்பதை யீண்டறிக. உவமையணி. உடலை அரங்காகவும் ஐம்பொறிகளை நடர்களாகவும் கூறினார். "ஊனுடல மாடரங்கா வுட்புறமே பத்தியமா, மாநடர்களைம் பொறியா வாய்த்தவுயிர் - நானிலத்துச், சூத்திர தாரனைச் சோர்வினடஞ் செய்தபினர், நீத்தொருவு மென்றறிவிர் நீர்" என்று வேற்றிடத்துங் கூறியிருத்தல் காண்க.

6· உரை :—நடு தயா இலார் - நடுவு நிலைமையும் தயவும் இல்லாதவர்கள், தமை நலிய - தங்களை வருத்த, துன்பநோய் அடுத்த யாவரும் - துன்பநோயினை அடைந்த யாவர்களும், திருவடைய - துன்ப நீங்கிச் செல்வமடைய, யாக்கையைக் கொடுத்து - சரீரத்தினைக் கொடுத்து, அயா - ஐயா, அறம் புகழ் கொள்வனேயெனின் - அறத்தையும் புகழையும் அடைவேன் என்றால், எடுத்த யாக்கையின் பயனிதனின் யாவதே - நானெடுத்த சரீரத்தின் பிரயோசனம் இதனைக் காட்டிலும் வேறுமுளதோ ?

குறிப்பு :—நடுவு நிலைமையும் தயையும் சிறிது மில்லாத அரக்கர்கள் உங்களை வருத்த, அவ்விதம் வருந்திய நீங்கள் துன்பம் நீங்கி இன்பம் அடைய எனது சரீரத்தைக் கொடுத்து யான் அறத்தையும் புகழையும் கொள்வேனென்றால் இதனிலும் சரீரமெடுத்ததன்பயன் வேறு முளதோ என்றார் ததீசி. 'ஐயா' என்பதன் போலியாய் 'அ ஐ முதலிடை யொக்கும் ச ஞ ய முன்' என்றதனால் 'அயா' என்றாயிற்று.

சீகாளத்திப் புராணம்.

சீ - சிலந்தி. காளம் - பாம்பு, அத்தி - யானை. சிலந்தி பாம்பு யானை யாகிய இவைகள் பூசைசெய்த கடவுள் இருக்குந் தலம் சீகாளத்தி யெனக் காரணப் பெயர் பெற்றது. இந்நூலினை யியற்றியவர் கருணைப்பிரகாசர், சிவப்பிரகாசர், வேலையர் என்னும் மூவர். நமக்குப்பாடமாக இருக்கும் பாகம் வேலையர் எழுதியது. சுதாசந்தர்ப்பத்தைப் பாட புத்தகத்தின் குறிப்புரையிற் காண்க.

1. உரை :—மின்னின் மாய் உடம்பினை வளர்த்தல் வேண்டியே - மின்னலைப்போல் மாயுந்தன்மையையுடைய உடலை வளர்க்கும் பொருட்டு, அன்னை-தாயே, விழுங்கி - வாயினாலுட்கொண்டு, அண்ணாத்தல் செய்கலா - மீண்டும் மேல்நோக்காத, இன்னல் கூர்-துன்பம் மிகுந்த, நிரயம்புக்கு - நரகத்திலே புகுந்து, இளைக்கும் - இளைக்குமாறு, செய்யும் தீவினை தன்னை - கெட்டதொழில்களை, யாம் செய்திட - நாங்கள் செய்யுமாறு, நீசாற்றல் ஆகுமோ - நீ கூறுதல் பொருந்துமா ?

குறிப்பு :—தோன்றியவுடன் மாயுந்தன்மை பற்றி யுடலுக்கு மின்னை யுவமை கூறினார். அண்ணாத்தல் : தலை நிமிர்தல்.

2. உரை :—இப்பியில் பிறந்த முத்து - இப்பியினிடத்திற் றோன்றிய முத்து, இப்பிக்கு என் செயும் - இப்பிக்கு என்ன பயனைத் தரும்; அணிபவர் தம்மை மேவியே - அணியத் தகுந்தவர்களையே சேர்ந்து, மெய்ப்படும் - அவர்கள் சரீரத்தில் அழகை யுண்டாக்கும்; அப்பரிசு - அதேவிதமாக, உன் தனக்கு யாமும் ஆயினம் - உனக்கு நாங்களும் ஆனோம், துப்பு உறழ் சடிலம் மெய்ச்சோதி சேர்துமே - பவளத்தை யொத்த சடையினையுடைய உண்மையாகிய சோதியங் கடவுளாஞ் சிவபெருமானைச் சேர்வோம்.

குறிப்பு:—இஃது உவமையணி துப்பு: பவளம். பரிசு-தன்மை, விதம், மெய்ச்சோதி:எக்காலத்தும் ஒரு படித்தாய்த் திகழுஞ்சுடர் எனவே சிவபெருமானை யுணர்த்திற்று. இக்கூற்றினைத் 'துப்புறழ் சடிலம்' என்னுந் தொடரும் வலியுறுத்தல் காண்க.

3. உரை :—சந்திர மௌலியை - சந்திரனைக் கிரீடத்திலணிந்த சிவபெருமானை, அழைத்துத் தந்தருள் - அழைத்து எம்முன் விடும், அம் திரு அஞ்செழுத்து - அழகிய செல்வம் போன்ற பஞ்சாக்கரத்தினை, அறையும் எங்கள்வாய்-கூறுந்தொழிலினையுடையது எங்களுடைய வாய், நந்து அரும் - குறைதலில்லாத, வினையுடை-இருவினைகளையுடைய, நரரை உய்த்திடும் -மானுடரை யீடேற்றிடும், மந்திரம் - மந்திரங்களை, மறப்புற்றேனும் அறைகிலம்-மறந்துங் கூறமாட்டோம்.

குறிப்பு:—மௌலி: கிரீடம். தக்க முனிவர்சாபத்திற்குப் பயந்து தவஞ்செய்த சந்திரனை யபயமளித்துத் தலையிலணிந்தமையின் ஈசனைச் சந்திர மௌலி யென்றார். நந்தல்: அழிதல்.

4. உரை :—ஆயிரம் கலன் உடம்பு அனைத்தும் தாங்கினும் - மிகுந்த ஆபரணங்களைத் தேகமுழுவதும் அணிந்தாலும், மா இரும் பொறை அலால் - மிகுந்த பாரமேயொழிய வேறுபயன், வருவது உண்டு கொல் - வருமோ?, நாயகன் விழிமணி யொன்று-சிவபெருமானுடைய உருத்திராக்கமணி யொன்றினை, ஓர் நாள் - ஒரு தினம், உடன்மீ அணிந்திடில் - உடலின் மேலே தரித்தால், வினையாவும் வீயும் - நம்முடைய வினைகளெல்லாம் ஒழியுமே.

குறிப்பு :—நாயகன் விழிமணி: உரூத்திராக்கம், உருத்திரனுடைய அக்ஷம், அல்லது கண் என்று பொருள்படும். மீ : மேல்.

5. உரை :—புழுகு செம்சாந்து இவை புனைந்து - புனுகு செவ்விய சந்தனம் இவைகளைத் தரித்து, புன்மலம் ஒழுகும் ஒன்பான்

தொளை உடம்பை - இழிந்த மலங்கள் கசியும் நவத்துவாரங்களினை யுடைய சரீரத்தை, என்றும் நீ அழகு செய்திடின் - எக்காலத்திலும், அழகு செய்தாலும் மலம் அகலுமோ - அசுத்தம் நீங்குமோ?, (ஆனால்), பரன்முழுகு வெண்ணீறிடின் – பரமசிவன் தேகம் முழுவதும் பூசிய விபூதியினைத் தரித்தால், முற்றும் மாயுமே - மலம் முழுவதும் அழிந்தபோமே.

குறிப்பு :—ஒன்பான் - ஒன்பது. பரன் : மேலானவன்.

6. உரை :—இளம்பிறை தவழ்முடி இறை இருக்கும் - இளமைத் தன்மை வாய்ந்த பிறைச் சந்திரன் தவழும் முடியினையுடைய இறைவனாகிய சிவபெருமான் தங்கிய, எம் உளம்புகுமோ உணர்வு ஒழிக்கும் காமநோய் - எமதுள்ளத்தினில் அறிவை யகற்றும் காமநோயானது உட்புகுமோ ? (புகாது), துளங்கு ஒளிவளர் செழும் சுடர் இலங்குறும் - விளங்குகின்ற பிரகாசம் மிகுந்த செழுமை வாய்ந்த விளக்குப் பிரகாசிக்கின்ற, வளம் கெழுமனை புகவல்லதோ இருள் - வளப்பம் மிக்க வீட்டில் இருள் சேரும் வல்லமையுடையதோ (இல்லை).

குறிப்பு :—இளம்பிறை : பிறைச் சந்திரன் ; பிறை : பிறப்பது, ஈண்டு 'ஐ' வினைமுதற் பொருண்மையில் வந்தது, இருள், தனக்குப் பகையாய் விளக்கிருக்கு மிடத்துச் சேராதவாறு போல மன்மதனை யெரித்த சிவபெருமான் வீற்றிருக்கு மிடத்திற் காம மணுகாதென்று கூறினார். இஃது எடுத்துக் காட்டுவமையணி.

7. உரை :—தத்துவம் அகன்றது ஓர்தனி இடத்தினில் - முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நின்ற ஒப்பற்ற முத்தியுலகில், பைத்தலை யரவணிபதியை - படம் பொருந்திய தலையினையுடைய சர்ப்பத்தினைத் தரித்த பசுபதியாகிய சிவத்தை, புல்லிய - தழுவிய தனாலுண்டான, மெய்த்துறும் இன்பினேம்-உண்மையாகப் பொருந்திய இன்பத்தை யனுபவிக்கும் நாங்கள், பொய்த்து அழிமனித

ரைப் புணர்ந்து - பொய்யாக அழிந்துபோந் தன்மையரான மனித ரைக் கூடி, விடய இன்பினை - இவ்வுலகப் பொருள்களா லுண்டா கும் இன்பத்தினை, புணர்ந்து கொள்வமோ - நாங்கள் சேர்த்துக் கொள்வோமோ? (மாட்டோம்).

குறிப்பு :—தத்துவம் : இருபத்திநான்கு என்றும், முப்பத்தி ரண்டு என்றும்; பதினேழு என்றுங் கூறுவர். பை : படம். பதி : நாயகன் என்னும் பொருளும் பட்டு நயர்தரல் காண்க. இவ்வுலகச் சிற்றின்பத்தினை யொரு பொருட்டாகக் கருதி நிரதிசயானந்தத்தை யனுபவிக்கும் நாங்கள் ஏமாறேம் என்று கூறினர்.

8. உரை :—சங்கர தருமமே சார்ந்துளோம் - சிவ தருமத் தையே சேர்ந்து நிற்பவராகிய யாங்கள், இனி - இனிமேல், உம் குல தருமம் உற்று ஒழுகுவேம் கொலோ - உம்முடைய குல தரு மத்தை மேற்கொண்டு ஒழுகுவேமோ, வெம்களி யானையை விரும் பி ஏறுநர் - கோபங்கொண்ட மதத்தையுடைய யானையின்மேல் விருப்பத்துடன் ஏறுபவர்கள், இங்கு ஒரு கரம் இவர்ந்திட நினைப் பரோ - இவ்வுலகில் ஒரு கழுதையின் மேலேறக் கருதுவாரோ? (மாட்டார்.)

குறிப்பு :—உம்குல தருமம் - பரத்தையர் தருமம். ஏறுநர் : 'ந'கரம் பெயரிடை நிலை. இஃது எடுத்துக் காட்டுவமையணி.

9. உரை :—உன்னும் சுவை அமுதையும் - உண்ணுந்தன்மை யினை யுடைய மிக்க சுவைவாய்ந்த அமுதத்தையும், உயர்வு ஒழித் திடும் - உயர்வான நிலையினின்று மாற்றி யிழிந்த மலமாகிய தன் மையிலாக்கிவிடும், பிணம்படும் உடம்பினை - இறந்துபோம் தன் மையினதாகிய சரீரத்தினை, பேணி-விரும்பி, தீத்தொழில் இணங் குபு - தீச்செயல்களைச் செய்ய இணங்கி, திரிதரும் - இவ்வுலகில் அலையும், இழுதைமாந்தரை - பொய்யான மானுடரை, பணிந்தி

டின் - எவரேனும் பணிவார்களானால், (அவர்களை), மக்களில் பதடி என்பர் - (பெரியோர்) மானுடருட்பதரென்று கூறுவார்.

குறிப்பு :—'உண்ணும்' என்பது 'உனும்' என்றானது தொகுத்தல் விகாரத்தால். இழுதை : பொய். அமுதின் உயர்வான நிலையையொழித்தல் அதனை மலமாக மாற்றுதலேயாம்.

10. உரை:—திருந்து அறம் இளமையில் செயாமல் - திருத்தமாகக் கூறப்பட்ட தருமத்தினை இளமைப் பருவத்திலேயே செய்யாமல், ஆடவர்ப் பொருந்தின நிலையறு பொருளை ஈட்டினல்-மனிதர்களிடத்திற் பொருந்தி யிருக்கும் நிலையில்லாதபொருளைச்சேர்த்தால், குரங்கென உடலம் உட்கூனும் நாளினில் - குரங்கைப்போல் தேகம் உட்புறத்தில் வளையும் முதுமைப் பருவத்தில், புரிந்திடு செயல் எது - செய்யத்தகுந்த செயல் யாது?, எங்கட்கு புகறி - எங்களுக்குச் சொல்லுவாய்.

குறிப்பு :—இனி 'ஆடவர்ப் பொருந்தின பொருள்' என்பதற்கு ஆடவரைச் சேர்ந்து அதனாற் கிடைத்தபொருள் என்றும் உரை கூறலாம். உடலம்: அம் சாரியை. 'பிரிந்திடு' என்பதைப் 'புரிந்திடு' என்று மாற்றுக. புகறி: புகல் - பகுதி, இ - விகுதி, து-சாரியை.

11. உரை :—தாம் - (கணிகையர்), உள் உறவு இலாவெளி உறவு செய்து - அந்தரங்கமான அன்பின்றி பகிரங்கமான அன்பினைக்காட்டி, தெள் உறும் இளைஞர்தம் - அறிவடைந்த இளையவரது, திருவெலாங் கவர்ந்து - செல்வத்தையெலாங் கவர்ந்து, எள்ளுறு நரகினும் இடுதலால் - இழிவான நரகத்திலும் அவர்களைச் சேர்த்தலால், கணிகை மாதர் - தாசிகள், வெறுங்கள்ளரிற் கொடியவர் - (அங்ஙனம் நரகத்திலிடாது பணத்தை மாத்திரங் கவரும்) திருடரைக்காட்டிலும் கொடியராவர்.

குறிப்பு :—தெள்ளுறு மினைஞர்: பக்குவமான வயதடைந்தவா லிபர்கள். இளைஞர்: 'ஞ' பெயரிடைநிலை. கள்ளரில்: 'இதில்' ஐந்த னுருபு உறழ்பொருவு பொருள்.

12. உரை :—நடிக்குறும் - எமக்கு முன்னால் நடிக்கின்ற, உங்கள் பொய்ந்நாடகத்தினை - உங்களுடைய பொய்யாகிய நாட கத்தையும், வடிக்குறும் - எங்களை வசப்படுத்தும், மொழியினை - வார்த்தைகளையும், மறந்தி - நீ மறந்துவிடு; உங்கள் வெம் குடிக் குணம் மருவிலம் - உங்களுடைய குலத்தின் குணத்தை நாங்கள் அடையவில்லை; குடம்பை யொன்றில் வாழ் - ஒரே கூட்டில் வா ழும், கொடிக்குலம் - காக்கைக் கூட்டத்துடனே, பயிலுமோ கோ கிலங்கள் - குயில்கள் சேர்ந்து விளையாடுமோ? (விளையாடாது).

குறிப்பு :—பொய்ந்நாடகம்: 'எண்மூவெழுத்தீற்று' என்னுஞ் சூத்திரத்தால், 'குறில்வழிய' முன் மெலிமிக்கது. வடித்தல்: வசப் படுத்தல். குடம்பை: கூடு. கொடி: காகம். கோகிலம்: குயில்.

அருணாசல புராணம்.

---

13. உரை:—சாலி வாய்ந்த-நெல்வயல் மிகுந்த, மதுரையின் மன்னனே மதுரைக்கு அரசனே, (நாங்கள்), எய்த்த விஞ்சையர்- பொருந்திய வித்தியாதரர்கள், யாங்கவன் தன்பெயர் - அங்கு நிற் குமவன் பெயர், கார்நிசாலி—, என்பெயர் கலாதரன்—, ஆய்ந்த நண்பினராய் விளையாடினோம் - நன்றாக ஆராய்ந்த சிநேகத்தை யுடையவர்களாய் விளையாடினோம்.

குறிப்பு :—சாலி : நெல். மதுரை : மதுரமயமான தாலிஃது இப்பெயர்த்தாயிற்று. விஞ்சை : வித்தை யென்பதன் சிதைவு. மாலிகாஞ்சனம் முதலிய மாயவித்தையுடையாரதலின் அவர்கள்

விஞ்சையர் எனப்பட்டனர். காந்திசாலி : மிக்ககாந்தியை யுடைய வன்; கலாதரன் : கலைகளையுடையவன்.

2. உரை :—மாரவேளும் வசந்தனும் போலவே - மன்மதனும் வசந்தனும் போல, ஆரவே - அன்புடன், பிரியாதுறை நாளிலே - பிரியாதுறையும் நாட்களில், சேர - ஒருங்கு சேர, ஊழ்வினை சென்று தொடர்ந்திட - விதிப்பயன் தொடர்ந்து வந்துபற்ற, மேருமால் வரைச் சாரலின் மேவினேம் - பெருமை வாய்ந்த மேருமலையின் சாரலையடைந்தோம்.

குறிப்பு :—வேள் : வேட்கை (விருப்பம்) யை உண்டாக்குபவன். வசந்தன் : வசந்த காலத்திற்குரியவன். மால் : பெருமை.

3. உரை :—மாச்சரியம்மிக்க - கோபம்மிகுந்த, துருவாச முனிவாழும் - துர்வாசமுனிவர் வாழும், ஆச்சிரமம்மேல் அருகில்- ஆச்சிரமத்திற்கு மேற்குப் பக்கத்தில், அந்த முனிவோனே - அத் துர்வாசரே, நெஞ்சுருகி - மனங்கசிந்து, நீர் சொரிய - நீரைச் சொரிய, நின்றமரமெல்லாம் - வளர்ந்து நின்ற மரங்கள் யாவும், பூச்சொரியும் - புஷ்பங்களை யுதிர்க்கும், நந்தவன மீதினிடை புக்கேம் - நந்தவனத்திற் புகுந்தோம்.

குறிப்பு :—'நீர் சொரிய' என்பது எதுகைபற்றி விரித்தல் விகாரம் பெற்றது.

4. உரை :—புக்கவன் - உட்புகுந்தவனாகிய காந்தி சாலியும், இரும்சிறு புதற்களை மிதித்தான் - நெருங்கிய சிறுபுதர்களை மிதித்தான், மிக்கவினையேனும் அதின் மென்மலர் பறித்தேன் - மிகுந்த தீவினையை யுடையவனனயானும் அப்புதர்களில் மிருதுவாகிய மலர்களைப் பறித்தேன்; முனி - துர்வாசர், அக்கணம் உணர்ந்து - அந்தக்ஷணத்தில் இதனையறிந்து, அங்கி விழியாலே - அக்கினியைத் தனது விழிகள், கக்க - கக்கவும், ஒளிமிக்க சடை கட்டவிழ -

ஒளிமிகுந்த சடைகளைக் கட்டிய கட்டு அவிழவும், வந்தான் - எம்மெதிரில் வந்தான்.

5. உரை :—முத்தமணியாமென - முத்தென்று சொல்லும்படி, முகத்தினில் வியர்ப்ப - முகத்தில் வியர்வை துளிக்கவும், வித்துருமம் வைத்தனைய - பவளத்துண்டை வைத்தாற் போன்ற, மெல் இதழ்துடிப்ப - மிருதுவாகிய உதடுகள் துடிக்கவும், உத்தரியம் வீழ்வதை அடிக்கடி உயர்த்தி - மேல் உத்தரியங் கீழ்விழுவதை அடிக்கடி மேலே உயர்த்திச் சேர்த்துக் கொண்டு, சித்திர அழற்பொறிதெறிக்க - அழகிய அக்கினிப் பொறிகள் தெறிக்க, இவை சொன்னான் - பின்வருபவைகளைச் சொன்னார்.

குறிப்பு:—கோபங் கொண்டார் மெய்ப்பாட்டினை இப்பாடலிற் காண்க. வித்துருமம் : பவளம். ‘முடிப்ப’ என்பதைத் ‘துடிப்ப’ என்று மாற்றுக.

6. உரை :—செந் தபனர்தம்-செந்நிறம் வாய்ந்த சூரியர்களுடைய, கதிர் வராது - கிரணம் இந்நந்தவனத்தில் உட்புகாது, சிறுகாலும் தென்றற்காற்றும், நந்தும் அறுகாலும்-மலரை விரும்புகிற வண்டுகளும், ஒருகாலும் இதை நண்ணு - எக்காலத்திலும் இந்நந்தவனத்தைச் சேரா, முந்து இலை உதிர்ந்து புலராது - முதிர்ந்த இலைகள் விழுந்து வாடா, இந்த வனம் முடிவு எய்தாது - இந்த வனம் அழிவில்லாதது; ஈது ஒருவர் எய்த எளிதாமோ - இதனை ஒருவர் எளிதில் அடையலாமோ?

குறிப்பு :—தபனர்: துவாதசாதித்த ராதலின் பன்மையாக் கூறினார். சிறுகால் : தென்றல். அறுகால் ; ஆறு காலையுடைய வண்டினை யுணர்த்திற்று.

7. உரை :—சேவினுற்கு - இடபவாகனத்தினையுடைய பரமசிவனுக்கு, இனிய பூசை-இனிமை வாய்ந்த, பூசைக்குரிய, கனிமலர் செலுத்துங்காவில் -பழங்களையும் மலர்களையுந் தருஞ்சோலையில்,

பாவிகாள்-ஓ! பாவிகளே! புகுந்து—, என் கோபக்கனலிடைப் பஞ்சத்து ஆவீர்-என துகோபாக்கினியினிடையிலகப்பட்டபஞ்சுபோலானீர்கள்; மேவிய-பொருந்திய துரங்கம் ஆகு என்று- குதிரையாய்ப் போகக்கடவாய் என்று, இவற்கு - இவனுக்கு (காந்திசாலிக்கு) உரை - சாபவார்த்தைகளாகிய, விடத்தை - விஷத்தை, ஈந்தான்- கொடுத்தார்; நாண்மலர் பறித்த என்னை-அன்றலர்ந்த மலர்களைப் பறித்த என்னை (கலாதரனை), நாவியாய்ப் பிறப்பாய் என்றான்-புழுகுபூனையாய் உற்பவிப்பாய் என்று சொன்னார்.

குறிப்பு :—சே : இடம், கனிமலர் : உம்மைத்தொகை. துரங்கம். வேகமாச் செல்வது. 'இவர்குறை விடத்தை' என்பதை 'இவற்குரை விடத்தை' எனத்திருத்துக. உரைவிடம் : இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

8. உரை :—கோபமே தவமது ஆக பலித்திடும் - கோபமே தனக்குத் தவமாகப் பலிக்குந் தன்மையனான, கொடியோன் இட்ட - கொடிய துர்வாசர் கொடுத்த, சாபம் மேவரவே - சாபம் எங்களைப் பொருந்த, நாங்கள் இருவரும் - , தளர்ந்து - மனந்தளர்ந்து அம்முனிவரை நோக்கி), ஞான தீபமே - அறிவு விளக்கே, அருளே - கிருபையே, அன்பர் செல்வமே - அன்பர்க்குச் செல்வமே, எனச் சென்று ஏத்தி - என்று அவரிடத்திற் சென்று துதித்து, பாவம் மேலிடும் இச்சாபம் - பாபம் மிகுந்த இந்தச் சாபம், ஒழியு நாள் பகர்தி என்றேம் - நீங்கு நாள் எந்நாளோ கூறுவாய் என்று கேட்டோம்.

குறிப்பு :—'போதமே' என்பதைக் 'கோபமே' யென்றும், 'பாவமே' யென்பதைப் 'பாபமே' யென்றும் மாற்றுக. மேவரல் : பொருந்தல். துர்வாசர் பிறர்க்குச் சாபந் தந்தால் தமக்குத்தவம் வளருமென்றறிக.

9. உரை :—முனிவது தவிர்ந்து - கோபம் நீங்கி, சாபமுனிவனும்-சாபத்தைத் தருவதிலேயே சந்தோஷமடையும் துர்வாச முனியும், மொழிவான் - பின்வருமாறு கூறினான் ; (என்னவென்றால்), இந்தத் தனிவருஞ் சாபம் - இந்த ஒப்பற்ற சாபம், சோணுசலத்தினை வலஞ்செய்தாற்போம் - அருணாசலத்தைப் பிரதக்ஷிணஞ் செய்தால் நீங்கும், மனிதரும் சுரரும் போற்று மலை வலம்புரிகை தானும் - மானுடரும் தேவர்களும் போற்றி வணங்கும் அம்மலையினைப் பிரதக்ஷணஞ் செய்தலும், இனிமையாம் பாண்டி நாட்டின் இறைவனுன் எய்தும் என்றார்-இனிமை பொருந்திய பாண்டியதேசத்தின் மன்னனாலுண்டாகும் என்று கூறினார்.

குறிப்பு :—முனிவது : அது பகுதிப் பொருள் விகுதி. சோணுசலம் : சோண அசலம் ; சிவப்பு நிறமுடையமலை. புரிகை : தொழிற்பெயர் ' முனிமை' என்பதை ' இனிமை' யென்றுமாற்றுக.

தேம்பாவணி.

இந்த இனிய பாக்களாலாகிய ஆபரணம் என்று பொருள்பட்டு உவமையாகு பெயராய் நூலைக் குறிக்கும். இதனையியற்றியவர் வீரமாமுனிவ ரென்றும் தைரியநாத சுவாமிகள் என்றும் புனைவுப்பெயர் கொண்ட பெஸ்கி என்னும் உரோமன் காதலிக் பாதிரியார். இவர் நிகண்டுச் சொற்களை வழக்காறின்றி யிடர்ப்பட்டுப்பொருள் கொள்ளுமாறு பற்பல விடங்களிலமைத் திருப்பினும் இவருடைய செய்யுட்கள் விழுமிய வோசை பயப்பனவாய் விளங்கும்.

1. உரை :—உவர்க்கும் - உப்புத் தன்மைவாய்ந்த, தாழ்கடல் - ஆழ்ந்தகடலை, உடுத்து - அடையாகக்கொண்டு, அகல் விரிதலை

ஞாலம் - மிகவும் அகன்ற இடத்தினையுடைய பூமியானது, எவர்க்குந்தாவென - யாவருக்குந்தா வென்று சொல்லும்படி, எண்ணிலாக்கிழிபடச்சிறும் அவர்க்கும் - அளவற்ற திறல்கள் தன்னிடத்தே பொருந்த உழும் உழவர்களுக்கும், தான் உணவு அளித்தலே - பூமியானது உணவினைக் கொடுத்தல், நோய் செய்வார்க்கு - துன்பத்தைச் செய்பவர்களுக்கு, உதவி - உதவியினை, தவர்க்கும் தாவரும் தருமம் என்று - தவசிகளுக்கும் கிடைப்பதற்கரிய தருமமென்று நினைத்து, இயற்றுதல் போன்றே - செய்தலை யொத்தது.

குறிப்பு :—கடலைப் பூமிக்கு ஆடையாக வுருவகிப்பது வழக்கம். 'தாள்' என்பதைத் 'தாழ்' என்று. மாற்றுக இஃது உவமையணி. நோய் செய்பவர்க்கும் உதவி செய்தல் தவர்க்குந் தாவருந் தருமத்திற்கு நிகர். இது முதல் நான்குகவிகள் நாட்டுச் சிறப்பு.

2. உரை :—(அந்த நாட்டிலுள்ளவர்கள்), ஈதலோடு இசை இனிய வாழ்வுகள் - தருமத்தோடு பொருந்திய இன்மை பொருந்திய வாழ்வினை, ஆதலோடு - பொருந்தியதனால், அறன் அழிவில் ஆக்கினர் - தருமத்தை அழிவில்லாமற் செய்தவர்களாய், காதலோடு - அன்புடன், உடல் கடிய - உடற்பாரத்தை நீக்க, நாள்வர - இறுதிக்காலம் அணுகியபோழ்து, வீதல் ஒடுறும் - அழிவு இல்லாத, வீட்டில் வாழ்வரே - முத்தி யுலகில் வாழ்வார்கள்.

குறிப்பு :—அந்நாட்டிலுள்ளார் தருமத்தை மிகுதியுஞ் செய்தவராதலின் சிறிதும் மனக்கலக்கமின்றி இறந்து முத்தியுலக வின்பத்தை யடைவார்கள் என்பது இச்செய்யுளின் கருத்து. அறன் : அறம், மொழியிறுதிப் போலி. வீடு : சம்சார பாசபந்தத்தினின்றும் விடுபடுவது வீடு. இனிவீதலோடு - இறந்தபொழுது, உறும் வீட்டில் - பெரிய முத்தியுலகில், வாழ்வரே, என்று பொருளுரைத்தலுமொன்று. கடியநாள் : துன்பத்தைத் தருவதாகிய இறுதி நாள் என்றும் பொருள் கூறலாம்.

3. உரை :—மிடியில் - தரித்திரதசையில், ஆர் நயன் - இடைத்தநன்மையினை, விளைவில் - செல்வமுண்டான காலத்து, மாற்றுவான் - பிரதி யுபகாரமாகத் திருப்புமாறு, முயன்று - முயற்சி செய்து, அடியில் உயிர் ஆகும் அமைந்த நீர்கொள - வேரில் தமக்குப் பிராணுதாரமாகப் பொருந்திய நீரினைக் கொண்டதற்காக, கடியில் - சோலையில், ஆர்மரம் - மிகுந்த மரங்கள், முடியில் ஆர்களிப் பொறைபொரு - தமது கிளைகளில் மிகுந்த கனிகளின் பாரத்தைத் தாங்காதனவாய், வளைத்தல் காணும் - தமது தலைகளை வளைக்கும்.

குறிப்பு :—உயிர் அமைந்தநீர் : இக்காலத்தும் சிறு செடிகளுக்கு முதலில்விடும் நீரினை ' உயிர் நீர்' என்று கூறும் வழக்கம் பலவிடங்களிலும் உண்டு. சோலைகளிலுள்ள மரங்களெல்லாம் கனிப் பொறையால் வளைந்து நின்றன என்பது இச் செய்யுளின் கருத்து.

4. உரை :—நீள் பொழில் - நீண்ட சோலைகள், நிழலில் - தம்மகத்துள்ள நிழலினால், கண்சிறை படுத்தும் - பார்ப்பவர் கண்ணைக் கவரும் ; கோதையார் - மாலையை யணிந்த மகளிர்கள், குழலில்-தங்களுடைய கூந்தலில், பூச்சிறை படுத்தும் - மலர்களைச் செறிப்பார்கள் ; காந்தர் - ஆடவர்கள், கழலில் - வீரகண்டாமணியால் கால்சிறை படுத்தும் - காலிலே கட்டுவார்கள் ; வேலி - மருதவேலி, நீர் - நீரினை, விழலில் தான் சிறைப்படுத்தும் - விழற் புதர்களினால் மறித்துத் தடுக்கும்.

குறிப்பு :—நிழலில், கழலில் - வேற்றுமை மயக்கம். கழல் - வீரர்கள் காலிலணியும் மணி. விழல் - ஒருவகை நாணல்.

5. நீல்மணி - நீலரத்தினம், மரகதம் - பச்சை, நித்திலம் - முத்து, துகிர் - பவளம், வேன்மணி - வியக்கத் தகுந்த மணியாகிய வைரம் - , கோமேதகம் - , மிளிர் - பிரகாசிக்கின்ற பான்மணி - புஷ்பராகம், பருமு - பரிய, வைடூரியம் - , படர் - ஒளி விடுகின்ற

வான்மணி - மேலான இரத்தினமாகிய, மாணிக்கம் - பதுமராகம், (ஆகிய இவைகள்) வைக்குமாடமும் - பதிக்கப்பெற்ற வீடுகளும்.

குறிப்பு :—இதுமுதல் மூன்று கவிகள் நகரவருணனை. வேன் - வியன் என்பதன் திரிபு.

6. உரை :—அவ்வியம் ஒழித்து - பொறாமையை நீக்கி, அருள் அளிக்கும் - அருளைத்தரும், மாமறைத் திவ்விய மதுரநூல் - பெருமைவாய்ந்த வேதமாகிய தெய்வத் தன்மையுள்ள இனிய நூலினை, செப்புஞ் சாலையும் - உபதேசிக்கும் சாலையும், நவ்விய - நன்மை பொருந்திய, உணர்வுறும் எவையும் - அறிவு மிகுந்த எல்லாவற்றையும், நாடி - ஆராய்ந்து, உள்வெளவிய - மனதிற் கொண்ட, பலகலை வருக்கும் - பலநூல்களையும் போதிக்கும், சாலையும் - கலாசாலையும், (அவ்விடத்திற் பலவாம்).

குறிப்பு :—மதுரநூல் : ஈண்டு விவிலியநூலை யுணர்த்திற்று. முதற்கண் கூறிய சாலை வேதப் பிரசங்கசாலை யென்றும், பிற்கூறியது கலாசாலை யென்றும் புலப்படுதல் காண்க.

7. உரை :—வான் பொருள் - மேலான பொருள்களை, மீமுறை திரிந்திட - வாழ்வினை திருத்தத்தையடைய, விரும்பி - விருப்பத்துடன், ஆமுறை முகிலென - நீருண்டமேகம்போல், அளிக்கும் - கொடுக்கும். யாவரும் - எல்லோரும், உறையிடமெலாம் - தங்கும் இடமெல்லாம், தரும சாலையாய் - தருமம் செய்யும் இடமாய், ஏமுறை சிறந்தோர் சாலையில்லையே - பொன் மிகுதியும் பொருந்திய பொக்கிஷ சாலைகள் எங்கும் இல்லை.

குறிப்பு :—அம் என்பது ஆம் எனமுதல் நீண்டது. ஆம் - சலம். மீமுறை - பண்டைவினை - ஏமம் என்பது ஏம் என நின்றது கடைக்குறை.

8 உரை :—பாரில் - பூமியில், திளைத்து உளயாவையும் - பொருந்திய எல்லாப் பொருள்களையும், தேக்கி - அநுபவித்து, துக்

கிப் பார்த்தனன் - நன்ருக ஆராய்ந்தனன், தோன்றிய தீது எலாம் போக்கி - தீயவைகள் யாவற்றையும் போக்கி, பாய்பயன் பூத்து - பரவிய நன்மையினையே மேற்கொண்டு, கலந்த நீர் நீக்கி - பாலுடன் கலந்த நீரினை விடுத்து, பாலுணும் ஓதிமம் நேருவான் - பாலைப் பிரித்துண்ணும் அன்னத்தை யொத்தனன்.

குறிப்பு:—இக்கவி குருசையின் பாலமாட்சியைக் குறித்தது - பாய் - பரவி. தன்மையணியை யங்கமாகப் பெற்றுவந்த உவமையணி.

9. உரை:—அடை ஆரணம் நேர் அறம் நேர்வடிவான் - கடவுளைச்சேரும் வேதத்தை யொத்த தருமசொரூபியாவன்; கொடையாசையினுல் குளிர்கார் அனைவான் - கொடுக்குமாசை யுடையவனுதலாற் குளிர்ந்த மேகத்தை யொத்தவன்; உடைஞான அறிவால் ஒளிமான் - பொருந்திய ஞானமாகிய அறிவின் பிரகாசத்தை யுடையவனுதலாற் சூரியனை யொத்தவன்; அவருள் - அவர் தம்முள், கடையாவது இலால் - இறுதிக்காலத்தை யடையாதவன் ஆதலால், கடலேரினனுல் - கடலையொத்தவன்.

குறிப்பு:—மேகங்கள் கைம்மாறு கருதாமற் கொடுக்குமாதலின் கொடையாசையினு லிவனதனை யொத்தனன். ஒளிமான்: புகழுடையான் என்றும் பொருள் கொள்ளலாம். அவர்: குருசையின் கூட்டத்தார். புகழுடையன் ஆதலின் இறுதியற்றவன் எனப் பட்டனன்.

10. உரை:—தீயொக்கும் வனத்தெளியாத தவம்-நெருப்பை யொத்த வனமுமறியாத தவத்தையும், தாய் ஒக்கும் அருள் - தாயினையொத்த அருளினையும், தகை - பெருமை வாய்ந்த கடவுளை, வென்ற - சயித்த, தயை - தயையினையும், மீயொக்கும் அவர்க்கு உரி - மேல் உலகத்திற் பொருந்திய தேவர்க்குரிய, மேதை - அறிவினையும், உளன் - உடையவன்; நீ யொக்கும் நிலைக்கு உரி நீர்மை

யினுன் - நீ மனமொத்துப் பொருந்தும் நிலைமைக்குரிய தன்மையையுடையவன்.

குறிப்பு :—மிகக்கொடியவனம் என்பார் தீயொச்கும் வனம் என்றார். மி : மேல். நீர்மை : தன்மை. பலபடப்புனைவணி.

11. உரை :—விண் ஆரும் அவர்க்கும் - விண்ணுலகில் வசிப்பவராகிய தேவர்களுக்கும், வியப்புறவே - ஆச்சரியமுண்டாக, கண் ஆதி எலா பொறிகாக்குதலால் - (அவன்) கண் முதலிய ஐம்பொறிகளையும் காக்கின்றமையால், தென் ஆழியினும் - அழகிய கடலைக்காட்டிலும், திரைகொள் - அலைதலைக்கொண்ட, நசையற்று - ஆசையினை நீக்கி, எனை நீங்கும் எலாம் - என்னைத்தவிர்த்த எல்லாவற்றையும், எண்ணுது இவறுன் - ஆலோசியாமல் விரும்பான்.

குறிப்பு :—விண்ணாரும் அவர் : தேவர். எலாப்பொறி : முற்றும்மைத்தொகை. இனி 'தென்' என்பதற்கு 'ஒலிக்கும்' என்று பொருள் கூறுவாருமுளர். இவறல் : விரும்பல். நசை : ஆசை. மேற்கூறிய மூன்றும் திருமணப்படலத்துச் செய்யுட்கள்.

12. உரை :—திறம்மேவிய சிவன் நீயே - சக்தி பொருந்திய சிவன் நீயாதலின், அமுதே—, அறமே—, அருளே—, கருணுகரனே - கருணையே வடிவாக வுடையோனே, மறம்மேவினர் கைவசமாகுப - பாவிகள் கைவசமாகும் பொருட்டு, ஈங்கு - இவ்வுலகில், உறமேவிய காதலுளாயினையே - மிகப்பொருந்திய அன்பு மேலீட்டினுல் உற்பவித்தனையோ ?

குறிப்பு:—இதுமுதற் பத்துக்கவிகள் காட்சிப்படலத்துச் செய்யுட்களாம். கிட்டிசையினின்றும் போந்த அறிவாளர்கள் அருளுதனைக் கண்டு துதித்த செய்யுட்களாம். ஆகுப : வினையெச்சம். 'சிவனீயே' யென்பது 'சிவனியே' என்று சந்தநோக்கிக் குறுக்கல் விகாரப்பட்டது.

13. உரை:—சிந்தும் ஆகுலவேலை - அலைமோதி ஆரவாரிக்கின்ற கடலை, உடைத்த -(தனது பொங்குதலினால்) தோற்கடித்த, செயிர் தந்த - கோபம் பொருந்திய, ஆ - சீவன்களின், குலம்-கூட்டமாகிய, ஆசை - ஆசைகளை, கரை உந்து - கரையழித்து, தகைத்த-தடுத்த, குப - மன்னனே, ஆ - ஆகா, நீ உலகோர்மகனாப் வந்து - நீ உலகிலுள்ள மானுடர்க்குப் புதல்வனாயுதித்த, ஆகுல மாகடல் மூழ்குவதோ - துக்க சாகரத்தில் முழுகலாமோ? (இஃதென்ன வியப்பு?)

குறிப்பு:—கோபம் கடலினும் பொங்கும் என்பார் அந்த அதனைத் தோற்கடித்தென்றார். இனிக் 'குலவு ஆசை' எனப்பிரித்துப் 'பொருந்திய ஆசை' யென்று பொருள் கோடலுமொன்று. கு: பூமி குபன் : பூபன்.

14. உரை:—காண்தோய் மலரே - வாசனை பொருந்திய மலரையவனே, உயிர் செய் கனியே - உயிர்களைச் சிருட்டிக்கின்ற வேதத்தின் பழம் போன்றவனே, தேன் தோய் நயம் - இனிமைபொருந்திய நன்மையினை, நாம் உண - நாம் அநுபவிக்க, ஆம் செயிர் தீர் - பொருந்திய குற்றத்தை நீக்கிய, வான்தோய் அமுது ஒத்த - தேவலோகத்திற் பொருந்திய அமுதத்தை நிகர்த்த, மருந்திடவோ-மருந்தைத் தருவதற்கோ, ஊன் தோய் - மாமிசத்தினலாகிய, உடல் - சரீரத்தால் வரும், நோய் - நோயாகிய, உறு - பெரிய, கைப்பு அயிர்வாய் - கசப்பினை உண்பாய்.

குறிப்பு:—நன்மையாகிய வேதமென்னும் அமுதத்தை யாங்களுண்ணவோ நீ பிறவித் துன்பங்கட்கிடமாகிய உடலெடுத்தனை? என்பதிதன் கருத்து. மருந்து : அமுதம். நோய் : ஆத்தியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம். இனிக் 'கனியே' என்பதற்குக் 'கனி போல் இனிப்பவனே' என்றும் பொருள் கூறலாம்.

8

15. உரை :—கண்ணோர் மணியே - ஒப்பற்ற கண்மணியே, கனிவார் உயிரே - மனங்கனிந்து உருகுபவர்கட்கு உயிர் போன்றவனே, மண்ணோர்கள் - மானுடர்கள், வருந்திடில் வாழ்வுதர - வருத்தமடையுங்காற் செல்வத்தைக் கொடுக்க, விண்ணோர் தொழும் ஓர் தனிவேந்து நீ - தேவர்கள் துதிக்கும் ஒப்பற்றவோ ரிராஜனாகிய நீ, என - என்ன ஆச்சரியம், புண்ணோக உடல்துயர் பூத்திடவோ - மனத்திற் புண் பொருந்தி வருந்த உனது தேகம் துன்பத்தை அனுபவிக்கவோ?

குறிப்பு :—இப்பாட்டு துளகம். இங்ஙனம் அனுபவிக்கவோ 'பிதிர் வந்தனை' என்று வருஞ்செய்யுளொடு கூட்டி முடிக்க. கனிவார் : பக்தர்கள். இனிக் 'கனிவு ஆர் உயிரே' என்று பிரித்துக் கனிந்த மனமுடைய உயிர்க்குயிரானவனே என்றும் பொருளுரைக்கலாம்.

16. உரை :—பைநாகம் என - படத்தையுடைய சர்ப்பங்கள் என்று சொல்லும்படி, பல் மின்னல் எழீஇ - பல மின்னற்கொடிகளைப்பரப்பி, கைநாகமென-துதிக்கையையுடைய யானையென்று சொல்லும்படி, கடிது-சீக்கிரமாக, ஆர்த்து - ஆரவாரித்து, நிறை பெய் நாகம் என-மிகுதியாய் மழையைப் பொழிகிற மேகத்தைப் போல். பிதிர் வந்தனை - விண்ணுலகினின்றும் வந்தாய், கல்மைந் நாகமென - மைநாக பருவதம் போல, நாம்—, மனம் உருகோம்- மனம் கரையாதவராயினோம்.

குறிப்பு :—"நாகம் விண்குரங்கு புன்னை நற்றூசு மலைபாம்பியானை" என்னும் நிகண்டினால் நாகமென்னுஞ் சொற்குள்ள பல பொருள்களையு முணர்க. பிதிர்: பிதிர்லோகம்; ஈண்டு தேவலோகம் என்னும் பொருளில் வந்தது. மைநாகம் : இமயத்தின் புதல்வன். இந்திரன் பர்வதங்களின் சிறகுகளை யறுத்த வருங்கால் இம்மலை தப்பியோடிச் சமுத்திரத்தில் வீழ்ந்து கிடப்பதாகக் கூறுப.

ஆண்டு அம்மலை யச் சிறைபற்றி யழுவதாகக் கவி வருணித்துளார் போலும். மனம் நாம் உருகோம் எனக்கொண்டு, இதனைக் கண்டும் எங்கள் கல்லாகிய மனம் உருகவில்லை என்க.

17. உரை:—அறவீடும் இலார்-தருமமாகிய வீட்டினைப் பெறு தவராய், அறிவீடும் இலார் - ஞானவீட்டினை இல்லாதவராய், திற வீடும் இலார் - சக்தியாகிய வீடும் பெறுதவராய், இடைசேர்பய னல் - இருக்கும் மனிதர்களுடைய கூட்டத்தினிடைச் சேருஞ் சேர்க்கையின் றெழிலால், (நீ), உறவீடுமிலா - உறவினராது உதவியில் லாமலும், உறைவீடு மிலா - குடியிருக்க வீடுமில்லாமலும், புறவீடும் இலா - புறத்திலும் உதவி பெறுதவனுகவும், பிணி பூத்து அழு வாய் - துன்பமடைந்து வருந்துவாய்.

குறிப்பு :—ஈடு: உதவி. இவ்விதமாகத் தீய மனிதருடைய கூட் டத்தனிடைத் தோன்றி துன்பமுறுகின்றனையே இதுவோ நே ரிது?

18. உரை :—புகை ஆடிய காடுடன் -சுடுகாட்டினுடன், இப் புவியே - இந்தப் பூமியானது, பகையாடியது அல்லது - பகைகொ ண்டதல்லாமல், பண்புளதோ - சிநேகத்தன்மை பூண்டிருக்கின்ற தோ (இல்லை); (உலகத்தார்) நாளியெனக் கஞறி - நாய் என்று சொ ல்லும்படி குலைத்து, நகையாடுவர்-பழிப்பதற்காகச் சிரிப்பவராய், மிகையாடுவர் - அதிக்கிரமித்த பாவங்களைச் செய்வார்கள், நின்வி ழைவு ஆற்றுவரே - உன்னுடைய ஆசைக்குப் பாத்திரமாவரோ?

குறிப்பு :—நாளி : ஞாளி, நாய். மிகை : அதிகம். விழைவு : ஆசை.

19. உரை :—மணியார் அணியே - நவமணிகள் பதித்த ஆப ரணம் போன்றவனே!, மறையின் திருவே - வேதத்துட் கூறப்ப டும் செல்வமே!, பிணி ஆசையில் எய்தினையோ - நோயினை அனுப

விக்க வேண்டுமென்ற ஆசையினால் இவ்வுலகில் வந்தனையோ?; (இவ்வுலகத்தார்) பிணிபே-வியாதியினையே, அனி ஆசையின்மேல்-பொருந்திய திசைகளுக்கு மேலும் வளரும்படி, நிறை ஆக்குவரே-நிறைப்பார்களே!, கவியா அருள்-வரையறுத்தறியாத கருணை பூண்ட, மாசை - பசுவினை யொத்தவனே, கருத்திதுவோ - இதுவோ நின் கருத்து?

குறிப்பு :—ஆசை : திக்கு. 'மறையன்றிருவே' என்பதை 'மறையின்றிருவே' யென்று மாற்றுக. பசுவினைபொத்த யாவர்க்கும் பயன்படுவதனாலும் அன்னம் பயனைப்பெற்ற மானுடர்கள் அதனைக் கொல்லுதல்போல் இவனையும் வருத்துவார் என்பதும் குறிப்பாக வெளிப்படுமாறு 'மாசை' என்று அண்மைவிளியாகக் கூறினர்.

20. உரை :—பரிவு அற்றிடும் ஒன்று இலதாம் -(கன்றினிடத்து) ஆசையில்லாத தன்மையில்லாத, அருமாசை - கிடைப்பதற்கரிய பசுவினை நிகர்த்தவனே!, நெடு மூவுலகு ஆக்கிய நீ வெளினும்-நீண்ட மூன்றுலகங்களையுஞ் சிருஷ்டித்தவன் நீயாக விருந்தும், சுடுகும் அழல் ஆற்றிடவும் - சுடுந்தன்மையினையுடைய கடுங்கோடை வெயிலைப் பொறுக்கவும், சுழலப்படு விண்மழை தாங்கிடவும் -சுற்றிச்சுற்றி ஆகாயத்தினின்று அடிக்கும் மழையினைப் பொறுக்கவும், இது - நேரிட்ட இது என்ன ஆச்சரியம்!

குறிப்பு :—மூவுலகம் : சொர்க்கம், மத்தியம், பாதளம் என்ப. பரிவு: ஆசை. கன்றினிடத்துப் பசுவிற்குண்டாகும் ஆசைபோல், இவ்வுலகிலுள்ள மனிதர்களிடத்து ஆசை கொண்டுவந்தனனியன் என்பதிற்றடியின் கருத்து. மூவுலகிற்கு மிறைபாகிய நீ வெயிலாலும் மழையாலும் வருந்த நேரிட்டதே என்று இரங்கினர்கள்.

21. உரை :—பொய்யா விதியோய் - பொய்க்காத விதியினுக் கிறையே, பொருவா அருளோய் - நிகரற்ற கிருபையுடையவனே,

கொய்யாவலியே - அழிக்கமுடியாத வலிமை பெற்றவனே, குறை யாத்திருவே - குறைவுபடாத செல்வமே, உலகு உய்யா என்னில் உலகிலுள்ளார் உன் வழிப்பட்டு நன்னெறியடைந்து பிழைக்கமாட்டார்களென்றால், உனக்கு இழிவோ - இகழ்ச்சியுனக்குண்டாகுமோ? ஐய்யா - ஐயனே, பயனிற்கு - இம்மனிதர்கள் பயனடைய, இதன் ஆகுவதோ - இதன் கண் உற்பவித்தலோ?

பட்டினத்துப்பிள்ளையார் பாடல்.

நூலாசிரியர் சரித்திரமுதலியவற்றை நம்பாட புத்தகத்துக் குறிப்புரையிற் காண்க.

1. உரை :—அழுதால் பயன் என்ன - (இடுக்கண் வந்துழி) அழுதாலுண்டாம் பயன் யாது, நொந்தால் பயன் என்ன - வருந்தவதாலுண்டாம் பயன் யாது, அவது இல்லை. (நமக்கு) உண்டாம் பயன் யாதுமில்லை, நின்னை தொழுதால் பயன் என்ன - உன்னைப் பிறர் தொழுதலாலுண்டாம் பயன் யாது, ஒருவர் - ஒருவர், சுட உரைத்த - நின்மனம் வருந்தும்படி நிந்தித்த, பழுதால் பயன் என்ன - நிந்தையாலுண்டாம் பயன் யாது, நன்மையும் தீமையும்- (நமக்குண்டாம்) நன்மை தீமைகள், பங்கயத்தோன் - பிரமன், எழுதாப்படி வருமோ - எழுதாவகை யுண்டாமோ; (உண்டாகாவாதலின்) என் அறை நெஞ்சே - அறியாமை மிகுந்துள்ள என் மனமே, சலியாதிரு - நடுங்காமலிரு.

குறிப்பு :—மரணமுதலிய இடுக்கண் வந்துழிமேற் சொல்லிய அழுதல் முதலிய காரியங்கள் நிகழ்கின்றவாகலின் அவற்றை யெடுத்துக்கூறி, அவற்றாற் பயன் யாதுமிலது எனக்கூறுகின்றனர். இங்குத் "தொழுதால்" என்பது பிறர் நம்மைப் புகழ்தலைக் குறிக்

இன்றது. பங்கயத்தோன் - பிரமன்; பங்கயம் - தாமரை; தாமரைமலரில் தோன்றிய பிரமனுக்குப் பங்கயத்தோன் எனப்பெயர் வழங்குதல் காண்க. பங்கயம், கோகனகம், நளினம், கமலம் முதலியன ஒரு பொருட் பன்மொழி. பங்கயம் - சேற்றில் உற்பவித்தது என்பது தாதுப்பொருள், இது வடமொழித் தற்பவம். சிருட்டிக் கடவுள் பிரமனாதலின் ஆத்மாக்கள் செய்யும் வினைக்குத்தக்க சென்ன காலத்தில் விதித்த விதியைப் பங்கயத்தோன் எழுதல் என்றார். அதற்கு மாறாகப்பயன் உண்டாகாதென்பது கொள்கை.

2. உரை:—நீற்றை புனைந்து என்ன - திருநீற்றை (உடன் முழுதும்) பூசுதலால் யாதுபயன், நீர் ஆடபோய் என்ன - புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கப்போவதனால் யாது பயன், நீ மனமே - மனமே நீ, மாற்றி பிறக்க - இவ்வூனுடலை மாற்றி ஞானவுடலை யெடுக்க, வகை அறிந்தாய் இல்லை - நல்ல மார்க்கத்தினை அறிந்து கொண்டாயல்லை, மாமறைநூல் - பெரிய வேதமுதலிய நூல்களில், ஏற்றிக்கிடக்கும் - எடுத்துக் கூறப்பட்டுள்ள, எழுகோடி மந்திரம் - எழுகோடி மந்திரங்களைச் செபித்தும், என்ன கண்டாய் - நீ அடைந்த பயன் யாது, ஆற்றில் கிடந்தும் - பெரிய ஆற்றிலே தங்கியும், துறையறியாமல் - ஏறுந்துறையறியாது, அலைகின்றை - அலைகின்றாய்.

குறிப்பு:—நம் உள்ளிடமாகிய மனம் தூய்மை பெறாது நிற்க, நீற்றைப்புனைதல், நீராடப்போதல் முதலிய வெளிவேடங்களால் நாம் யாதும் பயனடையோம் என்பது குறிக்க "ஆற்றிற்கிடந்தும் துறையறியாமலலைகின்றையே" எனக்கூறுகின்றார். இதனால் மனம் தூய்மையைப் பெறுதலே சிறப்புடைத்தென்பது பெற்றாம். மறை - வேதம், சில சாதியார்க்கும் பெண்பாலார்க்கும் மறைக்கப்படுவதனாலும், மறைந்த பொருளுடைமையாலும் வந்த காரணப் பெயர்; மறு - பகுதி, ஐ - செயப்படுபொருள் விகுதியும், மறை -

பகுதி, கருத்தாப்பொருள் விகுதி புணர்ந்து கெட்டதுமாம். வேதங்களை ஓதுதல் ஓதுவித்தல் என்றும் இருதொழிற்கு முரியவர் அந்தணரேயாதலின் மறையோரென அந்தணர்க்கே ஒரு காரணப் பெயராமாறு காண்க. எழுகோடி மந்திரம் என்றது பல மந்திரங்கள் என்றபடி. அலைகின்றை - ஐயீற்று முன்னிலை யொருமை வினைமுற்று. ஏ - அசை.

3. உரை :—ஓங்காரமாய் நின்ற-பிரணவமாய் நின்ற, வத்துவிலே - ஒரு பொருளிலே, ஒருவித்து வந்து - ஆன்மாவாகிய விதை வந்து, பாங்காக - செவ்வனே, முளைத்த பயன் அறிந்தால்-தோன்றிய பொருளையுணர்ந்தால், பதினாலு உலகும் - பதினான்கு உலகங்களிலும், நீங்காமல் நீங்கி - நீங்காமலிருக்க நீங்கி, நிறையா நிறைந்து - நிறையாமலிருக்க நிறைந்தும், நிறை உருவாய் - எங்கும் நிறைந்த உருவாகி, ஆங்காரமானவர்க்கு - அகங்காரத்தை மேற்கொண்டிருப்பார்க்கு, எட்டாக்கனி - எட்டப்படாத பரம்பொருளாகிய கனியானது, வந்து அமர்ந்திடும் - (அவரைத்தேடி) வந்து அவரிடத்தில் தங்கும்.

குறிப்பு :—பிரணவத்தின் பொருளை உள்ளபடி யறிந்தவர்களுக்கே சர்வ பரிபூரணனான பரமசிவன் அருள்செய்வான் என்பது கருத்து. அஞ்ஞானிகட்குத் தமக்குத்தோன்றும் பொருள்களிலெல்லாம் பரமசிவன் காணப்படாது நீங்கியிருப்பவனைப் போலவும், நிறைந்திராதவனைப் போலவுங் காணப்பட்டாலும், அஞ்ஞானவிருளை நீக்கி மெஞ்ஞானத்தையே மேற்கொண்டொழுகும் ஞானிகட்கு எப்பொருள்களிலும் நீங்காதவனாயும் நிறைந்தவனாயும் தோன்று' றபடியாற் பரமசிவனை "நீங்காமனீங்கி நிறையா நிறைந்து......" எனக்கூறுகின்றனர். "நிறையுருவாய்" என்பதனாற் பரமசிவன் சர்வ பரிபூரணன் என்பது பெற்றாம். இப்பாட்டின் மூன்றுமடியிலுள்ள கருத்தையே "ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்

குயிராயாடும் கருணைப் பரஞ்சோதி" - என்பதுங் கொண்டுணர்து காண்க. ஆங்காரம் - அகங்காரம் என்பதன் மரூஉ. அகங்காரத்தைக் கூறினமையால் மமகாரமும் பெற்றும். இவை முறையே அகப்பற்று புறப்பற்று ஆகிய இரண்டையுமுணர்த்தும். பரமசிவனைக் கனியென்றது உருவகம்.

4. உரை:—அஞ்சக்கரமெனும் - பஞ்சாட்சரமென்று சொல்லப்படும், கோடாலி கொண்டு - கோடாலியினால், இந்த ஐம்புலனும் - இந்த ஐம்புலன்களுந் தோன்றுகிற, வஞ்சம் புலம் கட்டை-வஞ்சகத்தையுடைய ஐம்பொறிகளாகிய கட்டையை, வேர் அற வெட்டி - வேரோடு களைந்து, வளங்கள் செய்து - (அந்நிலத்தில்) வளப்பத்தை யுண்டாக்கி, விஞ்சதிருத்தி - நன்றாகத் திருத்தஞ் செய்து, சதாசிவம் என்கின்ற வித்தை இட்டு - சதாசிவமென்று சொல்லப்படுகின்ற விதையை நட்டு, புஞ்சம்களை-கூட்டமாகிய களைகளை, பறித்தேன் - நீக்கிவிட்டேனாகி, சிவபோகத்தை - சிவபோகமென்னும் பயிரை, வளர்த்தேன் - வளர்த்தேன்.

குறிப்பு:—அக்கரம் - அக்ஷரம், 'நமச்சிவாய' என்பதே பஞ்சாட்சரமாம். ஐம்புலனும் வஞ்சப்புலக்கட்டையை வேரறவெட்டு தலாவது கண் காது மூக்கு வாய் தேகம் முதலிய ஐம்பொறிகளாலுண்டாம் ஒளி, ஓசை, நாற்றம், சுவை, ஊறுமுதலிய நுகர்ச்சியை முற்றும் அடக்கியாளுதல். புஞ்சக்களையாவது - கடவுளை யடைதற்கண் நேரிடும் இடையூறுகள். கோடாலி - குடாரம் என்னும் வடமொழியின் திரிபு. இப்பாட்டு உருவகம்.

5. உரை:—விச்சகமாய் - அதிசமாய், காதிவிளையாடி-விளையாடிக்கொண்டு, இருகையினி வர்தாலும் - இரண்டு கைகளை வீசிவரினும், தாதிமனம் நீர் குடத்தே தான்-தாதியின் மனமானது நீர் குடத்தின் கண்ணதேயாம், (அதுபோல) எத்தொழில் செய்தாலும் - யாது காரியத்தைப் புரியினும், ஏது அவத்தைப்பட்டா

லும் - எந்த அவஸ்தையை யநுபவித்தாலும், முக்தர் மனம-முக்தர்களுடைய மனமானது, மோனத்தே இருக்கும் - மௌனநிலையிலேயேயிருக்கும்.

குறிப்பு :—அவத்தை - வடமொழித்தற்பவம், முத்தர் - முக்தியையடைய விரும்புவோர், ஆகவே அகப்புறப்பற்றுக்களை யொழித்துப் பேரின்பத்தையே நாடுவோராகிய ஞானிகள். இப்பாட்டு எடுத்துக்காட்டுவமையணியின் பாற்படும்.

6. உரை :—அடியார் உறவும் - சிவனடியார் நன்பும், அரன் பூசை நேசமும் - சிவபூசையில் விருப்பமும், அன்பும் அன்றி-பக்தியுமல்லாமல், படியினில் - பூமியின்பேரில், வேறுபயன் உளதோ - பயனதருஞ் செயல் வேறுண்டோ, பங்கயன் வகுத்த - பிரமன் சிருட்டித்த, குடியான சுற்றமும் - ஒரு குடியிற் பிறந்த சுற்றத்தாரும், தாரமும் - மனைவியும், வாழ்வும் வாழ்க்கையும், குயக்கலங்கள் - குயவனுற் செய்யப்பட்ட மட்பாத்திரங்கள், தடியால் அடி உண்ட அது - தடியுனல் அடிபட்ட விதத்தை, ஒக்கும் என்று - ஒத்திருக்குமென்று கருதி, இனம் சார்ந்திலரே - இன்னமும் அறவைச் சார்ந்தாரில்லையே.

குறிப்பு :—இத்தேகம் எடுத்ததற்குப் பயன் முக்திபெறவேண்டியதே யாகையால், அம்முக்திக்குச் சாதனமாகிய அடியாருறவு, அரன்பூசை முதலியவற்றைச் செய்து, நிலையில்லாப் பொருள்களை நீக்கவே சால்புடைத்து என்பதேயாம். இனம் - என்பது இன்னம் என்பதன் மரூஉ. இனஞ்சார்ந்திலார் - என்பதற்கு அடியார் கூட்டத்தைக் கூடுதல் இல்லார் என்னலுமாம். முதலடிக்கண்ணுள்ள உம்மைகள் எண்ணும்மைகளாம். படி - பூமி.

7. உரை :—நெஞ்சே - மனமே, இருப்பது பொய் - உலகில் வாழ்வது பொய், போவதுமெய் - இறந்துபோவது மெய், என்று

எண்ணி - என்று ஆலோசித்து, ஒருத்தருக்கும் - ஒருவர்க்காயினும், நிக்கினை - யாதொரு கெடுநினைவையும், உன்னாதே - நினையாதே; பருத்த தொந்தி - பெருத்த வயிறுளது, நம்மது என்று நாம் இருப்ப - நம்முடையதென்று நாமிருக்க, நாய் நரிகள் பேய் கழுகு—, தம்மது என்று தாம் இருக்கும் - தம்முடையதென்று தாமிருக்கும்.

குறிப்பு :—முதலிரடிகளில் தேகத்தின் நிலையில்லாமையைக் கூறியிருக்கின்றனர். பின்னிரடிகளில் மாமிசப்பொதியாகிய இந்த உடம்பின் இழிவை வெளிப்படையாகக் கூறியிருக்கின்றனர். உன்னல் - நினைத்தல் ; நிக்கினை - இன் - சாரியை. இருப்ப-செய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். உன்னாது-உன் + ன் + ஆ + து - ஆ - எதிர்மறை யிடைநிலை, ன் - சந்தி, து - வினையெச்சவிகுதி.

8. உரை :—கல்லாப்பிழையும் - நூல்களைக் கல்லாத குற்றமும், கருதாப்பிழையும் - நின்னை நினையாத குற்றமும், கசிந்துருகி நில்லாப்பிழையும் - மனங்குழைந்துருகி நின்னெதிரில் நில்லாத குற்றமும், நினையாப்பிழையும் - (நின்னை) மனதிற் சிந்தியாத குற்றமும், நின்னஞ்செழுத்தை - நினது பஞ்சாக்ஷரத்தை, சொல்லாப் பிழையும் - சொல்லாத குற்றமும், துதியாப்பிழையும்-(நின்னைத்) தோத்திரம் பண்ணாத குற்றமும், தொழாப்பிழையும் - (நின்னை) வணங்காத குற்றமும், எல்லாப்பிழையும் பொறுத் தருள்வாய் - எல்லாக் குற்றங்களையும் பொறுத்தருள் செய்வாயாக, கச்சி யேகம்பனே—.

குறிப்பு :—கல்லா, கருதா, நில்லா - முதலியன ஆகாரவீற்று எதிர்மறைப் பெயரெச்சங்கள். இச்செய்யுளிலுள்ள உம்மைகள் எண்ணும்மைகளாம். அஞ்செழுத் தென்பது பஞ்சாட்சரத்தைக் குறிக்கும். மனிதர்க் குண்டாங் குற்றங்களுள் முக்கியமான சில வற்றை இச்செய்யுளி லெடுத்துக் கூறியுளர். இத்தகைய குற்றங்களைக் களைந்து சன்மார்க்கத்தையே தேடவேண்டு மென்பது இவ்வாசிரியது கருத்தாம்.

9. உரை :—ஓயாமல் பொய் சொல்வர்-இடையறாது பொய்க் கூற்று மொழிவார், நல்லோரை நிந்திப்பர்-நற்குண முடையோரை யிகழ்வார், உற்றுப்பெற்றதாயாரை வைவர் - கருப்பநோயால் வருந்தி ஈன்ற தாயாரை எள்ளுவார், ஆயிரம் சதிசெய்வர் - ஆயிரம் வஞ்சகச் செய்கைகளைச் செய்வார், சாத்திரங்கள் ஆயார் - சாத்திர வாராய்ச்சி செய்யார், பிறர்க்கு உபகாரம் செய்யார் - பிறர்க்கு உபகாரமாக நற்செய்கைகளைச் செய்யார், தமை அண்டினார்க்கு ஒன்று ஈயார் - தம்மை யடைந்தார்க்கு ஒரு பொருளுங் கொடார், (இத்தகையோர்), இருந்தென்ன - (உலகில்) வாழ்தலால் உலகத்துள்ளார்க்குண்டாம் பயன்யாது? (அன்றி) போயென்ன - இறத்தலால் அவர்க்கு யாது நஷ்டம், கச்சியேகம்பனே—.

குறிப்பு :—இச்செய்யுளிற் பொய் சொல்வார் முதலியோரது இழிவைக்கூறுவான் றொடங்கி, இத்தகையோர் இவ்வுலகத்தில் இருத்தலுமொன்றே இறத்தலு மொன்றே யென மேன்மேலு யர்ச்சியாக் கூறுகின்றனர். சதி - வஞ்சனை, ஆயிரம்-என்பது மிகுதியைக் குறிக்க வந்ததொருசொல், ஈதல் - உயர்ந்தோன் இழிந்தோனுக்குக்கொடுக்குந் தொழிலையுணர்த்து மோருரை. "ஈதா கொடுவெனு மூன்று முறையே இழிந்தோ னொப்போன் மிக்கோ னிரப்புரை—" என்ற நன்னூற் சூத்திரத்தா லுணர்க. ஆயார் - ஆய் + ஆ + ஆர் - விகுதி முதல் ஆகாரம் புணர்ந்து கெட்டது விகாரம். ஒன்று + ஈயார்—ஒன்றியார் - "உயிர் வரினுக்குறண்மெய் விட்டோடும்-யவ்வரினிய்யாம் முற்று மற்றொரோ வழி"—என்பதனுன் நிலைமொழியீற்று உகரங் கெட்டு, "உடன்மேலுயிர் வந்தொன்றுவ தியல்பே" என்பதனுல் ஒன்றியார், எனப்புணர்ந்தன.

10. உரை :—ஊற்றைச் சரீரத்தை - மாமிசத்தாலாகிய இவ் வசுத்த வுடம்பை, ஆபாசக்கொட்டிலை - இழிவாகிய பொருள்களைப் பொதிந்து வைத்திருக்கும் கொட்டகையை ஊன்பொதிந்த மாமி

சத்தாலாய, பீற்றல் துருத்தியை - பலதொளைகளையுடைய துருத்தியை, சோறு இடும் தோல்பையை - சோற்றை யுட்கொள்ளும் தோலாலாகிய பையை, பேசரிய - சொல்லுதற்கரிய, காற்றில் பொதிந்த - காற்றை யடைத்துவைத்துள்ள, நிலை அற்ற பாண்டத்தை - நிலையில்லா மட்கலத்தை, காதல் செய்து - விரும்பி, எற்றுத்திரிந்து விட்டேன் - (அதைச்) சுமந்து வாளைக் கழித்து விட்டேன், இறைவா - தலைவனே, கச்சிஏகம்பனே—;

குறிப்பு :—இச்செய்யுளான் யாக்கையின் நிலையில்லாத் தன்மையையும், அதன் இழிவையும் மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றனர். இறைவன் - அரசன், கடவுள் :—பல பொருளொருசொல். முன்பொருளைக் குறிப்புழி இறைவாங்குவோ னெனவும், பின்னர்க் கூறியிருப்பதைக் குறிப்புழி எவ்விடத்தும் உறைபவன் எனவுமாம். கொட்டில் - கொட்டகை - ஒதுக்கிடம். ஞானியர் நிலையற்ற இச்சரீரத்தைத் தோற்பையெனக் கூறுதல் மரபு.

11. உரை :—சொல்லால் வரும் குற்றம் - தியசொற்களைச் சொல்லுதலா லுண்டாகுங் குற்றமும், சிந்தனையால் வரும் தோடம் - நினைப்பினாலுண்டாகுந் தோஷமும், செய்த பொல்லாத தீவினை - செய்த பொல்லாத தீச்செயல்களும், பார்வையின் பாவங்கள் - தீக்காட்சியைக் கண்ணுறுவதாலுண்டாம் பாவங்களும், புண்ணிய நூலில்லாத கேள்வியை கேட்டிடும் தீங்குகள் - புண்ணிய நூலல்லாதவையாகிய கேள்விகளைக் கேட்பதனாலுண்டாம் பாவங்களும், ஆயவும் எல்லாப்பிழையும் - ஆகிய எல்லாக் குற்றங்களையும், பொறுத்து அருள்வாய்-பொறுத்தருள்வாயாக, கச்சிஏகம்பனே.

குறிப்பு :—மனிதர்க்குண்டாம் பல்வகைத் தோஷங்களையும் நீக்கவேண்டுமெனக் கருதி, அவற்றுள் முக்கியமான சிலவற்றை யெடுத்துக் கூறியிருக்கின்றனர். "சொல்லால் வருங்குற்றம்" இங்குக் 'குற்றம்' என்பதனுற் 'சொல்' என்பது 'தீயசொல்' என்

பது பெற்றும். இவ்விதமே சிந்தனை யென்பதற்கும் அடைமொழி கூட்டியுரைக்க. பார்வையிற் பாவங்கள் - பார்வையினாலுண்டாம் பாவங்கள், எனவே வேற்றுமை மயக்கமாம்.

12. உரை :—வாது உற்ற திண்புயர் - வாதில் தங்கிய வலிய புஜங்களை யுடையாராகிய, அண்ணாமலையர் மலர்பதத்தை - திருவண்ணாமலையாருடைய தாமரை பொத்த பாதத்தை, போது உற்று - தக்ககாலத்திற் பொருந்தி, எப்போதும் புகலு - எக்காலத்தும் துதிசெய், நெஞ்சே - மனமே, இந்த பூதலத்தில் - இப்பூமியில், தீது உற்ற செல்வம் என் - தீயவழியாலடைந்த செல்வத்தால் யாது பயன், தேடி புதைத்த திரவியம் என் - சம்பாதித்துப் பிறர் உவராது மறைத்து வைத்த திரவியத்தால் யாது பயன், (ஏனெனில்) கடை வழிக்கு - இனிச்செல்லு மிறுதிவழிக்கு, காது அற்ற ஊசியும் - காதறுந்த ஊசியின் மதிப்புப் பொருளும், வாராது - கூட வாராது, காண் - பார்.

குறிப்பு:—இங்கு 'வாது' என்று கூறியது சிவபிரான் அர்ச்சுனனோடு செய்த விற்போரும் மற்போருமாகிய விரண்டுமாம். சிவபெருமான் அர்ச்சுனனோடு வாதுற்ற செய்தி :—அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறும்பொருட்டுக் கைலைமலைச் சாரலிற் சென்று, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்கையில், அத்தவத்தை யழித்தற் காரணமாகத் துரியோதனன் அநேக இடையூறுகளைச் செய்து வந்தனன். ஓரசுரன் வராக வுருவங்கொண்டும் வந்தனன். இதனை யுணர்ந்த சிவபெருமான் தான் அவனை யழிக்கும்பொருட்டு அவன் மீது வில்லையேவினன்; அர்ச்சுனனும் அங்ஙனே செய்தான். பின்பு சிவபெருமான், அர்ச்சுனனுமிய விவ்விருவர்க்குமே விற்போரும் மற்போரும் முறையே நடந்தன. திண்புயர் - பண்புத்தொகை. திண்மை-வலிமை. இங்குக் "காதற்றவூசி" என்பதனால் அவ்வளவு அற்பத்தன்மையனவாய சிறு பொருள்கள் என்பது

பெற்றும். புதைத்தல் - மறைத்துவைத்தல், மூடிவைத்தல், இப்பதமே சாதாரண வழக்கிலுங் காணப்படுகின்றது. (உ-ம்) கண் புதைத்தல். இங்குக் கடைவழி என்றது இறுதிக்காலத்தை.

13. உரை:—செய்த புண்ணியத்தால் - நான் செய்த நல்வினைப்பயனால், வேதத்தின் உட்பொருள் - வேதத்தினுட் கருத்தாகிய, மண்ணாசை - மண்ணாசையையும், மங்கையை - பெண்ணாசையையும், விட்டுவிட - விட்டு விடும்படி, போதித்தவன் மொழி - போதித்த பரமசிவனது மொழியை, கேட்டிலையே - கேட்கவில்லையோ, (எனெனில்) ஆதித்தன் சந்திரன்போலே - சூரியனைப்போலவும் சந்திரனைப்போலவும், வெளிச்சமதாம் பொழுது - வெளிச்சமுண்டாகும் பொழுது காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கு—.

குறிப்பு:—ஆதித்தன் - சூரியன், உயிர் உடலை விட்டு நீங்குங் காலத்து நிகழ்வதாகக் கூறப்படுகின்ற இருவகைக் கலைகளை 'ஆதித்தன் சந்திரன்போலே வெளிச்சம்' எனக் கூறுகின்றனர். இதை நன்குணரக் கருதுவோர் இதைக்குறித்து மற்றைய விசேடங்களை யோக நூலறிந்தோர் வாய்க் கேட்டுணர்வாராக. 'மண்ணாசை' என்பதனால் 'மங்கையை' என்பதற்குப் பெண்ணாசைஎன்பது பெற்றும்.

14. உரை:—மனையாளும் மக்களும்-(தன்) மனைவியும் (தான் பெற்ற) பிள்ளைகளும், வாழ்வும் தனமும்-நல் வாழ்வும் பொருளும், தன் வாசல் மட்டே - (மரணம் வந்துழித்) தன்வாயலின் அளவே சிறப்பைத்தருவர், இனமான சுற்றம் - இனமாகிய உறவு, மயானமட்டே - சுடலையளவே சிறப்பைத்தரும், வழிக்கு ஏது துணை - நாம் இனிச்செல்லும் வழிக்குத் துணையாய் வருவது யாது, தினையாமளவு எள்ளளவு ஆகிலும்-தினையரிசியின் அளவாகிலும் அன்றி எள்ளளவாகிலும், முன்பு செய்த தவம் தனை-(உயிர் நீங்கு)முன் ஒருவன் தான் செய்த தவத்தை, என்றும் ஆம் - எப்போதும் விடாமற்செய்

ப, (ஏனெனில்) பரலோகம் சிந்திக்கும் - மறுமையில் முத்திவீட டைவோம், சத்தியமே -(இஃது) உண்மையேயாகும்.

குறிப்பு :—முத்திக்கு மாறாக நிற்கும் மனைவிமக்கள் மேல்வைத்த பாசத்தை நீக்கி, அதற்குச் சாதனமாகிய புண்ணியத்தையே தேடவேண்டுமென்பது இதன் கருத்து. பரலோகம் - சிறந்தபதம். இங்குத் தினையளவு, எள்ளளவு என்பன ஒரு சிறிய அளவைக்குறிப்பதற்கு ஓர் அறிகுறியாய் வந்தன.

15. உரை :—இருசற்குரு பாதத்தை - (நமக்கு) உபதேசஞ் செய்தருளிய சிறந்த குருவின் இருபாதத்தை, நாட்டம் என்றே நம்பு-நாம் தேடத்தகுந்த பொருளென்றே நம்பியிரு, பொல்லா உடலை-தீக்காரியத்திற் கேதுவாயுள்ள இச்சரீரத்தை, பொம்மல் ஆட்டமென்றே இரு - பொம்மலாட்டமென்றே கருதியிரு, சுற்றத்தை-உறவினரை, அடர்ந்த சந்தைகூட்டமென்றேஇரு-வந்து நெருங்கின சந்தையினது கூட்டமென்றே கருதியிரு, வாழ்வை - செல்வத்தோடு கூடிய வாழ்க்கையை, குடம் கவிழ் நீர் ஓட்டம் என்றே இரு-குடத்தினின்றுங் கவிழ்ந்த நீரினது ஓட்டமென்றே கருதியிரு, நெஞ்சே-மனமே, உனக்கு உபதேசமிதே - உனக்கு (ச்சிறந்த) உபதேசம் இஃதன்றி வேறிலது.

குறிப்பு :—இங்கும் ஆசிரியர் நிலையில் பொருளனவாகிய உடல் முதலியனவற்றை யோம்பலிற் காலஞ் செலுத்தாது, நிலையுள் பொருளாகிய இறைவனை யடைவிக்குஞ் சற்குருபாதத்தினையே தஞ்சமென்றிரு என்பது இதன் கருத்து. நாட்டம் - தொழிற்பெயர். நாடு (பகுதி) + அம்(தொழில். விகுதி). பொம்மலாட்டம்-இது பிரதிமையைக்கொண்டு ஆட்டு விக்கும் ஒரு வகை ஆட்டம். சந்தைக் கூட்டம் - ஆடுமாடு முதலிய விலங்குகளும், சகல பண்டங்களும் அகப்படுமொருவகைக் கடை. இது வாரத்திற்கொருமுறை, அன்றி இருவாரத்திற் கொருமுறை கூடுவது.

16. உரை :—எரிஎனக்கு என்னும்-தீ தனக்கு உரித்தென்னும், புழுவோ எனக்கென்னும்-புழுக்களோ தமக்குரித்தென்னும், இந்த மண்ணும் சரி எனக்கு என்னும் - இம்மண்ணும் தனக்கே உரித்தென்னும், பருந்தோ எனக்கு என்னும் - பருந்து தனக்கு உரித்தென்னும், நான்புசிக்க நரி எனக்கு என்னும் - நரி தன் உணவினிமித்தம் தனக்கு உரித்தென்னும், இநாறு உடலை பிரியமுடன் வளர்த்தேன் - இந்த ஊறுடம்பை அன்புடன் பாது காத்தேன், இதனால் எனக்கு என்னபேறு - இவ்வாறு பாது காத்ததனால் யான் யாது பயனடைந்தேன் ? (யாதொன்று மில்லையென்க.)

குறிப்பு :—எரிமுதலானவை தமக்குத் தமக்கென்று மிவ்வுடலால் யாது பயனுமில்லை என்பதாம். என்னும் என்பனவகளைச் செய்யுமென் வினைமுற்றுக் கொள்ளினு மமையும். அவற்றைவெவ்வேறுவினையாக முடித்துப் பொருள் கூறுக.

17. உரை :—என் பெற்றதாயரும் - என்னைப்பெற்ற அன்னையரும், என்னைப்பிணமென்று இகழ்ந்து விட்டார் - என்னைப் பயனற்ற பிணமென்று கருதி இகழ்ந்து ஒழித்தார்கள், பொன்பெற்ற மாதரும் - நான் செல்வப் பொருளைக் கொடுக்கப்பெற்றுக் கொண்ட மாதர்களும், போ என்று சொல்லி புலம்பி விட்டார் - போம்படி சொல்லி அழுது ஒழித்தார்கள், கொன்பெற்ற மைந்தரும் - நான் பெற்ற சிறந்த புத்திரர்களும், பின்வலம் வந்து குடம் உடைத்தார் - பின்புறத்தில் பிரதட்சணம்செய்து குடத்தையுடைத்தார்கள், உடையவனே - என்னை ஆளாக உடைய இறைவனே, உன்பற்று ஒழிய - எனக்கு உன்னிடத்துள்ள பற்றன்றி, ஒருபற்றுமில்லை - வேறொரு பற்றும் எனக்கு இல்லை—.

குறிப்பு :—இச்செய்யுளில் மரணத்திற்குப் பின்னடப்பனவாய செயல்களை ஒருவாறு கூறியிருக்கின்றனர். பூமியின்பேரில் மிகவுமன்புடையார் போலொழுகிய தாயரும் மனைவியரும் மக்களும்

உடனீங்கிய பிறகு உபயோகமில ரென்பதைக் கூறுகின்றனர். குடமுடைத்தல் - சாச்சடங்குகளிலொன்று. அஃது இறந்தவனினின்றும் இருப்பாருடைய பற்று ஒழிந்த தென்பதைக் குறிக்கின்றது.

18. உரை :—எட்டுத்திசையும் - எட்டுத்திக்குகளிலும், பதினாறுகோணமும் - அவற்றினாலாய பதினாறு கோணங்களும், எங்கும் ஒன்றாய் - எங்கும் ஒருதன்மையனவாய், முட்டித்ததும்பி - நிறைந்து ககனவட்டத்தை முட்டி, முளைத்தோங்கும் - உதித்து எழுகின்ற, சோதியை - பிரகாசத்தைக் குறித்துச் சொல்லும் நூல்களை, மூடர் எல்லாம் - கல்லாத அறிவினர், கட்டிச் சுருட்டித் தம் கக்கத்தில் வைப்பார் - சுருட்டிக் கட்டித் தம் கையிலிடுக்கில் வைப்பரேயன்றி, கருத்தில் வையார் - தம்மனதில் வைக்கமாட்டார்கள், (இவர்) பட்டப்பகலை இரவென்று கூறும் பாதகரே - நடுப்பகலை நள்ளிரவு எனக்கூறும் பாவிகளை யொப்பர்.

குறிப்பு :—கக்ஷம் என்னும் வடமொழிகக்கம் எனத்தற்பவமாய் வந்தது. இங்கு எங்கும் நிறைந்து ஆகாச முகட்டையிடித்தெழுவதாகக் கூறிய சோதியானது பரப்பிரமத்தையே குறிக்கும். அப்பரம் பொருளென்பது ஞானியர்களுக்குப் பட்டப்பகல் போல் விளங்குந் தன்மையினாற் சோதியெனக் கூறப்பட்டது. இங்குப் பட்டப்பக லென்பதற்கேற்ப 'நள்ளிரவு' எனப்பொருளுரைக்கப்பட்டுளது. பரமசிவத்தை ஜோதிஸ்வரூபி யெனக்கூறல் வழக்கு. "காணரிய வொரு பொருளாய்க் களங்க மற நின்றபெருஞ், சோணகிரி யெனநின்ற சுடரொளியாய் நின்றருள்வோய்" - எனவுங் கூறப்பட்டுளது காண்க.

19. உரை :—மை ஆடு கண்ணியும் - மைதோய்ந்த கண்களையுடைய மனையாளும், மைந்தரும் - புத்திரர்களும், வாழ்வும் - செல்வத்தோடுகூடிய வாழ்க்கையும், மனையும் - வீடும், செந்தீ ஐயா - சிவந்த தீயைக் கையிலேந்தியுள்ள என் ஐயனே, நின் மாயை உரு

வெளித் தோற்றம்-உன்மாயையின் உருவெளித்தோற்றமாகும், அநிலத்துள்ளே மெய்யாய் இருந்து - இப்பூமியில் நிலையுள்ளது போல் தோற்றிய அவ்வுருவெளித் தோற்றமானது, நாட்செல நாட்செல-நாள் கழியக்கழிய, வெட்டவெறும் பொய் - முழுமையும் பொய்யாய், பழங்கதையாய்-நாம் கேட்ட ஒரு பழங்கதைபோலாகி, கனவாய் - கனவைப்போல நிலையில் பொருளதாய், மெல்லப்போனது - மெல்லெனக் கழிந்தது.

குறிப்பு :—மையாடுகண்ணி, மைந்தர் முதலியோர் அழியுமியல்பினவ ராதலால் நின்மாயை உருவெளித் தோற்றமென்றார். சிவபிரான் கையில் தீ ஏந்திய செய்தி :—தாருகாவனமுனிவர் ஒரு காலத்திற் சிவபிரான்மீது பகைகொண்டு அவரைக்கொல்ல யாகஞ் செய்து, அவ்யாகத்தினின்று எழும்பிய அக்னியைச் சிவபிரான்மீ தேவ, அதை அவர் கையிற் பிடித்தனரென்பது புராணவரலாறு. 'பழங்கதையாய்' என்பதனால், கதையை நாம் கேட்ட பிறகு நாட் செல்லச்செல்ல மறந்துபோவதுபோல, இவ்வுருவெளித்தோற்றம் நாட்கழியக் கழிய வெறும் பொய்யாய் விட்டதென்றனர்.

20. உரை :—உளியிட்ட கல்லையும் - உளியினாற் செதுக்கப்பட்ட கல்லுருவத்தையும், ஒப்பிட்ட சாந்தையும் - ஒத்திருக்கும்படி செய்த சுண்ணச்சாந்துருவத்தையும், ஊத்தையறப் புளியிட்ட செம்பையும் - அழுக்கு நீங்கப் புளியிட்டுத் துலக்கிய செப்புருவத்தையும், போற்றுகிலேன் - துதித்து வணங்கேன், உயர் பொன் என - சிறந்த பொன்போன்று, ஒளியிட்ட - பிரகாசம் வீசிய, தாள் இரண்டு - இருதாள்களையும், உள்ளே இருத்துவது - மனத்தின்கண் ணிருத்துவதே, உண்மை யென்று -சரியான நெறி என்று, வெளியிட்டு- பிறருக்கு எடுத்துக்கூறி, அடைத்து வைத்தேன்-மூடி வைத்தேன், இனிமேல் - இனிமேல் ஒன்றும் வேண்டிலனே - வேறொரு பொருளையும் வேண்டேன்.

குறிப்பு :—இச்செய்யுளான் இவ்வாசிரியர் மானத பூசையையே மேற்கொண்டொழுகுவோ ரென்பது வெளிப்படையாகத் தோன்றுகின்றது. போற்றுகிலேன் - எதிர்மறைத் தன்மை யொருமை வினைமுற்று. இல் - எதிர்மறை இடைநிலை.

சிவபோகசாரம்.

இந்நூலை யியற்றினர் திருக்கைலாச பரம்பரைத் தருமபுரவாதீனத்து ஆதிகுரு மூர்த்தமாகிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள்.

1. உரை :—நீதியிலா—(குடிகளிடத்தில்) நியாயத்தைச்செலுத்தாத, மன்னன் - அரசனுடைய, இராச்சியமும் - தேசத்தையும், நெற்றியிலே பூதியிலார் - நெற்றியிலே திருநீறு தரியாதிருப்பார், செய்தவமும் - செய்யும் தவத்தையும், பூரணமாம் - பரிபூரணமாய், சோதி - ஒளி ஸ்வரூபியான பரசிவத்தின், கழலறியா - பாதங்களைக் காணாத, ஆசானும் - குருவையும், கற்பிலரும் - பதிவிரதாதருமத்தினின்று வழுவிய மனைவிகளையும், சுத்தவிழலெனவே - மிகவும் பயனற்றவை யென, நீத்துவிடு - (மதித்து) நீக்கிவிடுவாய்.

குறிப்பு :—நீதி - வடசொல், இல - இல்லா என்பது தொகுத்தது. பூதி - விபூதி. சுத்தவிழல் : சுத்த என்பது கலப்பற்ற என்னும் பொருள்தாயினும் இவ்விடத்தில் மிகுதிப்பொருளைக்காட்டுகின்றது. விளக்கணி; ஒப்புமைக் கூட்டமுமாம்.

2. உரை :—ஐந்தறிவால் - பஞ்சேந்திரியங்களால் உண்டான உணர்ச்சியால், கண்டாலும் - நீ அறிந்த போதிலும், ஆர் ஏது சொன்னாலும் - யாவரேனும் யாதையாயினும் கூறினாரேனும், எந்த விருப்பு வெறுப்பு எய்தாலும் - (உனக்கு) எவ்வகையான

ஆசையும் வெறுப்பும் மேலிருந்தாலும், சிந்தையே - ஏ நெஞ்சே! பாரவிசாரத்தை - மிக்க மனக்கவலையை, பண்ணாதே - கொள்ளாதே, ஏதொன்றும் - செய்யும் யாவையும், நிர விசாரித்து செய் - கடைபோக ஆராய்ந்த பின்னே செய்வாய்.

குறிப்பு :—ஐந்தறிவு - சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் ; ஆர் - யார். சிந்தையே - விளி. விசாரம் - வடசொல்.

3. உரை :—மனமே—, பரபரக்க வேண்டாம் - அவசரப்படேல், பல காலுஞ் சொன்னேன்-உனக்குப் பலசடவையும் சொன்னேன், வரவரக் கண்டாராய் - சிறிது சிறிதாக உண்மைப் பொருளைத்தேடித் தெளிவாய் ; ஒருவருக்கும் - யாவருக்கும், தீங்கு நினையாதே - தீமை செய்ய மனதிலும் நினையாதே, செய் நன்றி குன்றாதே - ஒருவன் செய்த உபகாரத்தை மறவாதே ஏங்கி யிளையாது இரு - மனமேக்கப்பட்டு உடல் மெலியாமலிருப்பாய்.

குறிப்பு :—இஃது ஓர் வசனரூபமான செய்யுள். செய்ந்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை யாதலின் அவ்வாறு கூறினர்.

4. உரை :—மிகுந்த குலம் - உலகின் கணுள்ள மக்களிற் பலர், செல்வந்து மேவுவதும் - செல்வத்தையடைய விரும்புவதும், அதைப்பகுத்துப் பொய் என்று விடும் பாங்கு - அச்செல்வத்தைப் பகுத்தறிவு மறிவினாற் அநித்திய மெனவிரும்பாதொழிக்குந் தன்மையும், தொகுத்து விரித்தால் - தொகுத்தும் விரித்தும் கூறினாலும், நல்நெஞ்சமே - நல்ல நெஞ்சமே, மிகுவாரணத்தை - அடர்ந்து வந்த யானையை, உரித்தான் - உரித்துப் போர்வையாய்க்கொண்டவன், செயல் என்று உணர் - திவ்விய லீலாவிசேஷமென்று அறிவாய்.

குறிப்பு :—அத்தை : அதை யென்பது சந்த வின்பம் நோக்கி இவ்விடத்தில் அத்தையென்று நின்றது. 'நிறை செல்வம், நீரிற்

சுருட்டுங்கெடுந்திரைகள்' ஆதலின் பொய்யெனப் புகன்றார். சிவபிரான் பிக்ஷாடனராய்த் தாருகாவனத்திற் சென்ற காலத்தில் அவ்விருடிகளாலேவப்பட்டயானையை யுரித்துப் போர்வையாய்க் கொண்டருளினார். இதனால் உலகின் கண் நடப்பவை யாவுமீசன் செயல் என்று கூறினார்.

> 'நித்த நிகழ்கின்ற நிலவுலகின் மாந்தர்செய
> லத்தனையு மீசனருள்' என்றார் பெரியாரும்.

5. உரை :—ஆறாறு தத்துவம் வைத்து - முப்பத்தாறு தத்துவங்களிலும் வைத்து, அதில் உரை - அவைகளாற் புகழ்ந்து உரைக்கப்பட்ட, மூர்த்திகள் வைத்து - திரிமூர்த்திகள் வைத்து, ஏறுமல பாகமேறவே - அடையக்கூடாத பரிபக்குவதசை அடையவே, மாறுமல் - என்றும் இடைவிடாமல், உன்னைவிடாது ஆள்வான் உனைக்கேட்டோ - உன்னை எந்நாளும் கைவிடாதாள்பவன் உன்னைக்கேட்டோ செய்கிறான், நெஞ்சே என்ன விசாரமெமக்கு- (ஆகையால்) நமக்கு என்ன மனக்கவலை ?

குறிப்பு :—அதில் என்பது அத்தில் எனவானது சந்தவின்பம் நோக்கி. மலபரிபாக மாவது அருட்சத்தி பதிந்துவினைபொத்த காலம். அதனையே 'வினையொத்து வருங்காலம்' என்றும் 'இருவினையுமொத்தகாலம்' என்றும் கூறியிருக்கிறார்.

6. உரை :—தானோ அசத்து அல்ல - தானாகவே நிஷ்பிரயோசனமாக யிருக்கவில்லை ; என்று அறிந்தால் - என்பதை அறிந்தாலும், தாரணியில் ஏனோ பிதற்றிடுவது :—இப்பூமியில் யாது காரணத்தாலோ வாயாற் பிதற்றிக்கொண்டிருப்பது, ஏழை நெஞ்சே - ஏ ஏழைநெஞ்சமே !, தானே இறவாததுதான் - உண்மையில் அது சத்தாயினபடியால் தானே அழியுந் தன்மையுடையதன்று தான் ; இறக்க அருளை மறவாதிரு - ஆதலாற் கடவுளின் மிக்க

கிருபையை மறவாது இருக்கக்கடவாய், சிவமாவை - (அப்படியிருப்பின்) நீயே சிவத்தோடு ஒன்று பட்டு நிற்பாய்.

குறிப்பு :—தாரணி - எல்லா சராசரப்பொருள்களையும் தரிப்பதனால் பூமி இப்பெயர் கொண்டது. ஏழையென்றது பரிதாபத்தால். 'ஆவை' யென்பதை 'ஆவாய்' என்று பொருள் கொள்ளக்கூறினர்.

7. உரை :—ஏற்றது அவையாயிருப்பதும் - வஸ்துக்களிற் பொருந்தாது பொருந்தி அப்பொருள்களாயிருத்தலும், உன் மயக்கம் மாற்றுது நீரென்று அரற்றுவது-மனமயக்கத்தை மாற்றுமலேயே மாற்றென்று வாயாடுவதும், தோற்றுத - பொருள்களில் இருந்தும் அருபியாயிருப்பதும், உன்னைச் சுகபூரணரென்று - நீயே சச்சிதாநந்த பூரணமென்று, தேற்றுவதும்-ஆறுதல் செய்தாலும். ஈசன் செயல் - எல்லாம் கடவுளின் திருவிளையாடல்களாம்,

குறிப்பு :—"தோய்ந்தும் பொருளனைத்தும் தோயாதுநின்ற சுடர்" என்றார் பிறரும். உண்மயக்கம் - மனவிருள்.

குமரேச சதகம்.

இதனை யியற்றியார் குருபாதநாஸர் ; திருப்புல்வயற் குமரேச சதகம் என்னும் பெயர்கொண்ட விந்நூல் நூறு செய்யுட்களைக் கொண்டது.

1. உரை :—தவமது செய்தே பெற்று எடுத்தவன் முதல் பிதா - முதன்மையான தந்தை தவங்களைச் செய்து பெற்று எடுத்தவன்; தனை வளர்த்தவன் ஒரு பிதா - தன்னை (உண்டி, அணியுதவி) வளர்த்தவன் ஒரு தந்தையாவான் ; தயையாக வித்தையை சாற்றினவன் ஒரு பிதா - மிகவும் கருணை கூர்ந்து கல்வியைக் கற்பித்தோன் ஒரு தந்தையாவான் ; சார்ந்த சற்குரு ஒரு பிதா-நல்லொ

மூக்கம் வாய்ந்த ஆசாரியன் ஒரு தந்தை யாவான்; அவமறுத்தா ள்கின்ற அரசு ஒரு பிதா - பாவவழியினின்று நீங்கிய நீதி செலுத்தி ஆள்பவன் ஒரு தந்தையாவான்; நல்ல ஆபத்து வேளை தன்னில் அஞ்சல் என்று உற்றதுயர் தீர்த்தோன் ஒருபிதா - நமக்கு மிக வும் ஆபத்துக்காலத்திற் பயப்படாதே என்று அபயங் கொடுத்து நமக்கு வந்துற்ற வருத்தத்தைப் போக்கினோன் ஒரு தந்தையா வான்; அன்புளமுளோன் ஒரு பிதா-நம்மிடத்தில் மிகவும் வாஞ் சையுடைய மனதையுடையவன் ஒரு தந்தையாவான்; கவளமிடு மனைவியை பெற்றோன் ஒருபிதா - தமக்கு அன்னத்தைக்கொடு த்துபசரிக்கிற தாரத்தைப் பெற்றவனாகிய மாமன் ஒரு தந்தை யாவான்; கலிதவிர்த்தவனொருபிதா - தரித்திரத்தை நீக்கிக் காப் பாற்றினோன் ஒரு தந்தையாவான்; காசினியிலிவரை நித்தம் பிதா வென்று உளம் கருதவது நீதியாகும் - ஆதலால் இவர்களை இப்பூ மியில் தினந்தோறும் தந்தை யென்று மனதில் எண்ணுவது நியா யமாகும்; மவுலிதனில் மதியரவு புனை விமலர் உதவு சிறுமதலே என வருகுருபரா - முடியிற் சந்திரனது பிறையையும், சர்ப்பத்தை யும் பூண்ட பரிசுத்தராகிய சிவபிரான் பெற்றருளிய சிறிய குழந்தையாய் வரும் முருகக் கடவுளே; மயிலேறி விளையாடு குகனே புல் வயலீடுமலே மேவு குமரேசனே - மயில்வாகன மேறி விளையாடும் குகனே! திருப்புல் வயல் என்னுந் தலத்தில் எழுந்தரு ளிய குமரேசனே!

குறிப்பு :—பெற்றெடுத்தது தாயாயினும், தந்தை எனக்கூறல் மரபாதலாலும் சிலநாள் தந்தை வயிற்றிற் தங்கிப் பின்பு தாய் வயிற்றிற் கருச்சாருமெனச் சிலர் கூறுதலாலும் 'பெற்றெடுத்தவன் என்றார். கலி : துன்பமுமாம். காசினி : இருபத்தொரு தலை முறை க்ஷத்திரியரைக் கருவறுத்துக் கொன்ற பரசுராமராற் காச் யப மகர்ஷிக்கு யக்ஞதக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டதனாற் பூமி

இப்பெயர் கொண்டது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ மாதலின் நித்தம் கடவுளைச் சிந்தனை செய்யுமாறு இவர்களைச் சிந்தித்தல் தகுதியாகும். மவுலி: மௌலி என்பதன் போலி. விமலர்: சிவபிரான். அவர் சந்திரனையும் அரவையும் சடாபாரத்திற் கொண்ட கதை பிரசித்தம். அரவு என்பது அரா என்றும், அர என்றும் வரும் "குறியதன் கீழாக்குறுகலும்" என்னுஞ் சூத்திரத்தா லுணர்க. மயில் ஏறி: இவ்விடத்திற் குறித்தது சூரபத்ம சங்காரம். கதையை ஆசிரியர் வாய்க்கேட்டுணர்க. 'மலைமேவு குமரேசனே' என்றது சுப்பிரமணியர் குறிஞ்சி நிலத்திற் குரிய தெய்வ மாதலின் என்க.

2. உரை:—நியாய நெறிதவறாமல் உலகபரிபாலன நடத்தும் அவனே அரசனும் - நீதியாகிய மார்க்கத்தினின்று வழுவாமல் இவ்வுலகைச் செங்கோனடாத்தியாள்பவனே மன்னனும்; இராசயோசனை தெரிந்த உறுதியாகிய செய்தி நவிலுமவனே மந்திரி - எக்காலும் அரசருடனிருந்து ஏற்ற ஆலோசனைகளை ஆராய்ந்து தெரிந்து உறுதிமொழிகளைக் கூறுவோனே மந்திரியாவான்; நேயமுடனே தன் சரீரத்தை யெண்ணாத நிர்வாகியே சூரனும் - மிகவும் ஆசையுடனே தன் உடலை ஒரு பொருட்டாக மதியாது எல்லாவுயிர்களையும் காப்பாற்று மாற்றலுடையானே சூரனுவான்; நிலைபெறுமிலக்கணம் இலக்கியம் அறிந்து சொலும் நிபுணகவியே கவிஞனும் - நிலையாயுள்ள இலக்கண இலக்கியத் தேர்ச்சி யடைந்து பிறர்க்குச் சொலுந் திறமையுள்ள பண்டிதனே கவிஞன் எனப் படுவான்; அபதொருவாகடம் நாடியின் நிதானமும் அறியும் முதியோன் வைத்தியன் - யாவராலும் ஆராயப்பட்டு மேன்மையுடையது எனத் தேர்ந்த வாகட சாஸ்திரத்தையும் நாடியின் நிலைமையையும் நன்றாக அறிந்த வயது சென்றவனே வைத்தியனுவான்; அகமின்றி மெய் உணர்ந்து ஐம்புலன் ஒழித்து விட்டவனே மெய்

ஞானி எனலாம், - அகங்காரம் என்னுங் குற்றத்தை யறுத்து உண்மைப் பொருளை அறிந்து பஞ்சேந்திரியங்களால் உண்டாகும் உலகப்பற்றுக்களை அறவிட் டொழித்தவனே உண்மையான ஞானி எனக்கூறலாம்; மாயவர் சகோதரி மனோன்மணிக்கு அன்பான வரபுத்ரவடிவேலவா - விசித்திர சக்ரதனாகிய திருமாலின் உடன் பிறந்தாளாகி யாவர் மனங்களையும் களிக்கச்செய்கின்றஉமாதேவியின் அன்புமிக்க சிரேஷ்டமான புதல்வனாகிய வடிவேலனே; மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடுமலைமேவு குமரேசனே - மயில்வாகனமேறி விளையாடிவரும் குகனே! திருப்புல்வயல் என்னுந் தலத்தில் எழுந்தருளி யிருக்கிற குமரேசனே.

குறிப்பு:—செய்தி - சேதி. வாகடம்-வைத்தியம். முதியோன் என்றது 'பாலசோசியன் விருத்த வைத்தியன்' என்னும் பழமொழியை உட்கொண்டிருக்கிறது. மனம் + உன்மனி - மனோன்மனி: வடமொழிச் சந்தி; மனதைச் சந்தோஷிப்பவள் என்பது பொருள்.

3. உரை:—சிங்கார வனமதில் உதிப்பினும் காகம் அது தீஞ்சொல்புகல் குயிலாகுமோ - அழகாகிய பூஞ்சோலையின்கண் காக்கையானது பிறந்தாலும் அஃது இனிமையான சொற்களைப் பேசும் குயிலாய் விடுமோ; திரையெறியும் வாவியிற் பூத்தாலுமே கொட்டி செங்கஞ்ச மலராகுமோ - அலைகள் மோதுகின்ற பெரியதடாகத்திற் கொட்டி யென்னும் மலர் பூத்தாலும் செந்தாமரைப் புஷ்பமாகுமோ; அங்கானகத்தில் பிறந்தாலும் முயலானது ஆனையின் கன்றாகுமோ - விசாலமான காட்டில் உற்பவித்தாலும் முயலானது சிறிய யானைகுட்டியாமோ; ஆண்மையாகிய நல்ல குடியிற் பிறந்தாலும் அசடர் பெரியோர் ஆவரோ - பௌரஷம் வாய்ந்த உயர்ந்த குடியிற் பிறந்தாலும் அறிவில்லாதவர் பெரியோர் ஆவரோ; சங்கு ஆடு பால் கடல் பிறந்தாலும் நத்தை தான் சாலக்கிராமமாமோ - சங்கங்கள் நிறைந்த பாற்கடலில் உற்பவித்தாலும் நத்

தையானது தெய்வத்தன்மை பொருந்திய சாலக் கிராமமாமோ ; தடம்மேவு கடல் நீரிலே உப்பு விளையினும் சார சர்க்கரையாகுமோ - பரவிய சமுத்திரத்திலேயே உப்பு விளைந்தாலும் (கருப்பஞ்) சாற்றினாலாகிய சர்க்கரை யாகுமோ ; மங்காத செந்தமிழ்க் குறுமுனிக்கு உபதேசம் வைத்த மெய்ஞான குருவே - எந்நாளும் அழியாத இனிய தமிழை அகத்தியருக்கு உபதேசித்த உண்மை ஞானம் பொருந்திய குருவே ; மயிலேறி விளையாடுகுகனே புல்வயனீடு மலைமேவு குமரேசனே - மயில்வாகனத்தில் ஏறி விளையாடியருளும் இளமைத் தன்மை வாய்ந்த பிரானே ! திருப்புல் வயல் என்னுந் தலத்தில் எழுந்தருளும் குமரேசனே.

குறிப்பு :—இச்செய்யுளில் வரும் ஓகாரங்கள் எதிர்மறைப் பொருள். கொட்டி - ஒருவகை ஆம்பல். யானையின் கன்று என்பது மரபு. சாலக்கிராமம் : இஃது ஒருவகைத் தெய்வத்தன்மை பொருந்திய சிலை ; சாளக்கிராமம் என்பதுவும் இதுவே. இதன் குணகுணங்களை அதனைப் பூசிப்போர் வாய்க்கேட்டுணர்க. மங்காத செந்தமிழ் - எக்காலத்திலும் அழிதலில்லாத தமிழ். இக்கருத்தையே "பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர், எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடி யிருப்பதுபோல், கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலயாளமுந் துளுவு முன்னுதரத் துதித்தெழுந்தே யொன்று பலவாயிடினு, மாரியம் போலுலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன், சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே." என்றுங் கூறியிருக்கிறார். ஆதியிற் குமாரக்கடவுள் தமிழை அகத்தியருக்கும் சமஸ்கிருதத்தைப் பாணினி முனிவருக்கும் உபதேசித் தருளினார் எனக் கூறுவ புராணங்கள். குறுமுனி: அகத்தியர் ; அங்குஷ்டப்பிரமாணர் ஆனதனால்.

4. உரை :—தங்கமானது தழலினின்று உருகி மறுகினும் தன்னொளி மழுங்கிடாது - சுவர்ணத்தை நெருப்பிலிட்டு மறுக

உருக்கினும் அதன் சுயம்பிரகாசம் குறையாது; சந்தனக் குறடது மெலிந்து தேய்ந்தாலுமோ தன் மணம் குன்றிடாது - சந்தனக் கட்டை மெலியத் தேய்ந்தாலும் அதன் வாசனை தேயாது; பொங்க மிகுசங்கு செந்தழலில் வெந்தாலுமோ பொலி வெண்மை குறைவுறாது-மேன்மையும் பொலிவும் மிகுந்த வெண்சங்கைச் செந்தணலிலிட்டுச் சுட்டாலும் அதன் ஒளி குன்றிடாது; போதவே காய்ந்து நன்பால் குறுகினாலும் பொருந்துசுவை போய்விடாது - மிகவும் சுண்டப் பால் காய்ந்தாலும் அதனிடத்துண்டான இனியசுவை குறையாது; துங்கமணி சாணையில் தேய்ந்துவிட்டாலும் துலங்கு குணம் ஒளியாது-விலையுயர்ந்த இரத்தினத்தைச் சாணைக்கல்லில் தேய்த்தாலும் அதற்குரிய ஒளி குன்றாது; தொன்மைதரு பெரியோர் மடிந்தாலும் அவர்களது தூயநிறைதவறுகுமோ - பழமையுடைய பெரியோர்கள் இறந்தாலும் அவர்களுடைய பரிசுத்தமுள்ள உறுதிப்பாடு தவறிப்போகுமோ; மங்கள கல்யாணிகுற மங்கைசுர குஞ்சரியை மருவுதிண் புயவாசனே - மங்களகரமான திருக்கல்யாண குணங்களையுடைய குறப்பெண்ணாகிய வள்ளியம்மையையும், தெய்வயானையையும் தழுவுகின்ற வலிமைபொருந்திய புயங்களையுடையவனே!; மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு மலைமேவு குமரேசனே—.

குறிப்பு :—சாணையிற் றேய்த்தல் உருவு மொளியும் பெறுமாறு. இச்செய்யுளின் கருத்தை "அட்டாலும் பால்சுவையிற் குன்றாதளவல்ல, நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்—கெட்டாலுமேன்மக்கள் மேன்மக்களே சங்கு, சுட்டாலும் வெண்மை தரும்" என்னு மூதுரைச் செய்யுளானுணர்க.

5. உரை :—கடல்நீர் மிகுந்தென்ன ஒதிதான் பெருத்தென்ன காட்டு இலவு மலரில் என்ன - உப்பு நீராகிய கடல்நீர் மிகுந்திருந்தாலென்ன ஒதியமரம் பெருத்தாலென்ன காட்டிலுண்டாகும்

இலவமரம் பூத்தாலென்ன, கருவேல் பழுத்தென்ன - கருவேல மரம் பழுத்தாலென்ன, நாய்ப்பால் சுரந்தென்ன—, கானின் மழை பெய்தமென்ன - காட்டில் மாரி பெய்தாலென்ன, அடர்கழுதை லத்திநிலமெல்லாம் குவிந்தென்ன அரியகுணமில்லாத பெண் அழகாயிருந்தென்ன - கழுதையின் மலம் பூமிமுழுவதும் நிறைந்தாலென்ன நற்குணமில்லாத மங்கை அழகு வாய்ந்தவளாயிருந்தாலென்ன, ஆஸ்தான கோழைபல அரியநூல் ஓதி என்ன - சபைக்கோழையான ஒருவன் அருமையான பலநூல்களையுங் கற்றிருந்தாலென்ன, திடமினிய பூதம்வெகு பொன்காத்திருந்தென்ன - வலிமைமிக்க பூதம் மிகுந்த செல்வத்தைக் காத்திருந்தாலென்ன; திறன்மிகுங் கரடிமயிர் தான்செறிவாகி நின்றென்ன - வலிமை மிகுந்த கரடியின் மயிர் அடர்ந்து நின்டிருந்தாலென்ன, வஸ்த்ரபூஷணம் எலாம் சித்திரத்து உற்றுமென்ன-ஆடை ஆபரணங்களெல்லாம் சித்திரத்தில் அலங்காரமாய்ப் பொருந்தி யிருந்தாலென்ன, மடம் மிகுந்து எவருக்கும் உபகாரம் இல்லாத வம்பர் வாழ்வுக்கு நிகராம்-மடமைத்தன்மைமிக்கு யாவருக்கும் பிரயோசனமில்லாத வீணர் வாழ்க்கைக்கு இவைகள் சமானமாம்; மயிலேறி விளையாடு குகனேபுல் வயனிடமிலமேவு குமரேசனே—,

குறிப்பு :—'ஒதிதான் பெருத்தென்ன' என்பது 'ஒதி பெருத்தத்திரத்திற்காகுமோ' என்றும் பழமொழியின் உண்மையைச்சொண்டிருக்கிறது. வெகுநாளாய் மனிதசஞ்சார மில்லாத விடத்தைப் பூதங் காக்குமென்பது நம்மவர் கொள்கை. வஸ்த்ரம், பூஷணம் - வடமொழிகள். ஆஸ்தானம் - இராஜசபை. இப்பாட்டிற் கூறிய வெல்லாம் பிறர்க்கு உபயோகமில்லாதவையாதலால் வம்பர் வாழ்வுக்கு நிகர் என்றார்.

6. உரை :—திரவியம் காக்கும் ஒரு பூதங்கள்போற் பணந் தேடிப் புதைத்து வைப்பார் - செல்வத்தைக் காவல் செய்கின்ற

பிசாசங்களைப்போற் பணத்தைத்தேடி ஆழத்தோண்டித் தாழவைப்பார், சேலை நலமாகவும் கட்டார்கள் - நல்ல வஸ்த்திரங்களையும் உடுக்கார், நல்ல அமுது செய்து உணார் - நல்ல போஜனமும் சாப்பிடார், அறமும் செய்யார் - தருமமும் செய்யார், புரவலர் செய்தண்டம் தனக்கும் - அரசர்கள் செய்யும் தண்டம் தனக்கும், வலுவாகப்புகும் திருடருக்கும் ஈவார் - பலாத்காரமாக நுழைந்து கொள்ளையிடும் கள்வர்களுக்கும் கொடுப்பார், புலவரைக் கண்டவுடன் ஓடிப்பதுங்குவார்-வித்வான்களைக் கண்டவுடன் நேரினின்றும் ஓடி மறைந்து கொள்வார், புராணிகர்க்கொன்றும் உதவார் - புராணங்களைப் பிரசங்கிக்கும் பாகவதர்களுக்கு ஒன்றும் கொடுத்து உதவி செய்யார், விரகறிந்தே பிள்ளை சோறுகறி தின்றும் அளவில் வெகு பணம் செலவாகலால் - தந்திரத்தை உணர்ந்து பிள்ளை சோறுகறி முதலானவை சாப்பிடலால் மிகப்பணம்செலவழிந்துபோகுமெனக்கருதி, விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென மிகுசெட்டி சொன்ன கதைபோல் - விளையாடுகின்ற கிழவனும் பிள்ளையே பிள்ளையென முன்னொரு காலத்தில் ஒரு செட்டி சொன்ன கதையைப்போல், வரவுபார்க்கின்றதேயல்லாது உலோபியர்கள் மற்றொருவருக்கு ஈவரோ-இத்தகைய உலோபகுணமுள்ளவர்கள் தமக்குச் செல்வம் வருதலைப் பார்ப்பரேயன்றி மற்றெவருக்கும் ஈயும் சிந்தையுடையரோ, மயிலேறி விளையாடு......குமரேசனே—.

குறிப்பு :—உலுத்தர் - உலோபகுணமுடையார். சேலை - அணி; சேலையுமாம். விரகு - உபாயம். பிள்ளையாயின் சோறுங்கறியும் செலவாகுமெனக் கருதி கிழவனே பிள்ளையென நினைத்தான். ஆயினும்பிள்ளை விளையாட்டு வேண்டினதனால் விளையாடுங்கிழவனே பிள்ளை என்று துணிந்தனன் செட்டி. உணார், செயார் முதலியவை தொகுத்தல் விகாரம். இதனாற் செட்டிகள் உலோபியரெனக் குறிப்பித்தார்.

7. உரை :—சேற்றில் பிறந்திடும் கமலமலர் - தாமரைப்புஷ்பம் சேற்றிலே பிறந்தாலும், கடவுளது திருமுடியின் மேலிருக்கும் - ஈஸ்வரனது திருமுடியில் அர்ச்சிப்பார்கள், திகழ்சிப்பியுடலில் ஜனித்தமுத்து - விளங்கப்பெற்ற சிப்பியினின் றுதித்ததாயினும் முத்து, அரசரது தேகத்தின்மேலிருக்கும் - இராசர்களது தேகத்தில் தங்கியிருக்கும், போற்றியிடு பூச்சியின் வாயின்நூல் பட்டு என்று பூசைக்கு நேசமாகும் - எல்லாராலும் புகழப்பட்ட ஒரு பூச்சியின் வாயினின்று நூற்கப்பட்டதாயினும் அந்நூல் பட்டென்று பூசனைக்குரிய பரிசுத்தமான வஸ்திரமாகும்; புகலரிய வண்டு எச்சிலான தேன் தேவர் கொள்புனித அபிடேகமாகும் - எல்லாராலும் சிரேஷ்டித்துச் சொல்லப்படுகிற வண்டினது எச்சிலான தேன் தேவர்கள் விரும்பிய பரிசுத்தமான அபிடேகத்துக்குரிய பொருளாகும்; சாற்றிய புலாலொடு பிறந்த கோரோசனை சவாது புனுகு அனைவர்க்குமாகும் - யாவருக்குந்தெரிந்து இகழும் மாமிசத்தோடு உண்டான கோரோசனை சவ்வாது புனுகு முதலானவை யாவராலும் விரும்பப்பட்டவையன்றோ; சாதி ஈனத்தில் பிறக்கினும் கற்றோர்கள் சபையில் மேல்வட்டமன்றோ-தாழ்ந்த சாதியிற் பிறப்பரோனும் கற்றறிந்த விவேகிகள் சபையில் மேன்மைத்தன்மை யுடையவரன்றோ; சுரத்தினை மாற்றி விபூதியால் உடல் குளிரவைத்த மெய்ஞ்ஞான முதலே - சுரநோயை நீக்கி திருநீற்றினால் தேகத்தைக் குளிரச்செய்த உண்மைஞான ஸ்வரூபியாகிய முழுமுதற் கடவுளே! மயிலேறி விளையாடுகுகனே புல்வயலீடு மலைமேவு குமரேசனே—.

குறிப்பு:—கமலம் - பங்கயம்: சேற்றிற் பிறப்பதென்றோதுப்பொருள். பூச்சி - பட்டுப்பூச்சி. பூசை - வடசொல். தாமரை தேவர்க்குரிய மலரென்பதை 'கடவுளொண்பூ' என்றதனாலறிக. கோரோசனை : மருந்துக்குரிய பொருள். சவாது - இடைக்

குறை. இச்செய்யுளாற் பிறப்பிடம் தாழ்ந்ததாயினும் மேன்மை பெறலாம் என்பது கொள்ளக்கிடக்கின்றது. திருஞானசம்பந்தர் பாண்டியன் சுரத்தினைத் தீர்த்ததை இங்குக் குறித்தார்.

8. உரை :—அஞ்சல் என நாயின் உடல் தருமன் சுமந்து முன் ஆற்றைக் கடத்துவித்தான் - நீ அஞ்சற்க என்று அபயம் கொடுத்த சுவானத்தின் உடலைத்தருமன் தூக்கி ஆற்றைக்கடக்கும் படி செய்தான்; அடைக்கலம் எனும் கயற்காக நெடுமாலுடன் அருச்சுனன் சமர்புரிந்தான் - நீயே கதியெனச் சரணமடைந்த கயற்காக மகாவிஷ்ணுவுடன் அருச்சுனன் போர்செய்தான்; தஞ்சமென வந்திடு புறவுக்குமுன் சிபி சரீரம் தனைக்கொடுத்தான் நின்பாதமே சரண் என வந்த புறவுக்காக முன் காலத்திற் சிபி என்னும் சக்கிரவர்த்தி தன்னுடைய உடலையே கொடுத்து அப்புற வையைக் காப்பாற்றினான் - தடமலைச் சிறகரிந்தவனை முன் காக்கத்ததீசி முதுகு என்பு அளித்தான் - ஆதிகாலத்தில் பெரிய பர்வதங்களை இறகு அறுத்தவனான இந்திரனைக் காப்பாற்றும் பொருட்டுத் ததீசி என்னும் மகர்ஷி தன் முதுகு எலும்பைக் கொடுக்கவில்லையா; இன்சொலுடனே பூததயவுடையராயினோர் எவருக்கும் ஆபத்திலே இனியதம் சீவனை விடுத்தாகிலும் காத்து இரங்கி ரக்ஷிப்பரன்றோ-இனிமையான வார்த்தையுடன் ஆத்துமாக்களிடத்திற் காருண்யமுள்ளவர்கள் எத்தகைய மாநுடர்களுக்கும் ஆபத்துக்காலங்களில் மிகவும் அருமையான தம் உயிரையேனுங் கொடுத்து அவர்களைக் காத்து இரக்ஷிக்கமாட்டார்களோ; வஞ்சகிரவுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன் வளர்சூரன் உடல் கீண்டவா - வஞ்சனையுடைய கிரௌஞ்சன், தாருகன், சிங்கமுகன், சூரன் முதலான கொடிய அரக்கர்களைக் கிழித்து அழித்தவனே, மயிலேறி ...குமரேசனே—.

குறிப்பு :—நெடுமால் - திரிவிக்கிரமாவதாரத்தில் ஆகாயமளவில் நீண்டு வளர்ந்தவர். வேடனாற் றுரத்தப்பட்டதோர் புறு

சிபிச்சக்கிரவர்த்தியிடம் தஞ்சமெனப்புகலத் தன்தொடையின் மாமிசத்தை வேடனுக்குக் கொடுத்து அதனைக் காப்பாற்றிக் கீர்த்தி பெற்றார். புரு என்பது புற, புறவு எனவும் வரும் "குறியதன் கீழாக் குறுகலும்" என்னும் சூத்திரத்திற் காண்க. முன்னொரு காலத்தில் மலைகள் சிறகுடைய தன்மையால் உலகெங்கும் பறந்து பொறுக்கமாட்டாத துயரை விளைத்து வந்ததனால் இந்திரன் எல்லாப் பர்வதங்களுக்குஞ் சிறகையறுத்தான். விருத்திராசுர சங்காரம் பொருட்டுப் பலகாலமாய் அநேக பாணங்களின் வலிமை பொருந்திய ததீசிமா முனிவருடைய முதுகெலும்(Spinal Column)பை இந்திரன் அவரைக்கேட்க அவரும் கொடுத்தருளினார் என்பது கதை. கிரௌஞ்சன் முதலான அசுரரை முருகக்கடவுள் சங்கரித்தார். விரிப்பிற் பெருகுமாதலில் ஆசிரியர் வாய்க்கேட்டுணர்க. கிண்டல் - கிழித்தல். இச்செய்யுளால் அபயமடைந்தோரைப் பெரியோர் தம்முயிரையாயினுந் தந்து காப்பற்றுவர் என்பது பெறப்பட்டது. 'அஞ்சலெனு' மென்பதை 'அஞ்சலென' என்று படிக்க.

9. உரை :—அன்னதானஞ் செய்தல்—, பெரியோர் சொல் வழி நிற்றல்—, ஆபத்தின் - ஆபத்து காலத்தில், வந்தபேருக்கு அபயம் கொடுத்திடுதல், தம்மைச் சரணடைந்தவருக்கு அபயம் கொடுத்துதவுதல், நல்லினம் சேர்ந்திடுதல்—, ஆசிரியன்வழி நின்று—, அவன் சொன்ன மொழி தவறாது செய்திடுதல் - அவ்வாசிரியன் இட்ட கட்டளையைத் தப்பாது செய்து நிறைவேற்றல், தாய்தந்தை துணையடி அருச்சனைசெயல் - மாதா பிதாக்களின் உபய பாதங்களைப் பூசை செய்தல் அவர்கள் முன்னறி தெய்வமாதலால் ; சோம்பலில்லாமல் உயிர் போகினும்—, வாய்மை மொழி தொல்புவியில் நாட்டி இடுதல் - சத்தியத்தை இப்பழமையான உலகின்கண் நிலைப்படுத்துதல், மன்னரைச் சேர்ந்தொழுகல் - அர

சரைச் சேர்ந்து அவர் பாலொழுகல், கற்புடை மனைவி யொடுவை கிறும் தாமரை இலைமருவு நீரென உறுதல்-கற்பு நிறைந்த மனை யாளொடு இல்லற நடாத்திலும் தாமரையிலையில் தண்ணீர் போலச் சம்பந்தமின்றி இருத்தலும், எலாம் - (இவை) எல்லாம், மேலவர்தம் மாண்பு என்று உரைப்பரன்றோ - பெரியோர் தம் மாட்சிமைப்பட்ட குணங்களென்று உலகம் உரைக்குமன்றோ வன்னமயில் மேல்இவர்ந்து இவ்வுலகை ஒரு நொடியில் வலமாக வந்தமுருகா-சித்திர வர்ணங்களுடைய மயில்வாகனத்தில் ஏறி இப் பூமி முழுவதையும் ஒரு கணப்போதில் வலம்வந்த முருகக்கடவுளே! மயிலேறிவிளையாடு ....குமரேசனே—.

குறிப்பு:—தாமரையிலையிற் றண்ணீர் அதின்மீதிருந்தும் அதனு டன் சம்பந்தப்படாது மின்றொளி பெறுகின்றது; அதுபோற் பெரியோர் மனையாளொடு இல்லறத்திலிருந்தும் ஞானவொளி பெற்று இவ்வுலக மாயையினின்று நீங்கியிருப்பர். ஒருகால் நாரதர் சிவபிரானிடம் மாங்கனி ஒன்றைக் கொடுக்க அவர் தம் புத்திரர்கள் விநாயகரையும் முருகக்கடவுளையும் நோக்கி 'உம்மில் முதலில் உல கெலாம் வலம்வந்தவரே இதைப்பெறுவர்' எனக்கூற முருகக்கட வுள் உலகமுழுவதையும் மயில்வாகனமேறி ஒரு நொடியில் வலம் வருமுன் விநாயகர் அப்பிரானையே வலம்வந்து பலத்தைப்பெற் றார் என்பது கதை. 'தாமரையிலை மருவுநீர்' என்னுங் கருத்தைச் 'சரோருகசதனம்' என்றார் பிறரும்.

வடமலைவெண்பா.

வடமலை:—திருவேங்கடமென்னுந் திருப்பதி. தமிழ் நாட்டிற்குவடமலையாகக் கூறுமியல்பிற்றாதலின் வடமலையெனும் பெயர்த்தாயிற்று. இது கருவியாகுபெயராய் நூலையுணர்த்திற்று. இதன் இலக்கண முதலியவற்றை நம்பாட புத்தகத்தின் குறிப்புரையிற் காண்க. பின்னிரண்டடிகளிற் கூறியிருக்குந் திருக்குறள்களுக்குப் பரிமேலழகருரையே யெழுதப்பட்டுளது.

1. உரை:—வடமலையே!—, சூரியற்கு முன்னடந்து-சூரியனுக்கு முன்னேநடந்துகொண்டே, சொல்லுநூல்-அவன் கூறியநூலினைக் கற்றறிந்தான்—, (யாரெனில்), வாரிகடந்தோன்-சமுத்திரத்தைக்கடந்தவனாகிய அநுமான்; (ஏனென்றால்), நேரே - நேரிதாக உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்-(பிறைநிலைமுனியாதுகற்றல் நன்றாதலான்) செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறு போலத்தாமும்ஆசிரியர்முன் ஏக்கற்றுநின்றுங் கற்றார்தலையாயினார் கல்லாதவர் கடையரே - அந்நிலைக்கு நாணிக்கல்லாதவர் எஞ்ஞான்று மிழிந்தாரேயாவார்.

குறிப்பு:—ஆசிரியர்முன் ஏக்கற்று நின்று கல்விகற்றற்கு உதாரணமாக ஆஞ்சநேயர் சூரியன்முன்புபின்புறமாக நடந்துகொண்டே நவவியாகரணங்களையும் ஓதியுணர்ந்த கதையையீண்டு எடுத்துக்காட்டினார். ஆறுநாட்களில் அவர்கற்றுக் கொண்டதாகப் பெரியார் கூறுப. உடையார் இல்லாரென்பன உலகவழக்கு. ஏக்கறுதல்: ஆசையாற்றாழ்தல். கடையரென்றதனான் அதன்மறுதலைப் பெயர் வருவிக்கப்பட்டது. பொய்யாய மானநோக்கி மெய்யாய கல்வி யிழந்தார் பின்னொருஞான்றும் அறிவுடையராகாமையின் கடையரே யென்றார். இதனாற் கற்றாருயர்வுங் கல்லாரதிழிவுங் கூறப்பட்டன

2. உரை :—வடமலையே!—, நீள் நிலத்து-நீண்ட நிலவுலகத்தில், கல்லாதார் மேற்பிறந்தார் ஆயினும் - கல்லாதார் உயர்ந்த சாதிக்கட் பிறந்தாராயினும், கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்துப்பாடு இலர் - தாழ்ந்த சாதிக்கட் பிறந்து வைத்துங் கற்றாரது பெருமையளவிற்றாய பெருமையிலர்; (உதாரணமாக), ஊன்வணிகன் - மாம்சவியாபாரஞ் செய்யும் ஒரு பஞ்சமன், உலகம் காண - உலகினுள்ளாரறியும்படி, கவுசிகனுக்கு - கௌசிகன் என்னும் மறையவனுக்கு, மாண அறஞ் சொன்னான் - மாட்சிமை பொருந்திய வருணாச்சிரம தர்மங்களைக் கூறினான்.

குறிப்பு :—தன்தலையின்மேல் எச்சமிட்டவொரு கொக்கினை வெகுண்டு நோக்க அஃதெரிந்தமையின் அகங்களித்த கௌசிகன் என்பானொரு மறையவன் பிச்சையெடுப்பான் ஓரில்லம்புக, ஆங்குக் கணவனது பணிவிடையி லிருந்தமையின் பிச்சைப் யெடுத்துவரக்காலந் தாழ்த்தாச்சிறிது போழ்து சென்றபின்னர்ப் பலியெடுத்துவந்த பதிவிரதையினையும் சீறி நோக்க, அன்னாள் 'யானுங் கொக்கல்லேன்' என்று இளநகை புரிந்து வறிதே செல்லா நிற்புழி, இறும்பூதடைந்த மறையவன் அவள்பாதத்தில் வீழ்ந்து தனக்கருள் புரியவேண்டலும் அம்மாது, அவ்வூரிற் புலைத்தொழில் புரியும் ஊன்வாணிகன்பாற் செல்லுமாறு விடுக்க, அன்னணஞ்சென்ற அந்தணன் அப்புலையன் பால் வருணாச்சிரம தர்மங்களைக் கேட்டறிந்தான் என்பதீண்டுக்குறித்த கதை. இனிக் கவுசிகன் என்பதற்கு விசுவாமித்திரன் என்று பொருள் கூறல் இங்குப்பொருந்தாமையறிக. உடலோடொழியுஞ் சாதியுணர்ச்சியினும் உயிரோடு செல்லுங்கல்வியுயர்ச்சி சிறப்புடைத்தென்பதாம். இதனால் அவர் சாதியுணர்ச்சியாற் பயனின்மை கூறப்பட்டது.

3. உரை :—வடமலையே!—, எனைத்தானும் நல்லவைகேட்க-ஒருவன் சிறிதாயினும் உறுதிப் பொருள்களைக் கேட்க,—அனை

தாலும் ஆன்ற பெருமைதரும் - அக்கேள்வி அத்துணை யாயினும் நிறைந்த பெருமையைத் தருமாகலான்; (உதாரணமாக), நான்மறைதேர் சங்கர்தமை - நான்கு வேதங்களையும் நன்குணர்ந்த முனிவராகிய அடியாரிடத்தில், நல்லறங்கள் கேட்ட அவன் - நல்ல அறமார்க்கங்களைக் கேட்டுணர்ந்த வொரு வேடன், வான்மீகியானான் - வால்மீக முனிவனாயினன்.

குறிப்பு :—இராமாயணஞ் செய்தவான்மீகர் ஒருகாலத்து வேடராயிருந்து ஒரு முனிவரான் ஞானோபதேசஞ் செய்யப்பெற்றவர். வன்மீகம் : புற்று. எனைத்து, அனைத்து என்பன கேட்கும் பொருண்மேலுங் காலத்தின் மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளி போல வந்திண்டி எல்லாவறிவுகளையு முளவாக்கலின், சிறிதென்றிகழற்க வென்பதாம். சங்கமர் : அடியார். 'சங்கமர்' என்பது 'சங்கர்' என நின்றது.

4. உரை :—வடமலையே!—, சென்ற இடத்தால் செலவிடா- மனத்தை அது சென்ற புலத்தின்கட் செல்ல விடாது, தீது ஒரீஇ நன்றின் பால் உய்ப்பது அறிவு - அப்புலத்தின் நன்மை தீமைகளை யாராய்ந்து தீயதனி னீக்கி நல்லதன் கட்செலுத்துவது அறிவு; (உதாரணமாக), மிக்க - அறிவுமிக்க, அருச்சுனனார்—, வேண்டும் - தம்மை விரும்பிய, உருவசியாம் மைக்குழலை - ஊர்வசியாகிய மேகம் போன்ற கூந்தலையுடையவளை, நீத்தார் - மறுத்தார்.

குறிப்பு :—வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமெனப் புலம் ஐந்தாயினும், ஒரு காலத்து ஒன்றின்கணல்லது செல்லாமையின், இடத்தாலென்றார். 'விடாது' என்பது ஈறு தொக்கு நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதவன்போல வேறாக்கி மனத்தைப்புலமறிந்து செலுத்துவது அறிவென்றார், அஃது உயிர்க்குணமாகலின். அருச்சுனன் ஈசனை நோக்கித்தவம்புரிந்து பாசுபதம் பெற்று இந்தி

ரன் வேண்டுகோளால் அமராவதி சென்று நிவாதகவசகாலகேயர் களைவதைத்து இந்திரனுடன் வதிதரும் போழ்து தன்னைக்கண்டு காமுற்ற ஊர்வசியின் வேண்டுகோட்கிணங்காது மறுத்தகதையே யீண்டுக் குறித்தது. ஊர்வசி: நாராயணமுனிவரது ஊரு (தொடை) யிற் பிறந்தவள்; ஒரு தேவதாசி. ஓரீஇ : சொல்லிசையளபெடை; இதன் சாதாரண உருவம் 'ஒருவி'.

5. உரை :—வடமலையே !—, தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றங் காண்கிற்பின் - முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர் குற்றங்காண வல்லனாயின்,—இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது? (ஒன்றுமில்லை); (உதாரணமாக) ஆறு அன்று என - (கதவைத் தட்டியது) செங்கோன் மார்க்கத்திற்கு விருத்தமான தென்று, கதவு தொட்டகரம் அறுத்து-கதவைத் தட்டியகையினை அறுத்து, மாறன் உயர்ந்தான்- பாண்டியன் உயர்நிலை யடைந்தான்.

குறிப்பு :—ஈண்டுக் குறித்த கதை பொற்கைப் பாண்டியன் கதை. மதுரையிலரசாண்ட இம்மன்னன் ஒருநா ளிரவில் நகரி சோதனை வரும்பொழுது காசி சென்றிருந்த வொரு பார்ப்பனன் வீட்டில் அரவங்கேட்டு, வேதியன்றிரும்பியதை யுணராதவனாய் சந்தேகங்கொண்டு, கதவைத்தட்டினான். பிறகு அம்மனைக்குரிய வேதியன்றானென வுணர்ந்து தவறியதற்காக தன்கையினை வெட்டி யெறிந்து ஏனைய இல்லங்களின் கதவங்களையுந் தட்டி யரண்மனை சார்ந்து இழந்தகைக்குப் பொன்னாற் கையமைத்துப் பொற்கைப் பாண்டியன் என்னும் பெயரும் பெற்றான். அரசனுக்குத் தன் குற்றங் கடியாவழியே பிறர் குற்றங்கடிதல் குற்றமாம். அது கடுந் தவழிமுறை செய்தலா மென்பார், என் குற்றமாகு மென்பார். எனவே, தன்குற்றங்கடிந்தவனே முறை செய்தற்குரியவ னென்ப தாயிற்று.

6. உரை :—வடமலையே !—, உற்ற நோய் நீக்கி-தெய்வத்தானுக மக்களானுகத் தனக்குவந்த துன்பங்களை நீக்குமாறறிந்து நீக்கி, உறுமை முற்காக்கும் பெற்றியார் - பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையினையுடையாரை, பேணிக்கொளல் - அரசன் அவர் உவப்பனசெய்து துணையாகக் கொள்க; (உதாரணமாக) இந்திரற்கு - இந்திரனுக்கு, பாதகத்தை நீக்கி - பிரமகத்தி தோடத்தைப்போக்கி, இகல் அரசு - வலிமை பொருந்திய அரசாட்சியினைக் கொடுத்தான்.

குறிப்பு :—இந்திரனுக்கு விச்சுவரூபன், விருத்திரன் முதலியவர்களைக் கொன்றமையான் பிரமகத்தி யுண்டாக பிரகஸ்பதி பகவான் அப்பழியை நீக்கி அவனுக்கு அரசளித்தாரென்பது கதை. பெற்றி : தன்மை. தெய்வத்தான் வருந்துன்பங்களாவன மழையின்றின்மை மிகுதிகளானும், காற்றுத் தீப்பிணியென் றிவற்றானும் வருவன. அவை கடவுளரையுந் தக்கோரையும் நோக்கிச் செய்யுஞ் சாந்திகளானீக்கப்படும், மக்களான் வருந்துன்பங்களாவன பகைவர், கள்வர், சுற்றத்தார் வினைசெய்வா ரென்றிவர்களான் வருவன. அவை சாமபேததான தண்டங்களாகிய நால்வகை யுபாயத்தின் பற்றநீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தான் வருவன வற்றை உற்பாதங்களானறிந்து, அச்சாந்திகளாற் காத்தலும்; மக்களான் வருவனவற்றை அவர் குணம் இங்கிதம் ஆகாரம் செயல் என்பனவற்றானறிந்து அவ்வுபாயங்களு ளொன்றாற் காத்தலுமாம். ஆகவே புரோகிதரையும் அமைச்சரையுங் கூறியவாறாயிற்று. இங்கிதம் குறிப்பானிகழும் உறுப்பின்றொழில். ஆகாரம் குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன நன்கு மதித்தன் முதலியன.

7. உரை :—வடமலையே !—, கைகேயி - கைகேயியானவள், கூனிமொழி கேட்டு-கூனியின் சொல்லைக்கேட்டு, கொடியவளாய்-தீயபுத்தியை யுடையவளாய், மால் நிலம் கொண்டாள் - திருமா

லாகிய இராமனுக்குரிய நிலத்தைக் கைக்கொண்டாள்; (ஏனெனில்), ஆறு - கெடாத, நிலத்தியல்பான் நீர் திருந்து அற்றாகும் - தான் சேர்ந்த நிலத்தினதியல்பானே நீர் தன்றன்மை திரிந்து அந் நிலத்தின் றன்மைத்தாம்; மாந்தர்க்கு இனத்தியல்பு அறிவு (திரிந்து) அதாகும் - அதுபோல மாந்தர்க்குத்தாஞ் சேர்ந்த இனத்தினதியல்பானே அறிவுந் தன்றன்மை திரிந்து அவ்வினத்தின்றன்மைத்தாம்.

குறிப்பு:—எடுத்துக்காட்டுவமை. விசும்பின் கட்டன்றன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்தவழி, நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போலத் தனி நிலைக்கட்டன் றன்மைத்தாய வறிவு பிறவினத்தோடு சேர்ந்த வழிக்காட்சி முதலிய தொழில்கள் திரியுமென இதனால் அதனது காரணங்கூறப்பட்டது. ஒப்பணி. 'மாநிலம்' என்ற பாடத்திற்குப் பெரிய நிலமென்க. 'ஆறு நிலம்' என்று திருத்துக.

8. உரை:—வடமலையே!—, தேரின் - ஆலோசித்தால், ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் - தம்மையொறுக்கு மியல்புடையாரிடத்தும், கண்ணோடிப் பொறுத்தாற்றும் பண்பே தலை - கண்ணோட்டமுடையராய்க் குற்றத்தைப் பொறுக்குமியல்பே அரசர்க்குத் தலையாய வியல்பாவது; (உதாரணமாக), பாரியைக் கொண்டு ஓடும் சயிந்தவனை-மனைவியாகிய திரௌபதியைத் தூக்கிக்கொண்டு ஓடிய சயிந்தவனை, பார்த்து - கண்ணுற்று, அருளின்வாரி பொறுத்தான் - கருணைக்கடலாகிய தருமபுத்திரன் பொறுத்தருளினான்.

குறிப்பு:—சயிந்தவன்: சிந்து தேசாதிபதி; பாண்டவர்கள் வனவாசம் செய்யுழித்தனித்து ஆச்சிரமத்திலிருந்த திரௌபதியைத் தூக்கிச் சென்றனன். பிறகுபீமசேனனாற் பிடிக்கப்பட்டு அவமானமடைந்தனன். பண்பினாரென்றதனால் அவர் பயிற்சிபெற்றாம். ஒறுத்தாற்றும், பொறுத்தாற்று மென்பன ஒண்டொருசொன்னீர.

9. உரை:—வடமலையே!—, மெய்யே-உண்மையாகவே. மயிர் நீப்பின் வாழாக்கவரிமா அன்னார் - தன் மயிர்த்திரளின் ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமாவை யொப்பார், மானம் வரின் உயிர் நீப்பர் - உயிர் நீக்கத்தான் மானமெய்து மெல்லைவரின் அதனைத்தாங்காதிறப்பார்; (உதாரணமாக), வையம்புகழ - உலகி லுள்ள உயர்ந்தோர்கள் புகழும்படி, எய்து பழிகண்டு - தமக்கு நேரும் அவமானத்தை முன்னறிந்து, எழுபதின்மர் மாய்ந்தார் - எழுபதின்மர் இறந்தார்.

குறிப்பு :—'கமரி' என்பதைக்'கவரி' யென்று மாற்றுக. எய்து பழி : வினைத்தொகை. வையகம் : எல்லாப் பொருட்கும் வைப்பி டம். இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உயிரும் மான மும் உடனில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரை நீத்து எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை யெய்துவரென்பதாம். இஃது உவமையணி. "மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே", "மயிர் தான் நலம்படா மாவிற்குக் கூற்றம்" என்னும் பாவடிகளை யுற்று நோக்குக.

தாயுமானவர் பாடல்.

நூலாசிரியர் சரித்திரத்தை நமது பாடபுத்தகத்தின் பின் னர்ச் சேர்க்கப்பட்டுள்ள குறிப்புரையிற் பார்க்க.

1. உரை :—எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும் என் இதயமும் ஒடுங்கவில்லை - நான் பலவிதங்களிலும் கற்றும் கே ட்டும் இருந்தாலும் என் மனம் அடங்கி நிற்கவில்லை, யானெனும் அகந்தைதான் எள்ளளவு மாறவிலை - யான் எனது என்று கூறும் அகங்காரம் சிறிதேனும் என்னை விட்டு நீங்கவில்லை, யாதினும் அபி

மானம் என் சித்தமிசை குடிகொண்டது - எல்லாப் பொருள்களை யுமடைய இச்சை என் மனதில் மேம்பட்டு நின்றது, ஈகையோடு இரக்கம் என் ஜன்மத்து நான் அறிகிலேன் - கொடையும், பச்சாத்தாபமும் என் வாழ்நாளில் நான் என்னிடத்திற் கண்டறிந்திலேன், சீலமொடு தவவிரதம் ஒரு கனவிலாயினும் தரிசனம் கண்டுமறியேன் - நல்லொழுக்கத்தையும் தவத்தையும், விரதங்களையும் கனவிலுங்கூடப் பார்த்திலேன், பொய்த்தமொழி யல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி புகன்றிடேன் - பொய்வாசகமன்றி மருந்துக்கேனும் மெய்ம்மையைச் சொன்னேனல்லேன், பிறர் கேட்கவே போதிப்பது அல்லாது, அயலார் கேட்க உரைப்பதல்லாது சும்மாவிருந்து அருள் பொருந்திடாப் பேதைநானே-வினை காலங்கழித்து ஈசுவரனது கிருபையை அடையப்பெறாத அறிவிலினானே, அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா அவனிமிசை உண்டோ சொலாய் - அவ்வளவு நற்குணமில்லாதவர் நீ கண்டிருக்கிறுயா அல்லது கேட்டாவதிருப்பாயா (அல்லது) இப்பூமியின்கண் அத்தகைய மாக்தர் உற்பவித்தாயினு மிருக்கிறுர்களா நீயே சொல்வாய், அண்டபகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகி ஆனந்தமான பரமே - சர்வாண்டங்களிலும் வியாபித்து நிறைந்துள்ள ஆநந்த ஸ்வரூபமான பரம்பொருளே.

குறிப்பு:—எள்ளளவு - சிறுமையைக் குறிக்க வந்தது; ஜென்மம், தெரிசனம் - வடசொற்கள். மருந்துக்கு - சிறிதளவேனும். மலரின் மணம் அதனிடத்து அத்வைதமாய் நின்று எல்லா விடங்களிலும் பரவி நிற்றல்போலக் கடவுளும் சர்வாண்டங்களிலும் சராசரப்பொருள்களி லிரைந்திரும் அருபியாய் நிற்றலை இவ்விடம் குறித்தார்.

2. உரை:—கல்லேனும் ஐய ஒரு காலத்தில் உருகும்—, என் கல் நெஞ்சம் உருகவிலையே - (ஆனல்) என் கற்போன்ற மனம்

உருகவில்லையே, கருணைக்கிணங்காத வன்மையையும் நான்முகன் கற்பிக்க வொரு கடவுளோ - அடியேன்மீது கொண்ட கிருபைக்கும் இணங்காத கல்நெஞ்சமும் பிரமன் படைப்புவலியின் உட்பட்டதா, வல்லான் வகுத்ததே வாய்க்காலெனும் பெருவழக்குக் கிழுக்குமுண்டோ - வல்லமையுள்ளவன் குறித்ததே யாவர்க்கும் செல்லும் வழியென்று சொல்லப்படுகின்ற பெரிய வழக்கத்திற்கும் பழுதுவந்து விடுமோ, வானமாய் நின்றின்பமழையாய் இரங்கி எனை வாழ்விப்பது உன்பரம் காண் - நீ ஆகாயமாய் நின்று இன்பவாரியாய்த் துளித்து என்மீது கிருபை கொண்டு என்னைக் காப்பாற்றுவது உன் பொறுப்புத்தான், பொல்லாத சேயெனில் தாய் தள்ளல் நீதமோ புகலிடம் பிறிதுமுண்டோ-தாய் தன் குழந்தை துஷ்டன் என்று நீக்கிவிடுதல் நியாயமோ அப்படியே நீக்கிவிட்டாற் குறைகூறிக் கொள்வதற்கேனும் வேறு யாரேனுமுண்டோ, பொய் வார்த்தை சொல்லிலோ திருவருட்கயலுமாய் புன்மையேனுவன் அந்தோ - அசத்தியத்தைக் கூறுவேனானல் நின் திருவருட்கு அந்நியனாய் மிகவும் அற்பனாவேன் ஐயோ! சொல்லான் முழங்கிலோ சுகமில்லை-வெறும் வார்த்தையைப் பிதற்றி அலைவேனானாலும் பயனில்லை, மௌனியாய்ச் சும்மாவிருக்க அருளாய்-(ஆதலால்) நான் பேசாமலிருந்து மௌன நிலையையடையக் கடாக்ஷிப்பாய், சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே சுகவாரியே -பரிசுத்தமாயும் மலசம்பந்தமற்று சற்குணம் நிறைந்த பரம்பொருளே! ஜோதிஸ்வரூபியே! இன்பக் கடலே!

குறிப்பு :—ஐய - ஐயனே; நான்முகன் - பிரமன்; பிரமன்சக்திக்கு மற்றது. பரம் - பாரம் : பொறுப்பு, கடன்.

3. உரை :—கந்துக மதக்கரியை வசமாநடத்தலாம் - கட்டுத்தறியையுடைய மதயானையையும் வசப்படுத்தி நடத்தலாம், கரடி வெம்புலி வாயையும் கட்டலாம் - கரடியையும் கொடிய புலியை

யும் வாயைக்கட்டலாம், ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம் - சிங்கத்தையும் வாகனமாய்க் கொள்ளலாம், கட்செவி எடுத்தாட்டலாம் - பாம்பையும் எடுத்தாட்டலாம், வெந்தழலின் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம் - செந்நெருப்பில் ரசத்தை வைத்துப் பஞ்சலோகத்தையும் இரசவாதஞ்செய்து விற்றுச் சீவிக்கலாம், வேறொருவர் காணாமல் உலகத்து உலாவலாம் - மற்றெவருமறியாமற் பூமியின்கண் திரியலாம், விண்ணவரை ஏவல் கொளலாம் - தேவரையுஞ் சேவகங் கொள்ளலாம், சந்ததமும் இளமையோடிருக்கலாம் - எக்காலத்திலும் பாலியனாகவே வாழலாம், மற்றொரு சரீரத்திலும் புகுதலாம் - வேறொருவர் கூட்டிலும் உட்புகலாம், சலமேல் நடக்கலாம் - தண்ணீர்மேலும் நடக்கலாம், கனல்மேலிருக்கலாம் - நெருப்பின் மேலுமிருக்கலாம், தன்நிகரில் சித்திபெறலாம் - ஒப்பற்ற சித்தராகவுமாகலாம், சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற - மனவோட்டத்தை நிறுத்திச் செயலற்று நிற்கும், திறமரிது - வல்லமை அருமையானது; சத்தாகி என் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே தேசோமயானந்தமே - எல்லாப்பொருள்களிலும் பயனாகி என் மனதை யாட்கொண்ட மெய்ஞ்ஞானக் கடவுளே! தேசோமயானந்தமே.

குறிப்பு :—கந்துகம் - கட்டுத்தறி. குதிரை யெனினு மொக்கும். கட்செவி - கண்ணையே செவியாக வுடையது ; பாம்பு. இரதம் - பாதரசம் (Mercury.) வேதித்து - பேதித்து. தாழ்ந்த உலோகங்களை உயர்ந்தவைகளாகக் காட்டல், இரசவாதஞ் செய்தல். தேசோமயம் - சோதிமயம்.

4. உரை :—என்னைப் பாராயோ - என்னைக் கண்ணைத்திறந்து பார்க்க மாட்டாயா, முகம் பார்த்தொருகால் என் கவலை தீராயோ - என் முகத்தை ஒருகாலத்திற் பார்த்து மனக்கவலையைத் தீர்க்கமா

ட்டாயா, வாய்திறந்து செப்பாய் - வாயைத்திறந்து சொல்வாய், பராபரமே - பராபரவஸ்துவே.

குறிப்பு :—பராபரம் : எல்லாவற்றிற்கும் மேலானது.

5. உரை :—ஓயாதோ என் கவலை - என்மனக் கவலை எந்நாளும் ஒழியாதோ, உள்ளே ஆநந்தவெள்ளம் பாயாதோ—, ஐயா—, பகராய் - சொல்லாய், பராபரமே—.

6. உரை :—ஓகோ!—, உனைப் பிரிந்தாருள்ளம் - உன்னைப் பிரிந்தவர் மனம், கனலில் வைத்த பாகோ மெழுகோ பகராய் - நெருப்பினில் வைத்த பாகோ மெழுகோ சொல்லாய், பராபரமே—.

குறிப்பு :—மனவுருக்கத்திற்கு இவை உவமை கூறப்பட்டன. ஐயவணி.

7. உரை :—கூர்த்த அறிவு அத்தனையும் - கூர்மையான அறிவு அத்தனையும், கொள்ளை கொடுத்து - உனக்குப் பறிகொடுத்து, உன் அருளைப் பார்த்தவன் நான் - உன்னுடைய அநுக்கிரகத்தை எதிர் பார்த்தவன் நான், (ஆகையால்) என்னை முகம் பாராய் - என்னைக் கருணையுடன் முகம் பார்த்திரக்ஷிப்பாய், பராபரமே—.

8. உரை :—கடலமுதே - கடலினின்று உற்பவித்த அமிர்தமே! தேனே—! என் கண்ணே—!, கவலைபட முடியாத - மனச்சஞ்சலத்தை சகிக்கக் கூடாத, என்னை—, முகம்பார் நீ - கண்பார்த்தருள்வாய், பராபரமே—.

குறிப்பு :—இது பலபடப் புனைவணி அகரந்தொகுத்தல்.

9. உரை :—உள்ள மறிவாய் - எனது மனதை உள்ளபடி நீ தெரிந்திருக்கிறாய், உழப்பறிவாய் - வருத்தத்தையு மறிவாய், நான் ஏழை—, தள்ளி விடின் மெத்தத் தவிப்பேன் - நீ என்னைக் கருணையளியாமல் நீக்கிவிடில் மிகவும் வருத்தமடைவேன் பராபரமே—

10. உரை:—கன்றினுக்கு—, சேதா - நல்ல பசுவானது, கனிந்திரங்கல் போல - உருகி இரங்குவது போல, எனக்கு என்று இரங்குவாய் கருணை - எனக்கு எக்காலத்தில் நின் தயையை அளிப்பாய், எந்தாய் - எந்தந்தை போல்பவனே, பராபரமே—.

குறிப்பு :—சேதா : செம்மை+ ஆ. 'ஈறு போதல்' என்னுஞ் சூத்திரத்தாற் கொள்க.

11. உரை :—எண்ணாத எண்ணமெலாம் எண்ணி - எண்ண முடியாத பல எண்ணங்களையும் நான் எண்ணுவதனால், ஏழை நெஞ்சம்புண்ணாகச் செய்தது இனிப்போதும் - பரிதபிக்கத்தக்க என் மனதைப் புண்படுத்திவிட்டது இனிமேற் போதும், பராபரமே—.

12. உரை :—ஆழித் துரும்பு எனவே - கடலிலிட்ட புல்லெனவே, அங்குமிங்கும் - எவ்விடத்திலும், உன்னடிமை - உன் அடியானாகிய நான், பாழில் திரிவது என்ன பாவம்-வீணே அலைவது ஐயோ! என்ன கஷ்டம்!, பராபரமே—.

குறிப்பு :—சமுத்திரத்திலிட்ட துரும்பு அலைமோதுந்தோறும் பற்பல துறைகளில் தாக்குவது போல பற்பல விடங்களிலும் நான் திரிந்தலைகிறேன்.

13. உரை :—கற்ற அறிவால் - நான் கற்ற சிற்றறிவால், உனை நான் கண்டவன்போல் கூத்தாடில் - உன்னை நான் முழுவதுந் தெரிந்தவன்போல் அகமகிழ்ந் தாடினால், குற்றமென்று என்நெஞ்சே கொதிக்கும் - என் மனதே நான் செய்தது பிழை யென்று வெதும்பும், பராபரமே—.

14. உரை :—சொன்னத்தை சொல்வதல்லால் - முன்கூறியதையே திரும்பவுங் கூறுவதல்லாமல், சொல்லற என் சொல் உறுதிக்கு - வார்த்தையா லல்லாமல் நான் கூறுவதற்கு உறுதியாக, என்னத்தைச் சொல்வேன் எளியேன் - புல்லிய அறிவுடைய நான் எதைக் கூறுவேன், பராபரமே—.

குறிப்பு :—சொன்னதை : சொன்னத்தை என்றுபடிக்க.

15. உரை :—சொல்லும் பொருளுமற்று - சொற்களும் அவைகளுக்குப் பயனாகிய பொருளுமில்லாமல், சும்மா இருப்பதற்கே- செயலற்று வாழ்வதற்கே, அல்லும் பகலும் எனக்காசை - இராப்பகலாகிய எக்காலங்களிலும் எனக்கு இச்சை, பராபரமே—.

16. உரை :—கொல்லா விரதம்-ஜீவவதை செய்யாமைமுதலிய அநுஷ்டானங்களை, குவலயம் எல்லாம் ஓங்க - உலகமெங்கும் தழைக்க, எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை - எல்லா மாநுடர்களுக்கும் போதிப்பது எனது விருப்பம், பராபரமே—.

17. உரை :—அன்னையிலாச் சேய்போல் - தாயிழந்த குழவி போல், அலக்கணுற்றேன் - துன்பத்தை யடைந்தேன், கண்ணார - மனப்பூர்வமாய், என் அகத்தில் தாய் போலிருக்கும் - என்னிருதயத்தில் தாயைப்போற் குடிகொண்டிருக்கும், பராபரமே—.

18. உரை:—மார்க் கண்டர்க்காக - மார்க்கண்டனெனும் அடியனுக்காக, மறலிபட்ட பாட்டை - யமன் அடைந்த துன்பத்தை, உன்னிப் பார்க்கின்-நினைத்துப் பார்த்தால், அன்பர்க்கு என்ன பயங் காண் - பக்தர்களுக்கு எக்காலத்திலும் பயமில்லை, பராபரமே—.

குறிப்பு :—மார்க்கண்டர் என்பவர் மிருகண்டேயர் என்னும் ருஷியின் புதல்வர் ; இவர் மிகவும் சிறந்த சிவபக்தர்-கடவுளாலளவிட்ட பதினாறுவயது முடிந்து யமதூதர்கள் வந்திழுக்குங் காலை சிவலிங்கத்தைத் தழுவக் காப்பாற்றப் பட்டனர் - இத்திருவிளையாடல் நடந்த ஸ்தலம் திருக்கடவூர். இது வேற்றுப் பொருள் வைப்பணி.

19. உரை :—நீர்க்குமிழிபோல் என் நினைவு - நீரில் உண்டாகும் குமிழிபோல் நிலையற்ற என் எண்ணங்கள், வெளியாய்க் கரைய - எல்லாருக்கும் புலப்படும்படி அழிந்துபோக, பார்க்குமிட

மெல்லாம் என்பார்வை - யார்க்கும் காணும் பொருள் நானனே
ன், பராபரமே—.

குறிப்பு :—நீர்க்குமிழி சிறிது நின்று அழிவதற்கு உவமானங் கூறினர்.

20. உரை :—ஆடியோய் பம்பரம்போல் - பம்பரம்போல் திருநடனஞ்செய்த சிவபிரானே !, ஆசையுடன் எங்கும் உனைத் தேடி ஓய்கின்றேனை - மிகவும் ஆவலுடன் எவ்விடத்திலும் உன்னை ப்பார்க்க ஆராய்ந்து களைத்தேன், என் செய்வேன் - இந்நிலையில் யான் செயற்பாலது யாது ? பராபரமே—.

குறிப்பு:—பதஞ்சலி வியாக்கிரபாதர் வேண்டுகோட்கிணங்கிப் பொன்னம்பலத்திற் சிவபிரான் ஆநந்தக் கூத்தாடியருளினர். பம்பரம் ஆடி ஓய்கின்ற தன்மைபோல் நானுமுன்னைத் தேடுவதில் அலைந்து ஓய்ந்தேன் என்றலுமாம்.

21. உரை :—வேதாந்தம் சித்தாந்தம் வேறென்னர் - வேதாந்தம் சித்தாந்தம் வெவ்வேறு என்று கூறுது சமரச நிலையிலுள்ளார், கண்களிக்க - ஆநந்த மடையும்படி, நாதாந்தமோன நலமே- நாதங்களுக்கு முடிவான மௌன நிலையில் விளங்கும் அழகே, பராபரமே—.

குறிப்பு:—வேதாந்தம்: ஜீவான்மா பொய்யென்னல்; சித்தாந்தம்: ஜீவான்மா மெய்யென்னல். இவ்விரு கொள்கைகளையுங் கொள்ளாத நிலையிலுள்ளோரை இவ்விடத்தில் 'வேதாந்தஞ் சித்தாந்தம் வெறென்னர்' என்றூர். நாதம் + அந்தம் - நாதாந்தம். வடமொழிப் புணர்ச்சி யாதலின். நாதம் - சப்தம், அதற்கு அந்தம் (முடிவு) மோனம், அதாவது மௌனநிலை. நலமே அழகு; கண்களைக் களிப்பித்தல் அழகாதலின்.

மனோன்மணீயம்.

இந்நூலை யியற்றியார் திருவநந்தபுரம் மகாராஜா காலேஜ் தத்வசாஸ்திர போதகாசிரியரா யிருந்த சுந்தரம் பிள்ளை என்பார். இவர் ஆங்கிலத்திலும் மிகவுந் தேர்ச்சியடைந்து எம். ஏ. என்னும் பட்டமும் பெற்றனர். இவரியற்றிய கிரந்தம் 'மனோன்மணீயம்' என்னும் இந் நாடகம். இந்நாடகத்தின் கதை ஆங்கிலத்தில் லிட்டன் (Lytton) என்பவர் எழுதிய 'Lost Tales of Miletus or The Secret way' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இந்நூல் முழுதும் பெரும்பாலும் அகவற் பாவிலேயே எழுதப் பட்டுளது.

மன + உன்மனியம் அதாவது மனதை ரமிக்கச் செய்வது என்பது பொருள். சிவகாமி சரிதை: இது குறள் வெண் செந்துறையில் எழுதப்பட்டுளது. இச்சரிதை Goldsmith என்னும் ஆங்கிலக்கவிஞன் எழுதிய 'The Hermit' என்னும் பிரபந்தத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஒரு நள்ளிரவில் நிலாமுற்றத்தில் புருஷோத்தமவர்மனைக் கனவிற் கண்டு காமுற்று வருந்துகின்ற மனோன்மணியாழில் பாடியது.

1. உரை:—மன்னுலகில்-இப்பூவுலகத்தின் கண், காவிரிப்பூமாநகரில் - காவிரிப்பூம்பட்டினம் என்னும் வளப்பம் பொருந்திய நகரில், செல்வவணிககுலதிலகமென - மிகவும் செல்வம் வாய்ந்த வாணிககுலமாகிய வதனத்திற்கு ஓர் திலகமென மிளிர்ந்து, வாழ்வள் ஒரு மங்கை - ஒரு ஸ்திரீ வாழ்ந்துகொண்டிருந்தாள், எண்ணரிய குணமுடையாள் - அவள் எண்ணுதற்கரிய குணம் வாய்ந்தவள், இவள் வயிற்றில் உதித்தோர் - இவள் வயிற்றில் உற்பவித்தவர்கள், இருமகளிர் ஒரு புருடர் என்ன - இரண்டு மகள்களும் ஒரு புருடனும் ஆக, அவர் மூவர் - அவர் மூன்று பேர்களாவார்.

குறிப்பு :—காவிரிப்பூம்பட்டினம் : இது காவிரி மகா நதிசங்க முகத்திலிருக்கிறது. இதனைப்புகார் எனவுங் கூறுவர். மங்கை : இது ஸ்திரீயின் ஒரு பருவத்தைக் குறிக்குமேனும் இவ்விடத்திற் பொதுவாகக் கூறினர். எண்ணரிய : அஷ்ட அரிய குணங்களுமாம்.

2. உரை :—ஒப்பரிய - நிகரற்ற, இப்புருடர்க்கு ஓர் புதல்வர் உதித்தார் - இம்மகனுக்கு ஒரு ஆண்மகன் பிறந்தான், ஒருத்தி மகள் யான்பாவி - ஒரு மகளுடைய பாவியாகிய பெண்தான் நான், ஒருத்தி முழுமலடி - மற்றொரு மகளோ முழுமலடி (மகப்பேறில்லாதவள்), செப்பரிய அம்மலடி செல்வம் மிகவுடையள் - அம்மலடியானவள் சொல்லுதற்கரிய அளவற்ற செல்வத்தைப் படைத்தவள், செகமனைத்தும் அவள் படைத்த செல்வமென மொழிவர் - பூமி முழுவதையும் அவள் கொண்ட ஐசுவரியமெனக் கூறுவர்.

குறிப்பு :—ஒப்பரிய என்றதனால் மிகையுமின்மை கூறியபடி.

3. உரை :—உடல்பிரியா - உடலைவிட்டு நீங்காத, நிழல்போல - சாயைபோல, ஒதியவப் புதல்வர் உடன்-முன் சொல்லிய அம்மகனுடன், கூடி விளையாடி—, ஒன்றாக வளர்ந்தேன் - ஒருமிக்க வளர்ந்து வந்தேன், அடல்பெரியர் - வல்லமையில் மிகவும் பெரியர், அருளுருவர் - கிருபையே வடிவெடுத்து வந்தோர், அலகில் வடிவுடையார் - எல்லையிறந்த அழகையுடையவர், அவருடைய திருநாமம் அறைவேனோ அடிகாள் - அப்பேர்ப்பட்ட அவருடைய பெயரைச் சொல்வேனோ சுவாமிகளே.

குறிப்பு :—திருநாமம் அறைவேனோ என்று கூறியது அவள் தன் கணவனாக எண்ணியதனால். அப்படி எண்ணுவதற்குக் காரணம் 'அடல்பெரிய ரருளுருவ ரலகில் வடிவுடையார்' எனவுங் கூறியிருக்கிறார்.

4. உரை :—மலடி சிறுதாய் - மலடியான என் சிறுதாய், படைத்த மதிப்பரிய செல்வம் - உடையளாயிருந்த அளவிடுதற் கருமையான அச்செல்வத்தை, மடமகளென்று எனக்களித்தாள் - மிகவும் இளமை யுள்ளவளென்று எனக்கு அச்செல்வத்தைக் கொடுத்தாள், மயங்கியதில் மகிழ்ந்து - அது பெற்றதனுல் மதி மயங்கி அதில் மிகவும் ஏமாப்படைந்து, தலைதடுமாறு - செருக் கடைந்ததனுற் சிறிது சுயபுத்தியையுமிழந்து, சிறிய தமியளது நிலையும் - அற்பமாகியும் ஒன்றியான அடியேனது ஸ்திதியையும், தலைவனெனும் தன்மையையும் தகைமையையும் மறந்தேன்-அவர் எனக்குக் கணவனென்னும் தன்மையையும், தகுதியையும் மறந் தேன்.

குறிப்பு :—'அளித்தாள்' எனப்படிக்க. தடுமாறு - தடுமாறி : செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

5. உரை :—குறிப்பாய் உள் உணர்த்தியும் - அவர் ஜாடை யாய்த் தன் மனதை எனக்கு உணர்த்தினபொழுதும், யான் கொள் ளாது விடுத்தேன் - நான் அவரை அங்கிகரியாமல் நீக்கினேன், குறும்பு மதியால் எனது குடிமுழுதும் கெடுத்தேன் - என் அற்ப புத்தியால் எனது குடும்ப முழுமையுங் கெடுத்தேன், வெறுப்பாக நினைந்தென்மேல் வேதனைப்பட்டு - மிகவும் அருவருப்புடன் சிந் தித்து என்மீது வருத்தமுற்று, அவரும் வெறும்படிறு என் உள்ளம் என - அவரும் என் மனம் மிகவும் வஞ்சகமுள்ளது என்று, விட்டு விலகினரே - என்னை நீங்கினர்.

குறிப்பு :—உள் - உள்ளத்திலுள்ள எண்ணங்களுக்கு ஆகு பெயர்.

6. உரை :—பொருள் விரும்பி - நானடைந்த செல்வத்தை விரும்பியும், குலம் விரும்பி-நான் பிறந்த உயர்ந்த குலத்தை விரும் பியும், பொலம் விரும்பி - என் அழகை விரும்பியும், வந்தோர்

பொய்க்காதல் பேசினதோ-என்னை அடைந்தவர் பொய்யான அன்புடன் என்னை மணக்கவிரும்பிப் பேசினவைகளோ, புகலில்-(இத்தனையென்று) சொல்வோமானால், அளவில்லை-கணக்கில்லை; அருளரும்பி-கிருபையை யுடையவராய், எனை விரும்பி - என் மீது மெய்க்காதல் கொண்டு, ஆளுமெனது அதிபர் - என்னைக் கைக்கொண்டு ஆளும் எனது கணவர், அவரொழிய வேறிலை - அவரை நீக்கி எனக்கு வேறொருவருமிலர், என்று அறிந்திருந்தும்—, அயர்ந்திருந்தார் - சிறிது மனத்தளர்ச்சி யடைந்திருந்தார்.

குறிப்பு :—முன்பாட்டில் அவருடைய குணாதிசயங்களைப்பற்றி கூறியதுபோல் இங்குத் தன்னைப்பற்றியுங் கூறுகிறாள்.

7. உரை :—ஒருவாரம் -, ஒரு மாதம் -, ஒருவருடம் -, காலம் - இவ்வளவு காலங்களிலும், ஓயாமல் உன்னியழிந்தேன்-இடைவிடாமல் அவரையே சிந்தித்து நெஞ்சமழிந்தேன், உருவங்காணேன் - அவருடைய ரூபத்தைக் கண்ணாற் கண்டிலேன், திருவாரும் சேடியர்க்கு - அழகுவாய்ந்த தோழியருக்கு, செப்ப - சொல்லவும், அவர் சேரும் - அப்புருடர் போயடையும், திசை தேயம் - திக்கும் தேசமும், எவரறிந்து - யார்தெரிந்து, உரைப்பரென - சொல்வார்களென, சிரித்தார் - பரிகசித்து நகைத்தார்கள்.

குறிப்பு :—இச்செய்யுளின் முதலடியின்கண் மேன்மேலுயர்ச்சியணி (Climax) யுளது. நெடுநேரம் சிந்தித்தலால் மனமுடைந்ததுபோலும். திருவாரும் - இலக்குமியைப்போன்ற மிக்க அழகு வாய்ந்தவர். செப்ப-திசைச்சொல். 'திசைதேயம்' - திக்கு தேசம் இத்தொடரைச் சாதாரணமாகப் பெண்டிர் வாயில் காணலாம். தெரிப்பர் - தெரிவிப்பர்.

8. உரை :—ஆயத்தார் - தோழிமார்கள், கூடி - என்னைச்சூழ்ந்து ஆயவுந்தானெண்ணிட்டார் - நான் நாயகனை ஆலோசித்து ஆராய்

வதற்கும் விடமாட்டார்கள்; அகல் வேலையோ - விசாலமாகிய கடலோ, எறியும் - எக்காலத்திலும் அலைகளை வீசிக்கொண்டிருக்கும், அகோராத்ரம் கெடுத்து - இரவும் பகலும் சுகத்தைக்கெடுத்து, தீயைத்தானேயுமியும்சிறந்த கலைமதியும் - அக்நியையே கக்கிக்கொண்டிராநிற்கும் விளங்குகின்ற சோடசகலைகளும் நிறைந்த சந்திரனும்; காலும் - தென்றற்காற்றுமனது, உயிர்தின்னு நமன் என்ன-உயிரைவாங்கிக்கொண்டு போகும் யமன் என்று சொல்லும்படியாக, திரிந்து உலவும் - அலைந்து திரிந்துகொண்டிராநின்றது.

குறிப்பு:—அகோராதரம் - அகஸ்+ ராத்திரம்=பகல் இரவு. காமுகர்களுக்குக் குளிர்ந்த சந்திரிகையும் எரிவீசும்.

9. உரை:—கண்டவரை - நேரிற் கண்டவரையும், கேட்டவரை-காதாற் கேள்விப்பட்டவர்களையும், காசினியில்-பூமியெங்கும், தேடிக்கண்டிடச் சென்றே - அவரைக்கண்டு நேரிற்பார்க்கப் புறப்பட்டு, அலைந்த கட்டம் எனைத்தென்க - அலைந்து நான் அடைந்த துன்பங்கள் இவ்வளவு என்று கூறுதலுங் கூடுமோ, உண்டெனத் தம் யூகநெறி உரைப்பவரே அல்லால் - உலகத்தில் அவர் உயிரோடிருக்கிறார் என்று தம் விவேகத்தாற் சொல்லுவரே யல்லாமல், உள்ளபடி கண்டறிந்தோர் ஒருவரையும் காணேன் - உண்மையாய் அவரை நேரிற் பார்த்திருந்தவர் யாவரையும் நான் காணவில்லை.

குறிப்பு:—கட்டம்: தற்பவம். எனைத்து - எத்தனைத்து என்பதன் தொகை.

10. உரை:—உண்டெனிலே - அவரிப்பூமியில் உயிரோடிருக்கிறாரென்றால், கண்டிடுவன் - எப்படியாயினும் பார்க்க முயல்வேன், இல்லை எனில் - அவர் வாழ்கின்றாரில்லையென்றால், ஒல்லைஉயிர் விடுதலே நலம் என்று உன்னி உளந்தேறி - சீக்கிரத்திற் பிராணனை விட்டுவிடுதலே நல்லது என்று ஆலோசித்துச் சிறிது மனத்தேற்றத்தை யடைந்து, கண்டுயிலும் இல்லிடம் நீகதுவவெளியோடுங்

கணக்கா - நித்திரை செய்யும் படுக்கை யறையில் நெருப்புப்பற்ற அதினின்று தப்ப வெளியோடுந் தன்மைபோல், இவ்வேடமொடு கரந்து புறப்பட்டேன் - இந்த மாறுவேடத்தோடு மறைந்து புறப் பட்டேன்.

11. உரை :—தீர்த்தகுலம் - பல புண்ணிய தீர்த்தங்களையும், மூர்த்தி - பல விக்கிரகங்கள் இருக்கும் இடங்களையும், தலம் - பலஸ் தலங்களையும், பார்த்து—, உடலஞ் சலித்தேன் - இச்சரீரங் களைத்து மெலிந்தேன், திருக்கு அறுபற் குருக்கள் மடம் திரிந்து மனம் அலுத் தேன் - குற்றம் நீங்கின அநேக குருக்கள் மடாலயங்களில் அலைந்து திரிந்து மனஞ் சலித்தேன், வார்த்தை கத்தும் வாதியர் தம்மன்று அனைத்தும் வறிய - பயனின்றி வீண் வார்த்தைகளைப் பேசுவர்களு டைய குழாங்களிலெல்லாம் அவரில்லை, மறுத்து உறங்கும் - இவ் வுலகவின்பங்களை வெறுத்து யோக நித்திரையிற் றூங்கும், யோகி யர் - தவசிகள், போய் வாழ்குகையும் பாழே - சென்று வாழ்ந்தி ருக்கும் மலைக்குகைகளும் இவரையுடைய தொகாமையிற் பாழடை ந்திருந்தன.

12. உரை :—மான்மறவா - பெண்மானை எக்காலத்திலும் மறவாத, கலையினமே - ஆண்மான் கூட்டமே, வாழ்பிடிவிட்டக லா மதம் பெருகும் மாகுலமே - வாழும் பெண்யானை விட்டு நீங் காத மதத்தை யொழுக்குகின்ற ஆண்யானைக் கூட்டங்களே, வன்பிக மே - வலிமையுடைய குயில்களே, சுகமே - கிளிகளே! நான் மற வா நாதனை எஞ்ஞான்றும் அறிவீரோ-நான் சிந்தையினின்று நீங் காதிருக்கும் என் நாயகனை எக்காலத்திலும் அறிவீர்களோ, நவில்வீ ரென - சொல்வீரென்று, பின்தொடர்ந்து - அவைகளைப் பின்பற்றி, நாள் அநந்தம் கழித்தேன் - பலநாள் கழித்தேன்.

குறிப்பு :—நாயகன் நீங்கிய நாயகியின் நிலைமையை அறிந்த வர்களான படியால் மான்களையும், யானைகளையும் விளித்தது. இவ்

வாறு தமியராய் விட்ட ஸ்திரிகள் புலம்புவது வழக்கு என்பதை "வாவு மிளமான்காள் மயில்காள் மடப்பிடிகாள், கூவுங்கரிய குயில்காள் மென்புள்ளினங்கா, ளாவியென மேவியகலே மெனவகன்ற, காவலன்முன் போனவழி யெனக்குக் காட்டீரோ" என்றுஞ் செய்யுளாலுணர்க. மா என்பது பொதுவாக விலங்கைக் குறித்தாலும், மதம் பெருகும் என்றதனால் யானையைச் சுட்டிற்று. வன்பிகமே: குயிலின் குரல் பஞ்சமஸ்வர மாதலால் வலிமையை யுடைய குயில் என்றார். அநந்தம்: ந + அந்தம்—ந எதிர்மறை உபசர்க்கம்.

13. உரை :—இவ்விடமும்—, அவ்விடமும்—, எவ்விடமும் - எல்லா விடங்களிலும், ஓடி - சென்றலைந்து, இதுவரையும்- இக்காலவரையிலும், தேடியும்—, என் அதிபரைக்கண்டிலனே - என்தலைவரைப் பார்த்திலேன், எவ்விடம் யான் நண்ண - எவ்விடத்தில் நான் அடைந்துவாழ்வேன், இனி எவ்விடம் யானுண்ண - இனிமேல் எவ்விடத்தில் நான் உண்டு ஜீவிப்பேன், இக்காயம் - இச்சரீரம், இனி எனக்கு மிக்க அருவருப்பே - இனிமேல் எனக்கு மிகவும் வெறுக்கத்தக்கதா யிருக்கும்.

14. உரை :—ஐயோ - அந்தோ; என்றுள்ள நிலை அறியாரே - என் அகத்தின் நிலையை அவரறியாரேல், இனியும் ஆசைகொண்டு நானலைந்தது அத்தனையும் பொய்யோ - இனிமேலாயினும் மிகவும் காதலோடு நான் எங்கும் அலைந்து திரிவது பொய்யோ, பொய்யே தானுயிடினும் புனிதரவர் தந்த போதமலால் - அப்படியே பொய்யாயிருந்தாலும் புனிதராகிய எந்தலைவர் போதித்த ஞான மல்லாமல், வேறெனக்கும் ஒருமறிவுளதோ - மற்றுங் குறிப்பிக்கக் கூடியவை ஏதாவதும் உளதோ?

15. உரை :—நல்லர் அருளுடைய ரென நம்பி - அவர் நல்லர் என்றும் குளிர்ந்த கிருபையை யுடையவரென்றும் இதுகாறும்

நம்பிக்கைக் கொண்டு, இதுவரையும் - இக்காலவளவும், நான் உழப்பது அறிவர் எனில் - நான் வருந்துவது எவ்வளவு என்று அவர் அறிவாரானால், என் எதிர் வந்திலரோ - ஏன் என் முன் வரவில்லை; இல்லை எனில் - வந்திலரேல், என் அளவும் - என்வரையில், இவ்வுலகம் அனைத்தும் - இப்பூமி முழுவதும் என்னலமும் கொல்ல என எடுத்த சுடுகாடே - எல்லா நன்மைகளையும் அழிக்க எழுந்தது என்னும்படியான நன்காடொக்கும்.

குறிப்பு :—நானுளே வது என்னும் பாடம் சிறப்புடைத்து உழைவது எனினும் ஒக்கும்.

16. உரை :—என்னுடைய உயிர்த்துணைவர் - என் பிராணநாதர், எண்ணரிய - எண்ணுதற் கரிய, அருளில் - கிருபா குணங்களில், ஏதோ—, சிற்சாயை உனது இடத்து இருத்தல் கண்டு-சிறிது அவருடைய வடிவு உம்மிடத்திற் பொருந்தி யிருப்பதைக்கண்டு, மன்னுதவ மாமுனிவ - தவத்தைச் செய்யா நின்ற மாட்சிமை பொருந்திய முனிவரே !, மனத்துயரம் உன்பால் வகுத்தாறினேன் சிறிது - என் நெஞ்சிலுள்ள துக்கத்தை உன்னிடத்தில் விரித்துச் சொன்னதனாற் சிறிது ஆறினேன், மறுசாட்சி யில்லை-யான் சொல்வது உண்மை யென்பதற்கு வேறுசாட்சியு மில்லை.

17. உரை:—இனியிருந்து பெரும்பயன் என் - இனிமேல் இவ்வுலகத்தில் வாழ்வதனால் அடையும் பயன் என்ன விருக்கிறது (ஆதலால்) இவ்வழலே கதியென்று - இவ்வக்கினியே எனக்குக் கதியென்று, எரியும் அழல் எதிரே நின்று இசைத்த மொழிமுழுதும்- எரிகின்ற நெருப்பின் எதிரிலிருந்து சொன்ன இவ்வார்த்தைகளெல்லாம், முனி செவியிற் புகுமுனமே மூதுருவம் விளக்கி - கேட்கு முன்னமே அம்முனிவர் பழைய உருவத்தைக்காட்டி, முகமலர்ந்து-மலர்ந்த முகத்தோடு அச்சிவகாமி எதிரில் நின்று, அவளெதிரே முந்தி மொழிகுளறி - அவள் முன்னிலையில் வாய் தடுமாற,

குறிப்பு :—துறவியாய் அழலின் எதிரில் உட்கார்ந் திருப்பவர் சிவகாமியின் காதலனாகிய சிதம்பரன். இவன் சிவகாமியை தன்னை மணஞ்செய்து கொள்ள வேண்டியும் அவள் மறுத்ததனால் அவன் உலகை வெறுத்துத்துறவறம் பூண்டு காட்டில் வசித்திருந்தான். நற்காலம் வந்து பொருந்தினதனால் சிவகாமியும் தன் நாயனை அடைந்தாள்.

18. உரை :—சிவகாமி—, யான் உனது சிதம்பரனே-நானே நீ விரும்பிய கணவனாகிய சிதம்பரன், என்ன - என்று செப்புமுனம் - சொல்வதற்கு முன் இருவரும் மற்றொருருவமானார் - நாயகனும் நாயகியுமாகிய அவ்விருவரும் ஒன்றானார், எவர்தா முன் அணைந்தனர் என்றிதுகாறும் அறியோம் - இவ்விருவருங் கலந்து தழுவினதில் யார் முதலில் செய்தார் என்று இதுவரையும் அறியோம், இருவரும் ஒன்றாயினர் என்றே சுருதி அறையும் - ஆனால் வேதங்கள் இருவரும் ஒன்று படக்கலந்தார் என்றே கூறும்.